# அற இயல்

## மேல்நிலை - முதலாம் ஆண்டு

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

**தமிழ்நாட்டுப்**
**பாடநூல் கழகம்**
கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.

© **தமிழ்நாடு அரசு**
முதற்பதிப்பு - 2004

**குழுத் தலைவர்**

**மேஜர். முனைவர். ரா. முருகேசன்**
தலைவர் - இந்தியப் பண்பாட்டுத் துறை,
அருள்மிகு பழநி ஆண்டவர் கலை
பண்பாட்டுக் கல்லூரி, பழநி

**மேலாய்வாளர்கள்**

**திரு. ஆர். கண்ணன்**
தேர்வு நிலை விரிவுரையாளர்,
இந்தியப் பண்பாட்டுத் துறை,
அருள்மிகு பழநி ஆண்டவர்
கலை பண்பாட்டுக் கல்லூரி,
பழநி.

**முனைவர். வெ. சந்திர சேகர்**
விரிவுரையாளர் - தத்துவத் துறை
இராமகிருஷ்ணா மிஷன்,
விவேகானந்தா கல்லூரி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.

**நூலாசிரியர்கள்**

**திரு.வி. சந்தானம்**
முதுகலையாசிரியர்
பி.எஸ். மேல்நிலைப்பள்ளி,
மைலாப்பூர், சென்னை - 600 004.

**திருமதி. சி. காளீஸ்வரி**
முதுகலையாசிரியை,
நார்த்விக் மகளிர் மேல்நிலைப் பள்ளி,
இராயபுரம், சென்னை - 600 013.

**திரு. எஸ். சௌந்தரராசன்**
முதுகலையாசிரியர்,
ஆவிச்சி மேல்நிலைப் பள்ளி,
சாலிகிராமம்
சென்னை - 600 093.

பாடங்கள் தயாரிப்பு : தமிழ்நாடு அரசுக்காக
பள்ளிக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு.

இந்நூல் 60 ஜி எஸ் எம் தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

# முன்னுரை

நமது பண்பாடு அறநெறி சார்ந்த பண்பாடே ஆகும். அற இயல் கல்வியை தற்கால மாணவர்கள் ஏன் பயில வேண்டும் என்ற கேள்வி நமது உள்ளத்தில் எழுகிறது? அறக் கோட்பாடுகளை போற்றும் சமுதாயமே உயர்ந்த சமுதாயம். தனி மனித ஒழுக்கம், பொதுவாழ்வில் தூய்மை போன்ற உயர்ந்த அறப் பண்புகள் இன்றைய உலகின் தேவை. “ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” என்பது வள்ளுவம்.

மனிதனிடம் மனிதப் பண்புகள் உள்ளனவா என்பதை அளவிட அறக்கோட்பாடுகள் உதவுகின்றன. இன்றைய இளைஞர்களிடம் குறிப்பாக மாணவர்களிடம் அன்பு, உண்மை, சகோதரத்துவம், சகிப்புத் தன்மை, நாட்டுப்பற்று, நேர்மை, போன்ற உயர்ந்த பண்புகள் வளர வேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களாக நாட்டிற்குப் பயன்பட வேண்டும். “ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது” என்ற பழமொழிக்கேற்ப கற்பித்தால் வீடும் நாடும் உயரும் இந்திய மாணவர்கள் அறநெறிக் கல்வி கற்பதன் மூலம் உலகையே வழிநடத்தும் ஆற்றல் பெறுவர்.

ஒழுக்கத்தை வலியுறுத்துவதற்காக திருக்குறள், நாலடியார், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற அற இலக்கியங்களும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் பகவத் கீதை போன்ற தத்துவ நூல்களும் தோன்றின.

மாணவர்கள் தங்களை முதலில் புரிந்து கொள்ளவும், சமுதாயத்தில் நல்லுறவை வளர்த்துக் கொள்ளவும் அற இயல் பாடம் தேவைப்படுகிறது. குடும்ப உறவுகள் வலுப் பெறவும் ஆசிரியர் - மாணவர் உறவு போன்ற சமுதாய உணர்வுகள்

மேம்படவும் அறஇயல் பாடம் மிகவும் தேவைப்படும். மாணவர்கள் தங்களது கடமையை உணர்ந்து சிறந்த முறையில் கடமையாற்ற அறஇயல் உதவுகிறது. பிறருக்காக வாழ்வதே உயர்ந்த வாழ்க்கை என்னும் உயரிய வாழ்க்கைநெறி மாணவர்களிடம் வளர்ச்சி அடையும். நமது அரசாங்கம், நமது நாடு என்ற உயர்ந்த எண்ணம் வலுப்பெறும். இதன் மூலம் ஒளிமிக்க இந்திய தேசத்தை உருவாக்க மாணவர்கள் பாடுபடுவார்கள். இத்தகைய மனித நேயத்தை வளர்க்கும் அறஇயல் பாடத்தை மேல்நிலை முதலாண்டு மாணவர்களுக்கு பாடமாக வைத்துள்ள தமிழக அரசுக்கு பாடநூல் குழுவினர் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**பாட நூல் குழுவினர்**



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| **I.** | **அற இயலின் இயல்பும் வரம்பும்** | **1** |
| 1.1 | அற இயலின் வரையறை | 1 |
| 1.2 | அற இயல் ஓர் அறிவியல் | 10 |
| 1.3 | அற இயலும் ஏனைய அறிவியல்களும் | 13 |
| 1.4 | அற இயலின் இன்றியமையாமையும் பயன்களும் | 17 |
| **II.** | **அறச் செயல்களும் அறஞ்சாராச் செயல்களும்** | **23** |
| 2.1 | அறச் செயல் மற்றும் அறஞ்சாராச் செயல்களின் வரையறை | 23 |
| 2.2 | உள்நோக்கும் உட்கிடை | 30 |
| 2.3 | பழக்கம், நடத்தை மற்றும் அகநிலை அறப்பண்பு | 34 |
| 2.4 | இயற்றி நிலையின் கட்டற்ற தன்மை | 40 |
| **III.** | **அறநெறி வாழ்வு** | **47** |
| 3.1 | தனிமனிதனும் சமுதாயமும் | 47 |
| 3.2 | குடும்பம் மற்றும் சமுதாய நிறுவனங்கள் | 59 |
| 3.3 | உரிமைகள், கடமைகள், மற்றும் நல்லொழுக்கம் | 77 |
| 3.4 | தண்டனை பற்றிய கொள்கைகள் | 91 |
| | (அ) எச்சரிப்புத் தண்டனைக் கொள்கை | |
| | (ஆ) பழிக்குப் பழி வாங்கும் தண்டனைக் கொள்கை | |
| | (இ) சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை | |

3.5 சமூக அறவியலில் உள்ள சீர்கேடுகள் 99

(அ) இரத்தல்

(ஆ) விவாகரத்து

(இ) வரதட்சணை

(ஈ) தற்கொலை

(உ) சமூக ஏற்றத் தாழ்வுகள்

(ஊ) போதை பொருட்களுக்கு அடிமையாதல் போன்ற தீய பழக்கங்கள்

(எ) பயங்கரவாதத்தின் தீமைகள்

(ஏ) தொழில் சார்ந்த அறக் கோட்பாடுகள்

**4. தமிழ் மரபில் அறக் கோட்பாடுகள் 141**

4.1 ஔவையார் கூறும் அறக்கருத்துகள் 141

ஆத்திச்சூடி

கொன்றை வேந்தன்

மூதுரை

4.2 திருவள்ளுவர் கூறும் அறம் 178

4.3 நாலடியார் கூறும் அறம் 197

4.4 இராமாயணம் மற்றும் மகாபாரதம் உணர்த்தும் அறம் 203

4.5 பகவத் கீதை கூறும் அறக்கருத்துக்கள் 219

**5. யோகம் உணர்த்தும் வாழ்வியல் அறம் 225**

# 1. அறஇயலின் இயல்பும், வரம்பும்

# (NATURE OF ETHICS AND ITS SCOPE)

## 1.1. அறஇயலின் வரையறை

### அற இயல்

மனிதனின் செயல்கள் மற்றும் நடத்தையின் தரத்தைப் பற்றி ஆய்வு செய்யும் ஓர் ஆய்வியல் ஆகும். உதாரணமாக அன்றாட வாழ்க்கையில் மக்கள் உரையாடும்பொழுது ‘இராமன் நல்லவன்’, ‘சுந்தரம் தீயவன்’. ‘புகைபிடித்தல் தீய பழக்கம்’. ‘உண்மையே பேசுவது நல்லது’, ‘நான் செய்தது சரி’, ‘நீ செய்தது தவறு’. ‘அவன் இப்படி செய்திருக்கக் கூடாது’ போன்ற பலவகையான கருத்துக்கள் மனிதர்களது நடத்தையினைப் பற்றியும், செயல்களது தன்மையைப் பற்றியும் விளக்குவதாக அமைந்துள்ளது.

### அற இயல் உணர்த்தும் உண்மைகள்

நல்லது, தீயது, சரி தவறு முதலிய சொற்களின் பொருள் எல்லா மக்களுக்கும், எல்லாச் சூழ்நிலைக்கும் பொருந்துவதாக மாறாத தன்மையுடையதாக இருக்க வேண்டும்.

மனித வாழ்விற்கு குறிக்கோள் இருத்தல் அவசியம். அக்குறிக்கோள் என்பது ஒரு வகை உயரிய வாழ்வு நிலை ஆகும்.

தனிமனிதனின் நடத்தைகள் அனைத்தும் அத்தகைய உயரிய வாழ்வு நிலையை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும். மனிதவாழ்வின் குறிக்கோள் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது பற்றியும், அக்குறிக்கோளின் அடிப்படையில் அவனது

நடத்தையை சரி அல்லது தவறு என்று எங்ஙனம் மதிப்பீடு செய்யலாம் என்பதைப் பற்றியும் அற இயலானது நமக்கு உணர்த்துகிறது.

தனி மனித வாழ்க்கையை மட்டும் அல்லாமல் சமூக வாழ்க்கையையும் அற இயல் வரையறை செய்கிறது. உதாரணமாக, சமுதாயத்தில் மக்கள், ஆசிரியர் – மாணவர்களாக, கணவன் மனைவியாக, பெற்றோர் – பிள்ளைகளாக – ஏனைய பல துறைகளில் இணைந்து வாழ்கின்றனர். இவ்வாறு இணைந்து வாழந்து செயல்படுகின்றவர்கள் ஒவ்வொரு துறையிலும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகளை சரியா தவறா என ஆய்ந்து முடிவு செய்வதும் அற இயல் ஆகும்.

**சொல் விளக்கம்**

மேலை நாட்டு தத்துவத்தின் அடிப்படையில் அற இயலை Ethics அல்லது Moral Philosophy என்று அழைக்கிறார்கள். Ethics என்பது Ethos என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். Ethos - என்பதற்கு வழக்கம் என்பது பொருள். (Ethics is the science of character, habits, of a activity or conduct of human beings.)

Moral என்பது Mores என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். Mores என்பது மரபு என்று பொருள்படும். எனவே, அற இயல் எனபது மக்கள் தொன்று தொட்டுத் தமது வாழ்க்கையில் பயன்படுத்தி வெற்றி கண்ட சில வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றிய ஆராய்ச்சி என்பது புலனாகின்றது.

**அற இயலின் வரம்பிற்கு உட்பட்ட செயல்கள்**

நாம் அற இயலை வரையறை செய்தபோது அது சமூகத்தில் வாழ்கின்ற மனிதனின் நடத்தையைப் பற்றிய ஆராய்ச்சியாக இருப்பதைக் கண்டோம். அற இயலானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சமுதாயத்தோடு



தொடர்புடைய பல செயல்களை ஆராய்கிறது. உதாரணமாக, திருடுதல், மது அருந்துதல் (தீய செயல்கள்) தர்மம் செய்தல், தானம் செய்தல், (நற்செயல்கள்) போன்றவைகள் ஆகும்.

மனிதன் ஒருவன் காட்டிலோ அல்லது ஒரு பாலைவனத்திலோ தனித்து இருக்கிறான். அவன் அங்கே செய்யும் செயல்கள் ஆய்வுக்கு உரியன அல்ல. அவனுடைய செயல்கள் சமூகத்தைப் பாதிப்பது இல்லை. பலரும் இணைந்து வாழும் சமூகத்தில் தான் தனிமனிதன் செயல்கள் ஆய்வுக்கு உரியனவாக மாறுகின்றன.

ஒருவன் தபால் முத்திரைகளைச் சேகரிக்கிறான். இத்தகைய செயல்கள் நேரடியாக ஆய்வுக்குரியன அல்ல. ஆயினும் இச்செயல்கள் மறைமுகமாக சமுதாயத்தைத் தாக்கும் எனக் கருதப்பட்டால் இவைகளும் ஆய்வுக்குரியதாக அற இயல் எடுத்துக் கொள்ளும்.

தனி மனிதனின் அன்றாட செயல்களாகிய குளித்தல், உணவு உண்ணுதல் தூங்கதல் போன்றவை அற இயல் ஆய்வுக்கு உட்பட்டவை அல்ல.

மேலும் மனநலம் குன்றியவர்களின் செயல்கள், குழந்தைகளின் செயல்கள், விலங்கினங்களின் செயல்கள், இயற்கையின் சீற்றங்கள் போன்றவற்றை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாகாது. அது மட்டுமின்றி தன்னிச்சையின்று எழாத செயல்களாகிய (non- Voluntary action) சுவாசித்தல், ஜீரணித்தல், கனவு, போன்றவைகளும் அற இயலின் வரம்பிற்குள் அடங்கா.

அற இயலானது சுய அறிவோடு பகுத்தாய்கின்ற திறன் கொண்ட மனிதர்களின் நடத்தையைப் பற்றி மட்டுமே ஆராய்கிறது. மேலும், மனிதன் விரும்பியேற்றுக் கொண்ட தன்னிச்சை செயல்களும் (Voluntary action) ஆய்வுக்கு உட்பட்டவையே.

நாம் குறிப்பிட்ட நல்லது, தீயது, சரி, தவறு போன்ற செயல்களின் பொருள், மனித நடத்தை, அந்த நடத்தையைத் தீர்மானிக்க உதவுகின்ற கல்வி, திருமணம், சமயம், சட்டம், போன்ற சமூக கோட்பாடுகளும் அற இயலின் வரம்புக்கு உட்பட்டவையாகும்.

அற இயல் என்று நாம் கூறுவதிலிருந்து இஃது அறம் பற்றிய ஆராய்ச்சி என்று எளிதாகத் தெரிகின்றது. ‘அறம்’ என்ற சொல் பல்வேறு வகையான பொருள்களை உள்ளடக்கியது ஆகும். தெய்வப் புலவர் திருவள்ளுவர் தமது திருக்குறளில் முதல் இயலாக அறத்துப்பாலை அமைத்துக் கொண்டார். அறம் எனும் சொல்லைத் தானதருமம் செய்தல், நல் இல்வாழ்க்கை, மனத்துக்கண் மாசிலாது இருத்தல், பொறாமை, பேராசை, கடும் சொற்கள், போன்றவற்றை நீக்குதல், இன்ன பிற பொருள்களில் கையாண்டு உள்ளார்.

மேலும் திருவள்ளுவர் மனித வாழ்வின் உறுதிப்பொருள்கள் என்று கூறத்தக்க அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவைகளையும் மிக ஆழமாக இணைத்து தமது திருக்குறளை அமைத்துள்ளார். முதலில் அறவழியில் நிற்க வேண்டுமென்றும், பின்பு அவ்வறத்தை அடிப்படையாகக் கொண்ட வழிகளிலேயே பொருளீட்ட வேண்டும் என்றும் கூறுகிறார்.

அறவழியில் ஈட்டிய பொருளின் மூலமாக மட்டுமே இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்றும், வாழ்வின் இறுதிக் குறிக்கோளாகிய வீடு பேற்றினை அடைய இதுவே சிறந்தவழி என்றும் தெளிவுபடுத்துகிறார். இதைப் போன்று கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி போன்ற அறநூல்களும் அறக்கருத்துக்களை நேரடியாகவே வலியுறுத்துகின்றன. உதாரணமாக “அறம் செய விரும்பு”, “ஆறுவது சினம்”,



போன்றவற்றின் மூலமாக அறக் கருத்துக்கள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

இந்து சமயத்தின் புனித நூலான பகவத் கீதையிலும் பயன் நோக்காச் செயல் அல்லது நிஷ்காம்யகர்மா என்பது கருத்தாக எடுத்தாளப்பட்டுள்ளது. எனவே, அற இயலானது சமுதாயத்தைப் பாதிக்கக்கூடிய தனி மனிதனின் நடத்தையினை ஆய்வு செய்கின்ற ஆராய்ச்சி இயலாகும்.

**அறஇயலும், தத்துவ இயலும் : (Ethics & Philosophy)**

அற இயலுக்கும், தத்துவ இயலுக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஹெகல் (Hegal) மற்றும் கிரீன் (green) போன்றவர்கள் தத்துவ இயலை அடிப்படையாகக் கொண்டே அறஇயல் அமைவதாக கருதுகின்றனர். ஆனால் ராஸ்டல் (Rashdall) போன்றவர்கள் அறஇயலை அடிப்படையாகக் கொண்டே தத்துவ இயல் அமைவதாகக் கூறுகின்றனர். விவாதம் ஒரு புறம் இருக்க, அற இயலும், தத்துவ இயலும் மிக நெருக்கமான தொடர்புடையவை என்பதை உணர முடிகின்றது. கீழ்கண்ட கருத்துகளின் அடிப்படையில் இதை உணர முடியும்.

1. சமுதாயத்தின் நன்நடத்தையின் வழிமுறையில் தான் அறக்கருத்துக்கள் உருவாக்கபட்டுள்ளன.
2. அறஇயலின் தீர்ப்புகள் முழுமையானதும், தெளிவானதும் நேரிடையானதும் ஆகும். இவை அனைத்தும் இயற்கைப் பொருளின் தன்மைகளைக் கொண்டே அமையும். இதற்கு அறஇயல் தத்துவ இயலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.
3. அற இயலின் வரையறைகளை தத்துவ இயல் முறைப்படி எடுத்துக் கூறுகிறது. அற இயல் வரையறைகளின் மூன்று சய அடையாளங்களான கடவுள், சுதந்திரமான தீர்க்கதரிசனம்,

மற்றும் ஆன்மாவின் இறவாத் தன்மை ஆகியவைகளை ஆராய்வதும், எடுத்து இயல்புவதும் தத்துவ இயலின் பாடமாகும்.

4. அறஇயல் என்பது அறிவியல் மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. தத்துவ இயல் அந்த அறிவியல் மதிப்பீட்டை முறைப் படுத்துகிறது.

5. தத்துவ இயல் உலகத்திற்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பை விளக்கிக் கூறுகிறது. அற இயலோ மனிதனை ஒரு மனச்சாட்சி உள்ளனவாகக் காட்டுகிறது. எனவே, கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், உலகம் மற்றும் சமுதாயம் பற்றியும் அறிந்து கொள்ள தத்துவ இயலையே அணுக வேண்டி உள்ளது.

6. நிறைய தத்துவ இயலின் பிரச்சினைகள் அறஇயலுக்கு உட்பட்டவைகளாகவே உள்ளன.

**அவையாவன**

ஆன்மாவின் இறவாத்தன்மை, கான்டின் மறுபிறவிக் கோட்பாடு, சமுதாயத்திற்கும், தனி மனிதனுக்குமுள்ள தொடர்பு, ஆன்மாவிற்கும், உலகிற்குமுள்ள தொடர்பு, கடவுள் பற்றிய கருத்துக்கள் ஆகியனவாகும்.

## அறஇயலும், சமயமும் (Ethics & Religion)

சமயம் என்பது மனிதனை பக்குவப் படுத்துவதேயாகும். மேலும் சமயம் என்பது இரண்டு அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, கடவுள் வழிபாட்டுமுறை, இரண்டாவது ஒழுக்கம், தர்ம சிந்தனைகள், மற்றம் நன்நடததைகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறுகிறது.



ஒட்டுமொத்தமான மத நம்பிக்கை உள்ளவர்கள் கூறுவதையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது கீழ்க்கண்ட கருத்துக்களைத் தான் அவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்பது தெளிவாகும்.

1. கடவுள் என்பவர் இருக்கின்றார்.
2. கடவுள் தர்ம சிந்தனைகளின் கருவூலமாகவும், ஒழுக்க சீலராகவும், நன்நடத்தை கொண்டவராகவும் இருக்கிறார்.
3. மிகக் குறைந்த காலமே வாழக்கூடிய மனிதன், கடவுளிடத்தில் காணக் கூடிய சீரிய பண்புகளில் சிலவற்றையாவது அடைய முயற்சிக்க வேண்டும். என்பதாகும்.
4. ஞானம், அல்லது மெய்யுணர்வு பெறுகின்ற வழியில் நேரும் தடைகளைத் தகர்த்தெறிய அறச் செயல்கள் துணைபுரிகின்றன. ஆன்மீகக் கண்ணாடியின் மீது படிந்திருக்கும் தூசியை அகற்ற அறஇயல் உதவுகின்றது.
5. அறஇயலானது மனிதனை நல்வழிப்படுத்தியும், ஆன்மாவை தூய்மைப் படுத்தியும், “பிரம்மம் தன்னுள் இருக்கும் ஆன்மா” என உணர வைப்பதற்கு அற இயல் துணைபுரிகின்றது.

எனவே, சமயத்தில் கடவுள் வழிபாட்டு முறையைத் தவிர்த்துக் கூறக் கூடிய ஏனைய கருத்துக்கள் அனைத்துமே அறஇயலில் கூறப்படும் கருத்துக்களாகும்.

இதன் மூலம் சமயமும், அறஇயலும் மிக நெருக்கமான தொடர்பினை கொண்டுள்ளன என்பது உறுதியாகிறது.

## அறஇயல், மானிடவியல் மற்றும் சமூகவியம் : (Ethics, Anthropology & Sociology)

தனி மனிதன் நடத்தை என்பதைப் பொதுவாக எடுத்துக் கொண்டால் சமூக இயல் அறிஞரும் மனித இயல் அறிஞரும் கூட அதைப் பற்றி ஆராயவே செய்கின்றனர், சமூக இயலும் மானிட

இயலும் செய்யும் ஆய்வுகளுக்கும் அற இயல் மேற்கொள்ளும் ஆய்வுக்கும் அடிப்படை வேறுபாடு என்ன என்பதை அறிதல் வேண்டும்.

மனிதனுடைய நடத்தையைப் பற்றி ஆய்வுசெய்யும் அற இயல், அதே நடத்தையைப்பற்றி ஆய்வு செய்யும் சமூக இயல் மானிட இயல் ஆய்வுகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை வரையறை செய்து தெரிந்து கொள்ளுதல் வேண்டும். சமூக இயலும் (Sociology) மானிட இயலும் (Anthropology) நேர்நிலை அல்லது விளக்க நிலை அறிவியலைச் சார்ந்தவை. அற இயல் உயர்நிலை அறிவியல் ஆகும். ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை அறியலாம்.

திருமணம் செய்து கொள்ளுதல் தனிமனிதனின் நடத்தைகளில் ஒன்று. திருமணம் பற்றி சமூக இயலும், மானிட இயலும், அறஇயலும் ஆய்வு செய்து தத்தம் துறையைச் சார்ந்த விளக்கங்களைக் கொடுக்கின்றன. மூன்றினுடைய ஆய்வு பணியின் போக்குகளைப் பார்த்தால் அற இயல் தன்னுடைய ஆய்வின் மூலம் எவ்வாறு வேறுபாடுகிறது என்பதை அறியலாம்.

சமூக இயல் அறிஞர் திருமணம் என்பதன் பொருளை விளக்குவார். சடங்குகளின் அமைப்பு, முதலில் திருமணச் சடங்கு அமைந்த முறை, காலந்தோறும் அது வளர்ந்து வந்த முறை ஆகியவற்றை விவரிப்பார். முதலில் ஓர் ஆடவன் ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளும் முறையுடன் ஒருவன் இரண்டு பெண்களையும் திருமணம் செய்து கொள்ளலாம். என்ற முறை மக்கள் மத்தியில் நல்லது என கருதப்பட்டது. அதே சமயத்தில் ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்துகொள்ளும் முறை தவறு என்று சிலர் கண்டித்துப் பேசத் தொடங்கினர். இறுதியில் இருதாரமணம் மக்களால் ஏற்றுகொள்ளப் பெற்றது என திருமண வரலாற்று முறையை



எழுதுவர். இங்கே ஒருதார மணம் தவறு என்று அவர் எழுதினாலும் அது அவர், முடிவோ, அல்லது அவர் மதிப்பீடோ அன்று. ஒருதார மணம் தவறு என்பது ஒரு காலத்தில் ஒரு பகுதி மக்களின் கருத்தாக இருந்தது என்பது வரலாற்று உண்மைகளையும், நிகழ்ச்சிகளையும் அப்படியே எழுதிவைக்க வேண்டிய கடமையாதலில் வரலாற்று உண்மையை அப்படியே எழுதினர் என்பதாகவே கொள்ளவேண்டும். அவ்வாறே தான் மானிட இயல் அறிஞர் செயலும் விளக்கமும் இருக்கும்.

உள்ளதை உள்ளவாறு எடுத்து எழுதுவது வரலாற்று முறை உள்ளதை மதிப்பீடு செய்து எழுதுவது உயர்நிலை அறிவியல் முறை.

ஒரு தார மணம் நன்று என்றும் இருதார மணம் இன்ன இன்ன காரணங்களால் தவறு என்றும் எடுத்துக்காட்டி, இருதார மணமுறையைவிட ஒருதார மண முறையே நல்லது என விளக்கமும் அமைத்து எழுதுவது மதிப்பீட்டு முறை. சமூக இயல் அறிஞரும் மானிட இயல் அறிஞரும் வரலாற்று முறையை மட்டும் மேற்கொண்டு எழுதுவார். விளக்க நிலை விஞ்ஞான முறையை மேற்கொண்டே அவர்கள் எழுதுவார்கள். மதிப்பீட்டு முறையில் எழுதுவது இது சரி, இது தவறு என எடுத்துக்பாட்டி, இது நல்லது என மதிப்பீடு செய்து எழுதுவது அற இயல் அறிஞர் மேற்கொள்ளும் முறை. அவ்வாறு விளக்குவதே உயர்நிலை அறிவியல்.

எனவே, அறஇயல் என்ற உயர்நிலை அறிவியலானது மதிப்பீட்டு முறையிலான மனிதனின் நடத்தை பற்றிய ஆய்வியல் எனக்கொள்ள வேண்டும், சமூக இயலும் மானிட இயலும் மனித நடத்தையையே எடுத்துக் கூறினாலும், அவை மனித நடத்தை இன்ன இன்ன காலங்களில் இப்படிஇப்படி இருந்தது இன்னஇன்ன காரணங்களால் இன்னஇன்ன மாற்றத்தைப் பெற்றது என்ற அளவில்

வரலாற்று முறையை ஒட்டி விளக்க பெறும் உண்மைகளாக (facts) இருக்கும்.

### 1.2. அறஇயல் ஓர் அறிவியல்

**(Ethics as a Science)**

***அறிவியல்***

| நேர்நிலை அறிவியல் | உயர்நிலை அறிவியல் |
|---|---|
| (Positive Science ) | (Normative Science) |
| இயற்பியல் | அறஇயல் |
| வேதியியல், | அழகியல் |
| உயிரியல் | அளவையியல் |

***அறிவியல்***

ஒரு குறிப்பிட்ட பொருளையோ அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ எடுத்துக்காட்டி, விளக்கம் கேட்க முற்பட்டால், அதனோடு இணைந்த எல்லாச் செய்திகளையும், ஒருவகை ஒழுங்கமைப்பினுள் தருகின்ற அறிவே அறிவியல் அறிவு. (Science is organized or systematized knowledge).

***அறிவியல் முறை***

ஒருவகை அடிப்படை ஒழுங்கமைப்பினுள் வேண்டாத செய்திகளை நீக்கி, வேண்டிய செய்திகள் எல்லாவற்றையும் முறையாக இணைத்துப் பெறுகின்ற முறையாகும். ஒரு வகை இலையைக் கொடுத்தால் தாவர இயலில் சாதாரண அறிவுடையவன் இலையைப் பற்றிய சில செய்திகளை மட்டுமே கூற வல்லவனாக இருப்பான். ஆனால் அறிவியல் அறிவானது அந்த ஓர் இலையை அடிப்படையாகக் கொண்டு முழுமையான செய்திகளை ஓர் ஒழுங்கமைப்பினுள் அமைத்துத் தந்துவிடும். அவ்வாறே அற இயலும் மனிதனுடைய எந்த ஒரு செயலையும்



விளக்க முற்படும் போது, அச்செயல் பற்றிய முழுமையான செய்திகளையும் சரி, தவறு, நன்மை, தீமை, என் அடிப்படை ஒழுங்கமைப்பினுள் அமைத்துக் காட்டி விளக்கும். எனவே, அற இயலும் அறிவியல் வகையைச் சார்ந்தது ஆகும்.

எந்த ஓர் அறிவியலும் அதற்குரிய எல்லைக் கோட்டிற்குள் நின்று, விதிகட்கு உட்பட்டேதான் விளக்கத்தினைத் தருகிறது. இத்தகைய எல்லைக்கோடு அறவியல் துறைக்கும் உண்டு, என்பதால் அற இயலும், அறிவியல் வகையைச் சார்ந்தது.

***அற இயல் ஓர் உயர்நிலை அறிவியல்***

அற இயல் சமுதாயத்தில் வாழும் மனித நடத்தையைப் பற்றி ஆராயும் ஒருவகை அறிவியல் என்று கண்டோம்.

அறிவியல் என்பது குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றியோ அல்லது பொருளைப் பற்றியோ அதனோடு இணைந்த முழுமையான செய்திகளை ஒருங்கிணைத்துத் தரும் ஒழுங்கமைப்பு ஆகும்.

அறிவியலை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை உயர்நிலை அறிவியல் (Normative Science) என்றும் நேர்நிலை அறிவியல் (Positive Science) என்றும் அழைக்கப்படும்.

ஒரு பொருள் ஒரு குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டுள்ளது என்றும், குறிப்பிட்ட வகையில் செயல்படுகிறது என்றும், புலனறிவு மூலமாக ஆராய்ந்து விளக்கத்தினைத் தருவது நேர்நிலை அறிவியல் ஆகும். விலங்கியல் (Zoology) தாவரவியல் (Botany) இயற்பியல் (Physics) வேதியியல் (Chemistry) போன்றவை நேர்நிலை அறிவியலுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

சில செயல்கள் ஏன் இப்படி செய்யப்பட வேண்டுமென்றோ அல்லது எப்படி செயல்பட்டாக வேண்டும். என்றோ, போன்ற கேள்விகளை எழுப்பும்போது அவற்றிற்கு விடைகளைக் காண முற்படும் ஓர் இயல், உயர்நிலை அறிவியல் அல்லது மேல் வரம்பிட்ட அறிவியல் ஆகும். மனிதனை உள்ளிட்ட ஆய்வியலில், அளவையியல் (Logic) அழகியல் (Aesthetics) அற இயல் (Ethics) என்ற இம்மூன்றும் உயர்நிலை அறிவியல் பிரிவைச் சேர்ந்தவை.

நல்ல சிந்தனை எப்படி இருக்க வேண்டும் என அளவையியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல அழகு எப்படி இருக்க வேண்டும் என அழகியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல நடத்தை எப்படி இருக்க வேண்டும் என விளக்க முற்படுவது அற இயலின் கடமையாகும்.

தனி மனிதனின் செயல் அல்லது நடத்தை என்பதைப் பொதுவாக எடுத்துக் கொண்டால், சமூகவியல் அறிஞர்களும் (Sociology) மானிட இயல் அறிஞர்களும் (Anthropology) உளவியல் அறிஞர்களும் கூட அவைகளைப் பற்றி ஆராய்கின்றனர்.

அழகியல் அளவைவியல், மானிட இயல், சமூக இயல், ஆகிய இந்நான்கு இயல்களுமே மனிதனைப் பற்றியே விளக்கினாலும், அற இயலானது இந்நான்கு இயல்களிலிருந்தும் வேறுபடுகின்றது. எப்படியெனில், சமூக இயலும், மானிட இயலும் வரலாற்றுக் கால நிகழ்வுகளையும், அதனைப் பற்றிய உண்மைகளைப் பற்றி மட்டுமே பேசுகின்றது.

ஆனால் அற இயலானது ஏன்? எப்படி? என அக்கால நிகழ்வுகளை ஆய்வு செய்வதால் இஃது ஓர் உயர்நிலை அறிவியல் எனப்படுகிறது.



## 1.3. அற இயலும் ஏனைய அறிவியல்களும்

அற இயல் ஓர் அறிவியல் என்று முந்தைய பாடத்தில் கண்டோம். ஆனால் அற இயல் ஓர் உயர்நிலை அறிவியல் என்றும் அறிந்து கொண்டோம். அற இயலும் ஓர் அறிவியல் என்ற வகையில் அது எவ்வாறு ஏனைய அறிவியல்களுடன் தொடர்பு கொண்டு உள்ளது என்பதை இப்பகுதியில் காண்போம்.

***அறஇயலும் உயிரியலும் : (Ethics & Biology)***

அடிப்படையில் மனிதன் வாழும் உயிரினத்தின் வகையைச் சார்ந்ததினால், விலங்குகளுக்கு உரிய விதிமுறைகள் அவனுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளன. இக்கருத்தினை டார்வின் போன்ற அறிஞர்கள் வாழ்வதற்கான போராட்டம் (Struggle for existence) மற்றும் நிலைத்திருப்பதற்கான பொருத்தம் (Survival of the fittest) என்ற விலங்கியல் விதிகளின் படி விளக்கி உள்ளனர்.

இந்தக் கருத்தில் உடன்பாடு கொண்ட ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் (Herbert Sepncer) தனது அற இயலின் கோட்பாடுகள் (Principle of Ethics) என்ற கொள்கை மூலம் விலங்கியலை அடிப்படையாகக் கொண்டு அற இயலை விளக்க முற்படுகின்றார்.

அவர் நல்லது எது? கெட்டது எது? என்பது விலங்கிற்கும் மனிதனுக்கும் ஒன்றே என்று கூறுகின்றார் அதாவது அவர் எவையெல்லாம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவுகின்றனவோ அவையெல்லாம் நல்லன என்கிறார் மற்றபடி எவையெல்லாம் அத்தகைய முன்னேற்றத்திற்குத் தடைகளாக இருக்கின்றனவோ அவையெல்லாம் கெட்டன என்கிறார். இதன் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி விலங்கியல் விதிமுறைகள் மனிதனது நடவடிக்கைகள் மீது பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பது தெளிவாகிறது.

### அற இயல் உயிரியலை அடிப்படையாகக் கொண்டதல்ல :

வாழ்விற்கான பாதுகாப்பும் முன்னேற்றமும் மனிதனுக்குத் தேவையானதாகும். ஆனால் அது மட்டுமா மனிதனது குறிக்கோள்? மனிதன் விலங்கிலிருந்து எவ்வளவோ முன்னேறி இருக்கிறான். விலங்குகள் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றி அமைத்துக் கொள்ளும். ஆனால் மனிதனோ, தான் வாழ்வதற்கான சுற்றுப்புறச்சூழலை உருவாக்குகின்றான்.

அறிவியல் கண்டுபிடிப்புகளை பயன்படுத்துகின்றான். நாகரீகமான சமுதாயத்தை உருவாக்குகின்றான். இதில் விலங்குகளின் விதிமுறைகள் முன்னிருத்தப்படவில்லை. உதாரணமாக விலங்குகளின் விதிமுறைப்படி வலிமையானது வாழும். வலிமையற்றது அழித்தொழிக்கப்படும். ஆனால் மனித சமுதாயத்தில் அதற்கு மாறாகவே நடக்கிறது. அதாவது வலிமையற்றவர்களான பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றனர். அரிஸ்டாட்டில் கூறியது போன்று மனிதனது சிறப்பான செயல்களை விலங்குகளிடத்தில் காண முடியவில்லை. முடிவாக மனிதனது செயல்பாடுகள் பகுத்தறிந்து, அறிவுஜீவிகளின் கோட்பாடுகளின்படி தான் நடைபெறுகிறதே தவிர விலங்குகளின் விதிகளின்படி அல்ல என்பதை உறுதியாகக் கூறலாம்.

### அற இயலும், இயற்பியலும் : (Ethics & Physics)

இயற்பியல் அறிவியலைப் போல அல்லது ஒரு நேர்நிலை அறிவியல் அல்லது விளக்க வகை அறிவியல் என்று கூறப்படுகிறது. ஏனெனில் இயற்பியலில் நாம் புற உலகப் பொருள்களைப் புலன்களால் மட்டும் ஆராய்ந்து அவற்றின் இயல்புகளையும், அவற்றிற்கிடையே செயல்படும் இயற்கை விதிகளையுமே விளக்குகிறோம். புற உலகு எப்படி இருக்க வேண்டுமென்றோ இயற்பியல் ஆராய்வதில்லை. மாறாக அறிவியல் மனித நடத்தை சரியா அல்லது தவறா என்பதைப் பற்றிய தரத்தை நிர்ணயம்



செய்து தீர்ப்புகளை வழங்குகின்றது. எனவே இதை ஓர் உயர்நிலை அறிவியல் என்று கூறுகிறோம். இவ்வளவில் காணும்போது இயற்பியலுக்கும் அற இயலுக்கும் நேரடித்தொடர்பு இருக்க சாத்தியம் இல்லை.

இயற்பியலும் அற இயலும் மாறுபட்ட அறிவியல் வகையைச் சேர்ந்தவை என்றாலும் அவற்றிற்கிடையே ஒரு வகை மறைமுகத் தொடர்பு இருக்கிறது என்றே கூற வேண்டும். காரணம்யாதெனில் மனிதனின் நடத்தைகள் அவனது உள்ளத்தில் தீர்மானிக்கப்பட்டாலும் புற உலகிலேறே நடைபெற்றாக வேண்டும். மனிதனின் செயல்கள் யாவுமே உலகின் இயற்கை விதிகளுக்கு உட்பட்டே தீர வேண்டும். முக்கியமான காரணவிதி (Law of causuality). இயற்பியலுக்கும் அற இயலுக்கும் பொதுவான ஒன்றாகும் அறஇயலில் கூறப்படு ஊழ்வினை விதியானது இயற்பியலின் காரணகாரிய விதியை ஒட்டியே அமைந்துள்ளது. மேலும் மனிதன் ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன்னர் அச்செயல் புற உலகில் தோற்றுவிக்கக் கூடிய விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொண்டேயாக வேண்டும். இந்த அளவில் அவனுக்கு இயற்பியல் அறிவு துணை செய்யும்.

### அறஇயலும், உளவியலும் : (Ethics and Psycology)

உளவியல் என்பது மனித மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகும். மனித மனதில் நிகழும் மாறுதல்களைப் பற்றியும், மனிதச் செயல்களுக்குப் பின்னணியாக அமையும் உணர்ச்சிகள், மனநிலைகள் மற்றும் அவனது அறிவாற்றல் பற்றியும் உளவியல் ஆராய்கின்றது. மனித செயல்கள் யாவுமே தொடக்கத்தில் ஒரு எண்ணமாக எழுந்து பின்னரே செயல் வடிவத்திற்கு வருவதால் அற இயல் உளவியலுடன் ஒரு மிகமுக்கியமான வகையில் தொடர்பு

கொண்டுள்ளது. மனித நடத்தையாவும் பல்வேறு மனநிலைகளின் வெளிப்பாடுகளே. மனிதனின் மனதில் அமைந்த உள்நோக்கு, உட்கிடை, மற்றும் அகநிலை அறப்பண்பு - இவையாவுமே அவனுடைய செயல்களைத் தீர்மானிக்கின்றன.

மேலும் மனித உணர்ச்சிகளாகிய காமம், குரோதம், ஆசை, அச்சம், பசி, இரக்கம் இவையாவும் மனிதனுடைய செயல்களை ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கின்றன. எனவே உளவியல் அறிவு அற இயல் ஆராய்ச்சிக்கு மிகத் தேவையான ஒன்றாகும்.

அண்மைக் காலங்களில் உளவியலில் சமூக உளவியல் (Social Phychology). நடத்தை சார்ந்த உளவியல் (Behavioral Phychology) என்ற பிரிவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக வளர்ந்துள்ளன. சமூக உளவியல், ஒரு சமூகம் தனி மனிதனின் மனநிலையை எவ்விதத்தில் பாதிக்கின்றது என்பதைப் பற்றியும், ஒரு தனி மனிதனின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் சமுதாயத்தில் எத்தகைய விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன என்பதை பற்றியும் ஆராய்கின்றன. உளவியலின் இவ்விரு பிரிவுகளுமே அற இயல் ஆராய்ச்சியில் ஒரு முக்கியப் பங்கு பணியாற்ற முடியும்.

| உயர்நிலை அறிவியல் | நேர்நிலை அறிவியல் |
|---|---|
| 1. ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்புவதை எழுப்புவதை அடிப்படையாகக் கொண்டது. | என்ன இருக்க வேண்டும், இது இப்படித்தான் செயல்பட்டாக வேண்டும் என்ற விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. |
| 2. மதிப்பீடுகள் பற்றி படிக்கக் கூடியது. | உண்மைகளைப் பற்றி அறியக் கூடியது. |
| 3. முழுமையான நோக்கம் என்பது வரையறைக்கு உட்பட்டது. | முழுமையான நோக்கம் என்பது மிக விரிந்து பரந்து இருக்கும். |
| 4. நிகழ்வுகளின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது. | ஆராய்ச்சியின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது. |
| 5. மாறும் மனநிலையை அடிப்படையாகக் கொண்ட மனிதனைப் பற்றிய படிப்பு ஆகும். எனவே திட்டவட்டமாகத் தீர்ப்பு கூற இயலாது. | ஜடப்பொருட்களின், மாறாத் தன்மை கொண்ட புறப் பொருட்களின் படிப்பு என்பதால் தீர்ப்பு மாறாத் தன்மையுடையது. |



## 1.4. அற இயலின் இன்றியமையாமையும் பயன்களும்

### அற இயலின் இன்றியமையாமை

கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் மனிதனைப் பற்றிக் கூறும் பொழுது அவன் ஒரு 'சமூக விலங்கு' (Man is a social animal) என்றும் பகுத்தறிவுள்ள விலங்கு (rational animal) என்றும் வரையறை செய்துள்ளார். காமம், பசி, அச்சம் போன்ற உடல் சார்ந்த உணர்வுகள் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் பொதுவானவை. இவ்வுணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டும் மனிதன் செயலாற்றுவானாகில் அவனுக்கும் விலங்கிற்கும் அதிக வேறுபாடு எதையும் நாம் காண இயலாது. ஆனால், பகுத்தறியும் தன்னுண்மையறிவும் இருக்கின்ற ஒரே காரணத்தினால் அவன் விலங்கினின்றும் வேறுபட்டு ஓர் உயரிய நிலையில் வைக்கப்படுகிறான்.

இப்பகுத்தறிவை அவன் எவ்வகையில் பயன்படுத்துதல் வேண்டும் என்பதை அவனுக்கு உணர்த்துவது அறவியல்

கோட்பாடுகளே. வாழ்க்கைப் பாதையில் மனிதன் தடம் மாறாமல் இருப்பதற்கு அறவியல் கோட்பாடுகள் சிறந்த வழிகாட்டிகளாக அமைகின்றன.

தத்துவ வரலாற்றில் பண்டைய கால கிரேக்க அறிஞர்களான சாக்ரடீசு, பிளேட்டோ, போன்றவர்கள் தங்களது தத்துவக் கோட்பாடுகளில், வாய்மை, நேர்மை, தூய்மை, வீரம் போன்ற அறப்பண்புகளைப் பற்றி ஆழமாக ஆராய்ந்து அவற்றை உயர்நிலைத் தகவுகளாகக் கூறிச் சென்றுள்ளனர். தத்துவ ஆராய்ச்சியில் அற இயல் ஒரு முக்கிய இடத்தை எக்காலத்திலுமே வகித்து வந்துள்ளது. பெரும்பாலான உலக சமயங்கள் அற இயல் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளன. கடவுளை ஏற்றுக் கொள்ளாத சமயங்களான பௌத்தசமயம், சமண சமயம் ஆகியன அறவியல் கோட்பாடுகளுக்கு ஓர் உயர்ந்த இடத்தை அளித்துள்ளன.

தமிழகத்தில் திருக்குறள், புறநானூறு, நாலடியார், ஆத்திச்சூடி போன்ற உயரிய பழைமையான நூல்கள் யாவும் மிகச் சிறந்த அறநூல்களாகும். இந்து சமயத்தின் ஒரு முக்கியச் சமய நூலான பகவத் கீதை பயன் நோக்காச் செயல் என்ற அரிய அற இயல்கோட்பாட்டை உலகிற்கு எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் அளித்துள்ளது. கிறித்துவம், இஸ்லாம், யூத சமயம், ஆகியன அறநெறிக் கோட்பாடுகளை அடிப்படைடயாகக் கொண்டே அமைந்துள்ளன.

எனவே, அற இயல் அறிவானது ஒருவனை வளர்நிலைகளில் உயர்த்துகின்றது.

1. விலங்கினிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ளவும்.
2. அறநெறியில் தன்னை நிலை நிறுத்தி, மனிதனாக வாழவும்.



3. பிறரையும் அறவாழ்வில் நிறுத்தி, அதனால் சான்றோனாக வாழவும், ஆகிய மூன்று நிலைகளில் மனிதனை உயர்த்துகிறது.

தனிமனித வாழ்விலும், சமூக வாழ்விலும் அறவியற் கோட்பாடுகள் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றன. அறநெறியினின்றும் வழுவிய சமுதாயங்கள் யாவுமே நலிவடைந்தன என்பதை மனித வரலாறு நமக்கு எடுத்துரைக்கின்றது. செம்மையான அறநெறிகளே ஒரு சமூகத்தின் ஒற்றுமை மற்றும் நிலையான தன்மையைப் பேணிக்காக்கக் கூடியதாக இருக்கிறது. ஒரு தனி மனிதனின் உயர்வு கூட அவன் ஏற்றுக் கொண்ட அறநெறிகளைப் பொறுத்தே அமையும்.

### அற இயலின் பயன்கள்

அற இயல் என்ற பகுதியில் அமைக்கப்பெற்ற எல்லாமே அற இயல் அறிவின் பயன்களே. மெய்யறிவை நாடும் முயற்சியின் ஒரு பகுதியாக நாம் அறவியலைக் கொள்ள வேண்டும். மனித நடத்தையில் காணும் நல்லதையும் தீயதையும் பற்றி ஆராய்ந்து உண்மையைக் கண்டறியும் முயற்சியிலேயே அறவியல் ஈடுபடுகிறது.

i) மக்களிடத்தே தவறான போக்கில் அமைந்துவிட்ட சில அறமற்ற பழக்க வழக்கங்களை நீக்கவும், அல்லது அறத்தோடு இணைக்கும் வகையில் மாற்றியமைக்கவும் அற இயல் அறிவு துணைபுரிகின்றது.

ii) சமூக அமைப்புகளான குடும்பம், கல்விநிலையம், சமூகப் பயிற்சி நிலையம், தொழிற்கூடம், நாடு, சமய அமைப்புகள், அரசவை, போன்றவைகளுக்கு, உண்மை ஒளி கிடைக்கச் செய்யவும். ஒழுங்குமுறை பெறவும் அற இயல் அறிவு உதவுகின்றது.

iii) மாறிவரும் சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப அறவழிக் கொள்கைகளான உலக ஒருமைப்பாடு மனித நேயம் போன்றவற்றின் சிறப்பை எடுத்துக்கூறி செயல்படச் செய்வது அற இயல் அறிவு ஆகும்.

iv) இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு பிரிவு மக்களிடத்தேயும் காணப்பெறும், அமைதி இன்மை மற்றும் அறமல்லாச் செயல்களின் பெருக்கம் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதும் அற இயல் அறிவு ஆகும்.

v) அற இயலானது மனித நடத்தையின் உயர்நிலைக் கோட்பாடுகளைப் (Norms) பற்றி ஆராய்ந்து கூறுகின்றது. இத்தகைய கோட்பாடுகள் தனி மனிதன் தன்னுடைய வாழ்க்கையைச் சிறப்பான வழியில் அமைத்துக் கொள்ள உதவுகின்றது.

vi) ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ‘இது தான் பொருந்தும்’ என்று விரைந்து முடிவு செய்யவும், முடிவு செய்ததைச் செயற்படுத்தவும் அற இயல் அறிவு உதவுகின்றது.

vii) மனித வாழ்வியலில் அமைந்த பல்வேறு துறைகளையும், தனித்தனியாக நிறுத்தி நெறிப்படுத்தவும், அப்பல்வேறு துறைகளோடும் இணைந்து ஆளுமைப் பண்பினைப் பெற உதவியாக இருப்பதும் அற இயல் அறிவு தான்.

பண்டைக் காலத்திலிருந்தே அற இயலின் குறிக்கோளும், மக்களின் பழக்க வழக்கங்களினால் ஆய்வு செய்யப்பட்டு ஏற்புடைத் தன்மையுடையவை எனக் கருதப்பட்டன. இக்கொள்கைகளை நாம் பின்பற்றும் போது கண்டிப்பாக அறவழியில் தான் நாம் செல்வோமேயன்றி மாற்றுப் பாதையில் செல்ல வாய்ப்புகள் மிகக் குறைவே.

அற இயல் கொள்கைகள் சமூகத்தில் வாழும் மனிதன், அச்சமூகத்தால் வரையறை செய்யப்பட்ட நடத்தை முறைகளைச்



சீரிய முறையில் பின்பற்ற உதவுகின்றன. அறவியல் கொள்கைகள் தனி மனிதனின் நடத்தையைச் செம்மை செய்வதன் மூலமாக அவன் வாழும் சமூகம் நிலைத்து, இணைந்து இருக்கவும் உதவி புரிகின்றது.

### பயிற்சி வினாக்கள்

**I. ஓரிருவரிகளில் விடையளி** **(2 மதிப்பெண்கள்)**

1. அற இயல் என்றால் என்ன?
2. “Ethos” என்பதன் பொருள் யாது?
3. “Moral” என்பதன் பொருள் யாது?
4. மனித வாழ்வின் நான்கு உறுதிப் பொருள்கள் யாவை?
5. அறிவியல் என்றால் என்ன?
6. அறக் கருத்துக்கள் பற்றி கூறும் பழந்தமிழ் நூல்களைக் குறிப்பிடு.
7. வாழ்வின் இறுதிக் குறிக்கோள் யாது?
8. அறிவியல் முறை என்பது என்ன?
9. அறிவியலின் இருவகைகள் யாவை?
10. நேர்நிலை அறிவியல் என்றால் என்ன?
11. உயர்நிலை அறிவியல் என்றால் என்ன?
12. நேர்நிலை அறிவியலுக்கு உதாரணம் கொடு.
13. உயர்நிலை அறிவியல்கள் யாவை?
14. ஹெர்பர்ட் ஸ்பென்சர் எழுதிய நூலின் பெயர் எது?
15. அண்மைக் காலங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உளவியல்கள் யாவை?
16. “மனிதன் ஒரு சமூக விலங்கு” என்று கூறியவர் யார்?

**II. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி. (5 மதிப்பெண்கள்)**

1. அற இயல் உணர்த்தும் உண்மைகள் யாவை?
2. அற இயல் ஓர் அறிவியல் - விளக்கு?
3. அற இயலும், இயற்பியலும் பற்றி விவரி.
4. அற இயலும் உளவியலும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்பதை விவரி.
5. அற இயலும், சமயமும் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதனை விவரி.

**III. ஒரு பக்க அளவில் அல்லது இருபது வரிகளுக்குமிகாமல் விடையளி (10 மதிப்பெண்கள்)**

1. அற இயலின் வரம்பிற்கு உட்பட்ட செய்திகளை விவரி.
2. அற இயல் ஓர் உயர்நிலை அறிவியல்? விளக்கு.
3. அற இயலும், தத்துவ இயலும் பற்றி விளக்கு.
4. அற இயலும், மானிட இயலும், சமுக இயலும் ஒன்றோடொன்று எவ்வகையில் தொடர்பு கொண்டுள்ளன?
5. அற இயலின் இன்றியமையாமை பற்றி எழுதுக.
6. அற இயலின் பயன்கள் யாவை?

**IV. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அல்லது நாற்பதுவரிகளுக்கு மிகாமல் விடையளி (20 மதிப்பெண்கள்)**

1. அற இயலுக்கும், அறிவியலுக்கும் உள்ள தொடர்பினை விவரி.
2. அற இயலுக்கும், பிற இயலுக்கும் உள்ள தொடர்பினை விளக்கி வரைக.

# II. அறச்செயல்களும் அறஞ்சாராச் செயல்களும் (MORAL AND NON-MORAL ACTIONS)

## 2.1. அறச் செயல் மற்றும் அறஞ்சாராச் செயல்களின் வரையறை

***உள்ளத்தியல்*** **: (Psychology)**

மனிதனுடைய செயலுக்கு நடத்தை என்று ஒரு வழக்குப் பெயர் உண்டு. மனிதனுடைய செயல் அல்லது நடத்தை நிகழ்வதற்கு முன்னால் அவனுடைய மனத்தில் இன்ன இன்ன நிலைகள் உண்டாகின்றன என்பதை விளக்க முற்படும் அறிவியல் துறையே ‘உள்ளத்தியல்’.

மனிதனின் நடத்தைக்கு முன்னர் நிகழும் மனநிலைகளைக் காரணமாகவும், உடம்பில் நிகழும் பலவகைச் செயல்களைக் காரியமாகவும் கொள்ளலாம். இவ்வகையில் மனித நடத்தையை அறிவதற்குரிய அறிவியிலாக உள்ளத்தியல் திகழ்கிறது.

தனி மனிதனின் நடத்தையை நன்று என்று ஏற்பதோ, தீது என்று விலக்குவதோ உள்ளத்தியலின் பணி அன்று. ஆயினும், உள்ளத்தியல் வரையறை செய்து காட்டிய மனநிலைகளை அப்படியே அற இயல் ஏற்றுக் கொள்கிறது.

***அறச்செயல்***

மனிதன் பல செயல்களில் ஈடுபடுகிறான். சமுதாயத்தோடு இணைந்து வாழும் மனிதனின் செயல்கள் சரியானதா, தவறானதா, நல்லதா, கெட்டதா, ஏற்புடையதா, ஏற்பற்றதா, சமுதாயத்தை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கும் இயல்புடையதா என்றெல்லாம் ஆய்வுகள் செய்யப்பட்டு, சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்காத செயல்கள் நற்செயல்களாக ஏற்றுக்

கொள்ளப்படுகின்றன. அறப் பண்பினை உள்ளிட்ட எல்லாச் செயல்களையும் ஒழுக்கம் என்றோ அறஞ்சார்ந்த செயல்கள் என்றோ நாம் கொள்ளலாம் இதனையே

“அறத்தினூ ஙகு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு”

என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை. அறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடக் கெடுதியானதும் இல்லை என்பது பொருளாகும்.

அற இயல் கோட்பாட்டின் அடிப்படையில் மனிதனின் செயல்கள், அறச் செயல்கள் என்றும் அறஞ்சாராச் செயல்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன.

“அறிவு, ஆராய்ச்சி திறன் கொண்டு, பகுத்தறிவின் அடிப்படையில் ஒருவன் விரும்பியேற்று செய்கின்ற செயலானது, இடைவிடாப் பயிற்சியின் காரணமாக பழக்கச் செயலாக மாற்றம் பெறுகின்றது. இதுவே அறச்செயல் என அழைக்கப்படுகிறது.

வள்ளுவப் பெந்தகையும், இதனையே

“ஒல்லும் வகையான் அறவினை ஒவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.”

என்று செல்லுமிடமெல்லாம் அறச்செயலை செயல்படுத்தச் சொல்கிறார்.

### அறஞ்சாராச் செயல்

இயற்கையின் சீற்றத்தால் உருவாகும் சூறாவளி, நிலநடுக்கம், சுனாமி, வெள்ளம், வறட்சி முதலியவை அறஞ்சாராச் செயல்கள் ஆகும். ஏனெனில் இயற்கையானது ஆய்ந்து, தேர்ந்து, தெளிந்து, அறிவால் மேற்கொள்ளப் பெற்ற செயல்கள் அன்று. மேலும், மிருகங்களின் செயல்கள், குழந்தைகளின் செயல்கள்,



மனப்பிறழ்ச்சியுற்ற மனிதனின் செயல்கள் போன்றவை அறஞ்சாராச் செயல்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளவையாகும். பிறருடைய வற்புறுத்தலின் காரணமாக சுதந்திரமற்ற நிலையில், செய்யப்படும் செயல்களும் அறஞ்சாராச் செயல்களாகும்.

நம்மால் கட்டுப்படுத்தப் பெற முடியாத இரத்த ஓட்டம், இயற்கை உள்ளுக்கியால் விளையும் செயல்கள், அறிவோடு உடன்படாத உடற் கூற்றுச் செயல்கள், உணர்ச்சிகளின் உந்துதலால் செய்யப்படும் செயல்கள், எதிர்பாராத செயல்கள், ஆகியவைகளும் அறவழி தீர்ப்புச் செயல்கள் ஆகா.

### அற இயல் ஆராயும் செயல்கள்

ஒரு குழந்தை தன் கையை வாயில் வைத்து சுவைத்துக் கொண்டிருக்கிறது. இது அறிவோடு இணைந்த செயலா? அல்லது விரும்பி ஏற்ற செயலா? என்ற கேள்விக்கு, ஆய்ந்து விடை காண முற்படுவது அறச்செயலின் கடமையாகும்.

குழந்தை தன் கையை வாயில் வைத்து சுவைக்கும் போது அது அறிவோடுபடாத செயலே. ஆனால் பின்னர் அறிவினால் ஆராய்ந்து பார்த்துத் தவறு என்று தெரிந்தபோது, அச்செயல் அக்குழந்தையால் தவிர்க்கக் கூடிய செயலேயாகும். ஆகையால் ஆராய்ந்து, தவறெனக் கண்ட பிறகும் தவிர்க்க இயலாத செயலாக அமையுமேயானால் அச்செயல் அறஞ்சாராச் செயலாகும். இச் செயலை அவன் சிந்தித்திருந்தால் தவிர்த்திருக்க முடியும் என்ற கருத்து எழுமானால், அப்படி தவிர்த்த செயலே நற்செயலாகும்.”

### விரும்பி ஏற்ற செயல் : (Voluntary Action)

பகுத்தறிவுள்ள, செயலாற்ற வல்ல ஒருவன், தன் குறிக்கோளை சரியானது என ஆராய்ந்து இன்னது என வரையறை செய்துகொண்டு அதை அடைய விரும்பி, அதற்கேற்ப தன்

செயல்களைச் சுதந்திரமான தன்மையுடன் செயலாற்றுவதை விரும்பியேற்ற செயல் எனப்பெறும்.

இவ்வகையான விரும்பி ஏற்ற செயல் கீழ்கண்ட மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது.

அ) மனநிலை

ஆ) உடல் சம்பந்தப்பட்ட செய்கைகள்

இ) வெளிப்புற விளைவையொட்டிய நிலை

**அ) மனநிலை**

விரும்பி ஏற்ற செயலின் மூன்று நிலைகளில் முதல் நிலையாகிய மனநிலையானது ஆறு வகைகளில் செயல்படுகிறது.

**i) தேவையுணர்ச்சி (Feelings of wants)**

தேவையுணர்ச்சியைப் பற்றி இருவகைக் கருத்துக்கள் உண்டு.

1. தேவையுணர்ச்சி எப்போதும் துன்பியலானதாகவே இருக்கிறது.
2. தேவையானது நிறைவு செய்யப்பெறும் போது இன்ப உணர்வுடன் கலந்ததாகவே இருக்கிறது. உயிருறுப்புக்களுக்குச் சில தேவைகள் உண்டு. உடலுக்கு உணவு தேவை அவ்வாறே, நீர், காற்று ஆகியவைகளும் தேவையே. இவைகள் உயிருறுப்புத் தேவைகள் (Organic needs or wants) என்பர். ஒருவன் தனக்கு இவை இவை தேவை என்று அறிவது வேறு, தனக்கு உணவு தேவை என அறிவது வேறு. இப்போது உணவு தேவை என்ற உணர்வைப் பொதுவாகச் 'சுவை நுகர் உணர்வு' என்பர் (appetite). ஆனால், இந்த உணர்வு மெல்ல அழுத்தம் பெறும். நாம், பிற வேலைகளை ஒதுக்கி வைத்துவிடு, உணவை உட்கொள்ளுமாறு தூண்டுகிறது. இவ்வாறு எழும்



அகநிலைத் தூண்டுதல் (Impulse) சுவை நுகர் உணர்வை விட வேறுபட்டது. அக நிலைத்தூண்டுதல் ஒருவகை துன்ப உணர்வை கொடுக்கும். காரணம் நமது சிந்தனை வேறு வேலை எதையும் கவனிக்கவிடாமல் நம்மை வலுவாக சுவை நுகர் உணர்வு உந்துவதால் அது துன்பமியல்பானதாகவும் உணவு உட்கொண்டால் ஒரு நிறைவு ஏற்படுகிற எனவே, தேவையுணர்ச்சியானது துன்பத்தில் தொடங்கி இன்பத்தில் முடிவடைகிறது.

**ii) தேவையுணர்ச்சி ஆசையாக மாறுதல்**

தேவையுணர்ச்சி ஆசையாக மாற்றம் பெறுகிறது. மனிதனிடத்தில் விளங்கும் இயற்கை அறிவு என்பது தன்னுண்மை அறிவு "(Self-consciousness) எனப்பெறும். இதுவே தேவையுணர்ச்சியை ஆசையாக (desire) மாற்றுகிறது. ஆசையாக மாற்றங் கொண்ட போது அங்கே காணப்பெறும் கூறுகள்.

தேவையை நிறைவு செய்யக் கூடிய பொருள் எது? என்பது பற்றிய கருத்து. அப்பொருளை அடைவதற்குரிய வழி வகைகள் பற்றிய கருத்து. எனவே தேவையுணர்ச்சியானது ஒரு கூட்டமைப்பு செயலாக அமைந்து விடுகிறது.

**iii) மாறி நின்றெழும் ஆசைகளின் மோதல் : (Conflict of desire)**

பலவகைத் தேவையுணர்ச்சிகள் ஒரே சமயத்தில், பலவித ஆசைகளை தோற்றுவிக்கும். ஒரே சமயத்தில், எல்லா ஆசைகளையும் நிறைவேற்ற இயலாது. எனவே, ஒரே ஒரு தேவையை முன்னிட்ட ஆசையை மட்டுமே முன்னிறுத்தி, ஏனையவைகளைப் பின்னுக்குத் தள்ள வேண்டும் என்ற நிலை

ஏற்பட, மனத்தில் போட்டியுணர்வு, மாறுபட்ட உணர்வு, உள்ளுக்கிகளில் மோதல், ஆசைகளின் மோதல் முதலியன நிகழும். ஆகையால், உயிரானது ஏதேனும் ஓராசையை மட்டும் முன்னிறுத்தி, மற்றவைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடும்.

**iv) தன்னுரிமைத் தேர்வு நிலை : (Delibration)**

தன்னுரிமைத் தேர்வு நிலை என்பது ஒருவகைச் செயலாற்றல். இதைச் செயற்படுத்துவது தன்னுண்மை அறிவுதான்.

பல ஆசைகள் மோதும்போது, உயிரானது அறிவினுடைய ஆற்றலால், ஆசைகளையும் ஆராய முற்படுகிறது. ஆசைகளின் வன்மை மென்மைகள் ஆராயப் பெறுகின்றன. இறுதியில், பல ஆசைகளில் ஒன்றை மட்டும் தேர்ந்து கொள்ளும் ஆற்றலை உயிரானது பெற்றுவிடுகிறது. இதுவே தேர்வு நிலை.

**v) துணிந்ததை அழுந்தப் பற்றும் நிலை : (Intensification)**

உயிரானது தன்னுரிமைத் தேர்வு நிலையின் மூலம் பல வகையான ஆசைகளில் ஒரு குறிப்பிட்ட ஆசையைத் தேர்வு செய்கிறது. தேர்வு செய்தபின் அந்த ஆசையைச் செயற்படுத்துவதற்க்கான உள்நோக்கம் அமைந்துவிடுகிறது. எனவே, அந்த உள்நோக்கமானது, ஆசையை நோக்கி நம்மைச் செயல்படுத்துகிறது. இதுவே, ஆசையை இறுகப்பற்றும் நிலையாகும்.

**vi) அழுத்தப் பற்றிய நிலையை தீர்மான நிலையாக்கல்**

நிறைவு செய்யப் பெற வேண்டிய ஆசை இது எனத் தேர்வு செய்தபின், ஆசை செயற்பாட்டு நிலைக்கு வந்துவிடும். சிற்சில சமயங்களில் தடைகள் நேரலாம். தடைகளின் வலிமையால் அந்த



ஆசை வலிவிழந்து போய்விடாதவாறு, தேர்ந்த முடிவை, முடிந்த முடிவாக ஆக்கும்.

(Decision becomes determination) எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதியுடையராக இருக்கப் பெற்றால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

**ஆ) உடல் சம்பந்தப்பட்ட செய்கைகள் : (Bodily Stage)**

ஆறுவகை உள் மனநிலையில் மனம் செயல்பட்டு உடல் உறுப்புகளில் பதிந்து அவற்றைச் செயல்படுத்தும். நடத்தல், ஓடுதல், பார்த்தல் பேசுதல் போன்ற செயல்கள் இவ்வகையைச் சேர்ந்தவை.

**இ) வெளிப்புற விளைவை ஒட்டிய நிலை**

உடல் செயல்படுவதால் அச்செயல் வெளிப்புற உலகில் பல வகையான மாற்றங்களை உண்டாக்குகிறது. தேர்ந்தெடுத்த ஆசை, அதன் உள்நோக்கம் ஆகியவற்றின் வன்மை, மென்மைகளையும் வெளிப்புற விளைவுகள் உணர்த்துகின்றன.

மேலே குறிப்பிட்டவாறு, தேவையுணர்ச்சி, தேவையுணர்ச்சி ஆசையாக மாறுதல், ஆசைகளின் மோதல், ஆசைகளில் ஒன்றைத் தேர்வு செய்தல்.

தேர்வு செய்த ஆசையினை நிறைவு செய்ய எடுத்துக் கொண்ட செயல், நோக்கம், செயற்படும் முறை, பின்விளைவுகள் என்ற எல்லாக் கூறுகளையும் இணைத்து ஒரு மனிதன் செயலாற்றும் போது அவன் செயல், ‘விரும்பி ஏற்ற செயல்’ என்ற பெயரைப் பெறுகிறது.

இவ்வாறு விரும்பியேற்று மேற்கொண்ட செயல்கள் அறஞ்சார்ந்த செயல்கள் என்று சொல்லப்படும். இவையல்லாத செயல்கள் அறஞ்சாராச் செயல்கள் என்று அழைக்கப்படும்.

பின்வரும் வரைபடத்தின் மூலமாக இச்செயல்கள் பற்றிய விளக்கத்தினை அறிந்து கொள்ளலாம்.

**செயல்**

| அறச்செயல் (Moral action) | அறஞ்சாராச் செயல் (Non-moral action) |
|---|---|
| விரும்பியேற்ற நல்ல செயல்களான ஒழுக்கம், போன்றவை | குழந்தைகளின் செயல்கள், இயற்கையின் செயல்கள், மனப்பிறழ்ச்சியுற்ற மனிதனின் செயல்கள் |

## 2.2. உள்நோக்கு, உட்கிடை (Motive & Intention)

உளவியல் அறிஞர்களின் கூற்றுப்படி, நாம் ஒரு செயலைச் செய்யும்பொழுது அச்செயலுக்குக் காரணமாகப் பல சக்திகள் நம் உள்ளத்தில் இயங்குகின்றன. ஒரு செயல் தொடங்கி முடிவதற்குப் பல காரணிகள் இருக்கின்றன.

அவைகளுள் உள்நோக்கும், உட்கிடையும் இரண்டு முதன்மைக் காரணிகள். அவை எத்தகைய இயல்புடையன, எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விரிவாக தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

**உள்நோக்கு : (Motive)**

எந்த ஒரு ஆற்றல் அல்லது எந்த ஒன்று நம்மை, நம்முடைய செயலை நோக்கி குறிப்பிட்ட வழியில் செய்யுமாறு ஊக்குவிக்கின்றதோ அதுவே உள்நோக்கு என்று பெயர்



பெறுகிறது. (The word motive literally means what moves us to act in a particular way).

ஒரு செயலைத் தோற்றுவிக்கவும், முடித்து வைக்கவும் உரிய காரணமாக உள்நோக்கு அமைந்துள்ளது. இனி, தேவையுணர்ச்சியே ஒரு செயலைத் தோற்றுவிப்பது என்றும், அது ஒருவகை துன்ப உணர்ச்சி என்றும், துன்ப உணர்ச்சியாயினும் அது இன்ப உணர்ச்சியையும் உள்ளீடாகக் கொண்டது என்றும் ஆய்வினால் வெளிப்பட்டன.

இன்ப துன்ப உணர்ச்சிகளே செயலலின் உள் நோக்கங்கள் என்று கொண்டால், துன்ப உணர்ச்சியே செயலைத் துவக்கி வைப்பதாகவும், இன்ப உணர்ச்சியே செயலை முடித்து வைப்பதாகவும் அமையும். மாறாக துன்ப உணர்வே தொடக்கமாகவும், முடிவாகவும் அமைவதுண்டு. உதாரணமாக, தியாகம் நாட்டு நலனுக்காகத் தன் உயிரைக் கொடுத்தல் போன்றவை ஆகும்.

ஒரு செயலை தொடங்குவது ஒன்றும் முடிப்பது ஒன்றும் என வேறு வேறாக அமைவது பொருந்துவதாக இல்லை. மேலும், உணர்ச்சி என்ற ஒன்றன் அடிப்படையில் மட்டுமே செயல்படுவது விலங்கினத்துக்கும் அறிவுத் திறன் வளரப் பெறாத குழந்தைகளுக்கும் பொருந்துவதாகலாம். மனிதனை செயற்பட வைப்பது அறிவே.

எனவே, மனிதன் அறிவாற் செயற்படுபவன். பகுத்தறிவின் துணைகொண்டு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தித் தாம் விரும்பிய வழியில் செயல்படும் ஆற்றல் உடையவன். எனவே இன்ப, துன்ப உணர்ச்சிகளுடன் அறிவு சார்ந்த குறிக்கோள்களையும் உள்நோக்கமாக (motive) ஏற்றுக்கொள்ளுதல் அவசியமாகிறது. உதாரணமாக, ஒரு பிச்சைக்காரனுக்கு உணவளித்து உதவும் போது

இரக்கம் என்ற உணர்ச்சியோடு, அவனது பசியைக் களைந்து அவனுக்கு மகிழ்வூட்ட வேண்டும் என்ற அறிவுப்பூர்வமான குறிக்கோளும் உட்கிடையாக அமைகிறது.

செயல்களது தன்மை, செயல்கள் நிகழும் இடம், மற்றும் காலம், செயலாற்றுவோரின் இயல்பு போன்றவற்றிற்குத் தக்கவாறு உள்நோக்கு பல வகைகளில் அமையும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**உட்கிடை : (Intension)**

உள்நோக்கத்தைவிட உட்கிடையானது சற்று விரிந்த பொருளுடையது. ஒரு செயலைச் செய்பவரது குறிக்கோள், மற்றும் குறிக்கோளை அடைவதற்கான வழிவகைகள் திட்டங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். உதாரணமாக ஒரு மாணவன் நன்கு படிக்கிறான் என்றால் அதற்குப் பல காரணங்கள் உண்டு. நிறைய மதிப்பெண்கள் பெற்று, முதல் வகுப்பில் தேற வேண்டும், பெற்றோர்களிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் நல்ல பெயர் பெற வேண்டும். நல்ல வேலையில் அமர வேண்டும். நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும். நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் போன்ற பல வகையான குறிக்கோள்கள் அவனது கடின உழைப்பிற்குக் காரணமாக அமைகின்றன. இவையாவுமே அவனது செயலின் உட்கிடைகளாகும்.

பொதுவாகக் கூறுமிடத்து, உட்கிடை என்பதைக் குறிக்கோள் எனலாம் ஒரு செயலின் முடிவுக் காரணம் (final cause) என்றும் இதைக் கூறலாம் அறிவு சார்ந்த நம் செயலின் மூலம் புற உலகில் நாம் ஏற்படுத்த விரும்பும் மாறுதலே உட்கிடை. இது பல்வேறு அம்சங்களைத் தன்னுள் அடக்கியுள்ளது.

உள்நோக்கு போன்றே உட்கிடைகளும், இடம் காலம், செயல் நிகழும் சூழ்நிலை, செயல் செய்பவரது மனநிலை போன்றவற்றிற்குத்



தக்கவாறு பல வகைகளில் அமைகின்றன. இவ்வகைகளில் சிலவற்றைப் பற்றி இனி பார்ப்போம்.

'உடனடி உட்கிடை' என்பது ஒரு செயலின் மூலம் அடையக்கூடிய உடனடிக் குறிக்கோளாகும். கல்லூரியில் சேர விண்ணப்பப்படிவம் வாங்குதல் என்ற செயலின் உடனடிக் குறிக்கோள் கல்லூரியில் சேரவேண்டும் என்பது. வெகுதூரத்தைய அல்லது நீண்ட காலத்தைய உட்கிடை என்பது நீண்ட காலத்திற்குபின் அடையக்கூடியக் குறிகோளாகும்.

நமது உதாரணத்தில்; நல்ல வளமான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோள் விண்ணப்பப்படிவம் வாங்குவதன் நீண்ட காலத்தைய் உட்கிடை ஆகும்.

உட்கிடைகளை 'உள்ளார்ந்தவை' அல்லது வெளிப்படை யானவை' என்றும் வகைப்படுத்தலாம். உதாரணமாக ஒருவர் பள்ளததில் விழுந்து விட்ட ஒரு பன்றியைக் காப்பாற்றிய போது அவரது வெளிபடையான உட்கிடையாக அமைந்தது, பன்றியைக் காப்பாற்ற வேண்டும் என்பது. ஆனால் உள்ளார்ந்த உட்கிடையாக அவரது உள்ளத்தில் பன்றியின் துன்பம் கண்டு எழுந்த வருத்த உணர்வினைக்களைய வேண்டும் என்ற குறிக்கோள் ஆகும்.

'நேரடி உட்கிடை', 'மறைமுக உட்கிடையைப் பின்வரும் எடுத்துகாட்ட்டால் அறியலாம். பள்ளிகளில் செயல்படுத்தப்படும் சத்துணவு திட்டத்தின் நேரடி உட்கிடை மதிய உணவு அளித்தல், உடல்நலம் பேணல்.

ஆனால் இதன் மறைமுக உட்கிடை எல்லோருக்கும் கட்டாயக் கல்வி, பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தாமை என்பதை செயல்படுத்துதல் ஆகும்.

இதுகாறும் விவாதித்தவையினின்றும் நாம் அறிவது யாதெனின் ஒவ்வொரு செயலுக்கும் பலவகையான உட்கிடைகள் உண்டு

என்பதும் ஒவ்வொரு உட்கிடைக்கும் பல கூறுகள் உண்டு என்பதுமேயாகும்.

**உள்நோக்குக்கும் உட்கிடைக்கும் இடையே உள்ள வேற்றுமைகள்**

உள்நோக்கு, உட்கிடை என்ற இரண்டுமே ஒரு செயலுக்குக் காரணமாக அமைந்தாலும் அவற்றின் இயல்பு மாறுபடுகிறது. உள்நோக்கானது இயல்பூக்க உந்துதல் மற்றும் அடைய வேண்டியக்குறிக்கோள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது. ஆனால் உட்கிடை என்பது அடையவேண்டிய குறிக்கோளை மட்டும் குறிக்கின்றது.

உள்நோக்கு என்பது ஒரு செயலுக்குக் காரணமாக இருக்க மனத்தளவிலான உள்ளார்ந்த தூண்டுதலாகவே பெரும்பாலும் அமைகின்றது. ஆதலால் இதைப் பிறர் அறிய வாய்ப்பில்லை. ஆனால் உட்கிடையானது பெரும்பாலும் வெளி உலகத்தில் ஒரு மாறுதல் ஏற்படுத்தி அதன் மூலம் அடையக்கூடிய குறிக்கோளைக் குறிப்பதால் அது வெளிப்படையாக எல்லோராலும் அறிந்து கொள்ளக் கூடியதாகும்.

உள்நோக்கு பெரும்பாலும் ஒரு விருப்பமாகவே அமைகின்றது. 'உட்கிடை என்பது விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன் மற்ற குறிக்கோள்களையும் செய்முறைத் திட்டங்களையும் தன்னுள் அடக்கிய ஒரு விரிந்த சொல்லாகும்.

## 2.3. பழக்கம், நடத்தை, நடத்தையின் அகநிலை அறப்பண்பு (Habit, conduct and character)

அறவியலை வரையறை செய்த போது, அது சமூகத்தில் வாழும் மனிதனின் நடத்தையைப் பற்றிய ஓர் உயர்நிலை அறிவியல் என்று கண்டோம். மனிதனின் நடத்தை என்று கூறும் போது அது பல அம்சங்களைத் தன்னுள் அடங்கியுள்ளது.



உளவியல் ரீதியாகக் காணும்போது மனிதனின் பழக்க வழக்கங்கள் மற்றும் அகநிலை அறப்பண்பு ஆகியயாவையும் அவனது நடத்தையினைத் தீர்மானம் செய்கின்றன என்று தெரிகிறது. ஆகவே, இப்பாடத்தில் நாம் பழக்கம், நடத்தை, மற்றும் அகநிலை அறப்பண்பு ஆகியவற்றைப் பற்றிச் சற்று விரிவாகக் காண்போம்.

### அ) பழக்கம் : (Habit)

கிரேக்கத் தத்துவ ஞானியான சாக்ரடிஸ் "நல்லொழுக்க நற்பண்பு" (Virute) என்பது ஒரு வகையான உயர்நிலை அறிவுடைமை என்று கூறினார் அவருக்குப் பின் வந்த அரிஸ்டாட்டில், 'நல்லொழுக்க நற்பண்பு என்பது நல்ல பழக்கங்களை நமது வாழ்வில் நிலையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதே' என்று கூறினார். இவ்விரு கிரேக்க ஞானிகளின் கூற்றும் ஒன்றோடொன்று முரண்படுவதாகத் தோன்றினாலும் உண்மையில் இருவரது கூற்றுக்களின் அடிப்படையில் ஓர் ஒற்றுமை உள்ளது. என்னவென்றால், நல்ல பழக்கங்களைக் கண்டறிந்து நிலையாகக் கடைபிடித்து ஒழுகுதல் என்பதேயாகும்.

நாம் ஏற்றுக்கொண்ட செயல்களைப் பலமுறைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது அவை பழக்கமாக மாறிவிடுகின்றன. உதாரணமாக, ஒரு வயதே நிரம்பிய குழந்தை நடக்கத் துவங்கும்போது முதலில் சிறிது சிரமப்படுகிறது. சில முறை கீழேயும் கூட விழுகிறது. ஆனால் பல முறை நடக்க முயற்சி செய்தபின் அது பழக்கமாக மாறி இயல்பாகி விடுகிறது. எந்த ஒரு செயலும் பழக்கம் என்று ஆகிய பின்பு அறிவுப்பூர்வமாக நமது மனத்தை அச்செயலில் செலுத்துவது என்பது தேவையற்றதாகி விடுகிறது. மேலும் ஓர் உதாரணத்தின் மூலமாக நாம் நன்கு புரிந்து கொள்ளலாம். தேகப் பயிற்சி செய்ய வேண்டும் என நினைத்தவன், முதலில்

ஆசனத்தைப் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்கிறான். பின்னர் செய்யும் முறைகளைத் தெரிந்து கொள்கிறான். முதலில் சிரசாசனம், பத்மாசனம் போன்றவை கடினமாக தோன்றினாலும், நாளடைவில் அது எளிதான பயிற்சியாக மாறிவிடுகிறது. தூண்டுதலின்றித் தானே செயல்படுமளவுக்கு, பயிற்சி அமைந்து விடுகிறது. இதுவே பழக்கச் செயல் எனப்படுகிறது. இயல்பாகவே நற்செயல்களைச் செய்யும் தன்மையினை நாம் பெற்று விடுகிறோம். இதையே அரிஸ்டாட்டில் “நல்லொழுக்க நற்பண்பு” என்று கூறுகிறார்.

நமது மூதாதையர் கூட இப்பழக்கங்களை பழமொழியாக கூறியுள்ளனர். “சித்திரமும் கைப்பழக்கம்” “செந்தமிழும் நாப்பழக்கம்” “வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்” என்பது அப்பழமொழி.

ஒருவன் வாழ்வில் ஏதேனும் சில முறைகள் மட்டும் நற்செயல்களைச் செய்வானாயின் அவனே அறவாணன் என்று கூறமுடியாது. நற்செயல்களைச் செய்வதென்பது பழக்கமாக மாறி அவன் சிந்தனை முழுவதும் நற்சித்தனையாக மாறும் பொழுதுதான் அவன் உண்மையிலேயே, ஓர் அறவாணனாக ஆகின்றான். மேலும், நற்செயல்களைச் செய்வதில் ஒரு விதமான மகிழ்வும், ஈடுபாடும் அவனுக்கு வருகின்றன. அரிஸ்டாட்டில், ஒரு மனிதன் நல்ல செயல்களைச் செய்யும் பழக்கம் ஒருவனிடத்து வேரூன்றும் பொழுது அப்பழக்கம் ஓர் இயல்பான ஒன்றாக அமைந்து விடுகிறது.

**ஆ) நடத்தை : (Conduct)**

விரும்பியேற்ற அறவழிச் செயல்களும், பழக்கச் செயல்களுமே நடத்தை என்று பொருள்படும். நடத்தை என்பது பழக்கம் என்ற நிலையைக் காட்டிலும் உயர்ந்தது. ஏனெனில் நடத்தை நிலையில்



மனமும், உடலும் ஒருங்கிணைந்து அறத்தன்மையை முழுவதுமாக அடைந்து இயல்பாகச் செயல்படுகின்றன.

இந்நிலையில் ஒரு மனிதனின் அகநிலை அறப்பண்புகள் யாவுமே அவன் நடத்தையில் வெளிப்படுவதால் சில மனோதத்துவ அறிஞர்கள் நடத்தையை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு மனிதனின் உள்நோக்கு மற்றும் உட்கிடையைத் தீர்மானிக்கிறார்கள். நமது முதுமொழியான ‘அகத்தின் அழகு முகத்தில்’ (The face is the index of the mind) என்பதுமே இதையே குறிக்கும்.

அற இயலில் நாம் ஒரு சமூகத்தில் வாழும் மனிதனின் நடத்தையைப் பற்றியே ஆராய்கின்றோம். தனிமனிதன் ஒருவனின் நடததை சமூகத்தைப் பாதிப்பதைப் போலவே சமூகச் சூழ்நிலைகளும் தனி மனிதனின் நடத்தையைப் பாதிக்கின்றன.

உதாரணமாக, இளைஞன் ஒருவன் சூழ்நிலை தாக்கம் காரணமாக தீவிரவாதியாக மாறுவது. ஒரு மனிதனின் நடத்தை என்பது அவனது அகநிலை அறப்பண்பை அடிப்படையாகக் கொண்டு, படிப்படியாக மாறிக்கொண்டே வந்து, அவனது இருபது அல்லது இருபத்தைந்தாவது வயதிற்குள் முதிர்ச்சிடைந்து ஒரு நிலையான தன்மையைப் பெற்று விடுகிறது. இதனையே ஒரு திரைப் பாடலில் பட்டுக்கோட்டை கல்யாண கூந்தரம் “ஆளும் வளரனும், அறிவும் வளரனும், அது தாண்டா வளர்ச்சி, உனை ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி” என்பார்.

எனவே, இதற்குப்பின் வரும் மாற்றங்கள் மிகச் சிலவே. “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” என்ற பழமொழியும் இதனையே குறிக்கிறது. எனினும், ஒரு மனிதனின் குடும்ப மற்றும்

சமூகச் சூழல்கள் அவனது நடத்தையின் இயல்பைப் பெருமளவில் பாதிக்கின்றன என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

மேலும், நடத்தை என்பது ஒரு மனிதனின் ஏதாவது ஓரிரு செயல்களை மட்டும் குறிப்பதில்லை. அவன் வழக்கமாகச் செய்யும் எல்லா வகைச் செயல்களையும் கருத்தில் கொண்டே நடததை என்பது தீர்மானிக்கப்படுகிறது.

**இ) அகநிலை அறப்பண்பு : (Character)**

அகநிலை அறப்பண்பு என்பதைப் பற்றிய ஆய்வு அறவியலில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆங்கில சொற்றொடர் கூட அகநிலை அறப்பண்பின் முக்கியத்துவத்தை இவ்வாறாக எடுத்துரைக்கின்றது.

If wealth is lost nothing is lost.
If Health is lost something is lost - But
If Character is lost everything is lost.

எனவே இப்பண்பானது மனித வாழ்க்கையில் எந்த அளவுக்கு முக்கிய இடம் பெற்றிருக்கிறது. என்பது நாம் அறிந்த ஒன்றாகும். எனவே, அறப்பண்பு என்பது ஒரு மனிதனின் நடத்தைக்குப் பின்னேயிருந்து இயற்றிநிலையை இயக்குகின்ற, ஒருங்கிணைந்த, ஒட்டுமொத்தமான அமைப்பைக் கொண்ட அவனது மனப்பான்மையைக் குறிக்கும்.

சிலவகைச் செயல்களைப் பழக்கமாகச் செய்யும் போது அச்செயல்களுக்குப் பின்னே இருக்கக் கூடிய மனப்பாங்கானது ஒரு நிலைப்படுகிறது. இந்நிலையில், நல்வழியில் செல்லும் ஒருவனது மனம் முழுவதுமாக அறப் பண்பினை உடையதாகி விடுகின்றது. இந்நிலையில் இப்பண்பானது அவனது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுகிறது. நடத்தையினைப் போலவே அகநிலை



அறப்பண்பும் பிறப்பிலேயே ஒரு மனிதனுக்கு அமைந்திருப்பதாகக் கொள்ள முடியாது. குடும்ப மற்றும் சமூகச் சூழ்நிலைகள், வளர்ந்த விதம், முதலிய பலவும் அகநிலை அறப்பண்பை உருவாக்குகின்றன. நல்ல அகநிலை அறப்பண்புகளைக் கொண்ட ஒரு மனிதனின் செயல்கள் யாவும் நல்லதாகவே அமையும். இதனையே, நமது தமிழ் அறிஞர் பெருமக்கள்.

“எண்ணம் அழகானால்;
எல்லாம் அழகாகும்” என்று உரைக்கின்றனர். ஒரு மனிதனின் நடத்தைக்கும், அவனது அகநிலை அறப் பண்புக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது.

நம் ஒவ்வொரு செயலும் நமது உள் மனதில் ஓர் ஆழமான பாதிப்பை உண்டாக்குவதால் நமது நடத்தையும், நம் அகநிலை அறப்பண்பை உருவாக்குவதில் பங்கேற்கிறது. நமது எண்ணம், செயல், நடத்தை இம்மூன்றின் ஒருங்கிணைப்பே அகநிலை அறப் பண்பாகும். இதனையே வள்ளுவரும் “பண்புடையார் பட்டுண்டு உலகம்” என்கிறார். மேலும் அவரே “ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை” என்கிறார்.

எனவே, சிறு வயது முதற்கொண்டே குழந்தைகளுக்கு நல்ல கருத்துக்களையும், நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுத் தருவது நமது தலையாய கடமையாகும். முதல் வகுப்பு பாடத்தில், ‘அறம் செய விரும்பு’, ‘ஆறுவது சினம்’ போன்ற அறக் கருத்துக்களை கற்பிப்பதும் இதன் அடிப்படையிலேயே ஆகும்.

அச்சிறார்களுக்கு அந்த வயதில் அதன் பொருள் புரியாது. ஆனால் பாடல் பதிந்துவிடும். சற்று பெரியவர்களாகும் போது அவர்கள் நடத்தை, பண்பு முதலியன அந்த அறக் கருத்தின் அடிப்படையில் அமைந்துவிடும். எனவே பண்பட்ட சமுதாயம் உருவாகவும், மனித நேயம் வளரவும், இப்பழக்கம் நடத்தை நமக்கு

அவசியமாகிறது. இவைகள் இயல்பாக அமையும் பொழுது ஒருவன் அறவாணனாக மாறிவிடுகிறான்.

மேலை நாடுகளில் தனி மனித ஒழுக்கம் வலியுறுத்தப்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆள்வோரின் ஒழுக்கத்திற்கு, மிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்தியா போன்ற கீழை நாடுகளில் தனி மனித ஒழுக்கம் பெரும்பாலும் மக்களிடையே பின்பற்றப்பட்டு வருகிறது.

இதே போன்று பள்ளிக் கூடங்களில் இதன் அடிப்படை யிலேயே நடத்தைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 2.4. இயற்றிநிலையின் கட்டற்ற தன்மை (Freedom of will)

இயற்றிநிலை (will) என்பது அற இயலின் உயிர் நிலையாக விளங்குவதே ஆகும். இயற்றிநிலை என்பது ஒரு வகை அறிவாற்றல். எல்லா உறுப்புகளிலும் நிறைந்து விளங்கும் இயங்காற்றலை (energy) தத்தம் போக்குகளில் செல்லாதவாறு தடுத்து, நிறுத்தி, அறச் செயலை மேற்கொள்ளல் என்ற ஒரே வழியில் செலுத்தும் ஆற்றல். எனவே, இயற்றிநிலை என்பது இயங்கு ஆற்றலை நெறிப்படுத்தும் இயக்கு ஆற்றல் எனப்பெறும்.

#### இயற்றிநிலை விளக்கம்

அற இயல் விவாதங்களில இயற்றிநிலை முக்கியப் பங்கு வகிக்கின்றது. மனிதனுடைய இயற்றிநிலை கட்டற்றுச் சுதந்திரமாக இயங்கினால்தான் அவன் செயலுக்கு அவனைப் பொறுப்பாளனாக்கலாம். ஏனெனில் மனிதனுக்குப் பகுத்தறிவு உண்டு. இதன் காரணமாக எந்த ஒரு செயலைச் செய்யும் முன்னரும் அச்செயலைப் பற்றி ஆழ்ந்தாலோசித்து சரியான வழியைத் தேர்ந்தெடுக்கின்ற ஆற்றல் மனிதனுக்கு உண்டு. ஒரு செயலைச் செய்வதற்குப் பல வழிகள் இருந்தபோதிலும், அவற்றுள்



ஏதாவது ஒன்றையே அவன் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்து கின்றான். இந்த அளவிற்கு செயலாற்றும் சுதந்திரம் அவனுக்கு இருப்பதையே இது குறிக்கின்றது.

இதனையே இன்னும் சற்று விளக்கமாக கூற வேண்டுமென்றால், அதாவது ஒருவன் உயிருடன் இருக்கிறான் என்பதற்கு ஆதாரமே அவன் செயல்படுவதுதான். செயல்படாவிட்டால் அவன் உயிரோடு இல்லை என்பது அர்த்தமாகிவிடும். ஒவ்வொருவருக்கும் செயலாற்றும் உரிமை உண்டு. அதற்கு அவனுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. அச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி அவன் செயலாற்றும் போத அச்செயல் பிறருடைய சுதந்திரத்தைப் பாதிக்காத வகையில் அமைய வேண்டும்.

பகுத்தறிவுடன் அவன் செயலாற்ற வேண்டும். அச்செயலானது சமூகத்திற்கும், தனக்கும் நன்மை பயக்கக் கூடிய ஒன்றாக அமைய வேண்டும். அப்படி இல்லையெனில் அச்செயலுக்கும், அதன் விளைவுகளுக்கும் அவனே பொறுப்புடையவனாகிறான். இவ்விவாதங்களில் பொதுவாக மூன்று விதக் கொள்கைகள் இடம் பெறுகின்றன. அவையாவன :

அ) தீர்மானக் கொள்கை (Determinism)

ஆ) தீர்மானிக்கப்படாதக் கொள்கை (Indeterminism)

இ) சுய தீர்மானக் கொள்கை (Self - determinism)

மூன்று கொள்கைகளைப் பற்றி சற்று விரிவாக இனி காண்போம்.

#### அ) தீர்மானக் கொள்கை : (Determinism)

மனிதனின் இயற்றிநிலை புறவுலகப் பொருட்களை போன்று இயற்கை விதிகளுக்கு உட்பட்டது என்றும், குறிப்பாகக் காரண விதிக்குக் (Law of casuality) கட்டுப்பட்டது என்றும், அதனால்

அதற்குச் சுதந்திரம் இல்லை என்றும் சிலர் கூறுகின்றனர். இவர்களின் கருத்துப்படி நமது இயற்றிநிலை எவ்வழியில் செயலாற்ற வேண்டு மென்பது அதற்கு அப்பாற்பட்ட சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்றது. இதே கருத்தினை நமது கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று பாடலானது.

"நீர்வழி படும் புனைபோல் - ஆருயிர்

முறைவழி படும்" - என விளங்குகின்றது. அதாவது ஆருயிர் விதியின் வசமே என்கிறது.

எனவே, செயல்களைச் செய்யும் வழியைத் தேர்ந்தெடுப்பதில் மனிதனின் பங்கு ஏதும் இல்லை என்றும் இக்கொள்கையாளர்கள் கருதுகின்றனர். கடவுள் அல்லது விதி என்ற சக்தி நமது இயற்றி நிலையின் போக்கைத் தீர்மானிப்பதாகப் பெரும்பாலான தீர்மானக் கொள்கையினர் எண்ணுகின்றனர்.

தீர்மானக் கொள்கையினரின் கருத்து ஏற்புடையதன்று. இக்கொள்கைக்கு எதிராகப் பலவாதங்கள் உண்டு.

i) நாம் செயல்வழிகளை தேர்ந்தெடுக்கும் போது முழுச் சுதந்திரத்துடனேயே தேர்வு செய்கிறோமேயன்றி எந்த ஒரு சக்தியும் நம்மைக் கட்டுப்படுத்துவதாக உணர்வதில்லை.

ii) நாம் செய்யும் செயல் எதிர்பார்த்த விளைவைத் தரவில்லை என்றால் நாம் வேறுவழியில் செயல்பட்டிருக்கலாம் என்று வருந்துகிறோம். வேறு வழிகளில் செயலாற்றுவதற்கு உண்டான சுதந்திரம் இருப்பதையே இது குறிக்கின்றது.

iii) மனித சமுதாய வரலாற்றில் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வெற்றி கண்டுள்ளதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மனித சமுதாயத்தினால் முன்னேற்றம் காண முடிகிறது என்றால், அதற்குக் காரணம் மனிதனது இயற்றிநிலை



கட்டற்று இருக்கிறது என்பதே. எனவே விதியை மதியால் வெல்ல முடியும் என்பது உறுதியாகிறது.

**ஆ) இயற்றிநிலை கட்டற்றது அல்லது தீர்மானிக்கப்படாதது என்ற கொள்கை : (Indeterminism)**

அமெரிக்கத் தத்துவ அறிஞரான வில்லியம் ஜேம்ஸ் மற்றும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞரான ஹான்ரி பெர்க்ஸோன் போன்றவர்கள் மனிதனது இயற்றிநிலை கட்டற்று, தீர்மானிக்கப் படாது இருக்கிறதென்று திண்ணமாக நம்பினார். இவ்விருவருமே அறிவியல் அறிஞர்களாயும் இருந்தனர்.

தாவரவியலிலிருந்து உரிய மேற்கொள்கைகளைக் காட்டி இயற்கையின் முன்னேற்றம் தீர்மானிக்கப்படாதது என்றும் ஒரே காரணத்திற்குப் பலவகையான காரியங்கள் உண்டென்றும், ஆக்கப்பூர்வமான வழிகளில் புதுமையான விளைவுகள் தோன்றக்கூடும் என்பதையும் விளக்கினார்கள்.

இவ்வடிப்படையிலேயே மனிதனது செயல்களும் முழுமையாகத் தீர்மானிக்கப்படவில்லை என்றும் இக்கொள்கை யினர் கருதுகிறார்கள். இயற்றி நிலையானது முற்றிலும் கட்டற்று சுதந்திரமாக இயங்குகிறது என்ற கோட்பாடும் ஏற்றுகொள்ள முடியாததாகும். ஏனெனில், நம் அன்றாட வாழ்க்கையில் பல சூழ்நிலைகளில் நம்முடைய செயலுக்கு நாம் விரும்பிய வகையில் விளைவுகள் உண்டாகாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். மேலும் மனிதனின் இயற்றிநிலைக்கு முழுச்சுதந்திரம் உண்டென்ற இக்கொள்கையைத் தீய இயல்புடையவர்கள் தவறாக புரிந்து கொண்டு தாம் விரும்பிய வழிகளில் தவறிழைக்க வாய்ப்புண்டு. 'அறிவாற்றலை நல்வழிக்கு பயன்படுத்துவதே' இதன் நோக்கம் எடுத்துக்காட்டாக 'அணு ஆற்றலை ஆக்க சக்திக்கு' மட்டுமே பயன்படுத்துதல்.

**இ) சுயதீர்மானக் கொள்கை : (Self - determination)**

மேலே விவாதிக்கப்பட்ட இருகொள்கைகளுமே எதிர் தத்துவத்தை விளக்குகின்றன. இவ்விரு கொள்கைகளுமே ஏற்று கொள்ள முடியாதனவாக அமைந்துள்ளதற்கு நாம் காரணங்கள் கூறினோம். எனவே, இவ்விரு கொள்கைகளுக்கும் நடுவு நிலையாக ஒரு கொள்கை தேவைப்படுகின்றது. அவ்வகையில் அமைந்ததே சுயதீர்மானக் கொள்கை.

சுயதீர்மானக் கொள்கையின் கருத்துப்படி மனிதனின் இயற்றி நிலையானது புறவுலகில் உள்ள எவற்றாலும் தீர்மானிக்கப் படவில்லை. மாறாக மனிதனே தன்னுடைய செயல்களைத் தீர்மானிக்கிறான் செயலைத் தேர்ந்தெடுத்த பின்னர் அச்செயலின் எல்லா விளைவுகளுக்கும் அவன் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மாணவன் மேல்நிலைப் பள்ளியில் எந்த பாடங்களைத் தேர்ந்தேடுக்க வேண்டு என்பதில் அவனுக்குச் சுதந்திரம் இருந்தாலும் ஏதாவது ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுத்து பின்னர் அவனது பட்ட படிப்பானது எந்தத் துறையில் இருக்க வேண்டும் என்பதும் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது.

பள்ளியில் உயிரியல் பாடத்தைத் தேர்ந்தெடுத்தவன். பின்னர் வணிகவியல் பட்டப்படிப்பு படிப்பது என்பது இயலாது. எனவே, மனிதனின் இயற்றிநிலைக்கு ஒரு குறிப்பிட்ட எல்லை வரை சுதந்திரம் உண்டு என்பதும் அதற்கு அப்பால் அது தன் கட்டற்ற தன்மையை இழுத்து விடுகிறது என்பதும் தெளிவாகிறது. இருந்தும், தனக்குள்ள பகுத்தறிவின் துணைகொண்டு ஏதாவது ஒரு வகைச் செயலைத் தேர்ந்தெடுக்க சுதந்திரம் இருப்பதால் மனிதன் விலங்குகளின்று மாறுபட்டு உயர்ந்த நிலையில் வைக்கப் பெறுகிறான். மேலே விவாதிக்கப்பட்ட மூன்று கொள்கைகளிலும்



மூன்றாவது கொள்கையான சுயதீர்மானக் கொள்கையே ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

## பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி (2 மதிப்பெண்கள்)**

1. உள்ளத்தியல் என்றால் என்ன?
2. அறச் செயல் என்றால் என்ன?
3. அறஞ்சாராச் செயல்கள் யாவை?
4. விரும்பியேற்ற செயல் என்றால் என்ன?
5. தன்னுண்மை அறிவு என்றால் என்ன?
6. உயிருப்புத் தேவைகள் யாவை?
7. சுவை நுகர் உணர்வு என்றால் என்ன?
8. விரும்பியேற்ற செயல்களின் மூன்று நிலைகள் யாவை?
9. உள்நோக்கு என்றால் என்ன?
10. உட்கிடை என்றால் என்ன?
11. உடனடி உட்கிடை என்றால் என்ன?
12. நீண்ட காலத்தைய உட்கிடை யாது?
13. உள்ளார்ந்த உட்கிடை என்பது என்ன?
14. வெளிப்படையான உட்கிடை என்பது என்ன?
15. நேரடி உட்கிடை என்பது என்ன?
16. மறைமுக உட்கிடை என்பது என்ன?
17. பழக்கம் என்றால் என்ன?
18. நடத்தை என்றால் என்ன?
19. இயற்றி நிலை என்றால் என்ன?
20. இயற்றிநிலையின் மூன்று கொள்கைகள் யாவை?

**II. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி (5 மதிப்பெண்கள்)**

1. அறச் செயல்கள் பற்றி எழுது.
2. அறஞ்சாராச் செயல்களை விளக்கு.
3. அற இயல் ஆராயும் செயல்கள் யாவை?
4. தீர்மானிக்கப் படாத கொள்கையினை விவரி?

**III. ஒரு பக்க அளவில் அல்லது இருபது வரிகளுக்கு மிகாமல் விடையளி (10 மதிப்பெண்கள்)**

1. உள்நோக்கு விவரி.
2. உட்கிடை பற்றி விவரித்து எழுது.
3. தீர்மானக் கொள்கையினை விவரித்து எழுது.
4. சுய தீர்மானக் கொள்கையினை விவரி.

**IV. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அல்லது நாற்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி (20 மதிப்பெண்கள்)**

1. அறச் செயல், அறஞ்சாராச் செயல்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. உள்நோக்கும், உட்கிடையும் எவ்வாறு மனித வாழ்வின் குறிக்கோளை அடையத் துணை புரிகின்றன? விளக்கு.
3. பழக்கம், நடத்தை, நடத்தையின் அகநிலை அறப்பண்பினை விவரி.
4. இயற்றிநிலையின் கட்டற்ற தன்மை குறித்து விரிவாக எழுது.

# III. அறநெறி வாழ்வு
# (MORAL LIFE)

## 3.1. தனிமனிதனும் சமுதாயமும் (Individual and Society)

**தனிமனிதன் :**

மனிதன் ஒருவனால் தனித்து வாழ இயலாது. பறவைகளும் விலங்குகளும் புழு, பூச்சி இனங்களும் கூட கூட்ட கூட்டமாக வாழ்வதைக் காண்கிறோம். பழங்கால மனிதன் நாகரிகமும், பண்பாடும் அற்ற காலத்தில் கூட கூட்டம் கூட்டமாக குகைகளில் வாழ்ந்ததை வரலாற்றின் மூலம் அறிந்து இருக்கிறோம்.

தனி மனிதன் ஒருவன் சமுதாயத்தோடு சேர்ந்து வாழாமல் தனித்து காட்டிலோ அல்லது ஒரு தீவிலோ வாழ்ந்தால் அவனுடைய செயல்கள் ஆய்வுக்கு உரியன அல்ல. ஆனால் சமுதாயத்துடன் சேர்ந்து வாழும் போது, அவன் தன்னுடைய செயல்களை வெளிப்படுத்தும் போது அச்செயல்கள் ஆராய்ச்சிக்கு உரியனவாக அமைகின்றன.

பிறந்த குழந்தை முதலில் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள தாயைச் சார்ந்து வாழ்கிறது. பிறகு தன்னுடைய வளர்ச்சிக்கேற்ப தன்னுடைய சுற்றம், இனம், சுற்றுப்புறச் சமுதாயத்துடன் தொடர்பு கொண்டு அறிவையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்கிறது.

பின்னர் பள்ளி, சமுதாய நிறுவனங்கள், நாடு மற்றும் உலகளாவிய அறிவு, திறமை, நற்பண்புகள் மற்றும் அறநெறிக் கோட்பாடுகளையும் கற்றுத் தெளிவு பெற்று தன்னுடைய சிறப்பான வாழ்க்கையை நிலைநாட்டுகிறது. எனவே, மனிதன் பிறந்தது முதல் தான் இறக்கும் வரை ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழ்கிறான்.

"தனி மரம் தோப்பாகுமா?" என்ற முதுமொழிக்கேற்ப பல மரங்கள் ஒன்று சேர்ந்து இருப்பதைக் கண்டு நாம் அதை 'தோப்பு' என அழைக்கிறோம். அதைப் போல, தனிமனிதர்கள் சேர்ந்து இருப்பதை சமுதாயம் என்கிறோம்.

**சமுதாயம்**

மனிதன் வருவான், வாழ்வான், மறைவான். ஆனால் சமுதாயம் என்றும் அழியாதது. தனிமனிதன் சமுதாயத்தின் ஒரு உறுப்பு. தனிமனிதன் இல்லையெனில் சமுதாயம் இல்லை. எனவே, தனிமனிதன் சமுதாயத்துடன் ஒன்றுடன் ஒன்றாக பின்னி பிணைக்கப்பட்டுள்ளான்.

காந்திஜியின் கருத்துப்படி சமூகம் ஒரு குடும்பம் போன்றது. தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மனிதன் ஒரு சர்வோதய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்; ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் பிறருக்காகவும் சமுதாயத்திற்காகவும் வாழ வேண்டும் ; சிறந்த அறநெறிகளையும் சிறந்த பண்பாட்டையும் பெற்றுள்ள மனிதன்,

i) அண்டை வீடுகளில் வசிப்பவர்களின் மகிழ்ச்சியிலும் துயரத்திலும் பங்கு கொள்ள வேண்டும்.

ii) பிறருடைய பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு அவர்கள் அவற்றிலிருந்து மீள உதவ வேண்டும்.

iii) பிறருடைய முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைக் கொள்ளக் கூடாது.

iv) மற்றவர்களுடன் எப்பொழுதும் மனித நேயத்துடன் தொடர்பிளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

| |
|---|
| சமுதாயம் என்பது ஒவ்வொருவரின் நன்மைக்காக ஒன்று கூடி வாழும் மனிதர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். |



**1. சமுதாயம் - அறவாழ்வின் பின்னணி**

தனி மனிதன் ஒருவரின் அறக் கொள்கைகள் அவன் சமுதாயத்தில் உள்ள மற்ற மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் போது தான் முழுவளர்ச்சி பெறுகிறது. அது தனி மனிதனைப் பண்புடையவனாக மாற்றுகிறது. மனிதத்தன்மை உடையவனாக வாழும் முறைகளைக் கற்றுக் கொள்ள முடிகிறது. மனிதனுடைய அறக்கொள்கைகளை முடிவு செய்யவும், அவற்றை சிறப்பாகக் கடைப்பிடிக்கவும் தேவைப்படும் ஒரு களமே சமுதாயம். எனவே, சமுதாய வாழ்வுதான் மிகச் சிறந்த அறவாழ்வு என்று கூறலாம்.

துறவியர் சமுதாய கட்டுப்பாடுகளையும் கடமைகளையும் துறந்து வாழ்வதை நாம் காண்கிறோம். ஆனால் சாதாரண மனிதர்களுக்குச் சமுதாயம் தான் அறக்கோட்டமாக விளங்குகிறது.

சமுதாயத்தில் மக்கள் பல்வேறு அமைப்புகளை நிறுவி சமுதாய நலவாழ்வுப் பணிகளைச் செய்து வருகின்றனர். தமக்கென ஒழுங்கு கட்டுப்பாடு விதிகளையும் அறக்கோட்பாடுகளையும் வகுத்துக் கொண்டு ஒவ்வொரு தனி மனிதனின் நலத்தில் கவனம் செலுத்துகின்றனர். தனிமனிதனின் வாள்ச்சிக்கும் அவனுடைய குடும்ப நலவாழ்வுக்கும் துணை நிற்கின்றனர்.

சமுதாயத்திலிருந்து விலகி தனித்து வாழ்பவன் அத்தகைய நலவாழ்வு நன்மைகளை அடைய முடியாது; எனவே, சமுதாயம் என்பது அதில் வாழும் தனிமனிதனுக்கு சமூக நலன் தரும் (Social Welfare) ஒரு அமைப்பாகும்.

**சமுதாய நலன்**

சமுதாய நிறுவனங்களாக விளங்கும் கல்விக் கூடம், சமுதாய கூடம், தொழிற்கூடம், சமய நிறுவனம், குடிமைப்பயிற்சி நிறுவனம் போன்ற அமைப்புகள் மூலம் தனிமனிதன் நலன் பெற

முடியும். எனவே, சமுதாய நலன் என்பது எல்லா மக்களின் நலனை உள்ளடக்கியது என்பது தெளிவாகிறது.

அரிஸ்டாடிலின் கூற்று படி "மனிதன் ஒரு சமூக விலங்கு" மனிதனிடத்தில் பல்வேறு குணங்கள் அடங்கியுள்ளன. அவற்றில் பண்படாத விலங்கு குணங்கள் மேலோங்கி நிற்கிறது. இச்சமூகத்தில் பல்வேறு மக்களிடையே சேர்ந்து வாழும் போது நல்ல மனிதன் கூட தன்னலவாதியாக மாறிவிடுகின்றான்.

பாவம், பொறாமை, ஆசை, பேராசை, சுயநலம், ஆதிக்கம் செலுத்துதல், கர்வம் (அ) மமதை, தற்பெருமை, பழிக்குப்பழி, கோபம், சோம்பல், கபடம், வெட்கம், வெறுப்பு போன்ற குணங்களும் நாட்டில் பரவிக் கிடக்கின்றன. இவையாவும் தனிமனிதன் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் கேடு விளைவிப்பனவாகும்.

**தனிமனிதனும் நாடும்**

பொதுவாக நாடு என்பது பல்வேறு சமூகத்தினரிரைடயே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுப் பிரதி நிதிகளைக் கொண்டு, தமக்கென சட்ட வரைவுகளை வகுத்துகொண்டு, இப்புவியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் ஒவ்வொரு தனி மனிதனின் தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்கும் அரசியல் பேரமைப்பையே நாடு எனலாம்.

நாடு என்பதற்கு பல அறிஞர்கள் விளக்கம் தந்துள்ளனர். இங்கு ப்லன்ட்சிலி என்பவர், ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியை உடைய மக்களால் ஏற்படுத்திக் கொண்ட அரசியல் அமைப்பையே நாடு என்கிறார்.

மேலும், உட்ரோவில்சன் என்பவர், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் வாழும் மக்கள் சட்ட விதிகளை வகுத்துக் கொண்டு ஆள்வது நாடு என்று கூறுகிறார். நாடு என்பது ஒழுங்கான



மக்கள் நிறைந்த சமுதாயக் கூட்டமைப்பினால் இயங்கும் ஓர் அரசாங்கத்தைக் குறிக்கிறது.

தனி மனிதன், சமுதாயம் மற்றும் நாடு இம்மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகிறது. எனவே, மக்கள் ஒவ்வொரு வரும் தம் நிலை அறிந்து தத்தம் சமுதாய வாழ்வில் பங்கேற்பவர்களாகத் திகழ வேண்டும் மக்களின் நோக்கமே நாட்டின் நோக்கமாகத் திகழ வேண்டும். குடும்பம், பள்ளி, அலுவலகம், சமயம் எனப் பல்வேறு அமைப்புகள் செயல்படுகின்றன. இந்த அமைப்புகள் எல்லாம் நாட்டின் நலனுக்கு வழிவகுக்கும் கருவிகளாக விளங்க வேண்டும். எனவேதான் நாட்டை அமைப்புகள் யாவற்றிற்கும் பேரமைப்பாய்க் கொள்வர்.

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நலன் தரும் காரணத்தால் ஒரு நாட்டை நன்னாடு எனக் கூறுகிறோம். ஒரு நாட்டின் நலன் மற்றும் வளர்ச்சி என்பது பொதுவாக எல்லா மக்களின் நலன்களையும் குறிக்கும். நாடு செயல்முறையில் இயங்கும் போது ஏற்படும் நன்மை தீமைகளுக்கு அதை இயக்க முற்படும் மக்களே முழுப் பொறுப்பு ஆவர்.

நாட்டின் கடமைகள் இருவகைப்பட்டன ஒன்று, நாடு நம்மை வாழ வைக்க வேண்டும். இரண்டாவது, நாம் நாட்டின் நல்வாழ்விற்கு பாடுபட வேண்டும். அதாவது இந்தக் கடமைகளை நிறைவேற்ற நாடு நமக்கு துணை புரிய வேண்டும். சாதி சமயமற்ற, சமுதாயப் பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டும், கல்வியின் அடிப்படையில் திறமைக் கேற்ப வேலை வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும்.

ஒரு சூழ்நிலையில் ஒரு சிலர் நன்கு வாழ்கின்றனர். பலர் வீழ்ச்சியுறுகின்றனர். தனிப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு ஏற்ற

வகையில் சூழ்நிலையை உருவாக்க நாடு முயல வேண்டும். இதனால் மக்கள் நன்கு பயனடைவர். பெரும்பான்மையான மக்கள் நல்வழியில் செல்லும்போது பொதுவாக யாவரும் நன்மையைத்தான் கருத வழியேற்படும். எனவே, ஆள்வோரும், ஆளப்படுவோரும் நன்கு உணர்ந்து, நம்மையை யாரும் அறிந்து நல்லதொரு அறச்சூழ்நிலையை உருவாக்குவது. பொது நலனுக்கு மகுடமாகத் திகழும் என்பதில் கருத்து வேறுபாடு அமையாது. பொது நலன் கீழ்க்காணும் பலவற்றை தன்னுள் அடக்கியதாக இருக்கிறது. ஆன்மீகச் செல்வம், முக்கியமாக வாழ்வுப் பொருட்களை யாவர்க்கும் பகிர்ந்தளித்த போதிலும் குறைவற்று நிறைவுடன் விளங்க வேண்டும்.

மக்களுக்கு நலன் தரும் உலகப் பொருட்களை யாவருக்கும் அளித்து அவர்களை பயனடையச் செய்தல் வேண்டும். நாட்டின் செல்வம் இம்மண்ணில் பிறந்த அனைவருக்கம் உரியதாகும். இதை ஒரு சிலர் மட்டும் பயனடையச் செய்வது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகும். எனவே, ஒவ்வொரு தனி மனிதனும் நாட்டின் வளர்ச்சிக்கும், நாட்டின் நலத்திற்கும் பாடுபட வேண்டும். நாடும் மக்களின் 'நல வாழ்வையே' நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும். எனவே தனிமனிதனும் நாடும் இணைந்தே செயல்பட வேண்டும்.

### மூன்று நலக் கொள்கைகள்

தனிமனிதனுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படும் தொடர்பை அடிப்படையாகக் கொண்ட அறநிலை நோக்கங்களை மூவகைப்படுத்தலாம். அவை,

1. தன்னலக் கொள்கை
2. பிறர் நலக் கொள்கை
3. பொது நலக் கொள்கை அல்லது உலகளாவியக் கொள்கை.



### 1. தன்னலக் கொள்கை

மனிதன் படைப்பிலேயே தன்னலவாதியாக இருக்கிறான். மற்றவர் நலத்தைப் பேணுவதில் கூடத் தன்னலலத்தையே மனிதன் நாட விழைகிறான். என்று தன்னலக் கொள்கை வலியுறுத்துகிறது. தன்னலக் கொள்கையின்படி, மனிதன் தன்மேன்மையை மட்டுமே கருத வேண்டும். அவன் சிறிதும் பிறர்நலம் கருத வேண்டிய தேவை இல்லை. அவ்வாறு கருதினாலும் அது தன்னலம் பேணுவதாகவே அமையும். இந்தக் கொள்கை அகந்தையை மட்டுமே உருவாக்கும் என்று சிலர் சொல்லக் கூடும். இருப்பினும் தன்னலம் கருதிச் செயல்படும் மனிதன் அகந்தையாளனாக இருந்தே ஆக வேண்டும் என்று எவ்வித கட்டாயமும் இல்லை என்று இக்கொள்கையாளர்கள் கூறுவர்.

புத்தர், ஏசு, காந்திமகான் மற்றும் இவ்வுலகில் தோன்றிய பல பேரறிஞர்கள் சுயநலவாதியாக விளங்கி இருந்தால், இன்று காணும் நல்லதொரு உலக சமுதாயத்தை உருவாக்க முடிந்து இருக்குமா?

தன்னலக் கொள்கை அடிப்படையில் அமைந்த தத்துவம் செயல் முறையில் அகந்தையில் கொண்டு சென்று விடலாம். அதனால், "அது நமது அறநிலை உள்ளுணர்வுக்கு முரணாக இருக்கிறது" என்று கருதி மிக வன்மையான எதிர்ப்பு எழக்கூடும். தன்னலத்தை விட்டு எந்த வகையிலும் பிறர் நலனைத் தேடவே மனச்சான்று நம்மை அழைக்கிறது. மனிதனின் இயற்கை வாழ்வே சமுதாய வாழ்வாக விளங்கும் போது, தன்னலத்தையே கருத்திற்கொண்டு, பிறர் நலத்தை விழையாமல், பிறர் உதவியையும் நாடாத ஒரு மனிதன் எப்படி உண்மையில் மனிதனாக விளங்க முடியும்? அரிஸ்டாட்டில் அவ்வாறு தன்னலம் கொண்ட மனிதனை விலங்கு என்கிறார். தன்நலம் நாடும் கொள்கை தவறு என்ற போதிலும் அது உணர்த்தும் ஓர் உண்மையை மறுக்க முடியாது.

"தனி மனிதன் என்பவனே முடிவானவன், சமுதாயம் அன்று" என்பதை அக்கொள்கை எடுத்துக்காட்டுகிறது.

பிறர் நலக்கொள்கை, உலகளாவிய கொள்கை முதலிய கொள்கைகளை நாம் ஏற்பதாக இருந்தாலும் சுதந்திரத்துடன் விளங்கும் தனிமனிதர்களின் நலத்தையே அறவாழ்வின் குறிக்கோள் என்று சிலர் கூறுகின்றனர். ஏனெனில் ஒவ்வொரு தனிமனிதனின் நலமும் உயர்வும் நாட்டின் உயர்வை நிலை நாட்டுகிறது.

தன்னலக் கொள்கை என்பது ஒரு வகை அறவியற் கொள்கை எனக் கொள்ள வேண்டும். எந்த ஒரு மனிதனும் தன் நலத்தைத் துறந்து பிறர்நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுதல் கடினம். மனித வாழ்வின் இறுதி நிலை குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே அறக்கொள்கைகள் வகுக்கப் பெறுகின்றன.

உளவியற் கருத்துப்படி தன்னலம் தனிமனிதனின் இயற்கை அறமாக விளங்குவது போலவே, பிறர் நலம் பேணுதலும் தனிமனிதனின் இயற்கை அறமாக விளங்குகிறது. மனிதத் தன்மையை முழுமையாக ஆராய்ந்தால் பிறர்மீது காட்டும் அன்பு, இரக்கம், பிறர் நலம் போற்றும் பண்பு ஆகிய பண்புகளும் அவனிடம் இருக்கின்றன. இந்த அடிப்படையில் நோக்கினால் தனிமனிதன் இயற்கையாகவே தன்னலம் பேணியும், பிறர் நலம் காத்தும் வாழும் இயற்கை குணம் உடையவன் என்பது தெளிவாகிறது.

**2. பிறர் நலக் கொள்கை**

தனி மனிதன் தன்நலத்தைக் கருதாது பிறர் நலத்தையே தன் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதை இக்கொள்கை



வலியுறுத்துகிறது. பிறர் நலக் கொள்கை தன்னையே தியாகம் செய்ய வழி வகுப்பதாகும். 'தான்' என்பதைத் 'தாம்' எனக்கொண்டு மற்ற தனிமனிதர்களின் நலனையும் நாம் பேண வேண்டும் என்பதும், அவ்வாறு செய்யும் போது மறந்தும் மறைமுகமாகக் கூட தன்னலனை அடைவதை எண்ணலாகாது என்பதும் பிறர்நலக் கொள்கையரின் கருத்தாகும்.

"முழுத்தன்னலம் போலவே முழுப் பிறர் நலம் கருதும் தன்மையும் பொது நலனின் திறத்தைக் குறைவுபடுத்த இயலும்" என்பது ஸ்பென்சரின் கருத்து.

பிறருக்கு தொண்டு செய்யும் ஆர்வத்தில் தன் உடல் நலம் பேணாமலும், தான் செய்ய நினைத்த அளவுக்குப் பொது நலன் பேண முடியாமலும் ஒருவனது உடல்நலம் கெட்டு தனக்கே பிறர் தொண்டு செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகிவிடலாம். அல்லது தன் உயிரையே தியாகம் செய்து விடலாம்.

"தியாகம் என்பது பிறருக்காக தன் உரிமையை விட்டுக் கொடுத்து, பிறர்நலம் நல்குவதே ஆகும்."

உதாரணமாக ஒரு தீவில் மக்கள் 'பிளேக்' நோயால் துன்புறுகின்றனர். கருணை உள்ளம் கொண்ட மருத்துவர் ஒருவர் அங்கு மக்களைக் காப்பாற்றுகிறார். மக்களுடன் இணைந்து செயல்பட்டதால் தானும் அந்த நோயுக்கு பலியாகுகிறார். தன்னையே உயிர்த்தியாகம் செய்து விடுகிறார். பிறர் நலக் கொள்கையுடையவர், தியாகம் என்பது அறவாழ்வு கூறும் பல வழிகளில் ஒன்றேயன்றி அது தான் ஒரே வழி என்பதில்லை என்பதை, பிறர்நலக் கொள்கையினர் உணர்வதில்லை. பிறர் நலக் கொள்கை தியாகத்தின் உள்ளார்ந்த நலனைத் தெரிவிக்கிறது. அதே போன்று பிறவற்றிலும் உள்ளார்ந்த பயன் உண்டு. என்பதை அக்கொள்கையினர் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தன்னை முழுமையாக அழித்துக் கொண்டு பிறர்நலம் பேணுவது என்பது இயற்கைப் பொருள்களுக்குத்தான் ஏற்றது. ஆனால் அது மனித இனத்துக்குப் பொருந்துவது அன்று. ஒரு தானியம் தன்னை அழித்துக் கொண்டு பல தானிய மணிகளை விளைவிக்கிறது. ஆனால் மனிதன் இழந்த உயிரை மீண்டும் பெற முடியாது. இது தன்னலக் கொள்கையினர் கருத்து.

### 3. பொது நலக்கொள்கை அல்லது உலகளாவிய நலக்கொள்கை

இக்கொள்கைப் படி ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய சமுதாயத்தின் நலனை அடைவதையே கடமையாகக் கொள்ள வேண்டும். தன் நலனை நாடும் கொள்கையும், பிறர்நலக் கொள்கையும் இதனுள் அடக்கம் என்பது பொது நலக் கொள்கையினரின் கூற்று.

சமுதாய நலக் கொள்கை ஆழ்ந்து அற உணர்வு காரணமாக நன்கு விரிவடையும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. தனி மனிதன் தன்னுடன் சேர்ந்து இருப்பவர்களின் குடும்ப நலனைக் கருத விழையலாம். பின்னர் தான் இருக்கும் சமுதாய நலன், தன் நாட்டினர் நலன், பின்னர் அனைத்துலக மனித இனத்தின் நலன் மற்றும் எல்லா உயிரியனங்களின் நலன் என விரிந்துக் கொண்டே போகும். அறவழியில் எத்தகைய குறுகிய வரையறையையும் இக்கொள்கையினர் விரும்புவதில்லை. ஆயினும் இக்கொள்கைக்கு எதிர்ப்பு இருக்கவே செய்கிறது.

1. பொது நலமென்பது இது தான் என்று எதையும் குறிப்பிட்டுக் காட்ட இயலவில்லை. ஆகையால் பொதுமை நலன் என்பது ஒரு கற்பனையே.
2. தியாகம் என்பது பொதுமை நலத்தை வளர்ப்பது என்றால் அதை வளர்க்கும் தனிமனித நலம் என்பது எது என அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை.



3. பொது நலனுக்காக உழைக்கும் போது அதிக அளவில் தன்னுடைய நலனையும் அவன் பெறுவான் என்பது நம்ப முடியாததாக இருக்கிறது. பொதுமை நலன் கருதி பெருந்தியாகங்கள் புரிந்த பலருடைய வாழ்க்கை பசியால் வாடி வருந்தியதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம், வரலாற்றின் மூலம் அறிந்து இருக்கிறோம். எனவே, பொதுமை நலன் வளர்ச்சிக்குப் பாடுபடும் தனிமனிதனுடைய நலன் வளர வாய்ப்பு உண்டு என்பதை அவ்வளவாக ஒத்துக் கொள்ள இயலவில்லை.

மனிதன் புரியும் தியாக மனப்பான்மையை இக்கொள்கையினர் பெரிதுபடுத்துவதில்லை. பொது நலனுக்காக உழைக்கும் போது அதிக அளவில் தன்னுடைய நலனையும் பெறுவான் என்பது நம்பக் கூடியது அன்று. ஆன்மீக நலன் பற்றிய கருத்துகளில் இது உண்மையாக இருக்கலாம்.

ஆனால் சாதாரண வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு போன்ற பொருட்களைக் கருத்தில் கொள்ளும் போது சமூகத் தொண்டையே நோக்கமாகக் கொண்ட ஒருவனுக்கு இத்தகைய நலன் போதுமான அளவு கிட்டுவதில்லை. எனவே தான் பொதுநலக் கொள்கையில் தனி மனிதனின் நலம் வளரப் போதுமான இடம் இல்லை. இம்மூன்று கொள்கைகளிலுமுள்ள நிறை குறைகளைத் தனிமனிதன் அறிந்து கொண்டு, தமக்கென இக்கொள்கைகளின் நிறைகளை மட்டுமே ஒரு புதிய கொள்கையை வகுத்துக் கொண்டு, தனக்கும் தன் சமுதாயத்திற்கும் பயன் தரும் வகையில் வாழ வேண்டும். தனி மனிதனின்றி சமுதாயமில்லை. சமுதாயமின்றி தனி மனிதனும் இல்லை.

### பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி**

1. சமுதாயம் என்றால் என்ன?
2. நாடு - வரையறு.
3. சமுதாய நலன் என்றால் என்ன?
4. ஒரு நாடு எப்போது நன்னாடு என அழைக்கப்படுகிறது?
5. மூவகை நலக் கொள்கைகள் யாவை?
6. தியாகம் என்றால் என்ன?
7. பிறர்நலக் கொள்கை பற்றி ஸ்பென்சரின் கருத்து யாது?

**II. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. ஒரு மனிதன் எப்போது ஆராய்ச்சிக்குட்படுகின்றான்?
2. சமுதாயம் குறித்து காந்திஜியின் கருத்து யாது?
3. தனிமனித வளர்ச்சிக்கும், நலத்திற்கும் கேடு விளைவிப்பன யாவை?
4. ‘தன்னலக் கொள்கை’ என்பது யாது?
5. பிறர்நலக் கொள்கையினரின் கருத்து யாது?
6. பொதுநலக் கொள்கையினரின் கூற்று யாது?

**III. ஒரு பக்க அளவில் விடையளி**

1. ‘சமுதாயம் அறவாழ்வின் பின்னணி’ - எவ்வாறு?
2. தன்னலக் கொள்கையின் நிறை குறைகள் யாவை?

**IV. நான்கு பக்க அளவில் விடையளி**

1. மூவகை நலக்கொள்கைகள் பற்றி ஒரு மதிப்பீடு செய்க.
2. தனிமனிதனும் சமுதாயமும் குறித்து ஒரு கட்டுரை வரைக.



## 3.2. குடும்பமும் ஏனைய சமூக நிறுவனங்களும்
## (FAMILY AND OTHER SOCIAL INSTITUTIONS)

சமுதாயத்தில் நிறுவனம் என்பதற்குப் பொதுவான விளக்கங்களை ஆராய்வதும் மனிதனின் வாழ்வில் அறப்பயிற்சி நிலையங்களாக எவை விளங்குகின்றன என்பதை அறிவதும் நம் கடமையாகும். பொதுவாக நிறுவனம் என்பது ஒரு தனித்தன்மையான பண்போடு கூடியது என்றும், சமூகத்தின் நிலையான தன்மையைக் காத்து மக்களை வழி நடத்திச் செல்கின்ற ஓர் அமைப்பு என்றும் கூறலாம்.

மரபு வழிகள், சட்டவிதிகள் என்ற அடிப்படையில் செயல் படுத்துவதும், மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்று நிலைகளிலும் மாறாத பண்பாட்டினை நிலைநிறுத்துவதும், சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளைப் பொதுவான ஒழுங்கு விதிகளின்படி நெறிப்படுத்துவதும், எல்லாவற்றிற்கும் மேலாக பாரம்பரிய குணநலன்களின் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனையும் பொறுப்புள்ளவனாக ஆக்குவதுமான அமைப்பே நிறுவனம் ஆகும். இவ்வகையில் மனிதன் ஒன்று சேர்ந்து ஒரு குழுவாகவோ, தொகுதியாகவோ வாழும்போது பல நிறுவனங்கள் அவனுக்கு உறுதுணையாக இருப்பதைச் சமூகஇயல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

***சமுதாய நிறுவனங்கள்***

சமுதாயத்தில் குடும்பம், கல்வி நிறுவனம், தொழிற்கூடம், குடிமைப்பயிற்சி நிறுவனம், சமய நிறுவனம், சுகாதார நிலையம், சமூகக் கூடம், மாநாட்டுக் கூடம் போன்ற பல்வேறு பெரிய நிறுவனங்களும் மற்றும் சிறிய அமைப்புகளும் சமுதாய நலத்திற்கும் சமுதாய அறத்தை நிலை நிறுத்துவதற்கும் பாடுபட்டு வருகின்றன. அவைகளின் சிறப்பியல்புகளையும் பெயற் பாடுகளையும் இங்கே விரிவாகக் காணலாம்.

## 1. குடும்பம்

மனித உயிர்களிடையே இயல்பாக அமைந்த அன்பு என்ற உயர்ந்த உணர்வின் அடிப்படையில் அமைந்து சமுதாயத்தின் மூலக்கருவாக, முதல்நிலைக் குழுவாக அமைவதே குடும்பம் ஆகும். "பல குடும்பங்களின் இணைப்பே சமுதாயம்" என்பது அரிஸ்டாலின் விளக்கம். மிகப் பழங்காலம் முதல் இன்று வரையில் சமுதாயத்தின் முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைப் பயிற்சி நிலையமாக விளங்குவது குடும்பமே.

குடும்பம் ஓர் அடிப்படைச் சமுதாய அமைப்பியல் நிலையம் ஆயினும் அது பன்மைகளுக்கு நடுவே ஒருமையையும் வேறுபாடுகளுக்கு மத்தியில் இணைப்பையும் உண்டாக்கும் உலகியற் பண்பிணைக் கொண்டு விளங்கும் சமுதாயம் நிறுவனம் ஆகும். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்', 'உலகம் ஒரு குடும்பம்' என்ற முதுமொழிகள் இவ்வுண்மையை விளக்கும்.

"குடும்பம் என்பது ஒரு அடிப்படையானதும் உலகளாவியதுமான ஒரு நிறுவனம் ஆகும். ஒவ்வொரு சமூகம் அதைச் சார்ந்தே அமைகிறது என்று கூறுகிறார். பெய்ஸான்ஜ்"

> தலைவன், தலைவி, குழந்தைகள் ஆகிய மூன்று உறுப்பினர்களைக் கொண்டதே குடும்பம், அன்பின் அடிப்படையில் குழந்தைகளின் உடல், உள்ளம், அறிவு, அறம், ஆன்மீகம் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனம்.

மனித வரலாற்றில் குடும்பமே முதல் நிறுவனமாக விளங்குகிறது. சிறிசிறு கூட்டமாகச் சேர்ந்து வாழ்ந்ததையும் அறிகிறோம். அவனால் தனித்து வாழ இயலாது. தன் குடும்பத்துடன் இணைந்துதான் வாழ முடியும். எனவே மனித சமுதாயத்திற்கு அடிப்படை அலகாக விளங்குவது குடும்பம் எனலாம்.



### குடும்பத்தின் செயற்பாடுகள்

உடல் தேவை, அறிவுத்தேவை, ஆன்மீகத் தேவை என்ற மூன்றையும், குடும்பம் என்ற அமைப்பின் மூலமாகத்தான் நிறைவு செய்து கொள்ள முடியும். எனவே, குடும்பம் அன்பின் அடிப்படையில் குழந்தைகளின் உடல், உள்ளம், அறிவு, அறம் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனம் என்று சொல்லலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக 'நடுநிற்றல்' என்ற பேரறத்தின் வாயிலாக செயற்பாட்டு முறைகளை உணர்ந்து தெளிந்து அதற்கேற்ற பயிற்சியை நல்குவது குடும்பம்.

அறக்கொள்கைகளைப் போற்றுவது, நல்லொழுக்க நற்பண்புகளை அமைத்துக்கொள்வது நன்னடத்தையைப் பெறுவது, தீயவற்றை அழிப்பது, சமாதான நிலையை நாடுவது, ஆகிய ஐந்தையும் குடும்ப அனுபவ மிக்க பெரியோர்கள் மூலம் அறிந்து கொள்கிறோம்.

தனிமனிதன் தன்னியல்பாகவே தாயாக, தந்தையாக தீயதை அழித்து நல்லதை நிலைநாட்டுபவனாக, அறத்தைக் காக்கும் நல்லவனாக வேண்டிய அடிப்படை பயிற்சிகளை குடும்பத்தின் மூலம் பெறுகிறான்.

### பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே உள்ள உரிமைகளும் கடமைகளும்

ஒருவன் குடும்பத்தில் தன் தாய் தந்தையாரோடும் தன் பிள்ளைகளோடும் வாழ்கின்றான். அவன் தன் தாய் தந்தையாருக்கும் தனக்கும் உறவு நிலையில் உரிமைகள் கடமைகள் செயற்படுத்தப் பட்டதை உணர முடிகிறது. தன்னுடைய தாய் தந்தையர்களின் அறக்கொள்கைச் செயற்பாட்டு முறையைத் தன் அனுபவத்தால் அளந்து பார்க்கிறான். அதே சமயத்தில் தான் தந்தையாக நின்று

தன் பிள்ளைகளுக்கு ஆற்றும் உரிமைகள் கடமைகள் ஆகியவைகளை மதிப்பீடு செய்கின்றான். எனவே குடும்பத்தின் நிறை குறைகளைத் தன் அனுபவம் கொண்டே உணரும் வாய்ப்பினை ஒருவனுக்கு நல்குவது குடும்பமே.

குடும்பத்தின் உயர்நல அமைப்புத் தன்மையை ஒரு சங்ககாலப்பாடல் மூலமாக அறியலாம்.

"ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குள் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நலகல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

- புறநானூறு

பெற்றெடுத்து அறக்கொள்கைகளைப் புகட்டி வளர்ப்பது தாயின் கடமை, தன் மகனை சான்றோனாக - நல்லொழுக்க நற்பண்புடைய அறிவு மிக்கவனாக வளர்த்தல் தந்தையின் கடமை, மக்களுக்கு நல்ல செயல்களை செய்வது வேந்தன் கடமை, அறத்திற்கு மாறான கொள்கைகளை அழிக்க போர்களத்தில் போர்புரிய துணையாகும் வேல் போன்ற கருவியை வடித்துக் கொடுக்க வேண்டியது கொல்லனுடைய கடமை, போரில் நேர் நின்று மறத்தை அழித்து அறத்தை நிலை நாட்டுவது ஆண் மகனின் கடமையாகும்.

தந்தை தன் மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பதை திருவள்ளுவர் வாயிலாக அறியலாம்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்."

என்கிறார்.



சான்றோர் பலர் கூடியுள்ள அவையில் தன் மகனைத் தலைமைச் சிறப்புக்கு உரியவனாக உருவாக்குவதே தந்தையின் சமுதாயக் கடமையாகும்.

மேலும் மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பதை வள்ளுவர் பெருமான்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்." என்கிறார்.

இவன் தந்தை இவனைப்பெற என்ன தவம் செய்தானோ? எனப் பிறர் மகிழ்ந்து பாராட்டும் அளவிற்குச் சிறப்படைவதே மகன் தந்தைக்கு செய்யும் நன்றிக்கடன் என்கிறார்.

**குடும்பத்தின் சிறப்புகள்**

குடும்பமானது

1. திருமணம்
2. மக்கட்பேறு
3. நட்பு என்ற மூன்று வாழ்வியல் தனிச் சிறப்புகளைக் கொண்டதாகும்.

**1. திருமணம்**

உயிருள்ள அனைத்து உயிரனங்களும் தன் இனத்தைப் பெருக்குகின்றன. ஓரறிவு உயிர் முதல் ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் வரைக்கும் திருமணம் என்ற ஒரு ஒப்பந்தம் தேவையில்லை. ஆனால் ஆறறிவு படைத்த மனித இனத்தில் ஆண், பெண் இருவரும் இணைந்து வாழ்வதற்கு சமூகத்தின் ஒப்புதல் பெறவேண்டியுள்ளது.

எனவே, ஆணும், பெண்ணும் உடலாலும் உள்ளத்தாலும் இயற்கையாக இணைவதைத் திருமணம் என சமூகம் அங்கீகரிக்கிறது. பழங்கால முதல் இன்று வரை திருமண வாழ்க்கை ஒரு புனிதமான அறநெறி வாழ்க்கையாகக் கருதப்பட்டு வருகிறது.

திருமணம் அல்லாத ஆண், பெண் சேர்ந்து வாழும் வாழ்க்கை சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளாத நிலையில் ஒரு சிறந்த அறநெறி வாழ்க்கையாக கருதப்படுவதில்லை. எனவே தான் வள்ளுவரும்,

"அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று"

இல்லறவாழ்க்கையே ஓர் அறவாழ்க்கை என்பர். வள்ளுவரின் கூற்றுப்படி "அறம் என்றாலே அது குடும்ப வாழ்க்கைதான். அந்த வாழ்க்கையும் யாராலும் பழிக்கப்படாமல் இருப்பது நன்று" என்கிறார்.

மேலும், மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

மண்ணுலகில் வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன் விண்ணுலகத் தெய்வமாக மதிக்கப்படுவான் என்கிறார் வள்ளுவர். மேலும்

"அன்பும் அறனும் உடைத்து ஆயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

குடும்ப வாழ்வின் அன்பும் அறமும் நிறைந்து இருக்குமானால் அவையே அவ்வாழ்க்கையாகிய பண்பும் பயனும் ஆகும் என்கிறார்.

எனவே, அன்பின் அடிப்படையில் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தன்மை பெற்று, வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு மாறுபாடுகளை நடுநிலையோடு ஆய்ந்து என்பதை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

**2. மக்கட்பேறு**

குடும்பத்தின் சிறப்புகளில் ஒன்றாக மக்கட்பேறு என்பது பிறக்கின்ற குழந்தையின் மேல் தாய் தந்தையருக்கான உரிமை



எந்த அளவில் அறவாழ்வியலுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துவதாகும். குழந்தைகளுக்கு அற வாழ்வின் தகுதியை உருவாக்கித் தன்னலம் கருதாது குழந்தையின் நலனைப் போற்றுவது மக்கட் பேறாகும்.

மக்கட்பேறினை விளக்க முற்படுவோமானால், ஒவ்வொரு குடும்பமும் தங்களின் சந்ததியைச் சிறப்பான முறையில் உருவாக்க வேண்டும் என்று உணர்வது இயல்பு. இதுவே ஒரு மனிதனைச் சிறப்பான நிலையில் வளர வைத்து அறவழியில் ஈடுபடுத்துகிறது.

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன் உயிர்க்கு எல்லாம் இனிது."

என்கிறார் வள்ளுவர்.

தம்மைவிடத் தன் குழந்தைகள் அறிவுடையர்களாக அமைந்தால், அது உலகத்து உயிர்களுக்கு எல்லாம் இன்பம் தரும். மேலும்

"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

தன் குழந்தையைச் சான்றோன் எனப் பிறர்சொல்லக் கேட்ட தாய், அக்குழந்தையைப் பெற்றெடுத்த காலத்தைவிடப் பெரிதும் மகிழ்வாள்.

தந்தை, தாய் என்ற இருவருக்கும் உரியவனே மகன். இருவருக்கும் தனியுரிமை அன்று, பொதுவுரிமை தான் என்றாலும் அவனை உலகத்திற்கே பொது சொத்தாக்கி விடுவது பெற்றோரின் கடமையாக இருக்க வேண்டும். இங்கு 'பொதுச் சொத்து' என்பது மகனின் அறிவு ஆற்றல் இந்த உலகுக்கே பயன்பெறும் வகையில் அமைய வேண்டும் என்பதாகும்.

இதையே வள்ளுவர்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கள் பேறு."

சிறப்புடைய மனைவி புனிதமானவள், அதற்கு அழகு சேர்ப்பது நல்ல மக்களைப் பெறும் சிறப்பாகும். நன்மக்கள் பேறு என்பது நல்ல மக்களைப் பெறுவது என்கிறார் வள்ளுவர். நன் மக்களை ஈன்றெடுப்பதால் வீடு, நாடு மற்றும் இந்த உலகமே போற்றும் அளவுக்கு சிறப்பை அடைவர்.

**3. நட்பு**

குடும்பம் என்பதின் கிளைகளான திருமணம், மக்கட்பேறு என்ற இரண்டும் நடுநிலைமையாக வாழும் பயிற்சியை அளித்து, அன்பு, பொறுமை, பிறர் நலம் போன்ற உயர் குணங்களை வளர்த்துக் கொள்ள உதவுகின்றன எனக் கண்டோம். மூன்றாம் நிலையான நட்பு என்பது குடும்ப வாழ்வில் பெண்மை, ஆண்மை என்ற வேறுபாடு இல்லாமல் ஒற்றுமை நிலையை அகம் மற்றும் புறம் வாழ்வில் தோற்றுவிக்கிறது. மேலும் குடும்பத்தில் கணவன் மனைவியாக அன்புடையவர்களாக நின்றவர்கள் சிறந்த நண்பர்களாகவும் நிற்பதே சான்றாண்மைக்கு அடிப்படையாக அமையும் அகப்பண்பான நட்பு சிறந்த வாழ்வாக அமையும். இது குழந்தைகளுக்கும் பொருந்தும் எனலாம்.

குடும்பத்தில் கணவன் - மனைவியாக நின்றவர்கள் - காதலர்களாக நின்றவர்கள், அருளுடையவர்களாக நின்றவர்கள், மிகச் சிறந்த நண்பர்களாகவும் நிற்கிறார்கள். இதுவே சான்றாண்மைக்கு மூலமாக நின்ற அகப்பண்பு. இதுதான் உலகத்தின் எப்பகுதியிலும் வாழும் எந்த உயிரையும் தன்னுடைய உரிமையுடைய உயிராக ஆக்கும் தன்மை வாய்ந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக,

கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பு நேரில் ஒருவரையொருவர் காணாது நட்புக் கொண்டு கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விட்டப்போது பிசிராந்தையாரும் உடனிருந்து உயிர்தியாகம் செய்தார்.



**2. கல்வி நிறுவனம்**

குடும்பத்துக்கு அடுத்தநிலையில், தனிமனிதனை நல்லறப் பயிற்சியில் ஈடுபடுத்தும் சமூக அறப் பயிற்சி நிலையமாக விளங்குவது கல்வி நிலையம்.

உலகில் மனித வாழ்க்கை என்ன என்பதை உணர்ந்து அதற்கேற்ப தன்னுடைய அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அறிவை வளர்ப்பதை இரண்டு வகையாகக் கொள்ளலாம்.

1. அனுபவ அறிவு
2. கல்வியறிவு

**1. அனுபவ அறிவு**

தான் செய்யும் செயலின் அடிப்படையில் அனுபவவாயிலாக நல்லன தீயன போன்றவற்றைக் கற்று அறியப்படுகிறது. கற்றறிந்த சான்றோர்களின் அனுபவக் கூறுகளை கேட்டறிவதன் மூலம் தன்னுடைய அறிவை மேன்மேலும் பெருக்கிக் கொள்ள முடிகிறது.

**2. கல்வியறிவு**

கல்வியறிவு பெறுவதை இருவகைப் படுத்தலாம். 1. முறைசார்ந்த கல்வி 2. முறைசாராக் கல்வி. முறைசார்ந்த கல்வி என்பது கல்வி நிலையங்களில் சேர்ந்து ஆசிரியர்கள் மூலம் கல்வியறிவைப் பெறுவது. மற்றொன்று முறைசாரா கல்வி மூலம் அறிவைப் பெறுவது. முறைசாராக் கல்வி என்பது பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்த படியே கற்கும் முறையாகும்.

வானொலி, தொலைக்காட்சி தற்காலத்தில் ஒலி மற்றும் ஒளி நாடாப்பதிவு திறந்த வெளி பல்கலைகழகக் கல்வி, தொலைநிலைக் கல்வி போன்ற முறைகளில் தற்காலத்தில் கல்வி அறிவு பெற வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

தனிமனிதன், பிறப்புரிமை என்ற அடிப்படையில் சில உரிமைகளைப் பெற்றிருக்கின்றான். அவனுக்குரிய உரிமையை அவன் பெற்று அவ்வரிமைகளின் மூலம் அவன் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். அவ்வுரிமைகளில் முதலாவதாக நிற்பது கல்வியுரிமை.

தனிமனிதன் ஒருவன் கல்வி பெறுவதற்கு உரிமையுடையவன் என்பதைச் சமூகம் ஏற்றக்கொள்ளும் போது, அவன் அதைப் பெறுவதற்குரிய வாய்ப்பினை உண்டாக்கித்தருவது சமூகத்தின் கடமையாகிறது. எனவே, சமூகம் கல்விநிலையங்களை அமைத்து அவற்றின் மூலம் மனிதனின் கல்வியுரிமையை நிறைவு செய்கிறது.

**கல்வி அளிப்பதன் நோக்கம்**

கல்வியின் குறிக்கோள், இன்னது என வரையறை செய்யப் பெற்றுள்ளது.

1. தனக்கு அழிவு வராமல் தன்னைக் காத்துக் கொள்ளவும், அழிக்க முற்படுபவர்களாலும் அழிக்க முடியாத அரணாகவும் அமையக் கூடிய அறிவைப் பெறுதல்.
2. மிருகங்களைப் போல் ஆசையின் வழியே செல்ல விடாது தடுத்து நிறுத்தி, தீமையை நீக்கி, நன்மையைச் செய்ய வேண்டும். ஆற்றலைத் தரும் செயல்முறை அறிவைப் பெறுதல்.
3. சமூக இணைப்பையும், உலக ஒருமைப்பாட்டையும் அளிக்கும் ஆற்றல் வாய்ந்த அறிவைப் பெறதல்.
4. துன்பத்தில் துவளாமலும் இன்பத்தில் நெகிழாமலும் இரண்டையும் ஒப்பு நோக்கும் சமநோக்கினையும், உலக



நடையை அறிந்து செயல்படும் ஆற்றலும், பின் விளைவுகளை முன்னதாகவே அறிந்துக் கொள்ளும் மதி நுட்பமும் துணிவும் தரக்கூடிய அறிவைப் பெறுதல்.
5. மிகச் சிறந்த ஒழுக்கம், அறநெறிப் பண்புகள் மற்றும் மெய்யுணர்வு போன்றவற்றைப் பெறுவதற்குத் துணை நிற்கும் அறிவைப் பெறுதல்.
6. மனிதனை மிருகத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் அறிவைப் பெறுதல்.

மேலே கூறப்பெற்ற அடிப்படைகளை வைத்து நோக்கும்போது, மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழக் கற்றுக் கொள்வது கல்வியினால் அமைகிறது எனலாம். சுருங்கக் கூறின், உலக மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் நிலைத்து வாழும் பேற்றை ஒருவன் அடையுமாறு செய்வது கல்வியே அல்லது கல்வி நிலையமே எனலாம். தனி மனிதன் தன்மை உயர்த்திக் கொள்ள உதவும் அறப்பயிற்சி நிலையமாக விளங்குவதே கல்வி நிலையமாகும். கல்வியை அனைவரும் பெறுவதற்கு உரிமையிருப்பினும் தனிமனிதனின் விருப்பம், திறமை, தகுதி, போன்வற்றை அடிப்படையாகக் கொண்டு கல்வியின் தேவை மாறுபடுகிறது. தனிமனிதனின் தகுதுக்கு ஏற்ற கல்வியை அரசு கொடுக்க வேண்டும் இக்காலத்தில் தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி என வரிசைப்படுத்தபட்டு வளர்ச்சிப் படிமுறை நிலையில் மாணவர்கள் கல்வி அறிவுபெறும் நிலை அமைக்க பெற்றுள்ளது.

தற்போது தொழிற் கல்வி மற்றும் மருத்துவ கல்வியும் உலகம் முழுவதும் போற்றத்தக்க வகையில் பெருகி வளர்ச்சிபெற்று வருகின்றன. நாட்டின் ஏழை எளியோர்களும் இக்கல்வியைப்

பெறுகின்றனர். எனவே, சமூகம் வேறுபாடற்ற, சமநோக்கு அடிப்படையில் எல்லாருக்கும் கல்வி நிலையங்களை அமைத்து அவற்றின் மூலம் தனிமனிதனின் கல்வியுரிமை நிறைவு செய்யப்பட்டு வருகிறது.

எனவே ஒவ்வொரு மாணவரும் தான் விரும்புவனவற்றை நன்கு கற்றுத் தெளிந்து பிறகு அதற்கேற்பச் செயலில் நடந்து கொள்ள வேண்டும் தம் சமுதாயத்திற்கும், உலக மக்கள் அனைவருக்கும் பயனுள்ள வகையில் அமையுமாறு வாழ்ந்து காட்ட வேண்டும், இதனையே வள்ளுவனார் குறிப்பிடுகையில்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக." என்கிறார்.

கற்க வேண்டியவற்றை குற்றமறக் கற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, தான் கற்றபடி நடந்து கொள்ள வேண்டும், என்பதாகும்.

கல்வி கல்லாத மூடரைப்பற்றி திருமூலர் குறிப்பிடுகையில்,

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே." என்கிறார்.

**கல்வி நிறுவனத்தின் பயன்கள்**

1. முன்னோர்களின் அனுபவக் கருத்துக் கருவூலங்களை எடுத்துக் காட்டி தன்னைக் காத்துக் கொள்ளவும், வாழ்க்கையில் சிறப்பு அடையச் செய்வதும் கல்வி நிறுவனமே பயிற்சி அளிக்கிறது.



2. தனித்தன்மையை வளர்த்துக் கொள்ளவும் ஒற்றுமை, பொதுமை, நிதானம், அன்பு, பண்பு போன்ற நற்பண்புகளை வளர்க்கவும் கல்வி நிறுவனம் உதவுகிறது.
3. பலன் கருதாது கடமையைச் செய்ய வேண்டும் என்ற உணர்வு, சகிப்புத் தன்மை, இன்னா செய்யாமை, வாய்மை ஆகியவற்றைப் பின் பற்றி வாழும் வழிகளைப் பயிற்றுவிப்பது கல்வி நிறுவனமே ஆகும்.
4. மனம்போன போக்கில் வாழாமல் ஒரே சிந்தனையில் நிலையான அறவாழ்வை அளிக்கும் நிலையையும், சமநோக்கு, துணிவு போன்ற நல்லொழுக்க, நற்பண்புகளையும் பெற்று மெய்யுணர்வைப் பெறுவதற்கு உறுதுணையாக இருப்பது கல்வி நிறுவனமே.
5. எல்லாவற்றிருக்கும் மேலாக அறம், பொருள் இன்பம், வீடுபேறு என்று நான்கு உறுதிப் பொருட்களைப் பயிற்றுவிப்பதும், அதன்படி, சமுதாயத்தில் அறிவுப் பூர்வமாக சிந்தித்து அறவழியில் செயற்படுவதற்கான பயிற்சியை அளிப்பதும் கல்வி நிறுவனத்தின் சிறப்பாகும்.

**3. குடிமை பயிற்சி நிறுவனம்**

தனிமனிதன் ஒரு சமுதாயத்தின் உறுப்பினனாக, ஒருநாட்டின் நற்குடிமகனாக அமைய வேண்டும் என்றால் அவன் குடிமைப் பயிற்சியும், கல்விநிலையப் பயிற்சியும் பெற்றால் மட்டும் போதாது. அவன் நல்லகுடி மகனாக விளங்கும் தன்மை பெறுதல் வேண்டும்.

நாட்டில் குடியிருப்பு உள்ளவர் அனைவரும் குடியுரிமை பெற தகுதியுடையவராவர் குடியுரிமை பெற்றவர் குடிமைப் பண்பு பெறுவது அவர் தம் தலையாய கடமையாகும். குடிமைப் பண்பு பெறுவதற்கெனத்தனியாக பயிற்சி நிலையம் எதுவும்கிடையாது. சமுதாயத்தின் அறநெறி கட்டுப்பாட்டு விதிகளும் அரசாங்கத்தின்

அரசியல் அமைப்புச் சட்ட விதிகளும் அவனுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன.

அரசியல் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி அறியவும் யாவரிடத்திலும் எளிமையோடு பழகுதல், அன்புடையவனாக இருத்தல், அதே சமயத்தில் ‘நற்குடிப்பிறப்பு’ என்ற பெருமைக்குக் குறை நேராதவாறு நடத்தல், அறிவினும் உயர்ந்த மக்கட் பண்பு ஆகிய பண்புகளைப் பயிற்சி அளிக்கும் நிலையம் குடிமைப் பயிற்சி நிறுவனமாகும்.

உதாரனமாக, அக்காலத்தில் கிரேக்க நாட்டில் அந்நாட்டின் குடிமகன் தனது பண்பிலிருந்து மாறாமல் ஒரு சிறந்த குடிமகனாக நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது ஓர் இன்றியமையாத கடமையாகக் கருதப்பட்டது.

> “உடல் தூய்மை, உள்ளத் தூய்மை, உயிர்த் தூய்மை (ஆன்மா) என்ற மூன்றையும் எந்த நிலையிலும் தூய்மை கெடாதவாறு பார்த்துக் கொள்வதே குடிமை எனப்படும்.”

அன்பு, அடக்கம், அறிவு, அறம், ஒழுக்கம் பண்பு, நடுவு நிலைமை, வாய்மை, வெகுளாமை கொல்லாமை, நாணம், நகை, ஈகை, இன்சொல் பிறரை இகழாமை, பொறையுடைமை அழுக்காறாமை போன்றவற்றின் ஒன்றுபட்ட நிலையே குடிமைப் பண்பாகும்.

**நற்குடிமக்களின் நற்பண்புகள்**

ஒரு நாட்டின் நல்ல குடிமக்களாக விளங்க கீழ்காணும் பண்புகளைப் பெற்றிருத்தல்வேண்டும்.

1. நாட்டுப் பற்று கொண்டிருத்தல் வேண்டும்.
2. சிறந்த கல்வியறிவு பெற முயற்சித்தல் வேண்டும்.



3. கடின உழைப்பினை செய்யும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.
4. சகிப்புத் தன்மை கொண்டிருத்தல் வேண்டும்.
5. மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்.
6. அயலாரை நேசித்தல் வேண்டும்.
7. சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
8. நாட்டு நிலைமையை அவ்வப்போது அறிந்து கொள்ள வேண்டும்.
9. அரசு விதிக்கும் வரிகளை முறையாகச் செலுத்தல் வேண்டும்.
10. வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்துதல்

போன்ற நற்பண்புகளை பெற்றிருக்க வேண்டும்.

மேலும், குடியரசுதினவிழா, சுதந்தர தினவிழா, எல்லா மதங்களின் விழாக்களிலும் சாதி, மத, வேறுபாடுகளின்றி பங்கு பெறுவதால் நாட்டின் தேசிய உணர்வையும் பண்பாட்டையும் வளர்க்க முடியும்.

**4. தொழில் நிறுவனம்**

குடும்பம், கல்வி நிறுவனம், குடிமைப் பயிற்சி நிறுவனம் ஆகிய மூன்றும் இயல்பான அன்பின் பிணைப்பினால் செயல்படுகின்றன. ஆனால் தொழிற்கூடங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுகின்றன, வேலை தருவோர், வேலை ஏற்போர் என்ற ஏற்றத்தாழ்வுகள் தவிர்க்க முடியாதவை.

எனவே தனிமனிதனின் தனித்திறமைகள் வெளிப்பவதற்குரிய வாய்ப்புகளைத் தொழிற் கூடம் அமைத்துத் தருதல் வேண்டும். எந்த ஒரு தனிமனிதனும் தன்னுடைய தனித்திறமையை வெளிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பினைப்

பெறுவதற்கு உரிமையுடையவனாக விளங்க வேண்டும்; திறமைகளை வெளிப்படுவதற்குரிய வாய்ப்பினை அனைவருக்கும் பாகுபாடின்றி வழங்குவதற்குத் தொழில் கூடம் ஆவண செய்ய வேண்டும் அப்பொழுதுதான் ஒருவன் தொழில் வேறுபாட்டையும் திறமை வேறுபாட்டையும் இணைந்து அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற அறப்பயிற்சியை தொழில் கூடங்களில் பெற முடியும்.

### 5. சமய நிறுவனம்

மனிதன் தோன்றிய காலம் முதல் சமயமும் இயற்கையாகவே தோன்றியது எனலாம். மனிதன் இயற்கையைக் கண்டு அஞ்சினான் தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு பேருண்மை உண்டு என்பதை அறிந்தான். அறிவு வளர்ச்சி பொறாதநிலையில் தன்னுயிரைக் காத்துக் கொள்ள விரும்பி பணிந்து வணங்க முற்பட்டான் மூட நம்பிக்கையுடன் செயல் பட்டான்.

### சமயம் எனபதன் பொருள்

‘சமை’ என்றால் மனதை அடக்கு என்பது பொருள் ‘சமைத்தல்’ என்பதன் பொருள் பக்குவப்படுத்துதல் என்பதாகும்.

> மக்களின் மனதை நன்நெறி வாழ்க்கைக்கு ஒழுங்கு படுத்துவது அல்லது பக்குவப்படுத்தும் அமைப்பை சமய நிறுவனம் எனலாம்.

> இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு பேருண்மையாக விளங்கும் இறை அல்லது கடவுள் என்றஒன்றை நம்புவது தான் மதம் அல்லது சமயமாகும்.



எல்லா சமயங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்பதை வலியுறுத்துகின்றன அதைப் பின்பற்றும் முறை அல்லது வழிபடும் முறைகள் வெவ்வேறானவைகளாக இருக்காலாம். ஆனால், அதன் பேருண்மை கடவுள் ஒன்றே என்பதை வலியுறுத்துகின்றன.

### 6. நாடு

சமூக அற இயல்பயிற்சி நிறுவனங்கள் எல்லாவற்றையும் நல்ல முறையில் செயற்படச் செய்யும் ஆற்றல் பெற்ற நிறுவனம் நாடு. ஏனைய நிறுவனங்களையும் அடக்கியாளும் வலிமை உடையது நாடு.

குடும்பம் முதலாக அமைந்த எல்லா நிறுவனங்களும் சமூக அறப்பயிற்சி நிலையமாக அமைந்தவை. ஆனால், நாடு ஒன்றுமட்டும் அரசியல் அமைப்புடைய பெரிய நிறுவனமாக விளங்குகிறது.

மக்கட்சமுதாயத்தின் அடிப்படை அறக் கோட்பாடுகளை அழியாமல் சட்டமாக்குவதும் தனிமனிதன் தன்னுண்மை நிலையினை அறிய உரிய பாதுகாப்பை அளிப்பதும், எல்லா வாய்ப்புகளையும் எல்லோரும் பெறுகின்ற உரிமையை அளித்துச்சமுதாயத்தில் மனிதன் எல்லா நிலையிலும் வளர்ச்சியடையச் செய்வதும் நாட்டின் அடிப்படைப் பண்பாகும்.

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.”

மிகுந்த பசி, தீராத நோய், அழிக்கும் பகை, ஆகிய மூன்றும் சேராமல் வாழ்வதே சிறந்த நாடாகும் என்கிறார் வள்ளுவர். மேலும்

“நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.”

பிறரை நாடாமல் வளந்தரும் நாடுகளே நல்ல நாடுகளாகும். நாடி வளம் தரும் நாடுகள் நல்ல நாடுகள் ஆகா என்பது இதன் பொருள்.

குடும்பமும் ஏனைய சமூக நிறுவனங்களும் என்ற தலைப்பில் சமூக இயல் அறப் பயிற்சி நிறுவனங்கள் அனைத்தும் தனி மனிதனை அறவாணனாக மாற்றி அவன் காலத்தையும் இடத்தையும் கடந்த எல்லையற்ற உலகளாவிய அற இயல் வாழ்வினை அறிந்து தன்னை மேம்படுத்திக் கொள்ளவும், மனச்சான்று நிலையினை அறிந்து துய்க்கவும் உரியவாறு நெறிபடுத்தும் சமுதாய அற இயல் பயிற்சி நிறுவனங்களாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

## பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி**

1. சமுதாய நிறுவனங்கள் யாவை?
2. குடும்பம் என்பது யாது?
3. குடும்பம் பற்றி பெய்ஸான்ஜ் கூறும் கருத்து யாது?
4. குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவர்?
5. குடும்பத்தின் சிறப்புகள் யாவை?
6. குடும்பம் பற்றிய பழ மொழிகள யாவை?
7. அனுபவ அறிவு என்றால் என்ன?
8. குடிமை எனப்படுவது யாது?
9. சமயம் எந்றால் என்ன?
10. சமய நிறுவனம் என்பது யாது?

**II. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. நிறுவனம் என்பது யாது?
2. குடும்பத்தில் பயிற்று விக்கப்படும் பண்புகள் யாவை?
3. அனுபவம் மிகுந்த பெரியோர்கள் மூலம் அறிவன யாவை?
4. ஆண்மகனின் கடமைகளென புறநானூற்றுப் பாடலின் கருத்து யாது?
5. தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும் ஆற்றும் கடமைகளென வள்ளுவர் கூறுவன யாவை?
6. இல்வாழ்க்கைப் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
7. மக்கட் பேறு பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
8. கல்வியறிவு பெரும் வழிறைகள் யாவை?
9. கல்லாத மூடரைப் பற்றி திருமூலர் கூறுவன யாவை?

**III. ஒரு பக்க அளவில் விடையளி**

1. பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே உள்ள உரிமைகளும் கடமைகளும் யாவை?
2. மக்கட்பேறு குறித்த சிறப்பு அம்சங்கள் யாவை?
3. நட்பு பற்றிய சிறப்புகளை விளக்கி எழுதுக?
4. கல்வி பெறுவதன் குறிக்கோள்கள் யாவை?
5. நற்கடி மகனின் நற்பண்புகள் யாவை?

**IV. நான்கு பக்க அளவில் விடையளி**

1. குடும்பம் பற்றிய அறிவியல் கோட்பாடுகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

### 3.3 உரிமைகள் கடமைகள் மற்றும் நல்லொழுக்கம் (Rights, Duties & Virtues)

**உரிமைகள் (Rights)**

உரிமைகளும் கடமைகளும் இருகண்கள் போன்றவை, ஒன்றையொன்று சார்ந்து இருப்பவை, ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை; இணைபிரியாதவை, ஒருவன் முறையாக கடமைகளைச் செய்வானாயின் அவனை

ஒழுக்கமுடையவன் எனக் கூறுவர். அவனது நன்னடத்தையே நல்லொழுக்கமாக மாறிவிடுகிறது.

எனவே, உரிமை, கடமை, நல்லொழுக்கம் போன்றவை தனிமனித வாழ்க்கையில் ஒன்றை ஒன்று சார்ந்து செயல்படுவதால் அவனுடைய வாழ்க்கை வளம் பெரும் தன்மை அடைகிறது.

**1. உரிமைகளின் இயல்பு (The Nature of Rights)**

"உரிமை" என்பது பற்றிக் கூறும் போது அது அறவகையிலோ, சட்டவகையிலோல ஒன்றைப் பெறுவது அல்லது செயல்களை நடத்தும் முறையைக் குறிக்கும்.

உரிமை என்பது அறஇயலில் அரசியல் சட்டமாகவோ அல்லது அறநியதிச் சட்டமாகவோ அமையலாம். இரண்டும் வெவ்வேறானவை.

உதாரணமாக எழுத்து அறிவித்தவன் இறைவனாகும் என்பது மூதுரை கூறும் அறம். இந்நியதியால் ஆசிரியர் மாணாக்கர் மேல் உரிமையுடையவர் ஆவார். ஆனால், சட்டப்படி மாணாக்கர் மீது உரிமை கிடையாது.

குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய் ஒருத்திக்குத் தன் குழந்தையைக் கொல்லவோ, விற்கவோ அல்லது பட்டினிபோட்டு துன்புறுத்தவோ உரிமை இல்லை என்பதை நாம் அறியவேண்டும்.

**2. உரிமையும் சமூகமும்**

மனினுதன் தன்நிலையில் தனித்து காட்டிலோ (அ) தீவிலோ வாழும் போது அவனுக்கு எத்தகைய உரிமையும் தேவையில்லை, காரணம், தனியாக வாழ்வதால் எல்லா உரிமைகளும் அவன் பெற்று இருக்கிறான். ஏனென்றால் அவன் வாழ்கின்ற சூழலில் அவனுக்குக் கிடைக்கத்தக்கவை எவையோ அவற்றை யாரும் மறுக்கவில்லை.



காரணம் அவனைச் சுற்றி மனிதர்களே இல்லை. இந்நிலையில் அவன் யாரிடம் எந்த உரிமையை எதற்காக நிலைநாட்ட வேண்டும். அவன் சமுதாயத்தோடு சேர்ந்து வாழும் போதுதான் தன் உரிமைகளை நிலைநாட்டுகிறான்.

உரிமையை எங்கே வலியுறுத்த வேண்டும் அல்லது தவிர்க்க வேண்டும் என்று சரியாக அறிவதுதான் மனிதனின் சிறந்த அறமாகும். தனிமனிதனுக்கு உரிமைகளை வழங்குவதன் மூலம் சமூகமானது தனிமனிதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது. உரிமையால் தன்னை வளர்த்துக் கொள்ளும் தனிமனிதன் சமூகத்தின் நன்மையாகிய பொது நன்மையை வளர்க்க முனைகிறான், இவ்வகையில் தனிமனிதனும் சமூகமும் கொடுத்தல் / கொள்ளல் என்னும் முறையில் இணைவதைக் காணலாம். இவ்வகை இணைப்பால் உரிமைகளும் கடமைகளும் இணைகின்றன.

**3. மனிதனின் உரிமைகள்**

அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தின் (Declaration of Independence) போது மனிதனின் அடிப்படை உரிமைகள் என்ற கோட்பாட்டை இவ்வுலக முழுமைக்கும் பொருந்தும் வகையில் 'ஐந்து சுதந்திரங்கள்' என எல்லாநாடுகளும் ஏற்கும் வகையில் அமெரிக்கத் தலைவர் 'ரூஸ்வெல்ட்டும்' பிரிட்டிஷ் அரசியல் அறிஞர் 'சர்ச்சிலும்' சேர்ந்து வெளியிட்டனர், 'மெக்கன்ஸி' என்பவர் கீழ்காணும் மனித அறநெறி உரிமைப் பட்டியலை (Moral Rights) வழங்குகிறார்.

(அ) வாழ்வதற்கான உரிமை.

ஆ) சுதந்திர மனிதனாயிருக்கும் உரிமை.

இ) உடமைகளைக் கொள்ளும் உரிமை.

ஈ) ஒப்பந்தம் செய்துக்கொள்ளும் உரிமை.

உ) கல்வி கற்கும் உரிமை.

**அ) வாழ்வதற்கான உரிமை**

பிறப்பு / இறப்பு என்பது உலகில் பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. வாழும் உரிமை என்பது எல்லா உயிர்களுக்குமே அடிப்படை உரிமையாகும். இதை உணர்த்துவதற்காகவே ஒவ்வொரு ஆண்டும் (Human Rights Day) மனித உரிமை நாள் கொண்டாடப்படுகிறது.

ஒருவன் தன் உயிரை எந்த அளவுக்குப் புனிதமானது என எண்ணுகிறானோ அந்த அளவுக்கு பிற உயிரும் புனிதமானது எனக் கருத வேண்டும். ஒருவன் தான் வாழ வேண்டும் என்று நினைப்பது போலவே மற்றவனையும் வாழ விட வேண்டும். ஓர் உயிர் தன் வாழ்வை நடத்தும் போதுதான் 'தன்னையே தான் உணர்தல்' என்னும் அனுபவத்தைப் பெறுகிறது. எனவே வாழும் உரிமை என்பது ஒருவகை அடிப்படை உரிமையாகும். 'வாழ்' - 'வாழவிடு' என்ற முதுமொழியும் வாழும் உரிமையை வலியுறுத்துகிறது.

**ஆ) சுதந்திரமாய் வாழும் உரிமை**

கட்டுப்பாடற்ற - சுதந்திரமாக வாழும் உரிமை என்பது ஒருவகை கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய கட்டுப்பாடற்ற நிலைதான். சமூகத்தில் கட்டுப்பாடுகள் பல விதிகள் உண்டு. எனவே, விதிகளுக்கு அடங்கிய நிலையில், ஏனைய மனிதர்களின் சுதந்திர உரிமையை மீறாத வகையில் ஒருவன் தன்னுடைய சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியவனாகின்றான். கட்டுப்பாடு களுக்கு இடையில் ஒருவகை கட்டற்ற நிலையில் வாழும் உரிமை பெற்று தனக்கும் பிறர்க்கும் பயனுள்ள வகையில்



செயல்படுமுறையால் அனைவருமே சுதந்திரமாக வாழ முடியும். உதாரணமாக சாலையில் செல்லும் போது இடப்பக்கமாக போகவேண்டும் என்பது சாலையின் விதி, இந்த விதிக்கு உட்பட்டு காலில் செருப்பணிந்தும் போகலாம், செருப்பின்றியும் போகலாம், நடந்தும் போகலாம், வாகனங்களிலும் போகலாம், இது அவனுடைய கட்டற்ற சுதந்திரமாக இயங்கும் உரிமை ஆகும்.

**இ) உடமைகளைக்கொள்ளும் உரிமை**

வாழும் உரிமையும் கல்வியுரிமையும் பெற்று உழைக்கும் உரிமையால் கட்டற்ற நிலையில் நின்று பணி புரியும் ஒருவன், தன் விருப்பப் படி பொருட்கள் (சொத்து) பலவற்றைத் தன் உடமையாக்கிக் கொள்ளும் உரிமையை அவனுக்கு சமூகம் வழங்குகிறது. பொருள்களை உடமையாக்கிக் கொள்ளுவதன் நோக்கம் பிறருக்கு நன்மை செய்வதற்குத்தான் என்பதை உணர்ந்து அந்த உரிமையை அவனுக்குச் சமூகம் அளிக்க முன் வருகிறது.

**ஈ) ஒப்பந்தம் செய்துக் கொள்ளும் உரிமை**

கல்வியுரிமையும் உழைப்பும் பெற்ற தனிமனிதன் பொருள்களைத் தன்னுடைமையாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடும் போது பிற மனிதனின் உதவி தேவைப்படுகிறது. ஒருவன் மற்றவனோடு இணைந்து தொண்டாற்ற வேண்டிய நிலைமை அமையுமானால் அவ்விருவரும் இணைந்து செயல் புரிவதற்கு உரிய ஒப்பந்த உரிமையைச் சமூகம் அவ்விருவருக்கும் வழங்குகிறது.

**உ) கல்வி கற்கும் உரிமை**

வாழும் உரிமையைப் போலவே, கல்வியைப் பெறுவதற்கு சமூகம் எல்லா வகையான உதவியையும் செய்து, அவன் கல்வியை பெறுவதற்குரிய வாய்ப்புகளை உண்டாக்கி கொடுக்க வேண்டும்,

ஒருவன் விரும்பும் அளவுக்குக் கல்வி கற்பதனால் தான் தன்னிடத்தில் மறைந்து கிடக்கும் பேராற்றல்களை வெளிப்படுத்த முடியும்.

அவ்வகையில், பண்பட்டவர்களாகச் சமூக உறுப்பினர்களை மாற்றி அமைக்க முடியும் பண்பட்ட உறுப்பினர்களால் பண்புள்ள உயர் தனித்தன்மை வாய்ந்த சமூகம் அமைய முடியும். எனவே, தனிமனிதன் விரும்பும் கல்வியை வழங்கும் வகையில் சமூகம் அவனுக்குத் துணை புரிய வேண்டும்.

**செயலுரிமை**

செயலுரிமை எனப்படும் உழைப்புரிமை ஓர் அடிப்படை உரிமையாகும் உழைப்பின் மூலம் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலையில் ஒருவன் உழைக்க வாய்ப்பளிக்க வேண்டும். உழைக்கும் போது தான் அவனுள் மறைந்து கிடக்கும் பேராற்றல்கள் வெளிப்படமுடியும்.

மேலே கூறப்பட்ட ஆறு உரிமைகளில் வாழும் உரிமை, கல்வியுரிமை, செயல் உரிமை, சுதந்திர உரிமை, உடமைகொள்ளும் உரிமை இவை ஐந்தும் இயற்கை உரிமைகள் எனக் கூறலாம். பொது நலனுக்குப் பயன்படுவதைப் பொறுத்துத் தான் எந்த உரிமையும் வலுப்பெறுகிறது. ஒவ்வொரு மனிதனும் பொது நலனுக்குக் கருவியாக விளங்குவதால் மக்களின் உரிமை ஒரு வரம்பிற்குள் கட்டுபடுத்தப் பெறுகிறது.

**கடமைகள்**

கடமை என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருள்கள் இன்றைய உலக வழக்கில் வழங்கப் பெறுகின்றன. இங்கே குறிக்கப் பெறும் கடமை என்ற சொல்லுக்கு அற இயலில் உரிய பொருள் என்ன என்பதைக் காண்போம்.



**1. கடமை என்பதன் பொருள்**

சூழ்நிலைக்கும் செயற்பாட்டிற்கும் பொருந்துவனவற்றை நல்ல செயல்கள் என்பர். இரண்டு நல்ல செயல்களில் ஒன்றை தேர்ந்தெடுத்து, அது பொருத்தமாகவும் கட்டுப்பாடுகளும் அமைந்த ஒரு செயலாக இருக்குமாயின் அதனையே கடமை என்று கூறவேண்டும்.

**கடமைகளின் வகைகள் (Kinds of Duties)**

1. நிறைவுற்ற அல்லது தெளிவான கடமையும், நிறைவற்ற (அல்லது) தெளிவற்ற கடமையும்

நிறைவுற்ற கடமைகள் தெளிவானவை, மனிதர்களால் பிழை நேராதவாறு செய்யக் கூடியவை. எடுத்துக்காட்டாக, 'பொய் பேசாதே', 'திருடாதே', 'உயிர் கொலை செய்யாதே' போன்றன எதிர்மறைத்தன்மை வாய்நத கடமைநிறைவற்ற கடமைகள் தெளிவற்றவை, மனிதர்களால் பிழை நேராத அளவு கடைபிடிக்க முடியாதவை. எடுத்துக்காட்டாக, அன்பு, கருணை, ஈகை, போன்றவாகும். இவைகள் காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படும் கடமைகளாகும்.

**1.நீதி மற்றும் இரக்க உணர்வின் அடிப்படையிலான கடமைகள்**

நீதியின் அடிப்படையிலான கடமைகள் நிறைவுற்ற கடமைகளையே குறிக்கும். இரக்க உணர்வின் அடிப்படையிலான கடமைகள் நிறைவற்ற, தெளிவற்ற கடமைகளையே குறிக்கும். இது அரசாங்கத்தினாலோ அல்லது சமூகத்தாலோ வலியுறுத்தப்பெறும் தகுதியுடையவைகளாகும்.

**2. கடமைக்காக கடமை என்னும் கொள்கை (Duty for Duty sake)**

'பிராட்லி' என்பவரின் கடமை பற்றிய கருத்தானது, என்னுடைய நிலையும் நிலைக்கு ஒத்த கடமைகளும் (Duty For Duty Sake) என்ற தலைப்பில் உணர்த்தப் பெறுகிறது.

காண்டின் கடமைக் கொள்கையானது, கடமை ஒன்றையே கருத்திற்கொண்டு விளைவுகள் பற்றியோ மற்றும் அதன் நன்மை பற்றியோ சிந்தனையில்லாமல் கடமையாற்றுவது என்பது கான்ட்டின் கடமைக் கொள்கையின் மையக்கருத்தாகும், புற ஊக்கிகளோ அல்லது அக ஊக்கிகளோ நமது இயற்றி நிலையைத் தூண்டுதல் கூடாது என்றும், 'அறவிதியின் பால் எழும் மரியாதை' அல்லது கடமைக்காக கடமை (Duty for Duty sake) என்ற உணர்ச்சி மட்டுமே நம் இயற்றி நிலையை இயக்கும் ஊக்கியாக இருத்தல் வேண்டும் என்று கான்ட் கூறுகிறார்.

மனிதன் கடமையைச் செய்யும் போது எந்தவிதப் பலனையும் விரும்பியோ வெறுத்தோ செய்யாமல கடமையையே கண்ணாகக் கொண்டு செய்ய வேண்டும் என்பதே பகவத்கீதையில் கர்மயோகத்தில் கூறப்படும் 'நிஷ்காம்யகர்மா' என்பது பொருளாகும்.

அவரவர் தகுதி திறமைக்கேற்ப சமுதாய உறவுகளிலும் அவனது இடம் எதுவென வரையறை செய்யப்படுகிறது. அவ்வாறே, ஆசிரியர், மருத்துவர், பொறியாளர், ஆட்சியாளர், முதலாளி, தொழிலாளியென அனைவருக்கும் கடமைகள் வரையறுக்கப்படுகின்றன.

**நல்லொழுக்கம் (Virtue)**

**1. நல்லொழுக்கத்தின் பொருள் (The Meaning of Virtue)**

நல்லொழுக்கம் என்ற சொல்லை VIRTUE என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கச் சொல்லாகக் கொள்வது மரபு. சாதாரணமாக இச்சொல்லை நாம் வழங்கும் போது மனிதனுடைய மேம்பாட்டைக் குறிப்பதமாகக் கொள்கிறோம்.



எனவே, 'வர்ச்சயு' என்னும் போது மனிதமேம்பாடுகளான - நல்லொழுக்கத்தையே குறிக்கும்.

அற இயலில் இச்சொல்லை இரண்டு வெவ்வேறுவகைப் பொருள்களில் பயன்படுத்துகிறோம்.

இதை ஒழுக்கத்தின் ஒரு பண்பாகக்கொள்வர். எது நல்லதோ அதைக் குறிப்பிட்ட ஒரு வகையில் செய்யும் திறமாகவும் இதனைக் கொள்ளலாம் அல்லது பொதுமைக் கடமைகளுள் ஒன்றைச் செய்வதையும் இது குறிப்பிடலாம்.

| |
|---|
| நல்லொழுக்கம் என்பது நற்சிந்தனை, நற்செயல், நன்னடத்தை, நற்பண்பு, நல்லறிவு தன்னடக்கம், நீதி, நேர்மை, உறுதி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல் திறன். |

**2. அறிஞர்களின் விளக்கம்**

ஏற்றுக்கொண்ட ஒருசெயலை அல்லது கடமையைச் செய்யும் போது தன்னைப் போலவே மற்றவரும் வாழும் உரிமையுடையவர்கள் என நினைத்து அவர்களின் உரிமைக்கு ஊறு நேராவண்ணம் சிறந்த முறையில் அதனைச் செய்வதையே நல்லொழுக்கம் என்பர்.

சில அறிஞர்கள் நல்லொழுக்கம் என்பதற்குச் செயல்களின் உள உணர்வுடன் அமைந்து வரும் பண்பு எனவும் விளக்கமளித்தனர்.

ஒருவன் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் செயல் எது என்பது பற்றிய ஆய்வு தேவையற்றது என்றும், செயல் முறையில் அவன் தன் நேர்மைக் குணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும், அதுவே சிறந்த ஒழுக்கம் என்றும் அறிஞர்கள் கருதினர்.

கடமைகளை மேற்கொண்டு செய்வதை நன்னடத்தை எனக் குறிப்பிடுவதுண்டு, ஒழுக்கம் (அல்லது) நன்னடத்தைகளையே வழக்கமாகக் கொண்டு செயல்படும் போது அவைகள் 'நற்பண்புள்ள நன்னடத்தை' என்று குறிப்பிடுகிறார் லயர்ட் (Laird).

**நல்லொழுக்கத்தின் மேலான நற்பண்பை அடையும் வழிகள்**

மனிதன் அறிவுடையவன் என்று கூறுவதை விட அறிவின் வழியில் இயங்குபவன் எனக் கூறலாம். அறிவுடைய மனிதன் விரும்பியேற்கும் செயலே 'இச்சைச் செயல்' (Voluntary Actions). ஆசை, இதனை ஒழுங்கு செய்யும் அறிவாற்றல் ஆசையின் நிறைவைக் குறிக்கோளாகக் கொண்டு, அறிவு செலுத்தும் வழியில் செயலாற்றும் திறன் ஆகிய மூன்றும் இணைந்து செயலாற்றுகின்றன. எனவே, இச்சைச் செயல் என்பது மனிதன் தன் அறிவனால் நல்லது, தீயது எதுவென எண்ணி, ஆய்ந்து தேர்ந்தெடுத்த செயலாகும்.

இச்சைச் சயெலைச் சயெ்ய முற்படும்போது அதை அறிவு நெறிபடுத்த வேண்டும். செயல் திறமையானது அறிவு வகுத்த பாதையில் செல்ல வேண்டும். இச்சைச் சயெலில் ஒரு மனிதன் ஈடுபடும்போது அவனுடைய அறிவு, அச்சேயல் செய்ய வேண்டிய பாதை, முடிவுபெற வேண்டிய முறை, பயன், பின்விளைவு ஆகிய எல்லாவற்றையும் பற்றிய முடிவுகளைக் கொண்டதாகவே இருக்கும். இச்செயலைப் பலமுறை திருப்பி திருப்பி செய்யும் போது அது அனிச்சைச் செயலாக (Non- voluntary Actions) அமைகிறது. இதையே 'பழக்கச் செயல்' (Habitual Action) என்று கூறலாம்.

ஒருவன் நன்னடத்தையை இச்சைச் செயலாக விரும்பி ஏற்று செயல்பட்டு வருவதால் அவன் மனதில் நன்னடத்தைப்



பதிந்துவிடும். அந்த நன்னடத்தை மனப்பதிவைத்தான் நாம் நற்பண்பு (Good Character) என்று கூறுகிறோம்.

**நல்லொழுக்க நற்பண்பும் இன்பமும்**

நல்லொழுக்க நற்பண்பு எப்பொழுதும் இன்பத்தோடு இணைந்து வருவதாகவே கொள்ளப்படுகிறது. நல்லொழுக்க நற்பண்பு அமைந்த வாழ்க்கையானது அதன் மலர்ச்சியாகிய இன்பமுடனேயே அனுபவிக்கப் பெறுகிறது என்று முடிவு செய்தனர் சான்றோர்.

ஆனால் நல்லொழுக்க நற்பண்பானது எப்பொழுதும் இன்பத்தைக் கொடுக்கம் என்று உறுதி கூறமுடியாது. அதை மேற்கொள்பவர்களின் அறச்செயல்களைப் பொருத்து இன்பம் உடையவர்களாக அமைகிறார்கள்.

உயர்ந்த இன்பம் என்பது மனிதன் தன்னுடைய செயற்பாடுகளை முற்றாக முடித்த அந்நிலையிலேயே காணப்பெறுகிறது சாதாரண இன்பம் என்பது முழுமையான செயற்பாட்டுக்குரிய பயிற்சியை மேற்கொள்ளும் அளவிலேயே கிடைக்கப் பெறுகிறது என்று கூறுகிறார் அரிஸ்டாடில்.

எனவே, செய்முறை அறிவின் முறையான பயிற்சியை மேற்கொள்ளும் நிலையிலேயே இன்பம் தோற்றம் பெற்று விடுகிறது என்பது கருத்து.

| |
|---|
| நல்லொழுக்க நற்பண்புகளினால் நிறைவு பெற்ற வாழ்வை எவன் ஒருவன் செயல் முறைபடுத்துகிறானோ அவனே உயர்ந்த குறிக்கோளோடு இணைந்த உயர்ந்த இன்பம் துய்க்கும் மனிதனாகின்றான் என்பது அறவியற் கொள்கை. |

## நல்லொழுக்க நற்பண்புகளும் வாழ்வியற் குறிக்கோள் பயனும்

நல்லொழுக்க நற்பண்புகளும் வாழ்வியற் குறிக்கோள் பயனும் மனித வாழ்வுக்கும் மனிதவள மேம்பாட்டிற்கும் ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பினும், இத்தகைய உறவின் அடிப்படையில் இவ்விரண்டும் இவையிவை என வரையறை செய்யப்படவில்லை, அவ்வாறு வரையறை செய்ய முற்படும்போது வெவ்வேறு அடுப்படைகளைக் கொண்டே வரையறை செய்கிறார்கள்.

நல்லொழுக்க நற்பண்புகள் தனி மனிதனின் பண்பு நலத்தைச் சார்ந்தவை, ஆதலால் அவை அகநிலைச் சார்புடையவைகளே, ஆனால் வாழ்வியல் குறிக்கோள் பயன்கள் எல்லாவகையாலும் முடிந்த நன்மையாகவும், உயிரின் புறநிலையில் நின்று அடையக்கூடிய நன்மையாகவும் இருப்பதால் அவைகள் அகநிலை, புறநிலை ஆகிய இருவகைச் சார்புகளையும் கொண்டவைகளாக அமைகின்றன.

நல்லொழுக்க நற்பண்புகள் தனி மனிதர்களின் நன்மை பயன்களையும் சமூகத்தின் நன்மையையும் அடைவதற்கு கருவிகளாக அமைகின்றன. எந்த ஒரு வாழ்வியற் குறிக்கோள் பயனும் அதனோடு இணைந்த ஒரு நல்லொழுக்க நற்பண்பினைப் பெற்றிருக்கிறது என்பதைக் காணலாம், எடுத்துக்காட்டாக, அறஇயலை அடுப்படையாகக் கொண்ட நல்லொழுக்க நற்பண்பானது அறஇயல் சார்ந்த வாழ்வியல் குறிக்கோள் பயனைக் கொண்டு விளங்கும்.

நல்லொழுக்க நற்பண்புகள் கீழ்க்காணும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பெறுகின்றன, அவை,

1. தன்னைப் பற்றியவை.
2. பிறரைப் பற்றியவை
3. குறிக்கோளைப் பற்றியவை



### 1. தன்னைப் பற்றியவை

கடமைகளை மேற்கொள்ளும் போது ஒருவன் தன்னுடைய நன்மையை அடிப்படையாகக் கொண்டு அதற்குப் பொருந்துவதாக அமையும் நல்லொழுக்க நற்பண்புகள் இவ்வகையைச் சாரும். நடுவு நிலைமை, தன்னடக்கம், செல்வநிலையில் சிக்கனம், அறவியலில் துணிவு ஆகியவை தன்னைப் பற்றிய நல்லொழுக்க நற்பண்புகளாகும்.

### 2. பிறவற்றைப் பற்றியவை

ஒருவன் மற்றவனுடைய அல்லது மற்ற உயிரினுடைய நன்மைக்கு பொருந்துவதாகிய கடமைகளை மேற்கொள்ளும் போது அவற்றிற்கேற்ப நல்லொழுக்க நற்பண்புகளை மேற்கொள்ளல் பிறரைப் பற்றியவை எனலாம், நீதி, இரக்கவுணர்வுடன் கூடிய அறச் செயல், நாட்டுப்பற்று முதலியன பிறவற்றைப் பற்றிய நல்லொழுக்க நற்பண்புகள் ஆகும்.

### 3. குறிக்கோளைப் பற்றியவை

உண்மையின் மேல் அன்பு, நன்மையின் மேல் பற்று, அழகை நன்கு மதித்தல் போன்றவை குறிக்கோளை நோக்கிய நல்லொழுக்க நற்பண்புகள் எனலாம்.

## நல்லொழுக்க நற்பண்பும் பண்பாடும்

பண்பாடு என்பது மனப் பதிவுகளாகிய நல்லொழுக்கத்தினைப் பண்படுத்துவதன் மூலம் நல்லொழுக்கத்தின் அடிப்படைக் கருவூலமாக நின்று சிறந்து விளங்குவதாகும். இது அறிவியலான, உணர்ச்சியியலான, செயலியலான கூறுகள் அனைத்தும் இணைந்து உண்டாகும் ஒருவகை முன்னேற்றத்தால் அமைவது. ஆதலின், நல்லொழுக்க நற்பண்பு உண்மைப் பண்பாட்டின் திறவுகோலாக அமைகிறது.

தனிமனிதப்பண்பு ஆளுமைப் பண்பாக அமையுமாறு பெறும் வளர்ச்சியே உண்மையான தன்னிலை வளர்ச்சி. தனி மனிதனின் ஆளுமை நோக்கிய வாழ்வுதான் உண்மையான அறநிலைப் பண்பாட்டு வாழ்வு. எனவே, தனிமனிதப் பண்பிலிருந்த ஆளுமைப் பண்பாக வளர்ச்சி பெற்று, பின்னர், தன்னையே நீக்கிய சமுதாய வாழ்வை உள்ளிட்ட சமுதாய நன்மையை நோக்கிய பண்பாக வளர்வதே பண்பாடு.

### ஆளுமைப்பண்பு வளர்ச்சி

'ஆளுமை' எனப்படுவது (Personality) ஒருவன் பெற்றுள்ள உடற்பண்புகள், உளப்பண்புகள், சமூக அறநெறிப்பண்புகள் ஆகியனயாவும் ஒருங்கிணைந்த செயலையே குறிக்கும், ஆளுமையின் உடல்தோற்றம், அனுபவங்கள், நினைவுகள், கற்பனைகள், பழக்க வழக்கங்கள், பற்றுகள், ஆகியன யாவும் அடங்கியுள்ளன.

## பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி**

1. உரிமை என்பதன் பொருள் யாது?
2. கடமை என்றால் என்ன?
3. "நல்லொழுக்கம்" - வரையறு?

**II. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. மனிதனின் அடிப்படை உரிமைகளாக 'மெக்கன்ஸி' கூறுவன யாவை?
2. வாழ்வதற்குள்ள உரிமை என்பது யாது?
3. ஆளுமை எனப்படுவது யாவை?

**III. ஒரு பக்க அளவில் விடையளி**

1. உரிமைகளின் இயல்புகள் யாவை?
2. மனிதனின் அடிப்படை உரிமைகளாக 'மெக்கன்ஸி' கூறுவனற்றை விளக்கி எழுதுக?
3. நல்லொழுக்க மேலான நற்பண்புகளை அடையும் வழிகள் யாவை?

**IV. நான்கு பக்க அளவில் விடையளி**

1. உரிமை, கடமை மற்றும் நல்லொழுக்கம் பற்றிய அறநெறி கருத்துக்களை விவரி.



## 3.4 தண்டனைப் பற்றிய கொள்கைகள்

ஆரம்ப காலத்தில் மன்தன் தனித்து வாழ்ந்து வந்தான். அப்பொழுது அவனுக்கு கடமைகளும், உரிமைகளும் இல்லை. உரிமைகளும் கடமைகளும் இல்லாத போது நல்லொழுக்க நற்பண்புகள் என்று போற்றப்படும் வாழ்வியல் அறங்களும் இல்லை. தனியாக வாழ்ந்த மனிதன் சமுதாயமாக வாழத்தொடங்கினான். அன்று முதல் சமுதாய வாழ்வில் பின்பற்றி வாழ வேண்டிய வாழ்வியல் அறங்கள் தோன்றின. பரபோர் இணைந்து வாழும் போது அனைவரையும் இணைத்துச் செயற்பட வைக்கும் அற இயல் விதிகளுக்கு அனைவரும் இணங்கி நடக்க வேண்டிய கடமை உண்டாகிறது.

தனி மனிதன் தன்னுடைய மனச்சான்றின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டிருக்கும் அறவிவயல் விதிகள், சமூக அமைப்பு உருவானபோது சமூகம் அமைத்த விதிகள், அரசவிதித்த விதிகளென விதிகள் பெருகும்போது, சிற்சில சமயங்களில் தனி மனிதனின் அற வாழ்வையும் பாதிக்கும் முறையில் விதிகள் அமைந்து விடுவதுண்டு. இவ்விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டிய மனிதன் அவ்விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டிய மனிதன் அவ்விதிகளைத் தானே மீறத்தொடங்கும் போது அற வாழ்வில் பிரச்சனைகளும் தோன்றின. பிரச்சனைகளுக்கேற்ற தண்டனைகளும் வழங்கப்படுகின்றன.

நற்செயல்கள் எவ்வாறு பாராட்டிற்குரியவையோ அதைப்போல் குற்றங்களும் தண்டனைக்குரியவை. விதி என்பது ஒரு வரையறைச் சொல். எந்த ஒரு விதியையும் மீறுகின்ற எச்செயலுமே குற்றமே எனவும் அது தண்டனை பெறுவதற்குரியது எனவும் கருதுவது இயல்பு. குற்றங்களின் வகைகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம். அவை, பாவச்செயல், பிழை, ஒழுக்கவியல் தீமை, அறத்திற்கு மாறான செயல் அல்லது பழி, குற்றம் போன்றவை.

1. பாவச்செயல் (Sin) தீய நினைவுகள் மனதில் பதிந்துவிட்டால் அவை உள்ளார்ந்த நல்லொழுக்கத்தைக் கெடுத்து, அதற்கேற்ப வெளிப்புறச் செயல்களையும், மாசு படுத்திவிடும். நன்றி மறத்தல் ஒரு பாவச்செயல், பாவச்செயல் என்பது ஒரு பாவச்செயல், பாவச்செயல் என்பது ஒரவகை தீய அறநெறிச் செயல் அதாவது தீய பண்பு உடையது. அரசினால் தண்டிக்க முடியாதது. சமூகத்தால் வெறுக்கப்படுவதுதான் எனினும் அரசினால் அளிக்கப்படும் தண்டனை அதற்கு இல்லை.

2. பிழை (Mistake) மனிதன் தெரிந்து ஆராய்ந்து செய்த தவறுக்குப் பிழை என்று பெயர். ஒன்றை ஆய்ந்து தேர்ந்தெடுக்கும் நிலையில் தவறு நேர்ந்து விடுகிறது. சில தவறான செயல்களை நற்செயல்களென தேர்ந்தெடுத்து விடுகிறது.

3. ஒழுக்கவியல் தீமை (Evils of Virtue) ஒருவன் ஒழுக்கவியல் விதிகளை அறிவோடும், செயல் திறனோடும் இணைந்து நின்றே மீறுதல் ஒழுக்கவியல் தீமை எனப்பெறும். ஒழுக்கம் என்பது ஒரு அறச்செயல், அறவழித் தீமை என்பது ஒருவன் அறிந்தே, அறக்கொள்கையை மீறுகிறான். ஆகையால் அறவிதியை மீறுதல் தீமையே.

4. பழிச்செயல் (Vice) நல்லொழுக்கத்தின் மேன்மை எவ்வாறு நல்லொழுக்க நற்பண்பாகக் கருதப்படுகிதோ அவ்வாறே நல்லொழுக்கத்தின் தீமையானது பழிச்செயல் என்றும் கருதப்படும். நல்லொழுக்கத்தின் தீமை என்பது நல்லொழுக்கத்திலிருந்து திசை மாறுதல் அல்லது ஒருவகைச் சறுக்கல் எனலாம். சமூக அறநெறி சட்டங்களுக்கு மாறாக ஒருவன் செயல்படுவானாயின், அவனைச் சமூகம் பழிக்கும் சமூகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாவதால் அவனது செயல் பழிச் செயலாக அமையப் பெற்று விளங்கும்.

5. குற்றம் (Crime) முன்பெல்லாம் கடவுளுக்கு எதிராகச் செய்யும் செயல் பாவம் என்றும் சமூகத்திற்கு எதிராகச் சயெ்யும் செயல் எல்லாம் குற்றம் என்று சொல்வது மரபு. எனவே, அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சமூகத்திற்கு எதிராகச் செய்யும் செயல் குற்றம். அது தண்டனைக்குரியது.

6. தண்டனை (Punishment) குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும். எவ்வாறு நற்செயல்களுக்குப் பரிசு அளிக்கப்படுகின்றதோ, அதைப் போன்றே குற்றங்களுக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது. குற்றவாளி சமூகத்தினால் அனுமதிக்கப் பெற்ற அரசியல் சட்டங்களை மீறுகிறான் அதனை வேண்டுமென்றே தகர்த்தெறிகிறான். அவனது தவறான செயலின் தன்மைக்கு ஏற்றவாறு தண்டனை அளிப்பதன் மூலமான ஒழுங்கு செய்யப்படுகிறான். எனவே, தண்டனை எனப்படுவது அறவழியிலான, ஒரு நேர்மையான நெறிப்படுத்தும் செயலாகும். தண்டனைப் பற்றிய கொள்கைகளை மூன்றுவகையாக அமைக்கப் பெற்றுள்ளன. அவை முறையே

அ) எச்சரிப்புத் தண்டனைக்கொள்கை (Deterrent Theory of Punishment)

ஆ) பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக்கொள்கை (Retributive Theory of Punishment)

இ) சீர்த்திருத்தத் தண்டனைக் கொள்கை (Reformative theory of Punishment)

**அ) எச்சரிப்புத் தண்டனைக்கொள்கை (Deterrent Theory of Punishment)**

குற்றம் செய்த ஒருவனைத் தண்டிக்கும் முறையில் மற்றவர்களும் அதே குற்றம் புரியாமல் இருக்கச் செய்வது தான் இக்கொள்கையின் நோக்கம், குற்றம் செய்த ஒருவனை தண்டிக்கும் முறையில் அவனுக்கு அளிக்கப்படும் தண்டனையானது மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம் ஆகும்.

ஆடு திருடியதற்காக நீ தண்டிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் ஆடுகள் திருடுபோகாமல் இருக்கத்தான் இத்தண்டனை என தீர்ப்பளித்த ஒரு நீதிபதியின் கூற்றிலிருந்து இக்கொள்கையின் நோக்கம் நன்கு விளங்கும்.

இக்கொள்கையில் சில குறைபாடுகள் உள்ளன. இக்கொள்கையின்படி தனி மனிதன் மற்றவர் நலனுக்காக வெறுங்கருவியாகப் பயன்படுத்த படுகின்றான், ஒருவனை மற்றவர்களுக்கு முன் மாதிரியாக காட்டுவது தான் இக்கொள்கையின் அடிப்படை என்றால் அது தவறாகும்.

சில நேரங்களில் குற்றம் இழைத்த ஒருவனை ஒரு நீதிபதி தண்டிக்க முற்படும்போது, மற்றவர்களுக்கு இத்தண்டனை எச்சரிக்கையாக இருக்கவேண்டும். என்றெண்ணி மிகக் கடுமையாகவும் தண்டிக்கலாம் அல்லது மிகக் குறைவாகவும் தண்டிக்கலாம். இது தவறாகும்.

மேலும் ஒரு குற்றவாளி முதல் முறையாக ஒரு குற்றத்தை இழைக்கும் போது அக்குற்றத்தை அவன் மீண்டும் செய்யமாட்டான்



என்ற நிலையில் நீதிபதி அவனை எச்சரிக்கை செய்யலாம், மிகக் குறைந்த தண்டனை வழங்கலாம் அல்லது தண்டிக்காமலேயே விட்டுவிடலாம். எனவே, மற்றவர்களை எச்சரிக்கும் வகையில் தண்டனை விதிக்கும் போது நிலைமைக்கு ஏற்றபடி சற்று நிதானமாகவும் கடுமையாகவும் நீதிபதி தண்டனை விதிக்க முற்படுவது நியாயந்தான். ஒரு குற்றவாளி மீண்டும் அக்குற்றத்தைச் செய்யமாட்டான் என்ற நிலையில் நீதிபதி குற்றவாளியைத் தண்டிக்காமல் இருப்பது நல்லது தான். ஆனால், அதே குற்றத்தைத் திரும்பத் திரும்பச் செய்ய நேர்ந்தால் குற்றவாளியைச் செய்த குற்றத்துக்குரிய வகையில் கடுமையாக தண்டிப்பது சமூகத்திற்கு நன்மை பயக்கும் இக்கொள்கையின்படி தூக்குத் தண்டனையும் நேர்மையுடையது என்று விளக்கிக் காட்டப்படுகிறது.

**ஆ) பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக்கொள்கை (Retributive Theory of Punishment)**

துன்பத்திற்குத் துன்பம் அல்லது பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக்கொள்கை என்பது, மற்றொருவனுக்கு இழைத்த துன்பதை அதை இழைத்தவனே அனுபவிக்கும் படி செய்வதே இத்தண்டனையின் நோக்கம் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பதை பொதுவாக நோக்கும்போது, இது பழிவாங்கும் தன்மையைச் சார்ந்ததெனக்கொள்ள இடம் உண்டாகிறது. எடுத்துகாட்டாக, சோழர் வரலாற்றில் தேர்காலில் ஒரு கன்றினைக் கொன்ற மகனை

1. மன்னர் தம் தேர்க்காலிலேயே இட்டுக் கொல்ல வைத்ததை இங்கு நினைவு கூறலாம்.
2. ஒருவன் செய்த தீமைக்கேற்ற தண்டனையாகத் துன்பத்தை அவனுக்கு அளிக்க வேண்டுமென நமது மனச்சான்றே நிர்ணயிக்கின்றது என்கிறார் 'பட்லர்'

இத்தண்டனைக் கொள்கை உணர்ச்சி அடிப்படையில் எழுந்தது மட்டுமன்று மனிதனின் சமுதாய வாழ்விலும் இது முக்கிய இடம் பெற்று இருக்கிறது. இன்றேல், அஃது அழிந்துவிடும், மனித வாழ்வுக்குச் சமுதாயம் பின்னணியாக விளங்குகிறது.

எனவே, சமுதாயம் அழிந்துவிடுவதை நாம் விரும்ப முடியாது. மனித சமுதாயம் அழிய நேரும்போது மனிதன் விலங்கைவிடவும் கீழ்நிலையை அடைய நேரிடும்.

இக்கொள்கையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. பழிக்குபழி வாங்குதல் என்பது உணர்ச்சியின் அடிப்படையில் நிகழும் செயல் ஆகும். இது ஒரு அறிவில் முதிர்ந்த சான்றோர்கள் வாழும் சமுதாயத்திற்குப் பொருந்தாது.

குற்றவாளி ஒருவன் இக்குற்றத்தை எதற்காகச் செய்தான்? அவனை தண்டிப்பது நன்மை பயக்குமா? அப்படியென்றால் எந்த அளவுவரை தண்டனை வழங்குவது? பாதுக்கப்பட்டவன் செய்த குற்றம் என்ன? போன்றவைகளை தீர விசாரித்து ஆராயாமல் பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்தில் தண்டனை அளிப்பது அநாகரிகச் செயலாகும்.

**இ) சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை (Reformative Theory of Punishment)**

குற்றம் செய்தவன் நன்முறையில் திருத்தும் நோக்கத்தில் தண்டனை அமைய வேண்டும் என்பது இக்கொள்கையின் நோக்கம். நல்லெண்ணத்தின் அடிப்படையில் அணுகும்போது இக்கொள்கை இக்காலத்தே மக்களால் பெருமளவில் வரவேற்கப் பெறுகின்றது.



குற்றம் புரிந்த ஒருவனை மனிதனாக மதித்து அவன் நன்மையையே மனதில் கொண்டு தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் கொண்டது. அதாவது குற்றம் செய்தவனுக்கு நல்ல கல்வியறிவு புகட்டி, மீண்டும் எக்குற்றத்தையும் அவன் செய்யவிடாமல் தடுத்து அவனை வாழ வைப்பதே அவனுக்குத் தண்டனை கொடுப்பதின் நோக்கம் என்று கூறுவது இக்கொள்கையின் முக்கியத்துவம் ஆகும்.

குற்றவியல் ஆய்வானது ஒருவன் ஏன் குற்றம் செய்கிறான் என்பதற்கான காரணங்களை விவரிக்கும்போது, உடலியல் சார்ந்த குறைகளும், மனவளத்தில் ஏற்பட்ட சிறுகோளாறுகளுமே குற்றம் புரிய ஏதுவாகிள்றன என்று குறிப்பிடுகின்றது. மேலும் சமுதாய ஏற்றத்தாழ்வும் மனிதனைக் குற்றவாளி ஆக்குகின்றது.

ஆகையால் தண்டனை என்பது குற்றவாளிகளின் உடல்வளம், மனவளம் ஆகியவைகளை ஒரு நோயாளிக்கு மருத்துவர் எவ்வாறு சிகிச்சை அளிக்கின்றாரோ அதே போல் குற்றம் புரிந்த ஒருவனை ஒருநோயாளியாக பாவித்து, அக்குற்றத்தை மீண்டும் அவன் செய்யாமல் தடுத்து திருத்த வேண்டும்.

சீர்திருத்தத் தண்டனைக் கொள்கையிலும் சில குறைபாடுகள் உள்ளன. எல்லாக் குற்றவாளிகளுமே உடலியல் மற்றும் மனவியல் குறைபாடுகளினால் குற்றம் செய்தவர்கள் அல்லர். மேலும் எல்லாக் குற்றங்களுமே சமுதாய ஏற்றத்தாழ்வினால் ஏற்பட்டவை என்பதையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

தண்டனையானது குற்றவாளியை நல்லவனாக மாற்றி அமைக்குமேயானால் இக்கொள்கை நல்ல கொள்கைதான். சிற்சில சமயங்களில் தண்டனை கொடுப்பதை விட மன்னித்து விடுவது ஒருவனை நல்லவனாக்குவதும் உண்டு.

சிக்மண்ட் பிராய்டு கூற்றுப்படி, பாலுணர்வு விருப்பங்களே குற்றம் புரியவதற்குக் காரணமாகின்றன. அத்தகையவர்களை மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை மூலம் தெளிவுபெறச் செய்யலாம். ஆனால் எல்லா குற்றவாளிகளும் இவ்வகையைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

## பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி**

1. பாவச் செயல் என்பது எது?
2. பிழை என்பது யாது?
3. பழிச் செயல் எவ்வாறு உண்டாகிறது?
4. குற்றம் - வரையறு?
5. தண்டனைப் பற்றி குறிப்பு எழுதுக?
6. மூவகைத் தண்டனைக் கொள்கைகள் யாவை?

**II. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. எச்சிப்பு தண்டனைக் கொள்கையின் நோக்கங்கள் யாவை?
2. சீர்த்திருத்த தண்டனைக் கொள்கையின் நோக்கங்கள் யாவை?

**III. ஒரு பக்க அளவில் விடையளி**

1. பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக் கொள்கை பற்றிய கருத்துக்களைத் தொகுத்து எழுது?
2. மூவகைத் தண்டனைக் கொள்கைகளில் சிறந்தது எது? ஏன்?

**IV. நான்கு பக்க அளவில் விடையளி**

மூவகை தண்டனைக் கொள்கைகளை குறித்து ஒரு கட்டுரை வரைக?



## 3.5 சமூக அறவியலில் உள்ள சீர்கேடுகள்

***தனி மனிதனும் சமூகமும்***

தனிமனிதர் பலர் இணைந்து வாழும் அமைப்பே சமூகம் எனப்படும். சமூகம் என்ற பெயரில் பலர் இணைந்து வாழும் வாழ்வில் சில விதிகளுக்கு உட்பட்டு நடக்கும் பண்பைப் பெற்று வாழவேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். சமூகவாழ்விற்குத் தேவையான விதிகளை தனிமனிதர்களே கூடி அமைக்கலாம். ஆனால், அவை அனைவருக்கும் பொருத்துவனவாக அமைய வேண்டும்.

தனிமனிதனின் சமூகத்தில் இணைந்து வாழ்வதின் முக்கிய குறிக்கோள் அமைதியான இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்பதே. இக் குறிக்கோளை அடையும் வகையில் அனைவருக்கும் பொதுவான விதிகள் அமைய வேண்டும்.

சமூக அறத்தில் காணப்படும் சில சீர்க்கேடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைய அறஇயல் பெரிதும் துணைபுரிகிறது. சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகள் முறையே,

1. இரத்தல் - பிச்சையெடுத்தல் (Begging)
2. விவாகரத்து - மணமுறிவு (Divorce)
3. வரதட்சணை (Dowry)
4. தற்கொலை (Suicide)
5. சமூக ஏற்றத்தாழ்வுகள் (Social Inequalities)
6. போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் (Durg Addiction)
7. பயங்கரவாதம் (Terrorism)

என்பனவாகும். இவற்றை விரிவாகக் காண்போம்.

***இரத்தல் - பிச்சையெடுத்தல்***

பிச்சையெடுத்தல் என்பது இழிவான, பழிப்பதற்குரிய மிகவும் வெறுக்கத் தக்க ஒரு செயல். எனினும், அது

சமூகத்தில் இன்றுவரை முற்றிலும் நீக்கப் பெறாமல் இருந்து வருகிறது.

**இரத்தலுக்கான காரணங்கள்**

இரத்தலுக்குக் காரணம் பொருள் இல்லாமை வறுமை, கவலையின்மை, வருந்தி உழைக்காமை, குடும்பத்தில் ஆதரவின்மை, விரக்தி மனப்பான்மை மற்றும் உடல் ஊனம் காரணமாகவும் பிச்சைக்காரர்களாக மாறி இருக்கலாம். எனினும், பிச்சையெடுத்துத் தான் வாழ வேண்டும் என்ற எண்ணமும் செயலும் சரியன்று.

இதனையே வள்ளுவர்,

‘இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்.’

எனக் குறிப்பிடுகிறார்.

ஒருவன் பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழ்தல் வேண்டும் என்றிருந்தால், அப்படிப்பட்ட உலகை இயற்றியவன் - வாழ்க்கை நெறிமுறைகளை, வகுத்தவன் எவனோ அவன் அலைந்து திரிந்து கெட்டழிவானாக என வள்ளுவர் குறிப்பிடுகிறார். மேலும் இரத்தலுக்கு வறுமை காரணமாகக் கூறப்படுகிறது.

‘இன்மை இடும்பை இரந்துதீர் வாம் என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

என்கிறார் வள்ளுவர்.

வறுமை துன்பமானது, அதனை போக்கப் பிச்சை எடுத்தே தீர்வேன் என்ற பிடிவாதம் மிகக் கொடுமையானதாகும் என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர். வறுமை இயற்கைச் சீற்றங்களின் காரணமாகவும் ஏற்படுவதுண்டு, மனிதன் தானாகவே தேடிக் கொள்வதும் உண்டு. இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் வறுமை



தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனால் தானே தேடிக் கொள்ளும் வறுமை என்பது மனிதன் உடலை வருந்தி உழைக்காமையே.

இதனையே வள்ளுவர்,

‘இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோவா தவர்,’

எனக் குறிப்பிடுகிறார்.

இல்லாதவர்களாக - வறியவர்களாக பலர் இருப்பதற்குக் காரணம், தம் கடமையைச் செய்பவர்கள் சிலராகவும் செய்யாதவர்கள் பலராகவும் இருப்பதே ஆகும் என்கிறது வள்ளுவம். இவ்வுலகில் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில் எங்கும் பரவி கிடக்கிறது. ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து உடலுழைப்பால் வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு மனிதனின் வாழ்க்கையின் வெற்றியும் தோல்வியும் அவனையே சார்ந்தது. ஒருமனிதன் ஏழ்மையில் இருக்க அவனே காரணமாகிறான் என்கிறது தனிமனிதக் கோட்பாடு. மனிதனிடைய சோம்பேறித்தனம், மந்தமான போக்கு, ஆர்வமற்ற செய்கைகள் அவனுடைய வறுமைக்கு காரணமாகிறது.

மாக்ஸ்வெபரின் கூற்றுபடி, ஒரு மனிதனின் வெற்றிக்கு காரணம் அவனுடைய கடினமான, நியாயமான உழைப்பாகும். ஒரு மனிதனின் தோல்விக்குக் காரணம் அவனுடைய சோம்பேறித் தனமான தீய பழக்கங்களாகும்.

***இரத்தலை நீக்கும் வழிமுறைகள்***

இரத்தல் என்பது எந்த வகையிலும் இரக்கப்படுவதற்குரிய செயல் அன்று. மூப்பு, பிணி, உடல் ஊனம் இவற்றால் உழைத்துச் சாப்பிட இயலாத நிலையிலுள்ளவர்களைக் காப்பாற்றும் பணி அனைவரின், அரசு உடல் ஊனமுற்றவர்களுக்கு ஏற்றவொரு வேலை வாய்ப்பை வழங்கி அவர்தம் வாழ்வுக்கு வழி செய்து வருகிறது.

பிச்சை எடுத்தலாகிய இந்த சமூகக் குற்றத்தைப் போக்கிட அரசு ஆதரவற்ற முதியோர் இல்லம், மறுவாழ்வு இல்லம், அமைத்துக் கொடுத்து புனர் வாழ்வை ஏற்படுத்தி வருகிறது. இது மிகவும் போற்றுவதற்குரியது.

இதனைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் மற்றும் சேவை நிறுவனங்களும் ஏற்று நடத்த முன் வரவேண்டும். ஒவ்வொரு இந்திய குடிமகனும் இப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் சமூகத்தின் புற்றுநோய் போன்றவர்கள். பிச்சை எடுப்பவர்களை சமூகத்தில் அனுமதிப்பது எந்த வகையிலும் அறக் கொள்கையாகாது.

பிச்சை எடுப்பவர்களும், அதை ஊக்குவிப்பவர்களும் சமூகக் குற்றவாளிகளே என்பதை அறிய வேண்டும்.

### 3.5.2 விவாகரத்து

விவாகரத்து என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கம் ‘மண முறிவு’ என்பதாகும்.

திருமண வயது வந்த ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து வாழ சம்பிரதாயத் திருமணமோ அல்லது பதிவுத் திருமணமோ செய்து கொள்கிறார்கள். அப்படிச் செய்துகொண்ட திருமணத்தை ஏதோ ஒரு காரணத்திற்காக சட்டத்தின் துணை கொண்டு திருமணத்தை முறித்துக் கொள்வதே விவாகரத்து என்பதாம்.

அயல்நாடுகளில் விவாகரத்து சர்வசாதாரணமாக நடைபெற்றாலும், நம் நாட்டைப் பொறுத்தவரை மிக அண்மைக்காலத்தில், இந்து திருமணச் சட்டம் 1955-ல் தான் அமுலாக்கப்பட்டது. இந்தச் சட்டத்திற்கு உட்பட்ட எல்லா திருமணங்களும் முறைப்படி விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம்



விவாகரத்து பெறலாம். தகுந்தகாரணம் இரு சாராரிடமும் அமைந்திருக்கமானால் விவாகரத்தை அனுமதிக்கலாம் என்பது சட்டரீதியாக ஒப்புக் கொள்ளப் பெற்றது.

#### விவாகரத்து பெறக் காரணங்கள்

விவாகரத்து பெறுவதற்குக் கீழ்கண்ட காரணங்கள் இருக்க வேண்டும். அவை,

1. திருமணமான ஒரு ஆணோ, பெண்ணோ, இல்வாழ்க்கை நெறியிலிருந்து தவறுதல்.
2. கணவனோ, மனைவியோ தன் மதத்தை விட்டு வேறு மதத்தை தழுவுதல்.
3. தொடர்ந்து மூன்று ஆண்டுகாலம் துணைவனோ அல்லது துணைவியோ மன நோயால் அல்லது பிற நோய்களால் பாதுக்கப்பட்டிருத்தல் (தொழுநோய், பால்வினைநோய்) போன்ற மேற் கூறிய காரணங்களுக்காக விவாகரத்து கோரலாம்.

#### விவாகரத்து பற்றிய கருத்துக்கள்

விவாகரத்து என்பது குடும்பத்தையும் சமூகத்தையும் பாதிக்கும் என்பதால் இதற்கான விதிகளை எளிதாக்கக் கூடாது என்பது சட்டம் இயற்றியவர்களின் கருத்து. உதாரணமாக போதிய கால அளவு வாய்ப்பு கொடுத்தால் வெறுப்புற்ற தம்பதியர் மனம் ஒத்துப்போகும் வாய்ப்பு இருக்கிறது. அப்படியிருந்தும் விவாகரத்து கோரினால் தீர்ப்பின் அடிப்படையில் நிரந்தர பராமரிப்பு (Permanent Maintenance) வழங்கக் கோரிப் பெறலாம்.

சமயச் சடங்குகளாலும் சமுதாயத்தாலும் ஏற்றக்கொள்ளப்பட்ட திருமண உறவை சட்டத்தின் துணை கொண்டு மாற்ற முடியாது என்பது பழமைவாதிகளின் கருத்து.

ஆனால், மாறுவரும் சமுதாய அமைப்புக்கேற்ப, 'பிரிந்த குடும்பம், சண்டையிடும் குடும்பத்தை விட மேலானது' என்று பழமை வாதிகளின் கருத்துக்கு எதிர் விளக்கம் அளிக்கிறது.

உலக அறஇயல் சிந்தனையாளர்களின் கூற்றுப்படி, திருமணம் என்பது பிறர் நலத்தையும், பிறர் நலத்தோடு இணைந்த பொது நலத்தையும் வளர்க்கும் வகையில் அற இயல் கோட்பாடுகளைச் செயற்படுத்த அமைத்துக் கொள்ளப் பெற்ற ஒரு வகை ஒப்பந்தம் என்பர்,

இதனையே வள்ளுவர்,

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''.

என்று கூறுகிறார்.

தன்னையும், தன் கணவனையும் பேணிக்காத்து, சான்றோர் பகன்ற சொற்களையும் பின்பற்றி சோர்வின்றி வாழ்பவளே பெண் என்கிறார். அறஇயற் சிந்தனையானர்களின் கூற்றுபடி இங்கு தற்காத்தல் என்பது தன்னலம் காத்தல், தற்கொண்டார் பேணுதல் என்பது பிறர் நலம் காத்தல், தகை சான்ற சொற்காத்தல் என்பது பொதுமை நலம் காத்தலாக அமையப் பெற்றுள்ளதை அறியலாம்.

கணவன், மனைவி இருவருமே விவாகரத்தை விரும்பும் போது அதனை வழங்கிட வேண்டும். திருமணம் கணவன் - மனைவி இருவரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யத் தவறிவிட்டால் அதற்கு விவாகரத்தை தவிர வேறு வழியில்லை.



நிறைவு பெற முடியாத திருமணம் அக்குடும்பத்தில் உள்ள அனைவரின் ஒழுக்கக் கேடுகளுக்கும் காரணமாக அமைவதால் இருவரின் சம்மதத்தின்பேரில் விவாகரத்து அளிப்பதே நீதித்தன்மை உடையது, என்பது சமூக முன்னேற்றக் கொள்கையினரின் கூற்று ஆகும்.

**விவாகரத்தின் தீய விளைவுகள்**

1. விவாகரத்து பெற்ற பெண்ணை இன்றைய சமூதாயம் தீய கண்ணோட்டத்துடனேயே பார்க்கிறது. மேலும், அவர்களுக்கு இந்த சமுதாயத்தில் போதிய பாதுகாப்பும், மதிப்பும் இல்லை.
2. விவாகரத்து பெற்றவர்களின் குழந்தைகள் பொருளாதார வளம் குன்றிய காரணத்தால் சமூகத்திலும் தன் குடும்பத்திலும் பல உரிமைகளை இழக்க நேரிடுகிறது. இதனால், ஒரு பாவமும் அறியாத குழந்தைகள் படும் வேதனை அளவிடற்கறியது.
3. விவாகரத்து பெற்ற தந்தை அல்லது தாய் மறுவிவாகம் செய்து கொள்ளும் போது அவர்களிடம் வளரும் குழந்தை அன்பையும், ஆதரவையும் முழுவதுமாக இழந்து விடக்கூடும். தன்னுடைய மகிழ்ச்சியையோ, வருத்தத்தையோ பகிர்ந்துகொள்ள முடியாமல், உள்ளுக்குள் மருகி நல்ல மனப்பான்மைகளும், ஆளுமைப் பண்புகளும் உருக்குலைந்து போகும் நிலைக்கு அக்குழந்தைகள் தள்ளப்படுகிறார்கள்.

**விவாகரத்தை தவிர்க்கும் வழிமுறைகள்**

1. திருமணத்தால் குடும்பம் என்ற ஒரு சமூக அறக்கோட்டம் அமைக்கப் பெறுகிறது. திருமணம் என்பது ஏதோ இன்பத்துக்கு மட்டுமே அமைக்கப் பெற்றதன்று.

2. குடும்பத்தில் பிளவு, மனக் குறை போன்றவற்றைப் பிறரறியாத வகையில் உள்ளமைத்துக் கொண்டு வாழ வேண்டும் என்பதே குடும்ப அறக் கோட்டத்தின் ஆணிவேர்.
3. கணவன் - மனைவி இருவருக்குமிடையே உள்ள மனப்பிளவை மறைத்து, மனம் ஒத்த இணைப்பை மேற்கொண்டு, தனக்கும் பிறர்க்கும், குடும்பத்திற்கும் மற்றும் சமூகத்திற்கும் கௌரவமான முறையில் நலமும் வளமும் உண்டாக்கும் வகையில் வாழ வேண்டும்.
4. தம்மால் முடிந்த அளவுக்குச் சட்டத்தின் பார்வைக்குச் செல்ல விடாமல் குடும்ப பிரச்சனைகளை குழந்தைகளின் நலன் கருதியாவது விவாகரத்து கேட்பதை விடுத்து பொறுமையோடு இருந்தால், நிலைமையைக் காலம் மாற்றலாம். அவ்வாறு செய்வதால் விவாகரத்து சாதிக்க இயலாததைக் கூட காலம் சாதித்துக் காட்டும் என்பது உண்மை.
5. தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சட்டம் மற்றும் குடும்ப ஆலோசனை மன்றங்கள் - மகளிர் மன்றங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. கணவன் - மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளவர்கள், இம்மையங்களில் இலவசமாக ஆலோசனை பெறலாம். பொதுவாக, இம்மையங்கள் விவாகரத்தினைத் தடுக்கவே முயற்சிக்கும். எனவே, கணவன் - மனைவி இவர்களைத் தனித்தனியே உளவியல் நோக்கில் அறிவுரைகள் வழங்கி அவர்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கின்றன. இம்முயற்சிகளில் சில சமயங்களில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

### 3.5.3. வரதட்சணை

குடும்பம் என்ற முதன்மை அறக் கோட்டத்தை அமைக்க ஆணும், பெண்ணும் இணைவதே திருமணம், இது இயல்பான



ஒன்று. அத்திருமணத்தின் போது பெண்வீட்டார் வரனுக்குப் (மணமகனுக்கு) பொன்னும் பொருளும் அளிப்பதே வரதட்சணை ஆகும்.

#### வரதட்சணை பற்றிய விளக்கம்

வரதட்சணை மிக பழங்காலத்தே தோன்றிவிட்டது. திருமணத்தின் போது பொன்னும் பொருளும் கொடுத்ததற்கான சாத்தியக் கூறுகள் சரித்தரப் பூர்வமாக உள்ளன. ஆரம்பகாலத்தில் 'தட்சினை' என்பது மரியாதை நிமித்தம் தரப்படும் ஒரு அன்பளிப்பு.

குருவிற்கு கொடுக்கும் அன்பளிப்பு குருதட்சணை, அதைப்போல் பெண்ணை மணமகனுக்கு கொடுக்கும் போது பொன்னும் பொருளும் அன்பளிப்பாக கொடுத்து தான் வரதட்சணை. இது நாளடைவில் பெண் வீட்டார் மணமகன் வீட்டருக்குக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டியதாக மாறிவிட்டது. இந்து சாஸ்திரத்தில் கூறப்படுவது போல ஒரு பெண்ணை கன்னியாதானம் செய்து கொடுக்கும் போது, பெண்ணை பெற்றுக் கொள்பவருக்கு (வரனுக்கு) தட்சணை கொடுக்க வேண்டும். இல்லையேல் திருமணம் நிறைவுறாது. இந்த தட்சணை நாளடைவில் வரதட்சணையாக மாறியது ஆனால் அன்று மனமுவந்து அனபளிப்பாக, பொருளாதாரப் பாதுகாப்பைக் கருதி கொடுக்கப்பட்ட பொன், பொருள்கள் இன்று கட்டாயத்தின் பேரில் பெறப்படுவதால் இந்தப் பழக்கம் ஒரு சமூகக் கொடுமையாகக் கருதப்படுகிறது.

பெண்கள் அக்காலத்தில் அதிகம் கல்வி பெறவில்லை அதற்கேற்ப வசதி வாய்ப்புகளும் தகுந்த சூழ்நிலையும் இல்லாமலிருந்தார்கள். பொருளாதாரப் பாதுகாப்பைக் கருதி திருமணத்தின் போது பொன்னும், பொருளும் சீதனமாக அளிக்கப்பட்டது.

ஆனால், பெண்கள் படித்துப் பொருளாதாரச் சுதந்திரம், வேலைவாய்ப்புடன் கூடிய நல்ல வசதியான சூழ்நிலை அடைந்து விட்ட இந்நாளிலும், மணமகன் வீட்டார் பெருந்தொகையான பொருளை வரதட்சணையாக எதிர் பார்க்கிறார்கள்.

வரதட்சணை வாங்குவது என்ற கொடுமை வெகுவேகமாகப் பரவிவருகின்றது. இச்சமூகக் கொடுமை இன்று எல்லோராலும் கண்டிக்கப் பெறுகிறது. வரதட்சணை வாங்குவதும், கொடுப்பதும் குற்றம் என்று சட்டம் கூறிய போதிலும், இக்குற்றமானது படித்தவர், பாமரர், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

வயது வந்த பலபெண்கள் திருமணமாகாமல் காலம் கழிப்பதற்கு வரதட்சணை கொடுக்க முடியாமையே காரணம். ஏற்றுக் கொண்ட அளவிற்கு வரதட்சணை கொடுக்க இயலாத காரணத்தால் திருமணம் முடிந்த பிறகும், பெண்கள் கொடுமை படுத்தப்படுகின்றனர். இக்கொடுமை தாங்காத பெண்கள் தற்கொலைக்குக் கூடத் தயங்குவதில்லை.

**வரதட்சணையை தடுப்பதற்கான வழிமுறைகள்**

1. ஒரு பெண்ணை பொன் பொருளுடன் சேர்த்து தானமாக ஏற்பதை ஆண் தனக்கு ஒரு அவமானமாகக் கருதவேண்டும். பெண்ணும் தான் ஒரு வியாபாரப் பொளாக இழிவுபடுத்தப்படுவதை அவமானம் எனக்கருத வேண்டும்.
2. திருமணமாகாத ஆண் வரதட்சணை வாங்க மாட்டேன் என்றும் திருமணமாகாத பெண் வரதட்சணை கொடுக்கமாட்டேன் என்றும் உறுதியாய் நிற்க வேண்டும்.



3. பெண்வீட்டார் வரதட்சணை கேட்கும் மணமகன் வீட்டாரைத் துணிவுடன் சட்டத்தின் பார்வைக்குக் கொண்டு வரவேண்டும்.
4. காவல் துறையினர் வரதட்சணை குற்றம் பற்றிய செய்தி கிடைத்தவுடனேயே, குற்றம் இழைத்தவரை 1961-ம் வருடம் அரவாங்கம் கொண்டுவந்த வரதட்சணை தடுப்புச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலும் வரதட்சணை தடுப்புப் பிரிவு (Dowry Prevention Cell) அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது. அதில் முறையீடு செய்து நீதி கிடைக்க பெறலாம்.
6. தன்னார்வக் குழுக்கள் வரதடசணை தீமையைப் பற்றி பிரச்சாரம் செய்வதுடன் ஆங்காங்கு நிகழும் வரதட்சணை கொடுமைகளை அரசுக்குத் தெரிவித்து குற்றங்களைக் குறைக்கலாம்.
7. சட்டத்தினால் மட்டுமே மாற்றங்களைக் கொண்டு வரமுடியாது. ஒவ்வொரு தனிமனிதனும் வரதட்சணைக் கொடுமையை உணர்ந்து அதைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டால்தான் வரதட்சணைக் கொடுமையை முற்றிலுமாக அகற்ற முடியும்.

**3.5.4 தற்கொலை**

**வாழும் உரிமை**

உலகில் பிறந்த மக்கள் அனைவரும் தம் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு இயற்கையாகப் பெறும் முதல் உரிமையே. நாம் இவ்வுலகில் பிறப்பது வாழ்வதற் காகவே மக்களாய்ப் பிறந்தவர் அனைவரும் வாழ்வதற்குரிமையுடையவர்களே. எந்த ஒரு மனிதனுக்கும் அவனுடைய உடலும், உயிரும் சொந்தமானவையேயாயினும்

அவற்றை வளர்க்கப் பாடு படவேண்டுமேயல்லாது அழிக்கப் பாடுபடுதல் கூடாது.

வாழும் உரிமையைப் பெற்ற ஒருவன் அதற்குரிய கடமையைச் சமூகத்திற்குச் செய்யவேண்டும். தன்னுடைய வாழும் உரிமையை அழிப்பது தான் தற்கொலை. தற்கொலை செய்து கொள்வதின் காரணம் இந்தச் சமூகம் அவனுடைய வாழும் உரிமையை அவன் அனுபவிப்பதற்குத் துணை செய்யவில்லை என்ற குற்றம் சுமத்தப்படுகிறது. தற்கொலைக்குக் காரணமான புலன் சார்ந்த பகுதியும் தூண்டுதலாக அமைகிறது.

மனிதனுடைய உயிரில் புலன்சார்நத பகுதி, அறிவு சார்ந்த பகுதி மற்றும் பொதுமைப் பகுதி என மூன்று பகுதிகள் உள்ளன. புலன்சார்ந்த பகுதியால் இன்பம் என்ற நன்மையைப் பெறுகிறான் இதில், ஏற்படும் வாழ்வியல் சிக்கல் தான் மனிதனைத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுகிறது.

மற்ற இருபகுதிகளான அறிவுப்பகுதி, பொதுமைப் பகுதி நன்மைகளைப் பற்றி சிந்தித்துச் செயல்படாமல் தற்கொலை செய்து கொள்வது சட்டப்படி குற்றமாகும். பிரச்சனைகளை எதிர்த்துச் சமாளிக்கும் துணிவு இல்லாதவர்கள் தற்கொலை செய்யும் மனநிலையிலேயே இருப்பார்கள்.

தற்கொலை எண்ணம் 90 விழுக்காடு மக்களுக்கு ஏதாவது ஒரு சூழ்நிலையில் தோன்றி மறைகிறது. ஆனால் இதில் ஐந்து முதல் ஏழு விழுக்காடு பேருக்கு இந்த எண்ணம் வரைவாக மனதை விட்டு அகலுவதில்லை. ஏனெனில், அவர்களுக்கு பிரச்சனை நிரந்தரமாக இருந்து கொண்டு இருக்கும். பதினைந்து வயது முதல் பத்தொன்பது வயது வரை உள்ளவர்களிடம் காணப்படும் பிரச்சனை தற்கொலை எண்ணம் தான்.



தற்கொலை செய்து கொள்பவர்களில் பெண்களை விட ஆண்களே கொடூரமான முறையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்படி கொடூரமான தந்கொலை நிகழ்ச்சியில் அதிகமான உயிரிழப்பை சந்திப்பவர்கள் ஆண்கள் தான்.

**தற்கொலை எண்ணம் இருப்பதை அறியும் முறை**

1. தற்கொலை எண்ணத்தில் இருப்பவர்களிடம் மன உளைச்சல் அதிகமிருக்கும்.
2. அவர்களின் நடவடிக்கைகளும், வெளிப்பாடுகளும் புதிர் போன்று இருக்கும்.
3. பதட்டமும், கவலையும் அதிகம் காணப்படும்.
4. உடல் நடுக்கம் வெளிப்படும்.
5. எதற்கும் எளிதில் உணர்ச்சிவசப் படுவார்கள்.
6. தனக்குச் சொந்தமான உடைமைகளை வேண்டாம் என்று ஒதுக்குவர்.
7. அவர்களின் முயற்சிகள் பிறரின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கும்.
8. நேரடியாகவோ, மறைமுகமாகவோ தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாக மிரட்டுவதுடன் முயற்சியிலும் ஈடுபடுவார்கள்.

**தற்கொலைக்கான காரணம்**

நாம் தினந்தோறும் சமுதாய அமைப்பில் நடைபெறும் தற்கொலை நிகழ்வுகளைக் கண்டு பெரிதும் மனம் வருந்துகிறோம்.

தேர்வில் தோல்வி, வறுமை, வேலையின்மை திராதநோய், கடன்தொல்லை, காதல் தோல்வி, குடும்பத்தகராறு, நடத்தையில் சந்தேகம், திருமணத்தடை போன்ற பல காரணங்களைக் கூறலாம்.

இது போன்ற பல காரணங்களையும் உற்று நோக்கும் போது, வாழ்வில் ஏற்படும் எந்த ஒரு தோல்வியையும் எதிர்த்து நிற்கத் துணிவின்றி துவண்டுவிடும் தாழ்வு மனப்பான்மையே இதற்கு அடிப்படைக் காரணம் என அறியலாம்.

மேலும் தற்கொலைக்கு முக்கிய காரணம் அறிவு முதிர்ச்சியற்ற நிலையில் சிந்தித்துச் செயல்படாமையும் ஆகும். அறிவு பக்குவம் அடையாத நிலையில் கோழைத்தனமும், தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. மனிதனுடைய கோழைத்தனம் அவனை மனவலிமை அற்றவனாக மாற்றி விடுகிறது. அறியாமையின் காரணமாக தற்கொலை போன்ற குற்றங்கள் நடைபெறுகின்றன. எனினும் தற்கொலை செய்து கொள்வது பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையாது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

**தற்கொலையைத் தடுக்கும் வழி முறைகள்**

1. தற்கொலைக் குற்றம் நிகழாதவாறு இருக்க மக்களுக்கு வாழ்வியற் பாதுகாப்பு அளிக்கப் பட வேண்டும்.
2. தற்கொலையைத் தடுக்கும் சட்டம் உறுதிபடுத்தப்பட வேண்டும்.
3. மாணவர்கள் ஏமாற்றத்தைத் தாங்கும் மனவலிமையும், சகிப்புத் தன்மையும் மிக்கவர்களாக உருவாக்கப்படல் வேண்டும்.
4. தற்கொலை எண்ணத்தைத் தூண்டும் நிகழ்ச்சிகள், மற்றும் மாணவர் மனதில் வெறுப்பு உணர்ச்சி, பழிவாங்கும் எண்ணம், கடுங்கோபம் போன்றவற்றிற்கு இடம் தரக்கூடாது.
5. தற்கொலைக்கு முயலும் மாணவர்களுக்கு தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் அறிவுரையும், நம்பிக்கையும் அளித்து வருகிறது.



6. தற்கொலை பற்றிய தீமைகளை மக்கள் அறிய வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் நிகழ்ச்சிகளைத் தயாரிக்க வேண்டும்.
7. பள்ளியில் கதை, கட்டுரை, பேச்சப்போட்டி, கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் தற்கொலை பற்றிய தீமைகளை எல்லொரும் அறியும்படிச் செய்ய வேண்டும்.
8. மனிதன் ஒவ்வொருவனும் இன்பமும் துன்பமும் கலந்துதான் வாழ்க்கை என்ற உண்மை அறிவைப் பெறச் செய்து மனத்தைப் பக்குவப்படுத்தி அறியச் செய்தல் வேண்டும்.

எனவே, இதற்கு மக்கள் ஆதரவும், சமூக நலத்தொண்டு நிறுவனங்களும், உறுதுணையாக நின்று செயல்பட வேண்டும்.

### 3 : 5 : 5 சமூக ஏற்றத்தாழ்வுகள் (Social Inequalities)

தனி மனிதர்கள் பலர் இணைந்து வாழ்வதற்காக அமைத்துக் கொண்ட அறக்கோட்டமே சமூகம் சமூக உறுப்பினாகளுக்குள் எந்த ஒரு வகையிலும் எந்த ஒரு வேற்றுமையும் இல்லை. அறிவு சார்நத, பொருளாதாரம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவது இயற்கை ஆனால் சமூகம் சார்நத வேறுபாடுகளை நமக்கு நாமே வகுத்துக் கொண்டதாகும்.

**வர்ணாசிரம தர்மம்**

வேதகால வர்ணாசிரம தர்மத்தில் பிராமணர் ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என தொழிலின் அடிப்படையில் பிரிக்கப்பட்து. பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் சாதி, மதம், அடிப்படையில் மனிதன் ஏற்றத்தாழ்வுகளை அனுமதிக்கக்கூடாது. இவ்வுலகில் வாழும் உரிமை பெற்ற ஒவ்வொரு தனி மனிதனும் சமுதாய அமைப்பில் அனைவரும் சமமே. இன்று நாம் அறிவியல் பொருளாதாரம் போன்ற துறைகளில் வானளாவிய

அளவில் உயர்ந்து இருக்கிறோம். ஆனால் சமுதாய அமைப்பில் மட்டும் பின் தங்கி இருக்கிறோம்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு எத்தனையோ சமூக சீர்திருத்த வாதிகள் தோன்றினார்கள் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை நீக்க அரும்பாடுபட்டுழைத்தனர். சுதந்திரம் அடைந்த பிறகு நமது அரசு பல சட்டங்களை இயற்றி சமுதாய வேறுபாடுகளைக் கயை பல சீர்திருத்த பணிகளைச் செய்து கொண்டு வருகிறது.

***சமநிலை சமத்துவம்***

அறிவு மற்றும் பொருளாதார வளர்ச்சி அடிப்படையில் பழங்குடிகள் (Scheduled Tribes), தாழ்த்தப்பட்டோர் (Scheduled Caste), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (Most Backward Class) சீர்மரபினர் (Denotified Caste), பிற்படுத்தப்பட்டோர் (Backward Class) எனப் பிரிக்கப்பட்டு நமது இந்திய அரசு அனைத்துப் பரிவு மக்களையும் சமநிலைப்படுத்த, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற அடிப்படையில் அறிவு வளர்ச்சி பொருாதார வளர்ச்சிக்கு மிகவும் அரும்பாடுபட்டு வருகிறது. அதன்படி, தேசிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பல சலுகைகளும் பாதுகாப்பு வசதிகளும் செய்யப்பட்டு உள்ளன.

நமது அரசியலமைப்புச் சட்டம், மக்களாகிய நாமே நமக்கு அளித்துக் கொண்ட சட்டம். இந்தச் சட்டத்தின் முன்னுரையின்படி அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை அளித்து, நாட்டின் ஒற்றிமையையும் தனிநபரின் கண்ணியத்தையும் உறுதி செய்து, அனைத்து மக்களிடமும் சகோதரத்துவத்தை வளர்க்க நாம் உறுதி பூண்டுள்ளோம்.



இந்த கண்ணியம் - சாதி, மத, மொழி ஆகுீஹகூற்றின் அடிப்படையில் மறுக்கப்பட்டால் அல்லது பாதிக்கப்பட்டால் நாட்டின் ஒற்றுமை சீர்குலையும் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. சுதந்திரத்தின் ஒரு முக்கிய அம்சம் சமத்துவம் ஆகும். இதைத்தான் பாரதியும்,

“எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு”

என்று பல ஆண்டுகளுக்கு முன்பு பாடினார். பல ஆண்டுகளுக்கு முன் நமது அரசியல் அமைப்புச் சட்டத்திலும் அதற்கு நாம் வடிவம் கொடுத்து உள்ளோம். இது முழுமையாக நாட்டு மக்கள் இடையே நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சட்டம் கொடுத்ததைச் சமூகம் நாட்டில் பல இடங்களில் தடுத்து வருகிறது. சட்டம் மறுத்தவற்றை இந்த சமூகம் ஏற்றுக்கொள்கிறது. பாதுகர்ககவும் செய்கிறது. அரசு அமைப்புச் சட்டத்தை விட சாதி சம்பிரதாயங்கள் வலுவாக உள்ளன. அவ்வாறு தொடர்ந்தால், பாரதியாரின் கனவு என்று நனவாகும்?

சமயச்சான்றோர்களுக்கும் இதில் பொறுப்பு உண்டு. எந்தச் சமயமும் இத்தகைய கொடுஞ்செயல்களை ஏற்காது, ஏற்றால் அது உண்மையான சமயம் அன்று. சமூக சீர்த்திருத்தவாதுகளுக்கும் இந்தப் பொறுப்பு உண்டு. எல்லோரையும் விட மக்களாட்சியில் மக்களுக்கு பொறுப்பு அதிகம். சட்டம் இயற்றுவது எளிது. அதை நடைமுறைப்படுத்துவது அரிது என்பதுதான் கடந்த காலம் நமக்குப் புகட்டுகின்ற கசப்பான பாடம்.

இன்றைய இளைஞர் சமுதாயம் துணிந்து செயல்பட்டு சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, சமத்துவம், சகோதரத்துவம்

என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதை மனதில் உறுதி கொள்ள வேண்டும்.

**ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் வழிமுறைகள்**

1. அமைதி நல்லிணக்கத்துடன் தமிழகம் திகழ வேண்டுமாயின் மனித நேயத்துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
2. அன்பு என்பது ஒளி போன்றது. அது ஆன்மீகம் நாத்திகம். நல்லோர், தீயோர், சாதி, மதம் என்ற வேறுபாடடுகளை கடந்த ஓர் அபூர்வ சக்தி அதை அனைவரும் பின்பற்ற வேண்டும்.
3. சகோதரத்துவம், சமத்துவம், சாதி வேறுபாடுகளற்ற சமுதாயம் உருவாக அனைவரும் பாடுபட வேண்டும்.

**சுருங்கக் கூறின்**

முன்னெறி வரும் அரசியல் நோக்கோடு, சமுதாய நோக்கோடு பார்த்தாலும் சரி, சமய நோக்கோடு பார்த்தாலும் சரி மனிதனுக்கு மனிதன் எந்த வகையான வேறுபாடும் கருதக்கூடாது. ஏழை என்றும், அடிமை என்றும் எவரும் இல்லை என்றார் பாரதியார். உயர்ந்தவர் என்றும், தாழ்ந்தவர் என்றும் எவரும் இல்லை. மனித சமத்துவம் எல்லா நாட்டு அறிஞர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

சாதி, மதம் முதலான எக்காரணம் பற்றியும் வேறுபாடு செய்யாத நிலையை நோக்கி உலகம் நடக்கிறது. எவ்வளவு பெரிய அமைப்பாக இருந்தாலும், எவ்வளவு பெரிய சமயமாக இருந்தாலும் மனிதர்களிடையே வேறுபாடுகளை வளர்க்கும் எதுவும் எதிர்காலத்தில் வாழ முடியாது. ஆகவே, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கருத்தையே மறக்க வேண்டும். ஒற்றுமை என்பதையே மனதில் கொள்ள வேண்டும்.



### 3.5.6 போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் (Drug Addiction)

சமூகத்தில் தறபோது இருக்கக்கூடிய மிகப் பெரிய சமூகச் சீர்கேடுகளில் ஒன்று போதை பொருட்களுக்கு அடிமையாதல் ஆகும். குறிப்பாக இளைஞர் சமுதாயம் இந்த புதைச்சேற்றில் சிக்கி மீள முடியாமல் தவிக்கின்றது. இளைஞர்களின் மகிழ்ச்சி, உடல்நலம், மனநலம் இவற்றை பாதிக்கும் இந்தப் பழக்கம் கட்டாயமாகக் களையப் பட வேண்டும்.

போதைப் பொருள் என்பது நம்முடைய மன நினைவுகளை செயலிழக்கச் செய்யும் ஒரு இரசாயனப் பொருள். மனிதனுடைய, உடல், மனநிலையில் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடயது. அபின், ஹெராயின், கஞ்சா, பெத்தடின் போன்றவை போதையை - மயக்கத்தை - உண்டாக்கும் பொருட்கள் ஆகும்.

**போதைப் பொருட்களுக்கு அடிமையாகக் காரணங்கள்**

1. குடும்பத்தில் ஏற்படும் சில பிரச்சனைகள் காரணமாக இப்பழக்கத்திற்கு ஆளாகின்றனர்.
2. வியாபாரத்தில் ஏற்படும் இழப்பு அல்லது சிக்கல் போன்ற காரணத்தினாலும் தன்னை மனவருத்தத்திலிருந்து விடுவித்துக் கொள்ளவும் இப்பழக்கத்திற்கு உட்படுகின்றனர்.
3. ஒருவன் தன் குடும்ப சூழ்நிலை, போதிய வசதியின்மை, பெற்றொரிடமிருந்து பாசம், அன்பு, அரவணைப்பு கிடைக்காமையால், வெறுத்து மனமுடைந்து இப்பழக்கத்திற்கு ஆளாகின்றனர்.
4. போதை மருந்து விற்பவர்களும் இளைஞர்களை இந்தப் பழக்கத்திற்கு தூண்டுகின்றனர். மனவலிமையற்றவர்கள் அவர்கள் வலையில் வீழ்ந்து விடுகின்றனர்.

5. அதிகமான மனபாதிப்பு, ஆளுமைக் குறைவு, முதலியவற்றால் பாதிக்கப்படும் மனிதர்களே போதை மருந்துகளை நாடுகின்றனர்.

எனவே மனவலிமையற்றவர்களும், தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றனர்.

**போதைப் பொருட்களுக்கு அடிமையாதலின் தீய விளைவுகள்**

1. போதைப் பொருட்களைப் பயன்படுத்துபவன் நிதானமிழந்து, செயல்தன்மை அற்றவனாகக் காணப்படுகின்றன.
2. ஆழ்ந்து சிந்திக்கும் திநனையிழந்து தன் மனம்போன போக்கில் நடந்து வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்கிறான்.
3. இப்பழக்கத்திற்கு ஆளானோர் அமைதியின்மை, எரிச்சல், மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, தூக்கமின்மை போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.
4. நரம்பு தளர்ச்சி, மனநோய் போன்ற விளைவுகளும், தற்கொலை எண்ணமும் தோன்றுகிறது.
5. இப்பழக்கத்தினால் குடும்பத்தின் பொருளாதாரம் அமைதி, ஒழுக்க நெறிமுறைகள் தாழ்ந்து குடும்பமே அழிந்து விடுகிறது.
6. சமுதாயம் சீர்க்கெட்டு அழிவுப்பாதையை நோக்கிச் செல்ல வழிவகுக்கிறது.
7. சமூகத்தில் தன்னுடைய மதிப்பை இழந்து இகழ்ச்சிக்கு ஆளாகின்றான்.
8. போதை மருந்து ஊசியை ஒருவர் மாறி ஒருவர் திரும்பத் திரும்ப போட்டுக் கொள்வதால் எய்ட்ஸ் பரவ காரணமாகிறது.



9. ஆண், பெண் என்ற பேதமின்றி கூட்டமாக மருந்தை உட்கொண்டு மயக்கநிலையில் இருப்பது சமுதாய பண்பாட்டுச் சீரழிவிற்கு வழி வகுக்கிறது.

போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் பற்றிய ஆய்வு முடிவுகள்

போதைப் பொருட்களை பயன்படுத்துவோரைப் பற்றிய ஆய்வின் முடிவில் கிடைத்த தகவல்கள் நமக்கு அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. இவர்களில் பெரும்பாலோர் வாலிபப் பருவத்திலேயே இப்பழக்கத்தை ஆரம்பித்துள்ளனர். இதனால், தீய நடத்தைகள் பெருகி வருகின்றன. சமூக விரோத சக்திகள் இளைஞர்களை இப்பழக்கத்திற்கு அடிமைப்படுத்தி விடுகின்றனர்.

வாலிபப் பருவத்தில் மனவெழுச்சிகள் அதிகம் ஏற்படுகின்றன. இம்மனவெழுச்சிகளை தன் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி நேர் வழியில் செலுத்த இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பெற்றோர்களின் கவனிப்பின்மை, தந்தை, தாயின் இடைவிடாத சண்டை, பெற்றோர்களின் அளவுக்கு அதிகமான கண்டிப்பு அல்லது சுதந்திரம் போன்ற பல காரணங்களால் வாலிபப் பருவத்தில் குழப்பத்திற்கு ஆளாகின்றனர். இம்மனக்குழப்பத்திற்குத் தீர்வு காணும் முகமாக போதை பொருட்களை நாடுகிறனர்.

**இளைஞர்கள் இப்பழக்கத்திற்கு ஆளாவதற்கு முக்கிய காரணங்கள்**

1. தாழ்வு மனப்பான்மை
2. பெற்றோர்களின் அன்பு கிடைக்காமையால் மனதில் தோன்றும் வெறுப்பு.
3. உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமை.

4. சமூக விரோத சக்திகளிடம் அகப்பட்டுக் கொள்ளுதல்.

5. தீய நண்பர்களின் சேர்க்கை.

**போதை பொருட்களின் பழக்கத்தைத் தடுக்கும் வழி முறைககள்**

1. இளைஞர்களுக்கு போதை பொருள்களின் தீமைகளையும், அது எவ்வாறு கற்றல், நினைவாற்றல், ஆளுமை, நடத்தை முதலியவற்றைப் பாதுக்கிறது என்பது பற்றியும் அறிவு புகட்ட வேண்டும்.

2. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் 'எதிர்காலமும் இளைஞர்களும்' போதைப் பொருட்களும் இளைஞர் சமுதாயமும், இளைஞர்களும் விளையாட்டும், போன்ற தலைப்புகளில் கருத்தரங்கம், பேச்சுப் போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி இவற்றை ஏற்பாடு செய்யலாம். இதனால் மாணவர்களின் படைப்புதிறன் வளர்வதோடு போதைப் பொருட்களின் தீய விளைவுகளை பற்றி உணர்த்தலாம்.

3. போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் என்பது ஒரு நோய். அது நரம்பு மண்டலத்தில் மாறுதல்களை விளைவிக்கிறது. ஆகையினால் இதில் பாதிக்கப்பட்டவர்களைச் சிறப்பு மருத்துவமனைகளில் சேர்த்து உளவியல் மருத்துவர்களிடமும் தகுந்த சிகிச்சை பெறச் செய்ய வேண்டும்.

4. போதை பழக்கம் ஓர் அருவருக்கத்தக்க செயல் என்பதை இளைஞர்கள் உணர, பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களுக்கு உதவ வேண்டும். பெற்றோர் இருவரும் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதை மறுக்க முடியாது. ஆனாலும் நாம் உழைத்து சம்பாதிப்பது நம் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்விற்கே என்பதை உணர்ந்து அவர்களின் நிறை குறைகளை அறிந்து கொண்டு ஆவன செய்ய வேண்டும்.



5. அரசு மற்றும் சேவை நிறுவனங்கள் இணைந்து போதைப் பொருட்களின் தீமையை இளைஞர்கள் உணரும் வண்ணம் தொலைக்காட்சி மற்றும் வானொலியின் மூலம் கல்வி புகட்டலாம்.

6. இளைஞர்களிடையே பிரபலமாய் விளங்கும் திரைப்படத்துறையினர் இணைந்து போதை பொருட்களின் தீமையை உணர்த்தும் கருத்தை மையமாகக் கொண்டு திரைப்படத்தை அளிக்கலாம்.

7. போதைப் பொருள் தடைச்சட்டத்தை கடுமையான முறையில் செயல்படுத்த வேண்டும்.

8. யோகப் பயிற்சியின் மூலம் இளைஞர்களின் இத்தீய பழக்கத்தை மாற்றலாம்.

எனவே, இளைஞர்கள் மனிதநேயம் கெட்டு அலையும் சமூக விரோத சக்திகளிடனிருந்து தங்களைக் காத்து கொள்ள விழிப்புடன் இருக்க வேண்டும். தாம் தேடும் மன நிம்மதியையும், பிரச்சனை களுக்குத் தீர்வும் போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் நிச்சியம் கிடைக்கப்போவதில்லை என்பதையும், மரணப்படுகுழிக்கு இளைஞர்களை அழைத்துச் செல்லும் என்பதையும் உணர்ந்து தங்களை அப்பழக்கத்திலிருந்து காத்துக் கொள்ள வேண்டும்.

### 3.5.7. பயங்கரவாதத்தின் தீமைகள் (Evils of Terrorism

**பயங்கரவாதம் - சொல்விளக்கம்**

பயங்கரவாதம் என்பது ஆங்கிலத்தில் "TERRORISM"ம" என்று கூறப்படுகிறது. "TERROR" என்பதன் பொருள் ' திகில்' அல்லது 'பயம்' எதிர்பாராத வகையில் மனதில் அச்சத்தை உண்டாக்கும் செயலையே பயங்கர செயல் என்கிறோம்.

சமுதாய மற்றும் அரசியல் சட்டத்திட்டங்களுக்கு மாறாக தாம் கொண்ட கொள்கைகளை நிறைவேற்றும் பொருட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை பயங்கரவாதம் என்கிறோம். இக்கொள்கைகளை பின்பற்றி சமூகத்திற்கு கேடு விளைவிப்பவர்கள் 'பயங்கரவாதிகள்' "Terrorist" எனப்படுவர்.

பயங்கரவாதிகள் இரக்க குணமற்ற இராட்சச குணம் படைத்தவர்கள். குடும்பத்தில் பற்று, பாசம், அன்பு அற்றவர்களாக விளங்குகின்றனர். எந்த வடிவிலும் எவரையும் திட்டம் போட்டு கொலை செய்து அழிக்கும் நோக்கம் கொண்டவர்கள்.

இந்த பயங்கரவாதத்தில் தன்னையே அழித்துக் கொள்ளும் 'தற்கொலைப் படை' என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டு அதில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து செயல்படுகிறார்கள். மக்கள் அதிகஅளவில் கூடும் இடங்களாகிய சுற்றலாத் தலங்கள், வழிப்பாட்டுத் தலங்கள், ஓட்டல்கள், பள்ளிகள், கேளிக்கை விடுதிகள், கடற்கரைப் பகுதிகள், நாடகக் கொட்டகைகள் மற்றும் இராணுவ முகாம்கள் போன்ற இடங்களில் பயங்கரவாதிகள் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

**பயங்கரவாதம் தோன்றக் காரணங்கள்**

1. ஒரு தேசிய இனத்தை மற்றொரு தேசிய இனம் அடக்கியாள்வதாக தவறான எண்ணம் கொள்ளுதல்.
2. ஒரு நாட்டினர் தன் நாட்டிற்கு வந்த பிற நாட்டினரின் ஆதிக்கத்தை எதிர்க்கும் போது பயங்கரவாதம் உருவாகிறது.
3. சமுதாயத்தில் ஒரு பிரிவினர் தங்கள் தகுதிக்கும் உழைப்புக்கும் ஏற்ற பலன் புறக்கணிக்கப்பட்டு இழிவுபடுத்தும் போது பயங்கரவாதம் தோன்றுகிறது.



4. சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்தவர்களின் உணர்வுகள் மதிக்கப்படாமல் புறக்கணிக்கப்படும் போது பயங்கரவாதம் உருவாகிறது.
5. சமுதாய ஏற்றத்தாழ்வுகளே பயங்கரவாத செயல்களுக்கு சில நேரங்களில் காரணமாகிவிடுகிறது.

இந்த பயங்கரவாத செயல்களை தவறானவை.

**இந்தியா - ரஷியா கூட்டுப் பிரகடனம்**

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிக்க 9-அம்ச திட்டத்தை இந்தியா - ரஷியா சுட்டுப்பிரகடனம் மாஸ்கோவில் நவம்பர் 2003-ல் வெளியிட்டது.

1. பயங்கரவாதிகளுக்கு நிதி கிடைப்பதைத் தடுக்க வேண்டும்.
2. பயங்கரவாதிகளின் கைகளில் பேரழிவு ஆயுதங்களை சிக்கிவிடாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
3. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபடுவோருக்குப் புகலிடம் அளிப்பதோ நிதி அளிப்பதோ உடந்தையாக இருப்பதோ கூடாது என்று வலியுறுத்தும் ஐ.நா. தீர்மானத்தை (எண். 1373) உறுதியாக அமல்படுத்த வேண்டும்.
4. இன்றைய உலக நாடுகளைப் பிரிதிபலிக்கும் வகையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை விரிவாக்கும் பணியை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.
5. உலக நாடுகள் பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் இரட்டை அளவுகோல்களைப் பயன்படுத்தக் கூடாது.
6. நம் இருநாடுகளின் அண்டைப் பகுதியைத் தளமாகக் கொண்டிருக்கும் மதத் தீவிரவாதம் உள்பட அனைத்து

வகையான தீவிரவாதத்தையும் நம் முழு பலத்தையும் பயன்படுத்தி ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒழித்தல், போதை பொருட்கள் கடத்தல் தடுப்பு உள்ளிட்ட பிரச்சனைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுதல்.

8. அறிவியல் ஆய்வுகள் இருநாடுகளுக்கும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் வகை செய்யும் உடன்பாடு.

***பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் விளைவுகள்***

1. தீவிரவாத செயல்களால் அப்பாவிகளான குழந்தைகள், பெண்கள் பலியாகின்றனர். மேலும் வீடுகள் தீக்கிரையாக்கப் படுகின்றன.

2. வழிப்பாட்டுத் தலங்களில் மறைந்து இருந்து இராணுவத்துடன் மோதுவாதால் புனிதத் தன்மையை இழந்து விடுகின்றது.

3. ஆட்சிப்பணியாளர்கள் காவல்துறை உயர்அதிகாரிகள், அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், தொழில் முதலாளிகள், ஆகியோர் துப்பாக்கி குண்டுகளுக்கும் கண்ணி வெடிகளுக்கும் இறையாகி வருகின்றனர்.

4. தாக்குதல், கொரில்லா முறையில் அவ்வப்போது திடீரென்று நடைபெறுவதால் அரசு மற்றும் இராணுவ முகாம்களுக்கு பெரும் அச்சுறுத்தலாகவே இருந்துவருகிறது.

5. மக்கள் அதிக அளவில் கூடுமிடங்களில் தாக்குதல் நடத்துவதால் ஒன்றும் அறியா அப்பாவி மக்கள் தாம் வாழும் உரிமையை இழந்து விடுகின்றனர்.

6. குண்டுவெடி தாக்குதல் பல வகையில் தீவிர மற்றும் பயங்கரவாதிகள் கையாளுவதால் அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் பொது சொத்துக்களுக்கும் பெருத்தசேதம் உண்டாவதால் பொருளாதார சீர்கேடு உண்டாகிறது.



7. அரசுக்கும் மக்களுக்கும் உயிர்ச்சேதம், பொருட்சேதம் விளைவிப்பதால், தீவிரவாத குழுக்களுக்கும் பலன் ஒன்றும் விளையப் போவதில்லை.

8. பயங்கரவாத தாக்குதல்களால் உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் வருகை குறைவதால் நாட்டின் வருமானம் குறைவதோடு, பொருளாதாரம் சீர்கேடு அடைகிறது.

### 3.5.8 தொழில் சார் அறக்கோட்பாடுகள் (Professional Ethics)

***தொழில்முறை அறங்கள் - ஒரு விளக்கம்***

வரலாற்றுத் தொடக்க காலத்தில் தனி மனிதர்கள் சிறிய அளவில் கூட்டமாகச் சேர்ந்து வாழ்ந்தனர். குறைவான தேவைப்பாடுகளுடன் நிறைவான வாழ்க்கையை வாழக் கற்றுக் கொண்டிருந்தனர். தேவைக்கு மேல் பொருள் சேருமானால் தேவைப்பட்ட அடுத்த கூட்டத்தாரிடம் கொடுத்து விட்டு, அவர்களிடமிருந்து தமக்குத் தேவைப்பட்டவற்றை வாங்கிக் கொள்ளும் பழக்கத்தை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்வகையில், அவர்கள் தேவைகள் நிறைவு எய்தின. உலக நாடுகள் இணைந்தும் பிணைந்தும் வாழும் இக்கால, ‘நாகரிகச்’ சமுதாயத்தில் தனி மனிதத் தேவை மிக அதிகம். அவற்றிற்கேற்பப் புதிய கண்டுபிடிப்புகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தோன்றிக் கொண்டேயுள்ளன. தனி மனிதனின் புதிய தேவைகள், காலம் விளைவிக்கும் மாற்றத்தால் நிகழக் கூடியவை. காலம் மாறுவது போலவே தேவைகளும் மாறுபட்டுள்ளன. அம்மாறுபாட்டை உணர்ந்து, சமூகத்திலுள்ள தனி மனிதர்கள் சிலர் புதிய தேவைகளில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெறுகின்றனர்.

தேவைப்படும் புதிய துறையில் பயிற்சி பெறுதல் மிகுந்த முயற்சியால் உண்டாவது உண்டு. ஆயினும் ஒரு சிலர்மிக முயன்று அத்துறையில் நன்கு உழைத்துத் தேர்ந்த அறிவும், சிறப்புத் தகுதியும் பெற்று விடுவர். செயல்முறைப் பயிற்சியலும் வெற்றி காண்பர்.

இவர்கள் தனிமனிதத் தேவைகளைக் கருத்தில் கொண்டு பணியாற்றி அத்தேவைகளைக் குறைவின்றி நிறைவு செய்யும் பணிகளில் ஈடுபடுகின்றனர். எடுத்துக்காட்டாக மருத்துவக் கல்வியைக் எடுத்துக் கொள்வோம். இன்றைக்குள்ள மருத்துவக் கல்வி, நோயின் பெருக்கத்தை விரித்துரைக்கிறது. மக்களுக்காகப் புதிய மருத்துவக் கண்டு பிடிப்புகள் இன்றியமையாததாகி விட்டன.

இத்துறையில் அரிதின் முயன்று சிறப்புத் தகுதியும் செயல்முறைப் பயிற்சியும் பெற்ற மருத்துவ அறிஞர்கள் மக்களைத் துன்புறுத்தும் நோய்களை அறவே ஒழிக்கப்பாடுபடுகின்றனர். இந்நிலையில், அத்தகைய சிறப்புத் தகுதியாளர்களின் நடத்தைகளை அறஇயல் ஆராய வேண்டிய கடமை ஏற்பட்டுள்ளது.

சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை உள்ளிட்ட அனைத்துப் புதிய துறைகளிலும் பயிற்சி பெற்றுத் தகுதி பெற்றவர்கள் 'வாழ்வியல் பணியைப் பேணுபவர்கள்' எனப் பெயர் பெறுவர். இத்தகைய புதிய சிறப்புத் தகுதியாளர்களுக்கு நடைமுறை சிக்கல்கள் தோன்றுவதும் இயற்கையே, இச்சிக்கல்கள் அனைத்தையும் நீக்கும் வகையில் அவர்களுக்காகவே சில அறங்கள் கூறப்பட்டுள்ளன, சிறப்புத் தகுதியைப் பெற்றவர்கள் சமூகத்தில் உள்ள தனிமனிதர்களோடு தொடர்பு கொள்கின்றனர்.

அவர்களின் தேவையை நிறைவு செய்யப் பாடு படுகின்றனர். அதனால், சிறப்புத் தகுதி பெற்றவர்கள் தனி



மனிதர்களோடு கொள்ளும் 'புதிய தொடர்பை' அற இயல் ஆராய முற்பட்டு. ஆய்வின் அடிப்படையில் அறங்கள் சிலவற்றை விரித்துரைக்கிறது.

**(அ) மருத்துவப் பணிபற்றிய அறங்கள் (Medical Ethics)**

வரலாற்றுப் பெருமையுடைய மருத்துவப் பணி. இன்றுள்ள சூழ்நிலையில் தன் அற இயற்கொள்கையை எந்த அளவுக்குப் பின்பற்றுகிறது என்பதை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. ஆயினும் சமூகத்தில் மருத்துவர்களின் மதிப்பு மிக உயர்ந்தது என்பதில் ஐயமில்லை.

மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே அமைந்த உறவு முறையை அடிப்படையாகக் கொண்டது. மருத்துவத் துறை, இவ்வுறவு முறை இல்லாமலும் மருத்துவரின் நன்மதிப்பு உயரும் நிலையும் உண்டாகும்.

உதாரணமாக மருத்துவ ஆய்வுக் கழகங்களைச் சொல்லலாம் மருத்துவத்துறை பற்றிய ஆய்வுகள், நோய்ளை வெல்லும் ஆய்வு முறைகள் புதிய மருந்து கண்டு பிடித்தல் போன்ற அடிப்படைத் தொழில்களை உலகெங்கும் உள்ள ஆய்வுக் கழகங்கள் திறம்படச் செய்து முடித்துள்ளன.

மருத்துவத்துறை பற்றிய அறக் கொள்கைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். மருத்துவரின் தனிநலம், மருத்துவர்களின் பொதுநலம், சமூக நலம் என்பவையே அவை. இந்த மூன்றில் எந்த ஒன்றும் புறக்கணிக்கப்படாதவாறு அமைந்து அற இயற் கோட்பாடுகளை மருத்துவர்கள் பின்பற்ற வேண்டும்.

மருத்துவர்கள் முற்காலத்தில் தாமே மருந்துகளைத் தயாரித்துப் பயன்படுத்தி வந்தனர். அதனால், அவர்களுக்கு மருந்தைப் பற்றியும் அதன் தன்மையைப் பற்றியும் நன்கு தெரிந்திருந்தது. ஆனால்

இன்றைய நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. மருத்துவர்கள் எவரும் மருந்து தயாரிப்பதில்லை. மருந்துகளைத் தயாரிக்கும் தயாரிப்பாளர் என்று தனியாக ஓர் அமைப்பு உள்ளது. மருந்துகளைத் தாமே தயாரிக்கும் முறை மாறி மருந்து தயாரிப்பாளரை நம்பி மருத்துவர்கள் மருத்துவப்பணியைச் செய்ய வேண்டியுள்ளது. மக்கள் உள்ளங்களில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்ட அலோபதி மருத்துவர்கள் மருந்து உற்பத்தியை தம்முள் தக்க வைத்துக் கொள்ள முடியாமற் போனதால் அரசு தன் ஆணையின் கீழ் மருந்து உற்பத்தித் துறையைக் கண்காணிக்க முற்பட்டது.

அமெரிக்க மருத்துவக் கழகம் 1955-ல் வெளியிட்ட மருத்துவ அறக்கோட்பாடுகள் என்ற நூலிலிருந்து சில அறக் கோட்பாடுகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

1. மருத்துவப் பணியல் ஈடுபட்டவர்கள் மனித சமுதாயப் பணியாக இச்சேவையை உளங்கொண்டு, பணியாற்ற வேண்டும். பரிசுகள், பொருளாதாயம், ஊதியங்கள் போன்றவற்றை இரண்டாம் நிலையாகவே கருத வேண்டும். மருத்துவத் தொண்டர்கள் தம் வாழ்வை நோயாளியின் துன்பங்களைக் களைவதற்காகவும் அவர்கள் வாழ்வை நீட்டிப்பதற்காகவும் தியாகம் செய்ய வேண்டும். இதற்காக மருத்துவர்கள் உலக மருத்துவர்களோடு இணைப்புக் கொண்டு, அவர்களின் செயற்பாட்டு முறையையும் உணர்ந்து பயிற்சிகள் பெற்றுப் பணியாற்ற வேண்டும்.

2 நோயாளிகள் மருத்துவர் பணிபுரிவோருக்கு நற்சான்று வழங்குதல், நோயாளிகளால் மருத்துவர்கள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ வரவேற்கப் பெறுதல், மருத்துவச் சிகிச்சை பற்றிய செய்திகளை விளம்பரப்படுத்துதல் போன்றவை தவிர்க்கப்படுதல் வேண்டும்.



3. மருத்துவத் தொண்டர் ஒருவர், நோயாளியின் விவரம், நோயின் நிலை, பரிகாரம், மருந்துகள் ஆகிய விவரம் அடங்கிய குறிப்பைக் கொடுத்தல் இயற்கை. இதனை மற்றொரு மருத்துவர் கண்டு விமரிசனம் செய்யக் கூடாது. அது அத்துறைப் பணியையே அவமதிக்கும் செயலாகும்.

4. மருத்துவப் பணியை இழித்தும் பழித்தும் பேசுவோர்களுடன் மருத்துவர்கள் சிறிதும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. மருத்துவரின் மீதுள்ள நம்பிக்கையால் நோயாளி தன்னுடைய அந்தரங்க நோய்களைப் பற்றிச் சொல்லியிருப்பதை எவ்வகையிலும் வெளிப்படுத்தக் கூடாது. அரசு ஆணையின் மூலம் வற்புறுத்திக் கேட்டால் மட்டுமே வெளிப்படுத்தலாம்.

5. நோயின் நிலையை மிகைப்படுத்தாமலும் குறைக்காமலும் வெளியிடுதல் அறமாகும். நோயாளியின் அபாயகரமான நிலையை நோயாளிக்கும் அவர்தம் உறவினர்க்கும் உண்மையை உள்ளவாறு முறையாக தெரிவிப்பது அறக்கோட்பாடாக அமையும்.

6. நோயாளியை நன்கு பரிசோதித்து அவருக்கு மருத்துவம் செய்யலாமா கூடாதா எனத் தேர்ந்து கொள்ளும் முறை முற்றிலும் மருத்துவர்களின் உரிமையாகும். எந்த ஒரு நோயாளியும் மருத்துவரை வற்புறுத்தி அவருடைய சேவையைப் பெற எண்ணுதல் கூடாது. ஆனால் அபாயநிலையில் கிடக்கும். அவசர உதவிக்குத் தகுதி வாய்ந்த எந்த நோயாளியையும் புறக்கணிக்கும் உரிமை எந்த மருத்துவருக்கும் இல்லை.

7. ஒரு நோயாளியை ஏற்றுக் கொண்ட பின்னர், அவரைப் புறக்கணிப்பது மருத்துவருக்கு உரிமை இல்லாச் செயலாகும். முன் அறிவிப்புச் செய்து வேறொரு மருத்துவரை

அவர் தேடிக்கொள்ளும் வரை சிகிச்சை தொடரப்பட வேண்டும்.

8. மருத்துவம் பணி மேற்கொண்டவர்கள் மருத்துவக் கழகத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மருத்துவக் கழகத்தில் குறை இருப்பின் சுட்டிக் காட்டவும், நிறை இருப்பின் பாராட்டவும் ஒரு போதும் தயங்கக்கூடாது.

9. மருத்துவப் பணி மேற்கொண்ட ஒருவர் தம் குடும்பத்தாருக்குத் தாமே மருத்துவப் பணியினை மேற்கொள்ள கூடாது.

10. மருத்துவரின் உறவினர் ஒருவர் வேறு ஒரு மருத்துவரிடம் சிகிச்சை பெற நேர்ந்தால் உறவினருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற முறையில் அந்த மருத்துவர் கொடுத்த மருந்துகளைப் பற்றி ஒருபோதும் விமரிசனம் செய்யக் கூடாது தம் உறவினர் வேறொரு மருத்துவரிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை மாசுபடுத்தக் கூடாது.

11. ஒரு மருத்துவர் மற்றொரு மருத்துவர் நடத்தும் மருத்துவமனைக்குச் சென்றால் அங்குள்ள நோயாளிகளிடம் அந்த நோய் பற்றிய எந்த பேச்சையும் பேசக்கூடாது. ஒரு நோயாளியைக் காக்கப் பல மருத்துவர் தேவை என்ற முறையில் அழைக்கப்பட்டால் தம் கருத்தை அழைத்தவரிடம் சொல்ல மருத்துவருக்கு முழு உரிமை உண்டு.

12. மருத்துவத் துறைப் பணிகளின் வரலாற்றுப் பெருமைக்கு இழிவு ஏற்படும் எந்த ஒரு செயலையும் மருத்துவர் செய்தலாகாது மருத்துவத்துறைப் பெருமைக்கு மாசு ஏற்படாதவாறு எத்தகைய மாற்றத்தையும் அவர் ஏற்கலாம் என்பது அறம்.



13. மருத்துவத் துறைப் பணி சார்ந்த மருத்துவரின் சேவையை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு இலாபம் சேர்க்கும் ஏமாற்று நிறுவனங்களிடம் எந்த ஒரு மருத்துவரும் தன் பணியை அடிமையாக்கிக் கொள்ளக் கூடாது.

14. மக்களை அழிக்கும் நோய்கள் பரவிவரும் காலங்களில் மருத்துவர்கள் அவற்றைத் தடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும். ஆனால் தம் உடலைக் கெடுத்துக் கொண்டு அப்பணியில் ஈடுபட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உடல் நிலை ஏற்றுக் கொள்ளும் வகையில் உழைப்பது நன்று.

15. சமூக உறுப்பினர்களாகிய பொது மக்களின் நலத்தை நோக்கியே மருத்துவரின் பணி நடை பெறவேண்டும்.

இவை அனைத்தும், அனைத்து நாடுகளுக்கும் ஏற்ற வகையில் ஒரு மருத்துவர் மேற் கொள்ள வேண்டிய அறக்கோட்பாடுகள்.

### (ஆ) நீதித் துறை அனுசரிக்க வேண்டிய அறங்கள் (Lega Ethics)

தனி மனிதர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்தது. நீதித் துறை தனி மனிதர்கள் எவ்வாறு சமூகத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்ற வரையறையைத்தான் நீதி என்று கூறுகிறோம். தனி மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற முறையை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவார்கள். பின்னர் இவ்விதிகள் மக்களாட்சித் தலைவரால் ஏற்கப்பட்டு கையொப்பம் பெறப்படும். அன்று முதல் இவ்விதிகள் ‘சட்டம்’ என்று அழைக்கப்படும். சட்டங்களின் செயற்பாட்டை விளக்கிக் கூறுபவர்கள் வழக்குரைஞர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள்.

சட்டங்கள் வழக்கத்தில் பிரிவு எண்கள் மூலம் வெளியிடப்படுகின்றன. இந்தச் சட்டப்பிரிவு எண்களை மேற்கோள் காட்டி, தனி மனிதன் செய்தது ‘தவறுதான்’ என்றும், ‘இல்லை’ சட்டத்தை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை; சட்டம் சொல்வது வேறு என்றும் வாதிடுவது வழக்குரைஞர்களின் பணியாகும். ‘இவன் எனக்குக் கொடுமை செய்தான்’ என ஒருவன் நீதிபதியிடம் சென்று முறையிட்டால் அது வழக்கு ஆகாது. செய்யப்பட்ட கொடுமைகள் இவை என தெளிவாகக் பட்டியலிட்டுச் சொன்னால் தான் அப்பட்டியலுக்குச் சட்ட எண்கள் கொடுக்கப்பட்டு, ஆய்ந்து தீர்ப்பு உரைக்கப்படும் இதோடல்லாமல் குற்றவாளியின் சூழ்நிலையும் பரிசீலிக்கப்படும். எந்த எண்ணுள்ள சட்டத்தை மீறி ஒருவன் செயல்படுகிறானோ. அப்போது அவன் குற்றவாளி ஆகி அந்தச் சட்டத்தின் அடிப்படையில் அவன் மீது வழக்கு தொடரப்படுகிறது.

முதலில் தன் குறையை வழக்கு உருவில் நீதிபதியிடம் எடுத்துச் செல்பவன் வாதி என்றும், அவனால் குற்றம் சாட்டப் பெற்றவன் பிரதிவாதி என்றும் அழைக்கப்படுகின்றனர். இவ்விரு பிரிவினரும் சொல்லும் வாத, பிரதிவாதங்களில் மூன்று நுட்பங்களை கவனிக்கவேண்டும் என்று சட்டத்துறை இலக்கணம் கூறுகிறது. இவை முறையே தொடை, விடை, ஊழ் எனப் பெயர் பெறும். தொடை என்பது வழக்கைத் தொடுத்தவனின் கூற்று. விடை என்பது அக்கூற்றுக்கு பதிலாக பிரதிவாதி கூறுவது. இவ்விரு கூற்றுகளிலும் உயிரோட்டமாக அமைய வேண்டிய முறை எவர் கூற்றில் உள்ளது என்பதை வழக்குரைஞர்கள் அலசி ஆராய்வார்கள்.

இந்த ஆராய்வே நீதிபதியின் தீர்ப்புக்குக் காரணமாக அமைகிறது. இவ்வுயிரோட்ட முறையே ஊழ் என்று கூறப்படுகிறது.



**நீதித் துறையின் தற்காலச் சிக்கல்கள்** (Problems of the Legal Profession in the Present days)

வெளிநாடுகளிலும், நம் நாட்டிலும் நீதித் துறையில் அத்துறையைச் சார்ந்த தொண்டர்கள் அடங்கிய கூட்டமைப்பு உருவாக்கப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு நாட்டிலும் மக்கள்தொகை, அங்கே நிகழும் குற்றங்கள், அவற்றின் எண்ணிக்கை, வகை சார்ந்த கணக்கெடுப்புகள், அமைந்துள்ள நீதி மன்றங்கள் ஆகியவற்றைக் கொண்ட புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இவற்றின் முடிவுப்படி சட்டத்துறை தொண்டர்களின் எண்ணிக்கை பற்றாக்குறையாகவே உள்ளது எனத் தெரிய வருகிறது. இத்துறையிலுள்ள பிற சிக்கல்களாவன:

1. குற்றங்கள் மிகவும் மலிந்துள்ளமையால் நீதித் துறை கால இடைவெளி இல்லாமல் பணிப் புரிய வேண்டியுள்ளது. ஆகவே, நீதிபதிகளின் எண்ணிக்கையும் பெருகுகிறது.
2. சில வழக்குரைஞர்கள் சமூக அமைப்பின் அடிப்படைத் தத்துவத்தைப் பற்றிய உண்மையைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் போவதால் சிக்கல்கள் பல தோன்றுகின்றன என்று உலகச் சட்டத்துறை குழுவின் அறிக்கை கூறுகிறது.
3. நீதிமன்றங்களில் வழக்குகள் அதிக அளவில் தேங்கிக் கிடப்பதால், வழக்குரைஞர்கள், வாதி, பிரதிவாதிகளை அழைத்து தாமே சமரசம் செய்து விடுகின்றனர். இது நீதிக்குப் புறம்பான செயல் என்று குழு கூறுகிறது.

**நீதித் துறையினர் கடைபிடிக்க வேண்டிய அறக் கோட்பாடுகள்**

1. இத்துறையைச் சேர்ந்தவர்கள் தாம் சமூகக் கடமையை ஆற்ற வேண்டியுள்ளவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ‘இறை’ என்று மதிக்கப்படும் சட்டத் துறையின்

தெய்வீக ஆற்றலை இழிவுப்படுத்திவிடக் கூடாது என்ற நோக்குடன் நாளும் எச்சரிக்கையாய்ப் பணியாற்றுதல் வேண்டும்.

2. குடியாட்சியின் நல்ல எதிர்காலமானது, நீதித்துறையின் தூய்மையிலும், நேர்மையிலுமே உள்ளது. எனவே நீதித்துறையைச் சார்ந்த அனைவரும் தம் நன்டைத்தையால் நீதித்துறையை உயர்த்த வேண்டும்.

3. அளவுக்கு மீறிய புகழ்ச்சி உரைகளை வழக்கறிஞர்களிடமிருந்தோ, பொது மக்களிடமிருந்தோ நீதிபதிகள் எற்பது அறத்திற்குப் புறம்பானதாகும். ஒரு வழக்கு விசாரணையில் இருக்கும்போது அது பற்றி வழக்குரைஞர்கள் நீதிபதியிடமோ, அவரது ஆலோசகரிடமோ பேசுதல் கூடாது. அவ்வாறு பேச ஆரம்பித்தால் இத்தொண்டுக்குரிய அறம் சிதைந்து போய்விடும்.

4. சாட்சிக்கூற வந்தவர்களையும், வழக்குத் தொடர்புள்ள அனைவரையும் வழக்குரைஞர்கள் உரிய மரியாதையுடன் நடத்த வேண்டும் நீதிகோரி வந்ததானாலேயே அவர்கள் நீதி இல்லாதவர்கள் எனக் கருதிவிடுதல் கூடாது. வழக்குரைஞர்கள் எதிர்க்கட்சிக்காரரையும் மதித்தே நடக்க வேண்டும்.

5. வழக்குரைஞர் தம் கட்சிக்காரரின் நலனை மட்டுமே கருதி நீதிமன்றத்தை வன்மைக்கோ, குழப்பத்துக்கோ இலக்காகிவிடக் கூடாது.

6. நீதித்துறைத் தொண்டர்கள் நம் சேவையைப் பணத்துக்கு அடிமையாக்கி விடக் கூடாது. இதுவே நீதித்துறையின் பெரிய அறமாகும்.



7. தன்னைப் பற்றி விளம்பரம் செய்தல் குறைந்த கட்டணத்தில் வழக்கை முடிப்பதாக துண்டுப்பிரசரம் வெளியிடல், பேச்சுத் திறனால் வழக்கை வெற்றியாக முடிப்பவன் நானே என சுய விளம்பரமோ அல்லது பிறர் மூலமாக விளம்பரமோ செய்தல் நீதித்துறைக்குப் புறம்பான, அறமில்லாத செயலாகும்.

8. வழக்குரைஞர் ஒருவர், ஒரு நிறுவனத்தில் தன்னை பணியாளராக அமைத்துக் கொள்ளக்கூடாது.

9. ஒரு நிறுவனத்தில் சட்ட ஆலோசகராக இருக்கும் வழக்குரைஞர், எக்காரணம் கொண்டும், அந்நிறுவன உறுப்பினர்களின் வேறு பிரச்சனைகளுக்கு சட்ட ஆலோசனையை ஒரு போதும் வழங்குதல் கூடாது.

**(இ) *ஆசிரியப்பணி பற்றிய அறங்கள்* (The Ethics of Teachers)**

எங்கேனும் சிறிது பண்பாட்டுக் குறைவு ஏற்பட்டாலும் அது கல்வியால்தான் வந்தது என்று கூறும் வழக்கம் எப்போதும் இருந்து வந்துள்ளது. இவ்வகையில் உலகம் முழுவதற்கும் பெரிதும் கடைமைப்பட்டவர்கள் ஆசிரியர்களே. மாணாக்கர்களை அறிவுடையவராக ஆக்குவதில் ஆசிரியர்கள் முதலில் கவனம் செலுத்த வேண்டும்.

சமூதாயத்தை முழுமையாக ஆக்குதல் ஒன்றே ஆசிரியத் தொண்டர்களுக்கு உகந்ததாகும். உண்மையைப் பற்றிய அறிவையும், உண்மையைச் சார்ந்த செயற்பாட்டையும் எளிய முறையில் உணர்ந்துவது என்ற ஒன்றை குறிக்கோளாக்கிக் கொண்டது ஆசிரியத் தொண்டு.

### ஆசிரியர்களுக்கு இன்றுள்ள சிக்கல்கள்

**(Problems Facing the Teaching Profession)**

1. இன்றுள்ள ஆசிரியர்களின் பணி மகத்தானது. உலக அரங்கில் கண்டுபிடிக்கப்படும் ஆய்வுகளையும், விளைவுகளையும் உடன் கொண்டதாக இன்றைய கல்வி முறை அமைந்துள்ளது. இதற்குரிய பயிற்சியை மாணவர்களுக்குத் தரவேண்டிய கட்டாயம் ஆசிரியர்களுக்குரியது. எனவே, நாள்தோறும் நடைபெறும் சமூக மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து அதற்கேற்ற பயிற்சியையும் அளிக்க வேண்டியவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டியுள்ளது.
2. தனிமனிதனின் அறவாழ்வு கொள்கையை மட்டும் முற்காலத்தில் கல்வி முறையாக வகுத்தனர். இப்போது தனிமனிதனின் பல்வேறு கூறுகள் பல்வேறு துறைகளாக மலர்ந்துள்ளன. கூட்டுறவு முறை மற்றும் இன்றைய சமுதாய முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உலக சமூக அமைப்பிற்கு இயைந்த கல்வியை விரிவான அளவில் கொடுக்க வேண்டிய அவசியம் இப்போது ஆசிரியருக்கு உள்ளது.

### ஆசிரியர் தொண்டில் நின்றோர் போற்ற வேண்டிய அறங்கள்

**(Ethics for Teachers)**

1. ஒரு மாணவனின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் ஒருமித்த வளர்ச்சியான ஆளுமைப்பண்பு வளர்ச்சியடையத் துணை புரிபவர்கள் ஆசிரியர்களே. பாடத்திட்டம், நிலைகள், பயிற்றுவிக்கும் முறை ஆகியவை எல்லாம் கல்வியின் குறிக்கோளை அடைவதற்குரிய வழிகளாகும். எனவே, சமூக நல வாழ்வுக்குத் தேவையான, தனி மனித ஆளுமை



வளர்ச்சியோடு கூடிய, தகுதியுடைய வழியில் ஆசிரியர்கள், மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டும்.

2. மாணவர்களின் குறைகளை மற்றவரெதிரில் சுட்டிகாட்டாமலும், குறைகளை ஏளனம் செய்யும் பேச்சுக்களைத் தவிர்த்தலும் நல்லாசிரியருக்கு அறமாகும்.
3. மாணவர்கள் ஆசிரியர்களைப் பார்த்தே ஒழுக்கத்தை கற்றுக் கொள்கின்றனர். எனவே, ஆசரியாகள் ஒழுக்கத்தை பேணிக் காப்பவர்களாக, முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.
4. மாணவர்களுக்குத் தனியான நிலையில் பாடம் சொல்லிக் கொடுத்து, அதற்காக தனி ஊதியம் பெறும் முறையை ஆய்வுக்குழு கண்டித்துள்ளது. இதற்குக் கரணம் சில குறைபாடுகளே, அக்குறைபாடுகளை நீக்க வேண்டும். இருப்பினும் இம் முறையால் ஆசிரியர் மாணவர் உறவு தாழ்நிலை அடைகிறது.
5. மாணவர்களை நல்ல குடிமக்களாக ஆக்கும் சமூக நிகழ்ச்சிகளில் மட்டும் ஆசிரியர்கள் பங்கேற்க வேண்டும். அரசியல் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதால் மாணவர்கள் இடையேயும் பொதுமக்கள் இடையேயும் தரம் தாழ்ந்து போகின்றனர்.
6. மக்களிடையே மாறுபட்ட கருத்துக்களை உருவாக்கும் செய்திகளை வகுப்பறையில் ஆசிரியர்கள் விவாதிக்கலாகாது.
7. ஆசிரியர்கள் தாம் பணி செய்யும் நிர்வாகத்தைச் சார்ந்தே இயங்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் உண்மைக் கல்வியை அளித்தல் என்ற குறிக்கோளை ஒட்டியே பாடுபட முயல்வது ஆசிரியர்களுக்கு நல்லது.

8. ஆசிரியர்கள் மற்ற ஆசிரியர்களைக் குறைகூறிப் பேசுதலைத் தவிர்க்க வேண்டும். ஆசிரியத் தொழிலைக் குறைவாக எண்ணுவதும் பேசுவதும் தவறு.

"செய்யும் தொழிலே தெய்வம்"
என்ற உணர்வு வேண்டும்.

9. அனைத்திலும் மேலாக ஆசிரியர்கள் தம்மை நாள்தோறும் தகுதியால் உயர்த்திக் கொள்ள வேண்டும். 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்ற முதுமொழி

மாணாக்கர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

**நல்லாசிரியர் பாடம் சொல்லித் தரும் முறை**

காலம், இடம் முதலியான தூய்மையாயும், பொருத்தமாயும் உள்ளனவா என்பனவற்றைப் பார்த்துத் திருப்தியடைந்த பின்னரே நல்லாசிரியர் மாணவர்களுக்குக் கல்வியைக் கற்பிப்பார். தான் சொல்வ வந்த பாடக்கருத்தைத் தன் உள்ளத்தில் அமைத்துக் கொண்டு விரைவு இல்லாமல், விருப்பத்துடன், முகம் மலர்ந்து கற்பிப்பவரே நல்லாசிரியர் ஆவார். மாணவன் மனதில் பாடக் கருத்துக்களை வாங்கிக்கொள்ளும் வகையில் பாடம் சொல்லித் தரவேண்டும் இவையாவும் நல்லாசிரியரின் இலக்கணமாகும்.

## பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி**

1. சமூகம் எனப்படுவது யாது?
2. சமூகத்தில் உள்ள சீர்கேடுகள் யாவை?
3. இரத்தலை குறித்து மாக்ஸ் வெபர் கூறுவன யாவை?
4. 'விவாகரத்து' சிறு குறிப்பு வரைக?



5. 'வரதட்சனை' குறிப்பு வரைக?
6. பயங்கரவாதம் என்ப்படுவது யாது?

**II. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. இரத்தலுக்கான காரணங்கள் யாவை?
2. விவாகரத்து பெறக் காரணங்கள் யாவை?
3. விவாசரத்திண் தீய விளைவுகள் யாவை?
4. தற்கொலைக்காண காரணங்கள் யாவை?
5. இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகக் காரணங்கள் யாவை?
6. நீதித் துறையில் இன்றுள்ள சிக்கல்கள் யாவை?
7. ஆசிரியத் தொண்டு புரிபவர்களுக்கு இன்றுள்ள சிக்கல்கள் யாவை?
8. நல்லாசிரியர் பாடம் சொல்லித்தரும் முறைகள் யாவை?
9. தற்கொலை எண்ணம் இருப்பதை பற்றி அறியும் முறைகளை குறிப்பிடு.

**III.** ஒரு பக்க அளவில் விடையளி

1. இரத்தலை நீக்கும் வழி முறைகள் யாவை?
2. விவாகரத்தைத் தவிர்க்கும் வழிமுறைகள் யாவை?
3. வரதட்சணைக் கொடுமையைத் தடுக்கும் முறைகள் யாவை?
4. தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்கும் வழிவகைகள் யாவை?
5. சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் வழிமுறைகள் யாவை?

6. போதைப் பொருளுக்கு அடிமையாதலின் தீய விளைவுகள் யாவை?

7. போதைப் பொருள் பழக்கத்தைத் தடுக்கும் வழி முறைகள் யாவை?

8. பயங்கரவாதம் பற்றிய இந்திய - ரஷியாவின் கூட்டு பிரகடனத்தின் அம்சங்கள் யாவை?

9. பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் விளைவுகள் யாவை?

10. பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை ஒழிக்கும் வழிமுறைகள் யாவை?

11. ஆசிரியத் தொண்டில் நின்றோர் போற்ற வேண்டிய அறங்கள் யாவை?

12. மருத்துவப் பணி பற்றிய அறங்களைக் கூறுக?

**IV.** நான்கு பக்க அளவில் விடையளி.

1. அமெரிக்க மருத்துவக் கழகம் 1955-ல் வெளியிட்ட மருத்துவ அறக் கோட்பாடுகள் குறித்து ஒரு கட்டுரை வரைக?

2. நீதித்துறை அனுசரிக்க வேண்டும் அறங்கள் குறித்து ஒரு கூட்டுரை வரைக?

# IV. தமிழர் மரபில் அறக்கோட்பாடுகள்

### அறிமுகம்

உலகில் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்றார் பாரதிதாசன். ஒருவன் வாழ்வில் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவான். அதற்கு நல்ல சிந்தனை, நல்ல எண்ணம், நல்ல செயல்கள் வேண்டும். தமிழன் எந்த நிலையிலும் தனக்கென ஒரு நெறியை வைத்துக் கொள்வான். அந்த நெறியே, நல்ல நெறி அதுவே அறநெறி.

அறநெறி தான் அறவியல் எனப்பட்டது. அறநெறியைப்பற்றி பல அறநூல்களை புலவர்கள் எழுதியுள்ளனர். மனிதன் என்று சிந்திக்கத் தொடங்கினானோ அன்றே அறநெறியும் தோன்றியது. அறம் என்று சொன்னாலே அதற்குள் அறநெறி, அந்த அறநெறியில் வாழத் தேவையான வாழ்வியல் நெறிகளைப் பற்றிய கருத்துக்கள் அடங்கிய நூல்கள் நம் நினைவுக்கு வரும்.

### தமிழில் அறநெறி நூல்கள்

அறநெறிக் கருத்துக்களைக் கூறும் நூல்களான திருக்குறள், நாலடியார், ஔவையின் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை போன்ற நூல்கள் தமிழரின் அறவியல் கோட்பாடுகளை உலகிற்கு முதன் முதலில் தந்தவை ஆகும். நம் நாட்டின் இதிகாசங்களான இராமாயணம், மஹாபாரதம், பகவத்கீதை போன்ற நூல்களில் அறம் பற்றி அதிகம் கூறப்பட்டுள்ளது. இராமாயணத்தில் மானுடன் உலகில் எப்படி அறநெறியில் வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவன் இராமன். மகாபாரதத்தில் பகவான் கிருஷ்ணன் அர்சுனனுக்கு உபதேசிப்பது போல அறக் கருத்துக்கள்

அமைந்துள்ளன. அகத்தியர், தொல்காப்பியர் காலம் முதலே அறம் பேசப்படுகிறது. அறம் என்றால் இல்லறம், துறவறம் என்பர். மனிதன் தன் வாழ்வில் நான்கு நிலையில் வாழ்கிறான் பிரம்மச்சரியம், இல்லறம், வனப்பிரஸ்தம், துறவறம் என்ற ஒவ்வொரு நிலையிலும் அந்த அறநெறிகளின்படி வாழ்கிறான்.

### வாழ்வியல் உறுதிப் பொருட்கள்

உறுதிப் பொருள்கள் நான்கு வகைப்படும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இதையே சமஸ்கிருத மொழியில் புருஷார்த்தங்கள் என்கின்றனர். பருஷார்த்தங்கள் நான்கு அவை முறையே தர்ம, அர்த்த, காம, மோசஷ என்பனவாகும். தர்மம் என்பது அறத்தையும், அர்த்தம் என்பது பொருளையும், காமம் என்பது இன்பத்தையும், மோசஷம என்பது வீடுபேற்றையும் உணர்த்துகிறது.

அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் துறவறம் என்பது காரணவகையால் கூறப்படுகிறது. இலக்கண வகையில் கூறப்படாததால் நூல்களால் கூறப்படுவது அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் தான். அவற்றுள் அறமாவது அற நூல்களில் கூறியுள்ளதை செய்தலும் விலக்கியன ஒழித்தலும் ஆகும்.

ஆம் ஆ:்து ஒழுக்கம், வழக்கு, தண்டம் எனப்படும் அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட நிலையில் நின்று அவர்களுக்கென கூறப்பட்ட அறங்களில் வழுவாது ஒழுகுதல்.

### வழக்கு, தண்ட விளக்கம்

வழக்கு எனப்படுவது ஒரு பொருளைத் தனித்தனியே “எனது” என்று இருப்பர். அதன் காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேல் செல்வது. அது “கடன் கோடல்” முதல் பதினெட்டு பதத்தது ஆகும்.



தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் விலகினவர்களை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக ஒறுத்தல்.

இவற்றுள் வழக்கும் தண்டமும் உலக நெறி நிறுத்துதல். அதாவது முறைப்படுத்தல் அல்லது தண்டித்தல் பொருட்டு அல்லது ஒழுக்கம் போல மக்கள் உயிர்க்கு உறுதி அளித்தல் பொருட்டு இவை சிறப்பில்லாத காரணத்தாலும் நூல்களே மட்டும் அன்றி உணர்வு மிகுதியாலும் இயற்கையாலும் அறியப்படுகிறது. சிறப்புடைய ஒழுக்கத்தையே அறம் என எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லறம் எனப்படுவது இல்வாழ்க்கைக்குத் தேவையான நெறியில் நிற்றல் அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் வாழ்வது ஆதலின் அதனை முதலில் வாழ்ந்து பின்பு துறவறம் பற்றி பேசப்படுகிறது.

### அறநூல்களின் விளக்கம்

‘நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’ என்பார்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியாரும் பொருளைக் கொண்டு அறம் செய்யுங்கள், அறத்தைக் கொண்டு இன்பம் பெறுங்கள் என்று வள்ளுவம் போலவே வலியுறுத்துகிறது. “அறத்தைச் செய்” என்றால் பொருளைக் கொடு என்று மட்டும் கருத்தாகாது. நோயுற்றவர்க்கு சொல்கிற ஆறுதல் வார்த்தை, உடல் உழைப்பு மூலம் உதவுதல், அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படாமை, இழந்தவர் துயர் கண்டு இரங்குதல் போன்ற அனைத்துமே அறவியலின் பாற்பட்டவையாகும்.

ஔவையாரும் தாம் இயற்றிய நூல்களில் அறக்கருத்துக்களை ஒரு தாய் தன் குழந்தைக்கு அமுதூட்டுவது போல கூறியுள்ளார். குழந்தைக்கு உணவிடும் போது கடைந்த உணவு முழுவதும் தரமாட்டாள். சிறிது சிறிதாக பருக்கை பருக்கையாக

பிறகு சிறுசிறு உருண்டையாக ஊட்டுவாள். அது போல ஔவையார் தம் அறநெறிக் கருத்துக்களை இரண்டு, மூன்று வார்த்தைகளிலேயே கூறியுள்ளார். இரண்டு சொற்களில் ஔவையார் பாடல்கள், இரண்டடிகளில் வள்ளுவனின் குறட்பாக்கள், நான்கு அடிகளில் நாலடியாரின் பாடல்கள் தமிழரின் அறவியல் கோட்பாடுகளைக் கூறுகின்றன. அறவியல் கோட்பாடுகளை உள்ளுணர்வுக் கொள்கை, பகுத்தறிவுக் கொள்கை, பகவத்கீதை கூறும் பயன் நோக்காச் செயல் அல்லது நிஷ்காம்ய கர்மா, இன்பவியற் கொள்கை நிறைவுக் கொள்கை என பல வகைகளாகப் பிரித்து அறவியலில் கூறியுள்ளனர். அறவியலுக்குத் தேவையான கருத்துகள் அனைத்தும் நம் முன்னோர்களால் வாழ்ந்து காட்டப் பட்டுள்ளன. அவர்கள் வழி நடந்தாலே நாம் அறவியலை அனுபவிக்க முடியும். தேடிய செல்வம் அனைத்தும் நம்மிடம் நிலைத்து நிற்க அறவியல் கோட்பாட்டின்படி வாழ வேண்டும் என்று தமிழன் அன்றே கூறியுள்ளான்.

### 4.1.1 ஔவையார் கூறும் அறக்கருத்துக்கள்

ஔவையார் இயற்றிய நீதி நூல்கள் ஒரு சிறந்த அறவியல் நூல்களாகும். மனித வாழ்க்கையில் ஒருவன் வாழ உறுதிப் பொருள் வேண்டும். அவை நான்கு வகைப்படும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஔவையார் தன் நீதி நூல்களில் விளக்கிக் கூறியுள்ளார். ஒருவன் தான் வாழ்வதற்கு தேவையானது பொருள். பொருள் இல்லை என்றால் உலகில் வாழ முடியாது அப்பொருளை எப்படி ஈட்ட வேண்டும். பொருளால் கிடைக்கும் பயன் என்ன என்று பார்த்தால் கிடைப்பது இன்பமே என்கிறார்.

ஒருவன் இன்பத்தை அடைய வேண்டுமானால், நீதி வழியில் வாழ வேண்டும். அதற்கு அறத்தை அறிந்து கொள்ள வேண்டும்



அறத்திற்கு தருமம் என்றும் பொருள் உண்டு எவன் தரும வழியில் நடக்கிறானோ அவனை தரும சீலன் என்பர், அதற்கு தருமம் செய்ய வேண்டும்.

ஔவையார் தம் நூல்களான ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை ஆகியவற்றில் அறக்கருத்துக்களை கூறியுள்ளார். அக் கருத்துக்கள் அனைத்தும் உலகில் உள்ள எல்லா மனிதர்களுக்கும், எக்காலத்திற்கும் எச்சூழலுக்கும் ஏற்புடையதாக அமைந்துள்ளன.

ஔவையார் தம் நூலான ஆத்திசூட்டியில்

“ஆத்திசூடி அமர்ந்த தேவனை

ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே”

என்று இறைவனாகிய ஆத்தி மாலை அணிந்த சிவபெருமானின் விருப்பத்திற்குரிய விநாயகனை தினமும் மறவாமல் பலமுறை புகழ்ந்து பாடி வணங்கி நூலைத் தொடங்குகிறார்.

**1. “*அறம் செய்ய விரும்பு*”**

தொடக்கத்திலேயே நன்மை தரும் அறம், அறச் செயல்களை தவறாமல் செய்ய விரும்புக என்று கூறுகிறார். விரும்புக என்று சொல்வதில் இருந்து முதலில் ஆசைப்படு என்கிறார். ஒருவன் ஒரு பொருளை விரும்பும் போது தான் அதன் மேல் பற்று ஏற்படும். பற்று என்றால் கடன் என்றும் பொருள் உண்டு. கடன் என்றால் கடமை என்றும் பொருள் உண்டு. “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்றார் திருநாவுக்கரசர். ஒருவன் தொண்டு செய்ய வேண்டும் என்று நினைத்தாலே அறச் செயல்களைத் தான் செய்வான்.

அப்போது அவன் அன்பு, இரக்கம், கருணை ஆகியவற்றின் மூலம் நல்வழியில் செல்வான். அந்த அறத்தைச் செய்ய மனத்தூய்மை, பொய்யாமை, கொல்லாமை, அன்பு ஆகியவை

வேண்டும். இந்த நெறியில் வாழ்ந்தால் அவன் அறவாழ்வில் வாழ்வான். அப்போது அறச் செயல்களை செய்ய வேண்டும் என்று எண்ணுவான். அன்பு வழியில் தான் புத்தர், ஏசு, காந்தி, நபிகள் நாயகம், விவேகானந்தர் போன்றோர் அறச் செயல்களைச் செய்தார்கள். தாம் மட்டும் அறவழியில் வாழ்ந்தால் போதாது. பிறரும் அற வழியில் வாழ வேண்டும். அப்படிச் செய்து வாழ்ந்தால் அன்பினாலும் அறத்தினாலும் பிணைக்கப்பட்டு பயன் பெறலாம். "அறத்தை செய்" என்று மற்றவர்களுக்கு உபதேசம் செய்தால் மட்டும் போதாது. அதை யார் உபதேசம் செய்கிறாரோ அவரும் அறம் செய்ய வேண்டும். அறம் செய்பவன் தனது மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும் மற்றவர்களது கல்வி, செல்வம், பெண், பொன், மனை போன்றவற்றில் பொறாமைபடக் கூடாது. ஐம்புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) வழி செல்லும், அறத்திற்கு புறம்பான ஆசையை விட வேண்டும். தேவை இல்லாமல் உள்ளத்தில் எழும் கோபத்தை விட வேண்டும். அக்கோபத்தால் வரும் கடும் சொல்லை விட வேண்டும். இவற்றை நீக்கி வாழ்வதே அறம் பிறரிடம் அன்பு செலுத்துவதே சிறந்த அறமாகும். "அன்பின் வழியது உயிர்நிலை" ஒருவன் இல்லறம் தொடங்கும் போதே அன்பை அடிப்படையாகக் கொண்டுதான் தொடங்க வேண்டும். எனவே தான் ஔவையார் தம் நூலில் தொடக்கத்திலேயே அறம் செய்ய விரும்பு என்றார்.

**2. *"ஆறுவது சினம்"***

எளியவர்களிடத்தில் கோபங் கொள்ளாதே. தன்னை விட பலத்தால், பணத்தால் எளியவர்களிடத்து கோபம் கொள்ளல் கூடாது. கோபத்தை விட்டுவிட வேண்டும், கோபம் தான் சினம், வெகுளி என்ற பொருளில் பேசப்படுகிறது. கோபப்படக்கூடாது, கோபப் பட்டால் அந்த கோபம் ஆபத்தானது. சினம் பலிக்கின்ற



இடத்து காப்பவன் தான் சினங் காப்பவன். தன் சினம் பலிக்கும் இடத்தில் அதனை எழாமல் தடுப்பவனே அருளால் தடுப்பவன் ஆவான். தனது சினம் பலிக்காத இடத்தில் அதனை தடுத்தால் என்ன?. தடுக்காமல் இருந்தால் என்ன? செல்லிடம் அல்லிடம் என்பது தவத்தால் தன்னின் மெலியாரையும் வலியாரையும் குறிக்கும்.

"தன்னைத் தான் காக்கின் சினம் காக்க" தன்னைத் தான் துன்பம் எய்தாமல் காக்க, வராமல் காக்க நினைத்தானாயின் தன் மனத்துச் சினம் வராமல் காக்க வேண்டும். காவாக்கால் சினம் தன்னையே கொல்லும்.

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" – சினம் என்னும் நெருப்பு இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும். தனக்கு இடமானவரையேயன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையும் சுடும். சேர்ந்தாரைக் கொல்லி என்பது ஏதுப்பெயர். தான் சேர்ந்த இடத்தைக் கொல்லும் தொழிலது என்றவாறு சேர்ந்தாரை உயர்திணைப் பன்மையால் கூறுவர்.

**3. *"இயல்வது கரவேல்"***

உன்னால் முடிந்தவற்றை மறைக்காமல் செய்து விட வேண்டும். உன்னால் முடிந்த அளவு தருமம் செய்ய வேண்டும். கல்வி, உடை, உணவு முதலியவற்றை இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும். உன்னிடம் செல்வம் இருக்கும் போது அதை இல்லை என்று மறைக்கக் கூடாது. தன்னிடம் கல்விச் செல்வம் இருக்கும் போது அதை மற்றவர்க்குக் கற்பித்தல் வேண்டும். பொருட்செல்வத்தை மறைத்து அறம் செய்யவில்லை என்றால் அது வெள்ளம், கள்வர், வேந்தன், இயற்கையின் சீற்றம் ஆகியவற்றால் அழியும். எனவே உன்னால் முடிந்தவற்றை மறைக்காமல் கொடுக்க வேண்டும் என்றார் ஔவையார்.

4. **“ஈவது விலக்கேல்”**

கொடுத்து உதவும் நல்ல பண்பினை விட்டு விடாதே.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை. ஒரு பொருளும் இல்லாதார்க்கு அவர் வேண்டிய ஒன்றை கொடுப்பதே நல்லது. “மேலுலகம் இல்லை எனினும் கொடுப்பது நன்று,” செல்வம் நிலையில்லாதது, எனவே இருக்கும் போதே ஈவது நன்று. வறியவர்களுக்கு ஈவதே ஈகை. எனவே பொருள் உள்ளவர்கள் மற்றவர்க்கு கொடுத்து உதவும் பண்பினை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். “ஈவது” என்பது வள்ளல்கள் குணம், ஈவதால் கிடைக்கும் இன்பத்திற்கு ஈடு எதுவும் இல்லை. குமணன் தன் தலையைக் கொடுக்க முன்வந்தான். பாரி முல்லைக்குத் தேரை ஈந்தான். ஈகை குணம் உடையவரிடம் அன்பு, கருணை, சாந்தம் ஆகியவை இருக்கும். எனவே “ஈவது விலக்கேல்” என்றார் ஔவையார்.

5. **“உடையது விளம்பேல்”**

உள்ளத்தில் உள்ள இரகசியங்களை எல்லாம் பலர் அறிய கூறாதே. பிறரின் இரகசியம் உனக்குத் தெரிந்தால் அதனை பலர் அறியக் கூறக்கூடாது. கூறினால் ஆபத்து வரும். பகைவரின் இரகசியம் தெரிந்தால் பகைவனை வெல்லலாம் குடும்ப இரகசியங்கள் வெளியில் போனால் அக்குடும்பத்தின் மானம் போகும். நாட்டின் பாதுகாப்பு கருதி ரகசியக்காப்பு உறுதிமொழி பதவியேற்போர் மேற்கொள்கின்றனர்.

6. **“எண் எழுத்து இகழேல்”**

கணிதத்தையும் இலக்கணத்தையும் கடினம் என்று இகழ்ந்து படிக்காமல் இருக்காதே “எண் என்ப ஏனை எழுத்து என்ப” என்றார் வள்ளுவர். எண் என்று சொல்வனவும் எழுத்து என்பதுமாகிய கலைகள் இரண்டினையும் வாழும் உயிர்க்குக் கண் என்பர். எண் என்பது கணிதம் அது கருவியும் செய்கையும் என



இருவகைப்படும். எழுத்து என்றாலே அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்குகிறது இவ்விரு திறமும் அறமுதற் பொருள்களை காண்பதற்குக் கருவியாகலின் கண் எனப்பட்டது. எனவே “எண் எழுத்து இகழேல்” என்றார் ஔவையார்.

7. **“ஒப்புரவு ஒழுகு”**

உலக நடைமுறை அறிந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும். அஃதாவது உலக இயல்பினை அறிந்து செயல்படுதல். உலக நடை வேத நடை போல, அறநூல்களால் கூறப்படுவதன்றி தாமே அறிந்து செய்யுந்தன்மைத் தாதலின், ஒப்புரவு அறிதலென்றார்.

“உயிர் வாழ்வான் ஒத்தது அறிவான்” உயிரோடு கூடி வாழ்பவன் என்பவன் உலக நடையினை அறிந்து செயல்படுபவன் அஃதறிந்து செய்யாதவன் உயிருடையானேயாயினும் செத்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான். உயிரின் அறிவும் செயலும் காணாமையின் செத்தாருள் வைக்கப்படும் என்றார் வள்ளுவர்.

சான்றோரது செல்வம், ஊரில் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம் நீர் நிறைந்து, பயன்படுவதைப் போன்றது.

மேலும் பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற்போன்றது.

8. **“ஔவியம் பேசேல்”**

பொறாமை கொண்டு எதையும் பேசாதே ஒருவன் தன் நெஞ்சத்தில் பொறாமை என்ற குற்றம் இல்லாதவனாய் இருக்க வேண்டும் தனக்குரிய ஒழுக்க நெறியில் வாழ்ந்தால் பொறாமை குணம் வராது என்கிறார் ஔவையார். இக்கருத்தைப் பின்வரும் கதையால் அறியலாம்மற்றவர் வளர்ச்சி கண்டு பொறாத தன்மையே பொறாமை எனப்படுவது. மக்களுக்கு வேண்டாத இழிந்த

குணங்களுள் இது தலையாயது. வள்ளுவரும் அதனை "அழுக்காறு எனும் ஒரு பாவி" என்றார்.

ஒன்பதாம் வகுப்பு மாணவி தாமரை; அவள் கழுத்தில் தங்கச் சங்கிலி; கையில் தங்க வளையல்; விரலில் மோதிரம்; இடையில் பட்டுப் பாவாடை; இத்தகைய ஆடை அணிகளோடு வகுப்பிற்கு வருகிறாள்.

வெண்ணிலாவும் அதே வகுப்பு மாணவி தான்; அவளுக்கும் பட்டாடை இல்லாவிட்டாலும் பருத்தியாடை உண்டு. தங்கவளையல் இல்லாவிட்டாலும் கண்ணாடி வளையல் உண்டு, தங்கச் சங்கிலி இல்லை என்றாலும் பாசி மாலை உண்டு, என்றாலும் தாமரையைப் பார்க்கும் போதெல்லாம் வெண்ணிலாவின் உள்ளம் பொறாமையால் கொதிக்கும்; அது பிறர் ஆக்கம் கண்டு பொறாத உள்ளம்.

பொறாமையின் விளைவு என்ன ஆகிறது? தானும் அவளைப் போல உடுத்த வேண்டும்; அணிய வேண்டும்; என்ற ஆசையைத் தூண்டுகிறது. ஆசை நிறைவேறாத போது கோபம் உண்டாகிறது; கடுஞ்சொல் பிறக்கிறது.

ஆகவே பொறாமை என்னும் ஒரு குணம் பேராசையை உண்டாக்குகிறது. கோபத்தை உண்டாக்குகிறது; கடுஞ்சொற்களை பேசச் செய்கிறது. ஆகவே ஒருவன் பொறாமையற்ற உள்ளத்தைப் பெறுவதையே சிறந்த ஒழுக்கமாகக் கொள்ள வேண்டும். பொறாமையற்ற உள்ளத்தைப் பெறுதலே ஒருவன் பெறத்தக்க பேறுகளுள் சிறந்த பேறாகும்.

பொறாமை என்னும் குணம் மிகவும் இழிந்ததாகும். பகைவரும் உனக்குத் தீங்கு செய்வதற்கு மறந்தாலும் மறப்பர், பொறாமையோ உனக்குத் தவறாமல் தீமையை உண்டாக்கியே தீரும். ஒருவன் மற்றவனுக்குக் கொடுப்பதைப் பார்த்து நீ பொறாமைப் படாதே; பொறாமைப்படின் நீ மட்டுமன்று, உன் சுற்றத்தாரும்



உடுக்க உடையும் உண்ணுவதற்கு உணவும் இன்றி வருந்த நேரிடும். பொறாமை உள்ளம் படைத்தவனிடத்தே செல்வம் நிலைத்து இருப்பதில்லை.

பெறாமை ஒப்பற்ற பாவியாவான்; அவன் இம்மையில் உன் செல்வத்தை அழிப்பான் மறுமையில் நரகத்தில் தள்ளுவான். ஆகவே மாணவ மணிகளே! பிறர் வளர்ச்சி கண்டு பொறாமைப் படாதீர்கள். அதற்கு மாறாக பிறர் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி அடையுங்கள்! நீங்களும் வளர முயற்சி செய்யுங்கள்.

### 9. "ஙப் போல் வளை"

ஙகர எழுத்தைப் போலவே அனைவரையும் அரவணைத்துச் செல்.

"ங" கரம் தனித்து இயங்காது. சொல்லின் முதல் எழுத்தாக வராது தனக்கு முன் ஓர் எழுத்தையும், பின் ஓர் எழுத்தையும் பெற்று நடுநாயகமாய் வரும். உ. ம், அங்கு, இங்கு, எங்கு மக்களால் தனித்து இயங்க முடியாது. ஙகாரம் எல்லோரையும் அரவணைத்து செல்லுதல் போல் உலகிலுள்ள அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். ஒருவன் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது. தான் வாழும் சுற்றத்தைப் பகைக்கக்கூடாது. அனைவரையும் தழுவிச் செல்லும் உளப் பாங்குடன் வாழ வேண்டும்.

காக்கைகள் தமக்கு இரையாயின கண்ட வழி மறையாது இனத்தை அழைத்து அதனோடும் கூட உண்ணும் எனவே "ஙப் போல் வளை" என்றார் ஔவையார்.

### 10. "இணக்கம் அறிந்து இணங்கு"

நற்குணம் மிக்கவர் என்று ஆராய்ந்து பார்த்து அறிந்த பின்பே ஒருவருடன் நட்புக் கொள்ள வேண்டும்.

இக்கருத்தைப் பின் வரும் நீதிக் கதையால் அறியலாம்.

**ஏமாந்த சிங்கம்**

நெருக்கடி நேரத்தில் கூட இருந்து உதவுபவனே நண்பன்.

நேரக் கூடாத நெருக்கடியை உண்டாக்கி அதில் சிக்க வைப்பவன் நண்பன் அல்ல.

திறமையைவிடச் சமயோசிதப் புத்தி சிறந்தது என்பர். திறமை உள்ளவனுக்கே சமயோசிதப் புத்தி பலன் தரும் ஒரு சிங்கம் காட்டில் தன் குடும்பத்துடன் வாழ்ந்தது. அதன் உடலில் வலிவுள்ளவரை அதன் குடும்பம் அதனைத் தலைவனாக ஏற்றது. சிங்கம் முதுமையால் தளர்ந்த போது குடும்பம் அதனை தனியே விட்டு அகன்றது. கிழச் சிங்கத்திற்கு ஒரு நரி நண்பனானது. அது எப்போதுமே தன் தந்திரத்தாலேயே வாழ்ந்தது. ஏமாற்றுதலும், சூழ்ச்சியுமே அதன் வாழ்க்கை முறை. தன் உடல் வலிவும் திறமையும் குன்றியவுடன் சிங்கத்திற்கும் அந்தத் தந்திரம் உதவும் என்று தோன்றிற்று.

சிங்கமும் நரியும் சேர்ந்து வேட்டைக்குச் செல்லும். நரி வழிகாட்டியபடி சிங்கம் ஒரிடத்தில் இறந்தது போல் படுத்திருக்கும். அதனைக் கண்ட மற்ற மிருகங்கள் பயமின்றி அருகில் நடமாடும். நரியின் குறிப்பறிந்து சிங்கம் திடீரென எழுந்து அந்த மிருகத்தைத் தாக்கிச் சாப்பிடும். நரிக்கு அது உண்ட மீதி உணவே போதும். இரண்டும் சுக ஜீவனம் செய்தன.

ஒரு நாள் சிங்கமும் நரியும் செல்லும் பாதையில் யானைக் கூட்டம் வந்தது. சிங்கத்திற்கு யானையைக் கொன்று தின்ன மிகுந்த ஆசை. நரிக்கும் யானை மாமிசத்தில் ஆசை. நரி சிங்கத்தை இறந்தது போல் படுக்கப் பணித்தது. சிங்கமும் சபல புத்தியால் இதனை ஏற்றது. யானைக் கூட்டம் வேகமாக வந்தது. நடுவில் படுத்திருந்த சிங்கத்தின் மீதேறி மிதித்துக் கொண்டே சென்றது. நரி சூழ்நிலையை உணர்ந்து முன்னரே ஓடிவிட்டது



கூட்டமாக வருகின்ற யானைகளைத் தான் ஒருவன் எதிர்க்க முடியுமா? அதற்கான வலிமையும் திறமையும் உள்ளனவா என யோசிக்காத சிங்கம் நரியின் தந்திரத்தை நம்பி மிதிபட்டுச் செத்தது.

**11. “தந்தை தாய்ப் பேண்”**

**“எப்போதும் பெற்றோரை நன்கு பாதுகாப்பாயாக”**

அரிய இப்பிறவிக்குக் காரணமாகிய தாயும் தந்தையும் வணக்கத்திற்கு உரியவர்கள். பாலூட்டிச் சீராட்டி பாசத்தைப் பொழிந்து வளர்க்கும் தாயும் சமுதாயத்தில் நன்னிலை பெற கல்வி அறிவைத் தேடித்தந்த தந்தையும் முதல் வணக்கத்திற்கு உரியவர்கள். வேதமும் “மாத்ரு தேவோ பவ” , “பித்ரு தேவோ பவ”, “ஆசார்ய தேவோ பவ” என்று முறையே தாய், தந்தை, ஆசிரியர் ஆகிய மூவரையும் தெய்வமாக வழிபடவேண்டும் என்று கூறுகிறது. இதனாலேயே ஔவையார் கொன்றை வேந்தனில் தாயும் தந்தையும் குழந்தையால் அறியப்படுகின்ற முதல் தெய்வம் என்பது தோன்ற “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்றார். தாய் தந்தையாரை முதுமைக்காலத்தில் பெற்ற குழந்தைகள் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அன்பும் ஆதரவும் அளித்தல் வேண்டும். அவ்வாறு செய்யின் முதியோர் இல்லங்கள் குறையும். இதனாலேயே நம் நாட்டில் முற்காலத்தில் கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை இருந்து வந்ததும் முதியோர்கட்கு மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட்டு வந்ததும் எண்ணி மகிழ்த்தக்கது.

**12. “நன்றி மறவேல்”**

பிறர் செய்த நல்ல உதவியை என்றும் மறவாதே

தனக்கு முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் கைமாறாகக் கொடுத்தாலும் ஒப்பாகாது.

ஒருவன் செய்த உபகாரம் அளவைப் பொறுத்து சிறிதாயிருந்தது, ஆயினும் காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப்பெரியது ஆகும்.

தமக்கு தினைத்துணை உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும் அதனை நற்குணமுடையோர் பனையளவாகக்கருதுவர்.

நல்லோர் உதவியவரை ஏழ்பிறப்பிலும் நினைப்பர்.

ஒருவன் செய்த நன்மையை மறப்பது ஒருவர்க்கு தருமம் அன்று அவன் செய்த தீமையைச் செய்த பொழுதே மறப்பது நன்று.

பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம். ஆனால் ஒருவன் செய்த நன்றியை மறந்தவனுக்கு அஃது இல்லை என்கிறார் வள்ளுவர்.

### 13. "இளமையில் கல்"

இளம் பருவத்திலே கற்க வேண்டியனவற்றைக் கசடறக் கற்றுக் கொள்.

"கல்வி கற்றல்" என்றது அறநூலும், நீதிநூலும் கற்றல் ஆகும். ஒருவன் கற்கும் நூல்களைப் பழுதறக் கற்க வேண்டும். இளமைப் பருவத்திலேயே கல்வி கற்க வேண்டும். அச்சமயம் பசுமரத்தாணி போல கல்வி மனதில் பதியும். இளமையில் கல்லாதன கல்வி அல்ல. இளமைப்பருவம் ஒர் துடிப்பான பருவம். கற்பனை நிறைந்த கவலை சூழாத பருவம், மனோபாவமும் உடல்சக்தியும் மிகுந்த பருவம் அப்பருவத்தினை வீணடிக்காமல் கல்வி கற்பது நல்லது. நால்வகை வேதங்களையும் கற்கும் காலம் இளமை தான். கவலை என்பது தெரியாத பருவம், சுதந்திரமான பருவம் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத பருவம். எனவே இளமையே ஐம்புலன்களை அடக்கி கற்க வேண்டிய நூல்கள்



அனைத்தும் கற்கும் காலம். ஆதலின் "இளமையில் கல்" என்றார் ஔவையார்.

### 14. "காப்பது விரதம்"

பிற உயிர்களைப் பாதுகாப்பதே சிறந்த நோன்பகும். மேற்கொண்ட நோன்பை விடாமல் செய்வதே விரதமாகும். ஐம்புலன்களை அடக்கி மனதினை ஒரு முகப்படுத்தி இறைவனை நினைத்தல் விரகமாகும். விரதத்தில் புலால் உணவு உண்பதில்லை, அதனால் பிற உயிர்களைக் கொல்லாமல் இருக்க முடிகிறது. விரதத்தில் மனிதன் தன் போக்குப்படி போகவிடாமல் மனக் குதிரையை அடக்க முடிகிறது. விரதத்தை எல்லா மதத்தாரும் சமயத்தாரும் ஏற்றுக் கொள்கிறார்கள். விரதம் இருப்பதால் வைராக்கியம் ஏற்படுகிறது. விரதங்களில் சில அறவியல் முறைகள் உள்ளன. விரதமிருந்து அவ்விரதத்தை முடிக்கும் நாளில் ஏழை எளியவர்களுக்கு அன்ன தானம் செய்தல் போன்ற தரும செயல்கள் நடக்கின்றன. விரதம் இருப்பதால் நம் உடல் ஒரே சீராக இருக்க வகை செய்கிறது. விரதம் இருப்பவர் தான் விரதம் இருப்பதோடு மற்றவர்களையும் விரதத்தில் ஈடபடுத்துவது மிகச் சிறப்பானது. காந்தியடிகள் மௌன விரதம் இருப்பார், உண்ணா நோன்பையும் கடைப்பிடிப்பார். இந்திய விடுதலைக்கு அவரது நோன்பும் விரதமும் மிகவும் உதவியாக இருந்தன. விரதங்களில் மிகச் சிறந்தது மௌனவிரதம். ரமணர் பல ஆண்டு காலம் மௌன நிலையில் இருந்தார் என்பர். மௌன நிலையிலிருந்து கொண்டே பக்தர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடையை மௌனத்திலேயே விளக்கினார் என்பர். விரதங்கள் பல இல்லறத்தார் மேற்கொள்ளும் விரதங்கள், துறவறத்தார் மேற்கொள்ளும் விரதங்கள் என்று உள்ளன. விரதத்தை வீட்டிலேயே மேற்கொள்ளலாம் துறவிகள் நீண்ட நாள் விரதத்தை முக்கியமாகக் கடைப்பிடிப்பார். உலக

நன்மைக்கு துறவிகள் இருக்கும் விரதங்களும் இல்லறத்தார் இருக்கும் விரதங்களும் மிகவும் பயன்படுகின்றன.

இறையருளைப் பெற தவம் வேண்டும். தவத்தில் இருக்க விரதம் வேண்டும். விரதமிருக்க ஐம்புலன் அடக்கம் வேண்டும். ஐம்புலன்கள் அடங்க மன அடக்கம் வேண்டும் மனம் அடங்க மௌனம் வேண்டும். மௌனத்தில் இருக்க கவனச்சிதறல் இருக்கக்கூடாது. மனதை ஒருமுகப்படுத்தி இறையருளை அடைய விரதம் உதவுகின்ற காரணத்தாலும், விரத காலத்தில் புலால் மறுத்து வாழ்வதாலும் பிறர் உயிர்கள் நலமுற வாழ்வதாலும் காப்பது விரதம் என்றார் ஔவையார்.

### 15. *"கீழ்மை அகற்று"*

பழி பாவம் தரும் இழிந்த செயல்களைச் செய்வதை அறவே நீக்குதல் ஆகும்.

இழிந்த செயல்களாவன. பொறாமை கொள்ளுதல், செய்ந்நன்றி மறத்தல், நடுவு நிலைமை தவறுதல், பிறனில் விழைதல், திருடுதல், பொய் பேசுதல், புறங்கூறுதல், தாழ்ந்தவருடன் நட்பு கொள்ளுதல், கள்ளுண்ணுதல், கோபப்படுதல், பிற உயிர்களைக் கொல்லுதல், தன்னிலையில் தாழ்தல் முதலியனவாகும். மேற் கூறியவை துன்பத்தையே தருவன. ஆதலால் அவற்றை நீக்கி வாழ்தல் வேண்டும் என்பது தோன்ற "கீழ்மை அகற்று" என்று கூறினார்.

### பயிற்சி வினாக்கள்

**I. *ஒரிரு வரிகளில் விடையளி***

1. தமிழில் உள்ள அறநூல்கள் எவையேனும் இரண்டினைக் கூறு.
2. ஔவையாரின் அறநூல்கள் எவையேனும் இரண்டினைக் கூறு.



3. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" - இதில் நான்கு, இரண்டு என்பன எவற்றைக் குறிக்கின்றன?
4. வாழ்வியல் உறுதிப் பொருட்கள் நான்கினைக் கூறு?
5. ஒறுத்தல் - இச்சொல்லின் பொருள் யாது?
6. அறநூல்கள் கூறும் இருவகை அறங்கள் யாவை?
7. சிவபொருமான் அணிந்துள்ள மாலை எது?
8. "என் கடன் பணி செய்து கிடப்பதே"- என்று வாழ்ந்தவர் யார்?
9. அன்பு வழியில் வாழ்ந்து உலகப் புகழ் பெற்றோர் இருவரைக் கூறு.
10. ஐம்புலன்கள் - எவை?
11. ஔவையார் எச்செயலைச் செய்ய விரும்ப வேண்டும் என்றார்?
12. சினம் காக்கப்பட வேண்டிய இடம் எது?
13. "சேர்ந்தாரைக் கொல்லி" என திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?
14. எதனை மறைத்தல் கூடாது என்கிறார் ஔவையார்?
15. இகழத் தகாதவை - எவ்விரண்டும் என ஔவையார் கூறுகிறார்.
16. வள்ளுவர் உயிர்வாழ்வானாக யாரைக் குறிக்கிறார்?
17. நன்று, நன்றன்று என்று வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
18. கல்வி கற்க ஏற்ற பருவமாக ஔவையார் எப்பருவத்தினைக் குறிப்பிடுகிறார்?
19. விரதமாவது யாது?
20. கீழ்மைச் செயல்களை அகற்ற வேண்டியதன் காரணம் என்ன?

**II.** பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி.

1. ஔவையார் "ஆறுவது சினம்" - என்று கூறியதை விளக்கு.
2. "இயல்வது கரவேல்" - விளக்கம் தருக.
3. "ஙப் போல் வளை" - வாயிலாக ஔவையார் உணர்த்தும் நீதி என்ன?
4. யாருடன் நட்பு கொள்ள வேண்டும் என ஔவையார் கூறுகிறார்?
5. ஔவையார் "இளமையில் கல்" எனக் கூறியது ஏன்?
6. கீழ்மைக் குணங்களாக குறிப்பிடப்படுவன யாவை?

**III.** ஒரு பக்க அளவில் விடையளி

1. "அறம் செய்" என்று கட்டளையிடாமல் ஔவையார் "அறம் செய விரும்பு" என்றது ஏன் என்பதை விவரி.
2. "ஈவது விலக்கேல்" வாயிலாக ஔவையர் வலியுறுத்தும் ஈகையை விவரி.
3. "எண் எழுத்து இகழேல்" என்று கூறக் காரணம் என்ன.
4. "ஒப்புரவு" - என்பதன் பொருளைக் கூறி ஔவையார் கூறும் கருத்தினை விவரி.
5. "ஔவியம் பேசேல்" - என்னும் வாக்கியத்தை விவரி.
6. தந்தை தாய்ப் பேண் - என ஔவையார் கூறியதன் இன்றியமையாமையை விவரி
7. நன்றி மறவாமையை ஔவையார் வழிநின்று விவரி.
8. "கீழ்மை அகற்று" என்ற ஔவையின் வாக்கை விவரி.

**IV.** நான்கு பக்கங்கட்கு மிகாமல் விடையளி.

ஔவையார் ஆத்திச்சூடி வாயிலாக கூறும் அறக் கருத்துகள் ஏதேனும் ஐந்தினைத் தொகுத்துக் கூறு.



### 4.1.2 கொன்றைவேந்தன்

ஆத்திசூடியைத் தொடர்ந்து கொன்றை வேந்தனில் அறக் கோட்பாடுகளை ஔவையார் கூறுகிறார்.

கொன்றைப்பூமாலை அணிந்த சிவனது செல்வனாகிய விநாயகனின் திருவடிகளை எப்பொழுதும் புகழ்ந்து பாடி வணங்குவோம் என்று தொடங்குகிறார்.

**1. *"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"***

நாம் முதன் முதலில் கடவுளாக அறிந்து கொண்டவர்கள் தாயும் தந்தையும் தான். மாதா, பிதா, குரு, தெய்வம் இந்த நான்கில் முதல் இருவர் மாதா, பிதா நமக்கு தெய்வம். தாயை உணர்ந்தவன் தெய்வத்தை உணர்ந்தவன் ஆகிறான். இன்று உலகில் மக்கள் மாக்களாக இருப்பதற்குக் காரணம் மாத்ரு (தாய்) பக்தி, பித்ரு (தந்தை) பக்தி இல்லாதது தான். தன் சுயநலத்தால் தன் சுய தேவையை பூர்த்தி செய்து கொள்ளப் பெற்ற தாயை தந்தையை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகிறான். தாயின் பெருமை தெரியாதவர்கள் தாயை, தந்தையை அவர்களது முதுமையில் அவர்களது மனதை துன்பப்படச் செய்கிறார்கள். தங்கள் மகன் தனது முதுமையில் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கைப் பெற்றோர்களிடம் தற்போது குறைந்து வருகிறது. இதற்கு அயல் நாட்டு மோகத்.தையும் ஒரு காரணம் என்று சொல்லலாம். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தது என்பர். "தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொற் மிக்க மந்திரமில்லை" தாய் தந்தையைப் பேண வேண்டும் என்று சொன்ன ஔவை கொன்றைவேந்தனில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்கிறார் தாயையும் தந்தையையும் அறிந்து தொழுது வணங்குபவன் விநாயகனைப் போல் எல்லா நலமும் பெற்று வாழலாம். விநாயகர் தாய் தந்தையரே உலகம் என்று சொல்லி

அவர்களைச் சுற்றிவந்து மாங்கனி பெற்றவர். ஆகவே தாய் தந்தையரைத் தொழுது வணங்கி அவர்களுக்குத் தொண்டு செய்தல் வேண்டும். இத்தொண்டே நான்கு வேதங்களை, ஆறு சாஸ்திரங்களை, கற்றதற்கு சமம். உலகை ஆண்ட பெருமையும், மகிழ்ச்சியும் ஆகும். எனவே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றார் ஔவையார்.

**2. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**

நாளும் தவறாது கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குவது மிகவும் நல்லது. தாய் தந்தையரை முதலில் அறியும் தெய்வமாக்கிய ஔவையார் "இறைவனைப் பின் அறியும் தெய்வமாக" க் கூறுகிறார். அத்தெய்வ வழிபாட்டுக்கு ஆலயமும் அதில் தெய்வ வடிவங்களும் அவற்றின் ஆராதனைகளும் மனிதமன ஒரு நிலைப் பாட்டிற்கும் ஆதாரமாக விளங்கியமையால் ஆலயம் சென்று வணங்குவதை ஔவையார் வற்புறுத்தியுள்ளார். மேலும் அக்காலத்தில் ஆலயங்கள் ஊர்ப் பொது மன்றங்களாகவும் கல்விக் கூடங்களாகவும், கலை வளர்க்கும் இடங்களாகவும் விள்கியமையால் யாவரும் சென்று பயன் அடையும் இடமாக ஆலயங்கள் விளங்கியதாலும் ஆலயம் சென்று ஆண்டவனைத் தொழுதல் மிக நன்மை தரும் ஒன்றென ஔவையார் கூறினார்.

**3. "இல்லறம் அல்லது நல்லறம் அன்று"**

இல்லற வாழ்வே நல்லறச் செயலாகும். மனித வாழ்வு இல்லறம் துறவறம் எனும் இரு பேரறங்களாகப் பிரிக்கப்படுகின்றது.

இவற்றுள் இல்லறம் என்பது மனைவி மக்களோடு, சேர்ந்து பெற்றோர், உற்றோருடனும் தெய்வம் போற்றி நீத்தார் கடன் செய்து விருந்தோம்பி செல்விருந்தும், வருவிருந்தும் பாதுகாத்து அறவழியில் பொருளீட்டி செய்யப்படுதலின் இதுவே



சிறந்த அறமாக கருதப்பட்டது. துறவறம் என்பது ஒருவன் தன் புலன்களை அடக்கி மனதை ஒரு வழிப்படுத்தி உடலை வருத்தி நெருப்பிலும் நீரிலும் கிடந்து தவம் செய்து இறைவனை உணரும் நிலையை அடைவது துறவு.

**4. "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்"**

மற்றவர்களுக்குக் கொடுக்காதவனுடைய செல்வத்தைத் தீயவர்கள் கவர்ந்து விடுவார்கள்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்குங் கேடு கெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டு ஆவிதான் போயினபின் யாரோ அனுபவிப்பார்.

தேடிய செல்வத்தை அறவழியில் செலவு செய்து அதனால் கிடைக்கும் இன்பத்தை உணர வேண்டும். கோயில் கட்டுதல், மருத்துவமனை, கல்விச்சாலை போன்றவற்றிற்கு செலவு செய்து புண்ணியத்தைப் பெறலாம்.

இளமை நிலையானது அல்ல. இளமை இன்பம் என்று நினைத்து செல்வத்தைப் பல வழிகளில் செலவு செய்து முதுமையில் நோய்க்கு அடிமையாவதை விடத் தேடிய செல்வத்தை நல்வழியில் செலவு செய்தல் நல்லது. இல்லையேல் ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் என்று ஔவை பாடியது உண்மையாகிவிடும்.

**5. "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்"**

ஊருடன் ஒத்து வாழாமல் ஒருவன் பகை கொண்டால் குடும்பத்துடன் அழிவான்.

ஒருவன் தன் ஊரின் மேல் அன்பு இல்லாமல் இருந்தால் ஊரே அவனைப் பகைக்கும். அதுவேயன்றி வலிய துணை

இல்லாதவனை பகைவன் எளிதில் வெல்வான் ஊருடன் ஒருவன் ஒத்து வாழ்ந்தால் ஊரே அவனுக்கு உதவும், ஆகையால் பகையை வளர்த்துக் கொள்ளாதே என்பது இதன் பொருள். இதைத்தான் ஔவையார் தம் பாடலாகிய ஆத்திசூடியில் "மாற்றானுக்கு இடங்கொடேல்" என்று கூறியுள்ளார். அதாவது பகைவனுக்கு எந்த வகையிலும் சிறிதும் இடம் கொடுத்து விடாதே என்றார். உத்தமனாயிரு - ஊருக்கு உழைக்கும் நல்லவனாக இரு - ஊருடன் கூடி வாழ் - ஊரில் உள்ள நல்லவர்களுடன் உறவு கொண்டு வாழ்க - எல்லோரிடமும் அன்புடன் பழக வேண்டும். "பலர் கை சேர்ந்தால் பகையை வெல்லலாம்" "தேசத்தோடு ஒத்து வாழ்" போன்ற மொழிகள் தோன்றின.

**6. "ஐயம் புகினும் செய்வனச் செய்"**

பிச்சை எடுக்கும் அளவுக்கு வறுமை அடைந்தாலும் செய்யத்தக்க நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். பிச்சை எடுத்தாவது கல்வி கற்க வேண்டும். கல்வி கற்று பின் நல்ல வழியில் வாழ வேண்டும். மறந்தும் தீய செயல்களைச் செய்யக் கூடாது வறுமை வந்த காலத்தில் கூட சான்றோர்கள் பழி பாவத்திற்கு அஞ்சி செய்யத்தகாத செயல்களை செய்யமாட்டார்கள்.

ஈன்றாள் பசிகாண் பானாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

- என்றார் வள்ளுவர்

எனவே ஐயம் புகினும் செய்வனச் செய் என்றார் ஔவையார்.

**7. "ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்"**

வேதம் முதலான மறை நூல்களை நாளும் படிப்பதைவிட ஒழுக்கமாய் இருப்பதே அந்தணர்க்கு அழகு மற்றும் நல்லது. ஒருவன் கல்வியை வாழ்வின் எந்தப் பகுதியிலும் (வயதிலும்)



தொடங்கி முடித்து அறிவெய்தலாம் அவ்வாறு கல்வி பெறுவதை சமுதாயமும் ஏற்றுக் கொள்ளும். கல்வி கற்றவரைப் போற்றி மதிக்கும் ஆனால் வாழ்வின் எந்தப் பகுதியிலும் ஒழுக்கக் கேடான செயலை ஒருவன் செய்துவிட்டால் அவனைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது. திருந்தியதாகவும், தண்டனை பெற்றதாகவும் கூறினாலும், சமுதாய அங்கீகாரம் என்பது ஒழுக்கம் தவறியவனுக்குக் கிடைக்காது. இதனாலேயே திருவள்ளுவர்

மறப்பினும் ஒத்துக் கொள்ளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

என்கிறார்.

**8. "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை"**

பிறரைக் குற்றம் சொல்லிக் கொண்டேயிருப்பவர்களுடன் உறவினர்கள் சூழ்ந்திருக்க மாட்டார்கள்.

குறைபாடு உடையவனே மனிதன் - மனிதனிடம் அவ்வாறு குறைபாடு இருத்தல் இயல்பும் ஆகும். தாமரை அழகான மலர். அது சேற்றிலே தான் முளைக்கிறது, வளர்கிறது. அதனால் அந்த தாமரையை நாம் வெறுத்து விடுகிறோமா! இல்லை. ரோஜா மணம் மிக்க மலர். அதனைச் சுற்றியுள்ள முட்கள் அதனை பறிக்க வருவாரை குத்துகின்றன. அதனால் அதை விரும்பாமல் இருக்கின்றோமா? அதைப் போலவே மக்களிடம் உடற் குறையும் இருக்கலாம். குணக் குறையும் இருக்கலாம். அதனை ஒதுக்கி நிறைவினை பாராட்டுகின்ற உள்ளம் நமக்கு வர வேண்டும். இதனையே "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்கிறார் ஔவையார்.

**9. "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி"**

அழிகின்ற உனது பிற செல்வங்களை விட என்றும் எதனாலும் அழியாத கல்வியே சிறந்தது. உற்றுழி உதவியும் உறு

பொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே. சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும், வேற்றுமை தெரிந்த நாற் பாலுள் கீழ்பால் ஒருவர் கற்பின் மேற்பால் ஒருவர் அவர்கட்படும்.

வெள்ளத்தால் அழியாது, வேந்தரால் கொள்ளமுடியாது, வெந்தனலால் வேகாது (அழியாது), கள்வரால் திருட முடியாது, அப்படிப்பட்ட பெருமை உடையது கல்வி.

### 10. "சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை"

தனது பரம்பரையை அழியாமல் காத்திட மனைவியோடு கூடிக் குழந்தைப் பேற்றுடன் வாழ்தலே சிறப்பு.

இவ்வுலகில் தோன்றிய உயிரினங்கள் அனைத்தும் பல்கிப் பெருக வேண்டும் என்பது இயற்கையின் நியதி. இதற்கேற்ப தாவரங்களும் விலங்குகளும் தங்கள் இனத்தைப்பெருக்கிக் கொண்டுள்ளன. மனிதன் இதற்கு விதிவிலக்கல்ல. இயற்கையும் இனப்பெருக்கத்திற்காகவே மனிதரை ஆணாகவும், பெண்ணாகவும் படைத்திருக்கிறது. பகுத்தறிவுடைய மனிதன் இயற்கையின் விதிகளுக்கு கட்டுப்பட்டு தன் மனைவியருடன் கூடி நன் மக்களைப் பெற்று வாழ வேண்டும். இதனையே ஔவையார் "சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை" என்கிறார்.

### 11. "சுற்றத்திற்கு அழகு சூழ இருந்தல்"

ஒருவரோடு ஒருவர் நன்மையிலும் தீமையிலும் கூடி வாழ்வதே உறவினர்க்கு அழகிய பண்பாகும்.

நீர் வற்றிய குளத்தில் பறவைகளோ தங்காமல் நீர் நிறைந்த மீன் இருக்கும் வேறு குளத்தை நோக்கி பறந்து விடும். ஆனால் அந்த குளத்திலேயே வளர்ந்திருக்கும் கொட்டி, அல்லி, நெய்தல் ஆகிய செடிகள் நீரற்ற போதும் அங்கேயே தங்கி அக்குளத்தோடு அழிதலைக் காண்கிறோம். ஒருவர் செல்வந்தனாய் இருந்த காலத்தில் அவனோடு சேர்ந்திருந்து.



மகிழ்ந்த சுற்றத்தார்கள் அவன் வறுமையுற்ற காலத்தில் நீரற்ற குளத்து பறவைகளைப் போல் பறந்து செல்லுதல் அறமாகாது. அக்குளத்தோடு அழியும் கொட்டி, அல்லி, நெய்தல் போன்ற செடிகளைப் போன்ற சுற்றத்தார்களே உண்மையான சுற்றத்தார்கள். அவர்கள் வாழ்விலும், தாழ்விலும், சாவிலும் கூடி இருப்பதையே பெருமையாகக் கொள்வர். இத்தகைய சுற்றத்தார்களே நம்மை சூழ இருத்தல் அழகு என்று ஔவையார் கூறுகிறார்.

### 12. "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"

பிற மந்திர ஆலோசனைகள் எல்லாம் தந்தையின் அறிவுரைக்கு ஈடாகா.

குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாயையும் அறிவு வளர்ச்சிக்குத் தந்தையையும் என ஆன்றோர் கூறுவர் "அவையத்து முந்தியிருப்பச் செயல்" - தந்தையர் கடனாக வள்ளுவர் கூறுவதாலும், தம்மைக் காட்டிலும் தம் மக்கள் அறிவுடையவராய் இருத்தலை தந்தையர்கள் விரும்பியதாலும், சான்றோனாக்குதல் தந்தைக்கு கடன் - என புறநானூறு கூறுவதாலும் அறிவுடைமையே ஒரு மனிதனை முழு மனிதனாக மாற்றுவதாலும் அவ்வறிவுக்கு வித்திடுகிற தந்தையின் சொல் மந்திரமாகப் போற்றப் பட வேண்டும் என்பதையே ஔவையார் "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்றார்.

தந்தை சொல் கேட்பவரை உலகம் மதிக்கும் எனவே தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்றார் ஔவையார்.

### 13. "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை"

பெற்ற தாயை விட ஒருவனுக்கு சிறந்த கோயில் வேறொன்றும் இல்லை.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனயே". தாயே ஒருவனுக்கு தெய்வம். எல்லா

சமயத்தாரும் தாயை தெய்வமாகக் கொள்கின்றனர். தாயில்லாமல் நாமில்லை. "தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை", என்பது பழமொழி, தாய்மொழி, தாய்நாடு என்றெல்லாம் தாயின் பெருமை பேசப்படுகிறது. தாய் நம்மை பத்து மாதம் சுமந்து பெற்றவள். நாம் குடியிருந்த வயிறு, ஒரு கோயில் போன்றது. எதை வேண்டுமாயின் விலை கொடுத்து வாங்கலாம் தாயை யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாது. தனக்குள்ளதை நமக்கு வழங்குபவள். பெற்றவுடன் பாலமுது ஊட்டிப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பவள் தாய். ஆதிசங்கரர் போன்றோர் தாயின் பெருமையை புகழ்ந்து கூறியுள்ளனர். தாயே வீரத்தைத் தரும் பராசக்தியாய், கல்வியைத் தரும் கலைமகளாய், செல்வத்தைத் தரும் திருமகளாய் இருக்கிறாள். எனவே கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குதல் போல் தாயையே கோயிலாக, நினைத்து வணங்கலாம். மனிதன் நிம்மதியாக கவலை இல்லாமல் தெய்வ அருளைப் பெற தெய்வத் தாயின் அருள் வேண்டும். எனவே "தாயிற் சிறந்த கோயிலில்லை" என்றார் ஔவையார்.

**14. "தோழனோடும் ஏழமை பேசேல்"**

நெருங்கிப் பழகிய நண்பர்களிடத்திலும் தனக்குற்ற வறுமை நிலையை எடுத்துக் கூறக் கூடாது.

தோளுக்கு மிஞ்சினால் மகனையே தோழனாகப் பாவிக்க வேண்டும் என்பார்கள். நண்பர்களிடம் நட்பை பெறும் போது அவர்களது குணத்தை ஆராய்ந்து நட்பை வைத்துக் கொள்ள வேண்டும். உதட்டளவு நட்பு, உள்ளத்தளவு நட்பு, எதிர்பார்ப்போடு பழகும் நட்பு, பொழுது போக்குவதற்கான நட்பு என்றெல்லாம் உள்ளது. எப்படிப்பட்ட நண்பனாக இருந்தாலும் அவனிடம் ஏழ்மை பேசக்கூடாது. இந்த ஏழ்மையைப் பயன்படுத்தி குடும்பத்தையே அழிக்க வல்ல ஆற்றலுடையவனாக மாறுவான். இப்படிப்பட்ட



தோழனால் குடும்பத்தில் பிரச்சனை, கணவன் மனைவிக்குள் பிரச்சனை, பணியாற்றும் இடத்தில் பிரச்சனை என்று ஏற்பட்டு பின்பு அவனே பிரச்சனையாகி விடுவான். நண்பனை ஓர் எல்லைக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் நண்பர்கள் உதவியால் முன்னேற்றம் அடைந்தவர் சிலர், நண்பர்களால் வேதனையடைந்தவர் பலர். தோழனோடு ஏழமை பேசாதிருத்தல் நன்று. நம் குறையைக் கேட்டு அனுதாபப்படுவது போல் நடிப்பர். பின்பு நம்மைப்பற்றி மற்ற நண்பர்களிடம் குறை கூறுவர். நட்பு என்பது பிரிந்த பின்னரும் நண்பனைப் பற்றி குறை கூறாது இருத்தலாகும். ஆகவே தோழனோடும் ஏழ்மை பேசேல் என்று ஔவையார் கூறுகிறார்.

**15. "நோன்பு என்பது கொன்று தின்னாமை"**

பிற உயிர்களைக் கொன்று தின்னாமல் இருப்பதே விரதம் இதுவே உயர்ந்த நோன்பாகும்.

ஓர் உயிரையும் கொல்லாதவனையும் புலாலையும் உண்ணாதவனையும் எல்லா உயிரும் கை குவித்துத் தொழும். எனவே பிற உயிர்களைக் கொன்று தின்னாமல் இருப்பதே சிறந்த விரதம் நோற்பதன் அடிப்படையாகும் இதையே "நோன்பு என்பது கொன்று தின்னாமை" என்று ஔவையார் கூறியுள்ளார்.

**பயிற்சி வினாக்கள்**

***I. ஓரிரு வரிகளில் விடையளி***

1. முன்னறி தெய்வம் யார்?
2. எது சாலவும் நன்று?
3. நல்லறம் எது?
4. கருமியின் செல்வத்தை யார் கொள்வர்
5. வேருடன் கெடும் - எப்போது?

6. ஓதலின் நன்று எது என்கிறார் ஔவையார்?
7. சுற்றமில்லை - எப்போது?
8. மெய்ப் பொருள் எது?
9. வந்தி செய்யாமையாவது யாது?
10. உறவினர்களுக்கு அழகு - எது?
11. தந்தையின் சொல் எத்தகையது?
12. ஒருவனுக்குச் சிறந்த கோயில் எது?
13. யாருடன் ஏழமை பேசதல் கூடாது?
14. நோன்பாவது - யாது?
15. வறுமையிலும் சான்றோர்கள் எத்தகையவர்கள்?

**II. பத்து வரிகளில் விடையளி**

1. தாய், தந்தையின் பெருமையாக கொன்றை வேந்தன் கூறுவது யாது?
2. இல்லறத்தை கொன்றை வேந்தன் எவ்வாறு சிறப்பிக்கிறது?
3. பகைமையால் விளையும் கேடாக ஔவையார் கூறுவன யாவை?
4. வேதியரின் ஒழுக்கம் குறித்து ஔவையார் கூறுவன யாவை?
5. கல்வியின் மேன்மை குறித்து கொன்றை வேந்தன் கூறுவன யாவை?
6. தந்தை சொல்மிக்க மந்திர மில்லை - விளக்கு?
7. யாரிடத்தில் தன் வறுமையை எடுத்துரைத்தல் கூடாது?
8. கொல்லமை பற்றி கொன்றைவேந்தன் கூறுவது யாது?

**III. ஒருபக்க அளவில் விடையளி**

1. ஆலயம் தொழுவது பற்றியும், ஈயார் தேட்டை பற்றியும் ஔவையார் கூறுவன யாவை?
2. ஐயம் புகினும் செய்வனச் செய் - விளக்குக?



3. சந்ததி பற்றியும், சுற்றத்தார் பற்றியும் ஔவையார் கூறுவன யாவை?
4. ஔவையார் தாயை எவ்வாறு சிறப்பிக்கிறார்?

**IV. நான்கு பக்க அளவில் விடையளி**

கொன்றை வேந்தன் வாயிலாக ஔவையார் உணர்த்தும் அறத் கருத்துகள் எவையேனும் ஐந்தினை தொகுத்துக் கூறு.

### 4.1.3 மூதுரை

**வினாயகர் வணக்கம்**

பாடல் “வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக் கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு”

**உரை :** பவளம் போன்ற நிறத்தை உடையவனாகிய விநாயகன், தும்பிக்கை முகத்தை உடையவன். அவன் திருவடிகளை நாளும் தவறாது தாமரை மலர் கொண்டு வணங்க வேண்டும். அவ்வாறு வணங்கினால் கல்வியால் வாக்கு வன்மை உண்டாகும். மன ஆற்றல் பெருகும், இலக்குமி அருளால் செல்வம் வளரும். உடல் நோயின்றி நீண்ட நாள் வாழலாம்.

**1. “செய்நன்றி அறிதல்”**

பாடல் “நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

உரை : தளராமல் நிலைத்து நின்று வளர்கின்ற தென்னை மரமானது, தன் வேரால் உண்ட நீரைத் தன் முடியாலே (இளநீர்களாகத்) தருகிறது அது போல நற்குணமுடைய ஒருவனுக்கு

உதவி செய்தால் அவ்வுதவியை அவன் எப்பொழுது திருப்பிச் செய்வானோ என்று ஐயப்பட வேண்டா அவன் நன்றியுடன் உதவியை விரைந்து நமக்குத் திரும்பச் செய்வான்.

இக்கருத்தைப் பின்வரும் கதையினால் அறியலாம்.

**சிறு துரும்பும் உதவும்**

“பயம் தருகின்ற நெருக்கடியின் போது இவர் உதவக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டவர் ஒதுங்குவதையும், தொடர்பே இல்லாதவர் தானே வலிய வந்து உதவுவதையும் காணக்கூடும் மலைபோன்ற பெரியவருக்கு எலி போன்ற சிறிய பிராணியும் உதவக்கூடும். நெருக்கடியில் உதவ வேண்டும் என்ற இளகிய உள்ளமே அவர்களது செயலுக்குச் சக்தியைத் தருகிறது”

மரத்தின் கிளையில் ஊர்ந்து கொண்டிருந்த எலும்பு இலையின் நுனிக்கு வந்துவிட்டது அப்போது வேகமாக வீசிய காற்று இலையை உதிர்த்தது. உதிர்த்த இலை கீழே ஒடும் ஆற்றில் மிதந்தது. அதில் இருந்த எறும்பும் அதன் மேல் இருந்தது. சுற்றிலும் வெள்ளம். எறும்பு நடுங்கியது. அதனைப் பார்த்து மரத்திலிருந்த புறா காய்ந்த நுனிக்கிளையை ஒடித்து இலையின் அருகே போட்டது. இந்தச் சுள்ளி வழியே எறும்பும் கரை சேர்ந்தது. புறாவிற்கு நன்றி தெரிவிக்க எறும்பிற்கு வழி தெரியவில்லை.

அப்போது ஒரு வேடன் வந்தான். புறாவை அடிப்பதற்காக குறி பார்த்தான். எறும்பு அதனைப் பார்த்தது. வெடுக்கென அவன் காலில் கடித்தது. சுரீரென்று ஏற்பட்ட கடுப்பு அவனை நிலை தடுமாறச் செய்தது. புறா அடிபடாமல் தப்பித்தது. எறும்பிற்கு நன்றி தெரிவிக்க அதற்கும் வழி தெரியவில்லை. புறாவிற்கும் எறும்பிற்கும் நேர்ந்த ஆபத்தோ மிகமிகப் பெரிது. அதைத் தடுக்க இரண்டும் செய்த உதவியோ



நேரிடையானது இல்லை. வலிவு மிக்கதும் இல்லை. ஆனால் செய்த உதவியோ பெருத்த ஆபத்தை நீக்கியது. ஆபத்தில் உதவுகின்ற நல்லெண்ணமே அவர்களது சிறு செயலுக்கும் பெருஞ்சக்தியைத் தந்தது.

**2. “நன்மை தரும் செயல்கள்”**

பாடல் “நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று.”

**உரை :** இந்த உலகில் அறிவாலும், குணத்தாலும் சிறந்தவர்கள் சிலர் உண்டு அவர்களைக் காண்பதும் நல்லது. அவர்கள் சொல்லைக் கேட்டு நடப்பதும் நல்லது. அவர்களின் மேலான குணங்களை எடுத்துச் செல்வதும் நன்று. அவர்களோடு நட்பு கொண்டு இருப்பதும் நல்லதாம். அதனால் நமக்கு நல்லறிவும் ஒழுக்கமும் படியும்.

**3. “காலம் அறிந்து செயல்படுதல்”**

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் – மடைத்
தலையில் ஒடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

**உரை :**

கொக்கானது சிறிய மீன்களை ஒடவிட்டு பெரிய மீன்கள் வரும்வரை அடக்கமாயிருந்து வந்ததும் விரைந்து பிடிக்கும். அது போல நல்லறிவுடைய சான்றோர் ஆற்றலை அடக்கி அமைதியாக இருப்பார்கள். அவர்களின் அடக்கத்தை அறியாதவன் அவர்களை வெல்ல நினைத்தால் விரைவில் அழிந்து விடுவான்.

4. ***“கல்வியின் மேன்மை”***

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இட மெல்லாம் சிறப்பு.

உரை : அரசனுக்குத் தன் நாட்டிலே மட்டும் மதிப்பு இருக்கும் கல்விகற்ற அறிஞனுக்கோ சென்ற நாடுகளில் எல்லாம் மதிப்பும் மரியாதையும் இருக்கும் அதனால் ஒரு நாட்டின் மன்னனைவிடக் கல்வி அறிவுடையவனே சிறந்தவனாவான்.

5. **“நல்லோர் இயல்வு”**

பாடல் : “நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

***உரை*** : நாம் நெல்லுக்குப் பாய்ச்சுகின்ற தண்ணீர் வாய்க்கால் வழியில் வீணாக வளர்ந்துள்ள புல்லுக்கும் உணவாகும். அது போல தொன்று தொட்டு வரும் இந்த மண்ணுலகில் பிறர்க்காக வாழும் நல்லவர் ஒருவர் இருந்தாலே, அவருக்காக எல்லார்க்கும் மழை பொழியும் நல்லவர்களால் எல்லாரும் பயன் பெறுவார்.

இக்கருத்தை பின்வரும் கதையினால் அறியலாம்.

***ஈவும் இரக்கமும்***

“பிறர் துன்பம் கண்டு நெஞ்சம் நெக்கிழ்ந்து அவர் துன்பம் துடைக்க முற்படுவதே இரக்கம். தன்னுடையது என்று இதுகாறும் மதித்து வந்ததில் உரிமை உணர்வு நீங்கிப் பிறருக்குப் பகிர்ந்தளிப்பதில் மகிழ்ச்சி காண்பது ஈவும் இரக்கமும், இவை மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றன. “அது ஒரு சிறு



நகரம் மழை பொய்த்ததால் நாடெங்கும் பஞ்சம். எங்கும் பசியும் பட்டினியும் வறுமையும் சூழலை விஷமாக்கி வந்தன. ஒருவருக்கொருவர் உதவுவதற்குக் கூட இயலாத கோரநிலை. மக்களே மக்களை அடித்துக் தின்றனர். அந்நிலையலும் ஈவிரக்கமுள்ள இதயங்கள் ஒன்றிரண்டு ஆங்கங்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டிருந்தன.

ஒரு விதவைத் தாய் நோயுற்றுப் படுக்கையில் இருந்தாள். அவளது ஒரே பெண் சிறுமி எட்டு வயதுள்ளவள். நோயுற்ற தாயால் மகளுக்கு உதவ இயலவில்லை. சிறுமியானதால் மகளால் தாய்க்கு உதவ முடியவில்லை. தொடர்ந்து பட்டினி கிடந்து இருவரும் மெலிந்தனர்.

ஒரு நாள் மகள், தாயின் களைப்பை உணர்ந்து பிச்சை எடுத்து வரக் கிளம்பினாள். எங்கும் பிச்சை போடுவார் யாருமில்லை. ஒரு மரத்தடியில் கிழவி தனக்குக் கிடைத்த மாவைக் கொண்டு ஆப்பம் தயாரித்துக் கொண்டிருந்தாள். அவளிடம் சென்று சிறுமி பிச்சை கேட்டாள். கிழிவியின் இதயம் கனிந்தது. பசியின் கோரத்தை உணர்ந்த அவள் ஒரு ஆப்பத்தை அவளிடம் தந்தாள். சிறுமி தன் தாய் பட்டினியாலும் நோயுற்றும் வாடுவதைச் சொல்லவே கிழவி மேலும் நெகிழ்ந்து மற்றொரு ஆப்பத்தையும் தந்தாள்.

சிறுமி கிழவிக்கு உளமார நன்றி தெரிவித்தாள். வீட்டை நோக்கி வரும் போது ஒரு நாய் அவளை ஏக்கத்துடன் பார்த்தது. பாவம்! அதுவும் உணவைக் கண்டு பல நாட்களாயிருக்கும். வாயிருந்தால் “தாயே எனக்கு உணவு கொடு” என்று கேட்டிருக்கும். வலுவிருந்தால் குரைத்து விரட்டிப் பிடுங்கித் தின்றிருக்கும். வாயில்லாத அந்த ஜீவனின் பரிதாப நிலை கண்ட சிறுமி தனக்காகப் பெற்ற ஆப்பத்தை அதற்குத் தந்தாள். அது ஆவலுடன் சாப்பிட்டதைக் கண்ட சிறுமி தன் பசி நீங்கியதாக உணர்ந்தாள்.

வீட்டினுள் நுழைந்து சிறுமி தாயிடம் நடந்ததைச் சொன்னாள். “நீ பாதி நான் பாதியாக இந்த ஆப்பத்தைத் தின்போம்” என்று சொன்னாள். அதற்குள் வாயிலில் “அம்மா! பசி உயிர் போகிறது, ஏதேனும் தாருங்கள் தாயே” என்ற தீனக் குரல் கேட்டது.

தாய் தன்னிடமிருந்த பாதி ஆப்பத்தை அவனுக்கு அளிக்கச் சென்றாள். சிறுமியும் பாதி ஆப்பத்தால் அவன் பசி நீங்காதெனச் சொல்லிச் தன் பாதியையும் அவனிடம் தந்தாள். அவன் வாயார அவர்களை வாழ்த்திச் சென்றான். இவர்களோ வாழ்த்த வேண்டியவள் அந்தக் கிழவியே என்றனர்.

இவர்களது இந்த இரக்க நிலையைக் கண்ட இயற்கை மனம் கனிந்தது. மழை பொழிந்தது. பக்கத்து நாட்டினரும் பெரிதும் உதவினர்.

பஞ்சம் நீங்கியது. எல்லோரும் இன்புறுவதைக் கண்ட அந்த மரத்தடித் கிழவியும் இந்தத் தாயும் மகளும் சொல்லொணாப் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். நாடு மறுபடியும் பூத்துக் காய்த்துக் குலுங்கியது.

**“கல்லாதான் கற்ற கவி”**

பாடல் : கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினார் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

**உரை** : காட்டில் அழகிய மயில் ஆடுவதைக் கண்டு வான்கோழியும் அதுவாக நினைத்துக் கொண்டு ஆடுமாம். அது போலக் கல்வி அறிவில்லாதவன் கற்றவர்களைப் போல நினைத்துக் கொண்டு நடிப்பான்.

இதைப் பின்வரும் கதையால் அறியலாம்.



**அற்பனுக்கு பெருவாழ்வு**

அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான். தன்டைக்கம் அகன்று வலியவனுடன் போட்டியிட்டு அழிவான் உள்ளத்தால் பெரியவன் நிறைகுடம்-தளும்ப மட்டான் மிகுந்த செல்வம் உடைத்த வணிகள் ஒருவர் நிறைய தான் தர்மங்களைச் செய்யத் தொடங்கினார். எறும்பு காக்கை தாய் முதலியவற்றிற்கு உணவிட்டுப் பின்னர் தான் உண்ணத் தொடங்கினார். எச்சில் இலைகளிலுள்ள பருக்கைகளை மட்டுமே உண்டு வாழ்ந்த காக்கை ஒன்று அவரது கண்ணில் பட்டது, அதற்குத் தினமும் வயிறார அறுசுவை உணவிட்டார்.

சில மாதங்களிலேயே அது தின்று கொழுத்தது, பருத்தது மற்ற காக்கைகளை வணிகரிடம் அண்ட விடாமல் அடாவடி செய்து துரத்தியது, காக்கை இனத்துடன் நில்லாமல் மற்ற பறவை இனத்திற்கும் தானே அரசன் எனத் தன்னைக் காட்டிக் கொண்டது.

மானஸம் என்று ஓர் ஒடை இமயத்திற்கப்பால் உள்ளது. அங்கு வசிக்கின்ற அன்னமொன்று வானின் உச்சியில் இறக்கை நோகப் பறந்ததால் களைப்புற்று இந்தக் காக்கை வசிக்கின்ற மரத்தில் தங்கி இளைப்பாற நினைத்தது.

காக்கை தன் அனுமதியின்றித் தன் மரத்தில் அன்னம் தங்குவதை எதிர்த்தது. மனிதர்கள் தான், தன் இடம் தன் பாதை என்று சண்டையிட்டுக் கொள்வர். பரந்த வானமும் நிழல் தரும் மரங்களும் பறவைகளின் பொதுவுடைமை. தனி ஒரு பறவைக்கு அவற்றில் தனியுரிமை இல்லை. அன்னம் வியந்து ஒதுங்கி நின்றது. காக்கை வலுச்சண்டையில் இறங்கியது தன்னோடு பறப்பதில் போட்டியிட முடியுமா என்று கேட்டது.

அன்னத்திற்கு இந்த போட்டியும் பொறாமையும் பரபரப்பும் அலட்டிக் கொள்வதும் புதிது அது அமைதியுள்ள

மானஸத்தில் வாழ்ந்தது. அலட்டிக் கொள்ளாமல் போட்டி உணர்வே இல்லாமல் உயரப் பறந்து உலகைக் கண்டு சந்தோஷப்படவே தெற்கு நோக்கிப் பறந்து வந்தது. வியப்பும், விளையாட்டு உணர்ச்சியும் உந்தியதால் காக்கையுடன் போட்டியில் கலந்து கொண்டது. காக்கை "சர்" என உயரே எழும்பி அதே வேகத்தில் கீழிறங்கி குறுக்கே பாய்ந்து நடை பழகியது. அன்னத்திற்கு அப்படிப் பரபரப்படைவதில் விருப்பம் இல்லை எனினும் விளையாட்டாக மதித்துத் தானும் அவ்வாறே செய்தது. எங்கும் தங்காமல் ஓய்வு பெறாமல் வெகுதூரம் அவை பறந்தன. எதிரில் கடல் தென்பட்டது கடலைக் கண்டதும் அன்னத்திற்கு ஆனந்தம் பெங்கியது. அதன் மேல் பறக்கத் தொடங்கியது. காக்கைக்குக் கடல் மேல் பறந்து பழக்கம் இல்லை. சில சமயங்களில் கப்பல்களன் கொடி மரங்களில் அமர்ந்து சிறிது தூரம் சென்று திரும்பிவரும். கடலின் பரப்பு பற்றி அது இதுவரை சிந்தித்ததில்லை.

அன்னமும், காக்கையும் பறந்து கொண்டேயிருந்தன. காக்கை களைத்து விட்டது. வீம்பிற்காகத் தான் களைக்காதது போல் சிறிது தூரம் பறந்தது. ஆனால் இறக்கைகள் களைத்து ஓய்ந்து விட்டதால் உயரத்தில் பறக்க முடியாமல் தளர்ந்தன.

தன் வசமின்றி கீழே இறங்கிய காக்கை கடலலையில் மோதியது. மறுபடி சிரமப்பட்டு எழும்பிப் பறக்கத் தொடங்கு முன்னரே அலையில் சிக்கியது. இதைக் கண்ட அன்னம் அதற்கு உதவ முன் வந்தது. காக்கை தீனமான குரலில் அன்னத்தை வேண்டியது. "அன்னமே! எப்படியாவது உயிருடன் என்னை கரை சேர்த்து விடு. என் தகுதியறியாமல் உன்னுடன் போட்டியிட்டேன். உழைத்து உண்ணாமல் பிறர் உணவில் உண்டு கொழுத்து எனக்கு உலகமே அற்பமானதென்ற செருக்கு ஏற்பட்டது. "காக்கை காக்கை தான்", "அன்னம் அன்னம் தான்". என் கொழுப்பும் செருக்கும் குலைந்து



என் சுயநிலை தெளிவாகத் தெரிகிறது. என்னைக் காப்பாய் எனக் கெஞ்சியது. அன்னம் உடனே அதனைத் தன் கால்களால் பற்றி இறக்கைகளால் அன்புடன் அணைத்து கரை சேர்த்து அதன் இருப்பிடத்தில் கொண்டு சேர்த்து தன் வழியே சென்றது. காக்கையை அந்த வணிகர் வழக்கம் போல் கூப்பிடுகிறார். இப்போது மற்ற காக்கைகளுடன் கூடிச் சென்று தன்பங்கையும் விட்டுக் கொடுத்து பகிர்ந்து உணவேற்கிறது. இன்று அது அற்பனல்ல.

## பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி**

1. தென்னை மரத்தின் நன்றி உணர்வினைக் கூறு.
2. சென்றவிட மெல்லாம் சிறப்பு - யார்க்கு.?
3. நல்லார் ஒருவர் இருப்பதால் பெறும் பயனாக மூதுரை கூறுவது யாது?
4. யாரைக் காண்பது நன்று?
5. கொக்கு வாடியிருப்பதன் நோக்கம் என்ன?

**II.** பத்து வரிகளில் விடையளி

1. செய்நன்றி அறிதல் பற்றி மூதுரை கூறுவன யாவை?
2. நன்மைதரும் செயல்களாக ஔவையார் மூதுரையில் என்ன கூறுகிறார்?
3. காலமறிந்து செயல் படுதல் பற்றி மூதுரை கூறுவன யாவை.?
4. கல்வியின் மேன்மையை மூதுரை கொண்டு விளக்கு?
5. நல்லோர் இயல்பினை ஔவையார் மூதுரையின் வாயிலாக எவ்வாறு விளக்குகிறார்?
6. கல்லாதான் கற்ற கவி - என ஔவையார் எதனைக் குறிப்பிடுகிறார்?

**III.** ஒருபக்க அளவில் விடையளி

1. சிறு துரும்பும் உதவும் - என்ற கதையை எழுதி, அக்கதை உணர்த்தும் நீதியை விளக்குக.

2. ஈவும் இரக்கமும் கதையை எழுதி அதனால் விளக்கப்படும் நீதியை எழுதுக.

**IV.** நான்கு பக்க அளவில் விடையளி

1. மூதுரை வாயிலாக ஒளவையார் உணர்த்தும் அறக் கருத்துக்களில் ஏதேனும் இரண்டினை விவரி

2. "அற்பனுக்குப் பெருவாழ்வு" என்னும் கதையில் அறியப்படும் நீதி யாது?

## 4.2 திருவள்ளுவர் கூறும் அறம்

### வள்ளுவரும் குறளும்

திருக்குறள் மிக உயர்ந்ததொரு அறவியல் நூலாகும். "திரு" என்னும் சொல் சிறப்பு, மேன்மை என்னும் பொருள் உணர்த்தும். மேன்மை பொருந்திய (இரண்டு அடிகளைக் கொண்ட) குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் ஆதலால் "திருக்குறள்" என்னும் பெயரைப் பெற்றது.

சுருங்கிய சொற்களால், விரிந்த சிறந்த பொருளை இரண்டு அடிகளால் கூறுவதாலும், வள்ளுவர் கூறும் அறம், மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்பதாலும் இதனை "உலகப் பொது மறை" எனப் போற்றுகின்றனர். சங்கத்தமிழ் இலக்கியப்பகுப்பில் திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்குத் தொகுப்புள் அடக்கப்பட்டு உள்ளது. மனித வாழ்வில் அடைய வேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கு அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவை ஆகும். திருக்குறளில் அறம், பொருள்,



இன்பம், என்ற மூன்று உறுதிப்பொருள்கள் விளக்கப்பட்டுள்ள மையால் "முப்பால்" என்னும் பெயரைப் பெற்றது. திருக்குறள் 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது.

அறத்துப்பால், 38 அதிகாரங்களைக் கொண்டது. இதில் பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழ் என்னும் நான்கு இயல் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பொருட்பால் 70 அதிகாரங்களைக் கொண்டது. இதில் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. காமத்துப்பால் அல்லது இன்பத்துப்பால், 25 அதிகாரங்களைக் கொண்டது. இதில் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டுள்ளது.

திருக்குறளுக்கு வாயுறை வாழ்த்து, பொதுமறை, பொய்யாமொழி, தமிழ் மறை, தெய்வ நூல், என்னும் பெயர்களும் உண்டு சான்றோர் பலர் பாடிய 'திருவள்ளுவ மாலை' திருக்குறளின் பெருமையை உணர்த்துகின்றது.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவரின் புலமைச் சிறப்புக் காரணமாக இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், மாதான பங்கி, செந்நாப் போதார். பொய்யில் புலவர், பெருநாவலர், நாயனார், தேவர் முதலிய சிறப்புப் பெயர்களிட்டு வழங்குகின்றனர். இவர் கி.மு. 31 இல் பிறந்தார் என்று உறுதி செய்யப்பட்டுத் 'திருவள்ளுவர் ஆண்டு' கணிக்கப்பட்டுள்ளது. அறவியல், உயர்நிலை அறிவியல் வகையைச் சார்ந்தது. திருக்குறளும் அறவியல் குறிக்கோள் கொள்கைகளை எடுத்துக் கூறி அவற்றை அடைவதற்குரிய வழிகளையும் தமது நூலில் கூறியுள்ளார்.

உலகின் பிற உயிரினங்களைப் போலவே மனிதனம் சேர்ந்து சமுதாயமாக வாழ வேண்டியவன். அவ்வாறு வாழும் மனிதனின்

வாழ்க்கையை அக வாழ்வு, புற வாழ்வு என இரண்டாகப் பிரிக்கலாம். இல்லற வாழ்வில் ஈடுபட்டு மனைவி மக்களோடு பொருந்த வாழ்தல் அகவாழ்வு; மனைவி மக்களைப் பெற்ற மனிதன் சமுதாயத்தோடு சேர்ந்து வாழ்தலைப் புறவாழ்வு எனவும் கொள்ளலாம். இவ்விரு வாழ்விலும் மனிதன் விலங்கு நிலைக்குத் தாழாதிருக்க சில அறங்களைப் போற்றி வாழ்தல் வேண்டும். ஆதலால் மனிதனின் பல்வேறு சிறந்த பண்புகளும் அறமாகக் கருதப்படுகிறது. திருவள்ளுவரும் "அறம்" என்ற சொல்லைப் பல பொருள்களில் கையாண்டுள்ளார். எக்கலாத்துக்கும் பொருந்தும் வகையிலான பல அரிய அறவியற் கோட்பாடுகளை நமக்குத் திருவள்ளவர் அளித்துள்ளார். அவற்றுள் சிலவற்றை இப்போது காண்போம்.

### அறத்திற்கு வள்ளுவர் கூறும் இலக்கணம்

அறவியலில் மிக முக்கிய இடத்தைப் பெறுவது "செயலாற்றல்" ஆகும். அனைத்து மன உணர்ச்சிகளிலும், உடல் உறுப்புகளிலும் விரவிக்கிடக்கும் "இயக்க ஆற்றலை" அவற்றின் போக்குகளிலேயே விட்டுவிட்டால் அவை தீய வழியில் செல்ல வாய்ப்புண்டு இன்பத்தை விரும்பி மனம் தீயதை செய்ய எண்ணுவதும் அதன் வழி இயக்க ஆற்றல் செயல்படுவதும் மக்கள் வாழ்வைச் சிதைக்கும் என்பதால் வள்ளுவர் மனத்தை முதன்மைப்படுத்தி அறத்தின் இலக்கணத்தை வகுக்கிறார். "மனத்தில் தீமையானவற்றை நினைக்காமையே அறமாகும்" என்பது தோன்ற

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற - என்கிறார்.

மனத்தின் கண் குற்றமுடையவர்கள் செய்யும் தருமம் போன்றவை பிறர் அறிதல் வேண்டி செய்யப்படுவதால் அவற்றை ஆரவாரத்தன்மை உடைய செயல் என்று இழித்துக் கூறுகிறார்.



மக்கள் செய்யும் அறச் செயல்கள் அவனுடைய குணம், செயல் இவற்றின் குற்றங்களால் பயனின்றிப் போகும் வாய்ப்பு உண்டு. ஆதலால் வள்ளுவர் பொறாமை, புலன்கள் மேல் செல்லுகின்ற ஆசை, பிறர்பால் வரும் வெகுளி, அதன் வெளிப்பாடாகிய கடுஞ்சொல் ஆகிய நான்கும் சிறிதும் கலக்காது அறஞ்செய்யப்படுதல் வேண்டும் என்பதை

அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

என்ற குறட்பா மூலம் விளக்குகிறார்.

### இல்வாழ்வே சிறந்த அறம்

இல்லறம் துறவறம் இரண்டில் இல்லறமே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்து.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று - என்கிறார்.

இல்லறத்தான் என்பான் பெற்றோர், மனைவி மக்களோடு வாழ்பவன் அவன் சமுதாயத்திற்குத் தூணாகத் திகழவேண்டும். பாவம் செய்தமையால் தனிமைப்படுத்தப் பட்டவர்களுக்கும், வறுமை அடைந்தவர்களுக்கும் தம்மிடம் யாசித்தவருக்கும் இல்வாழ்வான் துணையாகத் திகழ்தல் வேண்டும்.

மேலும் இறந்துப்பட்ட முன்னோர் கடன் ஆற்றல், தெய்வம் வழிபடுதல், புதிதாக வரும் விருந்தினர்களைத் தாங்குதல், சுற்றத்தார்களைப் பாதுகாத்தல், தன்னையும் தற்சார்ந்தோரையும் ஓம்புதல் இவை இல்வாழ்வின் கடமை ஆகும். இக்கடமைகளைச் செய்ய அன்புடைய மனைவி அமைதல் வேண்டும். மனைவி பால் அளவற்ற அன்பும், அவளோடு இணைந்து பிறர்க்குச் செய்யும் தருமம் போன்ற அறத்தினைச் செய்யும் வழி, வாழ்வின் பண்பும், வாழ்வின் பயனும் மிக்கதாய் இல்லறம் விளங்கும் என்பதை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

என்னும் குறளால் விளங்குகிறார்.

இதிலிருந்து இல்லறம் தன்னலத்திற்கும், பாலின்பத்துய்ப்பிற் காகவும் அன்று என்பதும், இறைத்தொண்டிற்காகவும் சமூகத் தொண்டிற்காகவும் தான் இல்லறத்தைத் தமிழர் மேற் கொண்டார்கள் என்பது அறனைப் பட்டதே இல்வாழ்க்கை என்று அழுத்தம் திருத்தமாக வள்ளுவரால் கூற முடிந்தது என்பது அறிகிறோம்.

இத்தகைய இல்வாழ்வாலும் அவனுடைய வாழ்க்கைத் துணை நலனாகிய மனைவியும் சேர்ந்து பெறும் பிள்ளைகளைப் பற்றிக் கூறும் போது, தந்தையின் கடமையையும் மகனின் கடமையையும் ஐயந்திரிபு அற, இரு குறள்களில் கூறிச் சென்றிருக்கிறார் திருவள்ளுவர். அவையாவன :

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் - என்பதும்.

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் - என்பதுமே ஆகும்.

### வாய்மையே அறம்

உலகத்துப் புற இருளைப் போக்க விளக்குகளாகிய ஞாயிறு, திங்கள், தீ, போன்றவை இருக்கின்றன. ஆனால் மக்களின் அக இருளைப் போக்கும் விளக்கு உண்டா? அது இருந்தால் அறியாமை நீங்கி அறிவியல் விளங்கி அறம் செழிக்கும் சோலையாகிவிடும் மனம், அதற்கு யாது வழி என்று கூறுகிறார் வள்ளுவர் யார் ஒருவன் வாய்மையைக் கடைபிடித்து வாழ்கிறானோ அவனின் உள்ளத்து அறியாமையாகிய இருளை, பொய்யாமையாகிய விளக்கு அகற்றுகிறது. என்கிறார் வள்ளுவர்.



உண்மை பேசுவானாயின் உலகத்து உயர்ந்தார் உள்ளத்தில் உள்ளவராவான். தானமாகிய அறத்தையும், தவமாகிய அறத்தையும் செய்வாரைக் காட்டிலும் சிறப்பு உடையவன் ஆவான், மேலும் இப்பிறப்பில் உயர்ந்த புகழைக் கொடுத்து மறுமையில் நற்கதி அடைய நல்லறங்களைத் தானே கொடுக்கும் என்கிறார் வள்ளுவர், மேலும் ஒரு படி சென்று மறுமைக்குப் பயன்தரும் நல்லறங்களை உடல் வருத்திச் செய்ய வேண்டியது இல்லை, வாய்மையாகிய அறம் ஒன்றே போதும் என்பதை.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

என்னும் குறளால் விளக்குகிறார்.

திருவள்ளுவர் தாம் கற்றறிந்த மெய் நூல்களுள் உண்மை பேசுதலைக் காட்டிலும் சிறந்த அறம் வேறில்லை என உறுதியாகக் கூறுதலை இப்பாடலில் அறியலாம்.

யாம் மெய்யாக்கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற

வாய்மை என்பது நிகழ்ந்தது கூறல் என்பதை வள்ளுவர் மறுக்கிறார். பிறிதோர் உயிருக்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களை மட்டும் பேசுதலை வாய்மை எனக்கூறும் போது வள்ளுவரின் மனிதநேயம், பிற உயிர்களிடத்துக் கொண்ட அன்பு இவற்றை அறிய முடிகிறது. இதனை பின்வரும் குறள் விளக்குகிறது.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்

### கொல்லாமையாகிய அறம்

திருவள்ளுவர் கொல்லாமையை சிறந்த அறம் என்கிறார். தனக்கு ஒரு பயன் கருதி பிற உயிர்களுக்கு சாதாரண துன்பமும் செய்தலாகாது. செய்யின் கடக்க முடியாது துன்பமாகிய பழியும்

பாவமும் எய்தும் என்கிறார். நமக்குத் துன்பம் செய்தாரைத் தண்டிக்கும் முறையிலும் புதுமையைக் கூறுகிறார். "துன்பம் செய்தவர் தானே நாணுமாறு அவருக்கு இனிய உவகைகளாகிய நன்மையைச் செய்து விடுங்கள்" என்கிறர். மேலும் நடத்தல் இருந்தால், நிற்றல், உண்டல் முதலிய நம் செயல்களால் பிற உயிர்களுக்கு நேரும் துன்பத்தை முன்னே அறிந்து அவற்றை விலக்குதல் வேண்டும் என்று கூறும் வள்ளுவப் பெருந்தகை பிரிதோர் உயிரைக் கொன்று அதன் உடலை தான் உண்டு வாழும் வாழ்க்கையை இழித்துக் கூறுகிறார். கொல்லாமையே சிறந்த அறம் என்பது தோன்ற.

அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும் என்றும்

நல்ஆறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை குழும் நெறி

என்றும் வள்ளுவர் கூறுவதால் அறிய முடிகிறது.

**அன்பே அறம்**

உலகில் தோன்றிய உயிர்கள் எல்லாம் தம் இனத்தோடு அன்புடையதாக இருக்கக் காண்கிறோம். மனிதன் அன்பின்றி இருக்க முடியுமா? முடியாது, மனைவி, மக்கள், புதல்வர்கள், உறவு, நட்வு ஆகியோரிடம் அன்பு பாராட்டுவதைப் பார்க்கிறோம். தொடர்பின்றி இருக்கின்ற மனிதரிடத்தும் "மனிதாபிமானம்" என்ற பெயரில் அன்பு காட்டுகிறோம். புறாவுக்காக தன் தசையைக் கொடுத்தான் சிபி, முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி, மயிலுக்குப் போர்வை ஈந்தான் பேகன். வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம் வாடினார் வள்ளலார். இவையும் அன்பின் வெளிப்பாடே. (பிற உயிர்கள் மேல் அருள் பிறந்தாலும் அன்பின் பயனாகவே கருதப்படும்).



"அருள் என்னும் அன்பு ஈன் குழவி" (குறள் 757) என்பது வள்ளுவர் வாக்கு. எனவே அன்பு, அருள், இரக்கம் இவை மனிதனுக்கு இயற்கையாக உள்ள நல்ல உணர்ச்சிகள். வள்ளுவர்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

என்ற குறட்பாவின் வாயிலாக அன்பில் அடங்கியுள்ள மாபெரும் இயக்க ஆற்றலின் சக்தியை வெளிப்படுத்துகிறார். உலகின் எல்லா மதங்களும் அன்பு ஒன்றையே வலியுறுத்துகின்றன. இவ்வன்பை மனிதன் வெளிப்படுத்த பெரிதும் துணைபுரிவது இல்லறம் ஆகும். குடும்பத்தில் இல்லறத்தை மூலமாகக் கொண்டுதான் "அறம்" தொடங்குகின்றது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையைத் திருவள்ளுவர் கொண்டிருந்தார். கண்ணகி, கோவலனைப் பிரிந்திருந்த காலத்தே, தவம் செய்யும் சான்றோர்களுக்கு உணவு அளிக்கவில்லை, வேதம் ஓதும் அந்தணர்களை பாதுகாக்கவில்லை, துறவறத்தை மேற்கொண்டு ஒழுகும் பெரியோர்களை எதிர் சென்றழைத்து சிறப்புமிக்க விருந்தினர்க்கு உணவளித்து தான் யாதொரு உதவியும் செய்யவில்லை என்று வருந்துவதை இளங்கோவடிகள்

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை
(சிலம்பு 16.71.73)

எனக் கூறுவதன் மூலம் அறிகிறோம். இதிலிருந்து இல்லறத்தில் அன்பாகிய அறம் தொடங்குகிறது என அறியலாம்.

அன்பு எப்போதும் துணையாக இருப்பது அறத்திற்கே என்று சொல்லுவார் சில அறியார் - ஏனைய மறத்திற்கும் அவ்வன்பே துணையாகும் என்பதை வள்ளுவர்.

அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

என்று கூறியுள்ளார். அன்பினாலே அறம் வளர்க்கப்படுகிறது என்று கூறும் வள்ளுவர் மறத்திற்கும் அவ்வன்பே துணையாக இருக்கிறது என்கிறார்.

மறத்திற்கும் அன்பு துணையாவதை அறிய பெரியபுராணம் உதவுகிறது. மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்ற பசுவின் பாலை ஆண்டவனின் அபிஷேகத்திற்குப் பயன்படுத்திய சிறுவனின் அன்பினை அறியாத தந்தை காலால் தள்ள, இறைவன் மீதுள்ள அன்பால் தந்தையின் காலை வெட்டிய சிறுவனுக்கும் சுவர்க்கம் கிடைத்த வரலாற்றால் மறத்திற்கும் அன்பு துணையாவதை அறிய முடிகிறது. இதனால் அன்றோ "மறக்கருணை" என்ற சொல் வழக்கு உண்டாயிற்று.

### இன்சொல் கூறலே அறம்

உயிர்களின் உள்ளத்தில் தோன்றும் உவகையை வெளிப்படுத்த நகையும் இன்சொல்லும் துணை நிற்கும். அவ்வாறு வெளிப்படும் இன்சொல் மனிதர்க்கு மட்டும் உரிமையானது. அச்சொல் அன்போடு கலந்து, வஞ்சனை இல்லாதனவாக இருத்தலோடு அறம் உணர்ந்த சான்றோர் கூறும் நன்மொழி போலவும் இருக்க வேண்டும். ஒருவரை சேய்மையால் கண்டபோது முகத்தால் விருப்பத்தோடு இனிதாக நோக்கி, பின் அருகில் வந்தவுடன் மனத்தோடு பொருந்திய இனிய சொற்களை சொல்லுதல் சிறந்த அறம் என்கிறார் வள்ளுவர்.

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினிதே அறம்.

இன்சொல் பேசதலை அறமாகக் கொள்ளுங்கால் துன்பத்தைத் தரும் வறுமை ஒருவர்க்கு இல்லையாகும். பிறர்க்கு நன்மை தரும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து இனிய சொற்களை ஒருவன்



சொல்லுவானாயின், அவன் செய்த பாவங்கள் குறைந்து அறம் வளரும் என்கிறார் திருவள்ளுவர்.

அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்

மறுமைக்கும் இன்சொல் பயன் தரும் என்பதை வள்ளுவர்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் - என்கிறார்

### நன்றி மறவாமையே உயர்ந்த அறம்

நிலத்தடி நீர் உவர் நீராக இருந்தாலும் உண்டு வளர்ந்த தென்னை சுவை மிகுந்த இளநீராகத்தருதலை நன்றி மறவாமைக்கு உவமையாக்கிக் காட்டுவர். விலங்குகளும் இதற்கு விதி விலக்கல்ல. வீட்டைக் காக்கும் நாயும், நன்றி மறவாமைக்கு எடுத்துக்காட்டு ஆகும். தாவரமும் விலங்கும் நன்றி மறவாமைக்கு வழிகாட்டும் போது மனிதனிடத்தில் இப்பண்பு இருந்தல் அவசியம் என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவர் ஒருவர் செய்யும் உதவியை மூன்றாகப் பிரிக்கிறார். "செய்யாமல் செய்த உதவி" "காலத்தினால் செய்த நன்றி", "பயன் தூக்கார் செய்த உதவி" என்பனவே அவை.

ஒருவருக்கு நாம் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்க அவர் நமக்குச் செய்யும் உதவிக்கு "செய்யாமல் செய்த உதவி" என்கிறார் வள்ளுவர் அவ்வுதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கை மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்கிறார். ஒருவனுக்கு ஆபத்து வந்த காலத்தில் மற்றொருவன் செய்த உதவி "காலத்தினால் செய்த உதவி" என்கிறார் வள்ளுவர். இவ் உதவி சிறியதாக இருந்தாலும், அவ்வுதவி, செய்யப்பட்ட காலத்தை வைத்து ஒப்பிடும் போது இவ்வுலகத்தைக் காட்டிலும் பெரியதாக வைத்து மதிக்கப்படும் என்கிறார். இவருக்கு இந்த உதவியை நாம் செய்தால் நமக்கு இதனால் இந்த பயன் கிடைக்கும் என்று சிந்திக்காமல்

ஒருவர் செய்த உதவியை ஆராய்ந்து பார்த்தால் அது கடலைக் காட்டிலும் பெரியதாகும் என்கிறார் வள்ளுவர். இம்மூன்று உதவி செய்பவரின் காரணத்தாலும், பொருளாலும், காலத்தாலும் பிரிக்கப்பட்டாலும் அவை செய்யப்பட்டவரின் மனத்தின் அளவை பொறுத்து மேலும் உயர்ந்து சிறந்து நிலைத்து நிற்கும் என்கிறார் வள்ளுவர்.

உதவி வரைத்தன்று உதவி உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து

என்கிறார். சான்றோர்கள் தனக்கு ஒருவர் செய்த உதவியை எழுகின்ற ஏழுபிறப்பும் நினைத்து மகிழ்வர் என்கிறார். அப்படி இன்றி அந்நன்றியை மறத்தல் நன்மை பயக்காது என்கிறார். அதோடு பிறர் செய்த தீமையை மனத்தில் கொள்ளாது அப்பொழுதே மறத்தல் நல்லதென்கிறார்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

இதனாலேயே இவ்வறம் மேலும் சிறந்து உயர்ந்து நிற்கிறது.

**நடுவு நிலைமையுடன் வாழ்தலே அறம்**

நம்மோடு சேர்ந்திருக்கும் உறவினர், நண்பர், அயலார், பகைவர், யாவரிடத்தும் வேறுபாடு கருதாது ஒப்ப நிற்கும் தன்மை, நடுவுநிலைமை என்கிறார் வள்ளுவர் அவர் ஈட்டிய செல்வம் பிறசெல்வம் போலன்றி அவருடைய பரம்பரைக்கும் அழியாது நின்று உதவும் என்கிறார். நடுவு நிலைமையினின்று மாறி வந்த செல்வம் நன்மையே தருவதாக இருந்தாலும், அதனை ஏற்காது அப்போதே விட்டு விடுதல் வேண்டும் என்பதை

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்

என இப்பாவில் விளக்குகிறார்.



பொருள்களின் எடையை உணர்த்தும் தராசு முதலில் தான் சமமாக நின்றுபின் தன்னிடம் வைக்கப்பட்ட பொருள்களின் எடையைக் காட்டுதல் போல் சான்றோர்களும் ஒரு பக்கம் சாராது அறிவால் ஆராய்ந்து வாழ்தல் அழகாகும் என்பதை வள்ளுவர்.

சமன் செய்துசாதூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி

என்கிறார் வள்ளுவர்.

**அருளுடைமையே உயர்ந்த அறம்**

“அருளை அன்பு ஈனும் குழவி” என்றார் திருவள்ளுவர். அருள், அன்பு என்ற அன்னை ஈன்ற குழவியாயிருக்கலாம், ஆனால் அருள் அன்பைவிட மிகப் பொருமை வாய்ந்தது. அன்பு ஓர் எல்லைக்குட்பட்டது.

அதாவது நம்மோடு தொடர்புடையவரிடம் மட்டும் காதலுடையவனாய் இருத்தல் ஆகும். ஆதலால் இவ்வன்பு யாவர்க்கும் இன்றியமையாதது என்று வள்ளுவர் கூறுகிறார். இதை “உலகியல்” பாசம் என்று கூறலாம் (Earthly Love) அருளோ அவ்வாறன்றி எல்லையில்லாத பரந்த பேரரசை உடையது.

அழகிய ஈரமுடைய நெஞ்சத்தை உடையோர் என்ற பட்டத்திற்கு தகுதி உள்ளவர் யாவரும் அருள் பெற்றவரே. செவ்விய கருணையை, விலக்கல் இன்றி உலகத்து எல்லா உயிர்களிடத்தும் செலுத்தும் செம்மையே அருளுடையமை ஆகும். ஆதலால் திருவள்ளுவர் இவ்வதிகாரத்தை துறவற இயலில் வைத்துள்ளார். எனினும் அருளுடைமையை இல்லறத்தாரும் கொள்ளத்தகும் நெறி என்பதில் ஐயமில்லை. அருளுடைமையை (Heavenly Love) எனலாம்.

உலகத்துச் செல்வங்களுக்கெல்லாம் சிறந்த உயர்ந்த செல்வம் அருட்செல்வமாகும். ஏனெனில் பற்றற்றார் மாட்டே இச்செல்வம்

தோன்றும் தன்மைத்தாகும். பிற செல்வங்கள் எல்லாம் உலகத்தில் இழிந்தவர்களிடத்தும் காணப்படுகின்றன என்பதை.

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இவ்வுலகத்து இன்பங்களைத் துய்க்க வேண்டுமாயின் பொருட்செல்வம் வேண்டும் அதை அறிவினால் ஆராய்ந்து நல்லறம் செய்ய பயன்படுத்த வேண்டும். ஒரே வழி இதில் தவறு ஏற்படுமாயின் தீமையும் ஏற்பட வாய்ப்பு உண்டு. வாழ்வின் உறுதிப் பொருட்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பதில் வீடு பேறாகிய நிலையான இன்பம் பெற அருளுடைமையே காரணமாகிறது என்பதை வள்ளுவர்.

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருள்இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு

என்கிறார்.

**புறங்கூறாமையே அறம்**

ஒருவர் இல்லாதவிடத்து அவரை இகழ்ந்து கூறுதல் புறங்கூறுதலாகும். அவ்வாறு கூறுதலால் மொழிக் குற்றமும், தீமையை மனத்தில் நினைத்து மனக் குற்றமும் ஏற்படும். ஆதலால் அவ்வாறு கூறாதொழிதலைப் புறங்கூறாமை என்கிறார் வள்ளுவர். புறங்கூறுதல் என்பது மிகவும் பாவமானது, துன்பம் தரக்கூடியது. இதன் கொடுமையை முழுமையாக உணர்ந்த வேண்டும் என்று விரும்பும் திருவள்ளுவர் ஒருவன் அறத்தை வாயாலும் சொல்வாமல் போகலாம், அதனுடன் பல பாவத்தைத் தரும் செயல்களைச் செய்யலாம், ஆனால் யாரைப் பற்றியும் புறங்கூறுதல் மட்டும் செய்யலாகாது. இவன் “புறங்கூறான்” என்று உலகத்தாரால் சொல்லப்படுவது நன்று என்கிறார். வள்ளுவர்



அறங்கூறாமையாலும், பாவம் செய்தலாலும் துன்பம் தனக்கு மட்டுமே வருதலாலும் புறங்கூறலான் துன்பம் தனக்கு வருவதோடு சொல்லப்படுபவர் கேட்பவர் போன்றோரும் பாதிக்கப்படுதலால் வள்ளுவர் புறங்கூறுதலைக் கடிந்துரைக்கிறார்.

அறம்கூறான் அல்லசெயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது

என்கிறார். மேலும் ஒருவர் இல்லாதவிடத்து இகழ்ந்து பேசி, நேரில் காணும் போது பொய்யாகப் புகழ்ந்து பேசி ஒழுகுதல் அவர் வாழ்வதைவிடச் செத்துப்போதல் அறநூல்களில் சொல்லிய நன்மைகள் எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

இதை

புறங்கூறிப் பொய்த்து உயிர்வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்

என்று விளக்குறிார். இதனால் புறங்கூறுதல் கொடுமையானது என்பது புலனாகும்.

**விருந்தோம்பல் அறம்**

இல்லறம் சிறந்ததாகக் கூறப்படக் காரணமாக அமைவது விருந்தோம்பல் இல்றத்தார் கடமையாகவே இருந்ததுவே. விருந்தினர் என அழைக்கப்பட்டவர், உறவினர் அல்லர், சுற்றத்தார் அல்லர், நண்பர்களும் அல்லர், நமக்கு அறிமுகமானவர் யாவரும் இலராய் புதியவராக நம் இடத்திற்கு வருகின்ற வரை விருந்து என்றழைத்தனர். விருந்து என்ற சொல்லுக்கு “புதுமை” என்ற பொருளும் உண்டு. அக்காலத்து எல்லா எல்லா ஊர்களிலும் விருந்தினர் மாளிகைகளும் உணவு விடுதிகளும் இல்லாதிருந்த மையால் இல்வாழ்வானே விருந்தினர்க்குக் காப்பாளனாக இருந்திருக்கிறான் என்பதை திருக்குறள் மூலம் அறிய முடிகிறது.

திருவள்ளுவர் “விருந்தினர் வீட்டின் வெளியே இருக்கத் தான் உண்பது சாவாமைக்கு மருந்தாகிய அமிழ்தமேயானாலும் அது விரும்பும் தன்மைத்து அல்ல என்பதை

விருந்து புறத்ததாத் தானுண்டல் வாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று

என்கிறார். மேலும் விருந்தோம்புவானிடத்து வறுமை வருவதில்லை என்கிறார்.

விருந்தினை வள்ளுவர் செல்விருந்து என்றும் வருவிருந்து என்றும் இரண்டாகக் கூறுவார். வீட்டிற்குக் குடும்பத்தோடு வந்து தங்கச் செல்லும் புதியவர்களை வருவிருந்தென்றும், வீட்டிற்குள் வாரா விரதம் மேற்கொண்ட துறவிகள் போன்றோர் தெருவோடு செல்கின்றவர்களைச் செல்விருந்து என்றும் கூறி இவர்களைக் காப்பதும் இல்லறத்தான் கடமை என்பது தோன்ற

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு என்கிறார்.

விருந்தோம்பும் இல்லறத்தானுக்குக் கடமை, சிறப்பு, பயன், கூறிய தருவள்ளுவர் சிகரம் வைத்தாற்போல் கூறும் ஒன்றைக் காண உள்ளம் இரும்பூது அடைகிறது. இல்லறத்தான் ஆற்றும் கடமைகள் யாவும் மனத்தோடு பொருந்தி விருப்பத்தோடும், அவ்விருப்பம் முகத்தில் மெய்ப்பாடாகத் தோன்றும் வகையிலும் நடந்துகொள்ள வேண்டும் என்கிறார். ஏனெனில் விருந்தினர் என்போர் மென்மையான மனத்தினை உடையவர், கூரிய அறிவும் கொண்டவர்கள். தன்னை விரும்புவோரிடம் மட்டுமே செல்லும் தன்மையுடையவர். ஆதலால் அவர்களைச் சேய்மையில் கண்ணுற்ற போதே இன்முகம் காட்ட வேண்டும் எனவும் அருகே வந்த வழி இனிமையா சொற்களால் வரவேற்று அவர்கள் நம் வீட்டில் தங்க



உடன்பட்ட வழி அழைத்துச்சென்று உபசரித்தலும் செய்ய வேண்டுமெனவும் கூறுகிறார். அனிச்சமலர் முகர்ந்து பார்த்த அளவில் தான் நம் வெப்பம் மலர்மேல் பட்டு வாடும் ஆனால் விருந்தினர்கள் அவ்வாறு இல்லை. சேய்மையில் முகம் மாறுபட்டு நோக்கும் அளவிலே மனம் வாடி வேறு இடம் செல்லும் தன்மையவர் என்று விருந்தினரின், மென்மையான உள்ளப்பாங்கினையும் விவரிக்கின்றார்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்ககக் குழையும் விருந்து என்பது அக்குறளாகும்.

### *அறம் செய்யும் வழி*

இம்மைக்கும் மறுமைக்கும் இன்பந்தரும் அறத்தை தத்தமக்கு முடிந்த வரையில் இடைவிடாமல் மனம், வாக்கு, காயம் (உடல்) ஆகிய இடத்தால் வாய்ப்பு நேரும் போதெல்லாம் செய்ய வேண்டும் என்பதை

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல் என்கிறார் திருவள்ளுவர்.
அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

என்று கூறுமுகத்தான் இளமையிலேயே, இன்றே அறம் செய்தல் வேண்டும் என்று கூறுகிறார்.

### *அறம் தண்டிக்கும்*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்றவர்களுக்கு இம்மையில் இன்ப வாழ்வும் மறுமையில் இன்பமும் வீடும் தரும் அறமாகிய கடவுள் குற்றங்கண்ட விடத்துத் தண்டிக்கவும் தவறாது என்கிறார் திருவள்ளுவர்.

என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்

உடலில் எலும்பு இல்லாத உயிரினங்கள் புழுக்கள். அவை தாமாகவே அறியாது சூரியனின் வெய்யலில் சென்றவிடத்து அதன் வெப்பத்தைத் தாங்க முடியாது துன்பப்பட்டு உடல் சுருங்கிப் பின் மாயும். ஈண்டு சூரியன் புழுவை மாய்க்க வேண்டும் என்பதற்காக வரவில்லை. புழு தன் இயல்பாக வந்து வெப்பத்தில் சிக்கி இறக்கிறது. அது போலவே மனத்தில் சிறிதும் அன்பில்லாதவ் தாமாகவே, இயல்பாக அறத்தேவதையிடம் சார்ந்து துன்பப்பட்டு அழிவான் என்கிறார். நான்மணிக்கடிகையும் அல்லவை செய்தாற்கு அறம் கூற்றம் என்கிறது. பாவங்கள் செய்தற்கு அஞ்சுதலாகிய தீவினை அச்சத்தில் வள்ளுவர்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் குழ்ந்தவன் கேடு

என்கிறார். ஒருவன் பிறருக்குக் கேடு உண்டாக்கும் செயலை மறந்தும் கூட மனத்தால் நினைக்காதொழிய வேண்டும். அவ்வாறின்றி கேடு எண்ணுவானாயின், தனக்குக் கேடு உண்டாக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும். இவ்விரு குறட்பாக்களால் அறம் தண்டிக்கும் என்பதை அறிய முடிகிறது.

இதுகாறும் கண்டவற்றுள்ளிருந்து திருக்குறளில் திருவள்ளுவர் கூறாத அறமில்லை என்பதும், இது உலகத்துக்கே கூறப்பட்ட அறம் என்பதும் விளங்கும்.

## பயிற்சி வினாக்கள்

### I. ஓரிரு வரிகளில் விடையளி

1. "உலகப் பொதுமறை" என திருக்குறள் போற்றப்படக் காரணம் யாது?
2. திருக்குறளின்பெருமையை உணர்த்தும் நூல் எது?
3. திருக்குறளின் வேறு பெயர்கள் யாவை?
4. திருக்குறள் "முப்பால்" என கூறப்படக் காரணம் என்ன?



5. திருவள்ளுவராண்டாவது - எது?
6. திருக்குறள் எத்தனை அதிகாரங்களையும், குறட்பாக்களையும் கொண்டது?
7. ஆரவாரத் தன்மையுடைய செயல் எதுவென வள்ளுவர் கூறுகிறார்.
8. புற இருளை நீக்குவன எவை?
9. எந்நிலையில் "அறம் பிற செய்யாமை நன்று" என வள்ளுவர் கூறுகிறார்?
10. வாய்மை எதுவென வள்ளுவர் கூறுகிறார்.
11. நல் ஆறு - எனப்படுவது யாது?
12. மனிதனின் உவகையை வெளிப்படுத்த துணைநிற்பது எது?
13. அறம் எப்பொழுது பெருகும்?
14. இம்மையும் மறுமையும் இன்பம் தருவது எது வென வள்ளுவர் கூறுகிறார்
15. எதை அன்றே மறக்க வேண்டும் என திருவள்ளுவர் கூறுகின்றார்?
16. எத்தகைய செல்வத்தை ஏற்காமல் விட்டுவிட வேண்டும்?
17. சான்றோர்க்கு அணியாவது யாது?
18. செல்வத்துள் சிறந்த செல்வம் எது?
19. அருள் இல்லார்க்கு எது இல்லை?
20. பொருள் இல்லார்க்கு எது இல்லை?
21. புறங் கூறுதலாவது யாது?
22. பொன்றுங்கால் பொன்றாது துணை எது?
23. அன்பில்லாதவனை அறம் எவ்வாறு தண்டிக்கும்?
24. அறம் கூற்றாகும் - யாருக்கு,
25. மறந்தும் நினைக்கக் கூடாதது எது?

## II. பத்து வரிகளில் விடையளி

1. திருக்குறள் அற இயலாவது எங்கனம்?
2. மனிதன் ஏன் அறங்களைப் போற்றி வாழ்தல் வேண்டும்.
3. மனத்தை முதன்மை படுத்தி வள்ளுவர் அறததினைக் கூறக் காரணம் யாது?
4. எந் நான்கை கலக்காது அறம் செய்யப்படுதல் வேண்டும் என வள்ளுவர் கூறுகின்றார்?
5. இல்வாழ்வானின் கடமை எது?
6. தந்தை மகன் காற்றும் நன்றி எது?
7. மகன் தந்தைக்காற்றும் உதவி எது?
8. பொய்யாமையாகிய விளக்கு எதை அகற்றுகிறது
9. வாய்மை என்பதற்கு வள்ளுவர் கூறும் இலக்கணம் யாது?
10. கொல்லாமை பற்றி வள்ளுவர் கூறும் இலக்கணம் யாது?
11. கண்ணகி தன்னால் செய்யமுடியாத அறங்களாக எவற்றை கூறுகிறார்?
12. "மறத்திற்கும்" அன்பு துணை யாவதை விளக்குக
13. "அல்லவை தேய அறம் பெருகும்" எப்பொழுது?
14. செய்யாமல் செய்த உதவி - விளக்குக?
15. காலத்தினாற் செய்த நன்றி - விளக்குக?
16. பயன் தூக்கார் செய்த உதவியை விளக்குக?
17. நடுவுநிலைமைப் பற்றி வள்ளுவர் யாது கூறுகிறார்?
18. அன்பு, அருள் - இவற்றிற்கு வள்ளுவர் தரும் விளக்கம் யாது?
19. புறங் கூறாமை பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
20. அறங்கூறும் ஆக்கம் தரும் - எது?
21. செல்விருந்து, வருவிருந்து - விளக்குக?
22. அறத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார்?



## III. ஒருபக்க அளவில் விடையளி

1. அறத்திற்கு வள்ளுவர் கூறும் இலக்கணம் யாது?
2. இல்வாழ்வு அறமாவது எங்கனம்?
3. வாய்மையாகிய அறம் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
4. கொல்லாமை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
5. அன்பே அறமாவது எங்கனம்?
6. இன் சொல் அறமாவதை விவரி?
7. நடுவு நிலைமை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
8. அருட் செல்வமே சிறந்த செல்வம் என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?
9. விருந்தோம்பல் பற்றி குறள் கூறுவன யாவை?
10. அறம் தண்டிக்குமாற்றினை விளக்குக?

## IV. நான்கு பக்க அளவில் விடையளி

1. திருக்குறள் அறநூலாவது எங்ஙனம்?
2. திருக்குறளில் கூறப்பட்ட ஏதேனும் நான்கு அறங்களை எழுதி விளக்குக?

## 4.3 நாலடியார் கூறும் அறம்

சங்க இலக்கியங்களுள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் சிறப்பு வாய்ந்தவை. இவற்றுள் பதினொரு நூல்கள் நீதியை விளக்கும் அறநூல்களாகவும், ஆறுநூல்கள் அகப்பொருள் நூல்களாகவும், ஒரு நூல் புறப்பொருள் நூலாகவும் அமைந்துள்ளன.

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்படும் சிறந்த நீதி நூல் நாலடியார் ஆகும். "நாலும் இரண்டும் சொல்லுக்குறிதி" என்பது பழமொழி. இதுவே நாலடியார் திருக்குறளோடு ஒத்த பெருமையுடைய நூல் என்பதை விளக்கும். நான்கடி வெண்பாக்களால் ஆக்கப்பட்ட இந்நூல் நானூறு வெண்பாக்களைக் கொண்டது. இதனால் இதனை "நாலடி நானூறு" எனவும் வழங்குவர். இந்நூல் ஒருவரால் இயற்றப்பட்டது அன்று.

சமண முனிவர்கள் நானூறு பேர் பாடிய பாடல்களைப் "பதுமானார்" என்னும் புலவர் தொகுத்து "நாலடியார்" எனப் பெயர் வழங்கியதாகக் கூறுவர்.

நாலடியாரும் திருக்குறளைப் போலவே முப்பால்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. நாற்பது அதிகாரங்களும் அதிகாரத்திற்கு பத்து பாடல்களாய் நானூறு பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன. தமிழர் அறத்தை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பகுத்தனர், நாலடியாரும் துறவற இயலை ஏழாகக் கொண்டு எழுபது பாக்களும் இல்லற இயலை ஆறாகக் கொண்டு அறுபது பாக்களும் பெற்று அறத்தை கூறுகிறது.

துறவற இயலில் செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, அறன் வலியுறுத்தல், தூயதன்மை, துறவு, சினம் இன்மை ஆகிய ஏழு அதிகாரங்கள் அமைந்துள்ளன. இல்லற இயலில் பொறையுடைமை, பிறர் மனை நயவாமை, ஈகை, பழவினை, மெய்ம்மை. தீவினையச்சம் ஆகிய ஆறு அதிகாரங்கள் அமைந்துள்ளன. இனி நாலடியார் பகரும் அறத்தைக் காண்போம்.

**செல்வம் நிலையாமை**

செல்வத்தைத் தான் மட்டும் துய்க்கலாம் என்று சான்றோர்கள் நினைக்க மாட்டார்கள் கல்விச் செல்வம், கேள்விச் செல்வம் போல் அல்லாது இச்செல்வம் நிலையாமையாகிய புகழை உடையது. கல்வி, கேள்விச் செல்வங்களைக் கள்வர்கள் கவர்ந்து செல்ல முடியாது, வைத்து இழக்க முடியாது, எடுக்க எடுக்க குறையும் தன்மையும் இல்லாது, மற்றவர்கட்குக் கொடுப்பதால் மேலும் வளரும் தன்மைத்து என்பர். பொருட் செல்வம் நிலையாமையை உடையதால் யாவரும் தாம் துய்ப்பதோடு யாவருக்கும் கொடுத்து பகிர்ந்துண்டு வாழ வேண்டும். செல்வம் இருக்கும் போதே கொடுத்து அறம் செய்ய வேண்டும் என்பதை நாலடியார் விளக்குகிறது.



அறுசுவையுண்டி அமர்ந்தில் லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - திருவற்றி
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனில் செல்வ
மாறுண்டா வைக்கற்பாற் றன்று.

அறு சுவையாகிய உணவை, மனைவி அன்போடு பொருந்தி உண்பிக்க, (செல்வமிகுதியால்) முன்கவளத்தை நீக்கப் பின் கவளத்தை உண்ட பெருஞ் செல்வரும், அச்செல்வம் அழிய வறுமை உடையவராகி, தன் இடத்தை விட்டு நீங்கி வேறு ஓர் ஊர் சென்று இழிந்த கூழைப் பிச்சை கேட்டு நிற்பார்கள் என்பதால் செல்வம் நிலையானதாக எண்ணத்தக்கதல்ல என்கிறது நாலடியார்.

**நல்வழியில் செல்வம் சேர்த்தால்**

தமிழ்ப் பெருமக்கள் உழவுத்தொழிலும் நெசவுத் தொழிலும் செய்து வாழ்ந்தனர். இவ்விரு தொழில்களைச் சார்ந்த பதினெட்டு உப தொழில்கள் நாட்டில் நடந்தனவாக அறிகிறோம். இவையன்றி தமிழர்கள் வாணிகத்திலும் சிறந்திருந்தனர். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது முதுமொழி. கடல் கடந்து சென்றும் வாணிகம் செய்து வாழ்ந்தனர். இதனை நாலடியார் "துகள் தீர் பெருஞ்செல்வம்" என்கிறது. குற்றமற்ற வழியிலே செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்கிறது.

**இளமையும் யாக்கையும்**

பெருஞ் செல்வத்தைத் தேடிச் சேர்த்த தமிழர்கள் பலரோடு சேர்ந்து உண்டு வாழ்ந்தனர். ஏழை எளிய மக்களுக்கு கலைஞர்களுக்கும் புலவர்களுக்கும் "இல்லை" என்று தம்மிடம் கேட்டவர்களுக்கும் கொடுத்தனர். அவர்கள் செல்வத்தின் நிலையாமையை அறிந்தவர்கள். மனிதனின் ஆயுள் காலம் எப்போது முடியும் என்று கூற முடியாது, அதிலும் இளமை

என்பது "நீர்க்குமிழி" போன்றது ஆதலால் "வாழ்நாள் கழிவதற்கு முன்னே பிறர்க்கு உபகாரம் செய்து வாழுங்கள்" என்கிறது நாலடியார். வாழ்நாள் உலவா முன் ஒப்புரவு ஆற்றுமின் என்கிற வரிகள் உணர்த்தும் உண்மைகள் அளவற்றவை. மேலும் நாலடியார் இப்பாடலில்.

ஆவாம் நாம் ஆக்கம் நசைஇ அறம் மறந்து
போவாம் நாம் என்னாப் புலை நெஞ்சே - ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினும் நின் வாழ்நாள்கள்
சென்றன செய்வது உரை

அற்பத் தன்மையுடைய மனமே நீ செல்வத்தை மிகவும் விரும்பி. "நாம் மேன்மேலும் செல்வம் உடையவராவோம். அச்செல்வம் செலவாவதற்குக்காரணமாய் உள்ள அறத்தை விட்டுவிடுவோம். என்றெண்ணி, சிறிதும் ஓய்வில்லாமல் தளராமல் முயன்று வாழ்வாயானாலும், உனது ஆயுள் காலம் கழிந்து விட்டன. இனி மறுமைக்கு என்ன செய்யப் போகிறாய் என்பதைச் சொல்" என்கிறது இப்பாடல்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி

என்னும் திருக்குறளை நினைவு படுத்துகிறது.

**யாக்கைப்பன்**

அரிது அரிது மானிடராதல் அரிது என்ற ஔவையார். தானமும் தவமும் தான் செய்வாராயின் வானவர் நாடு வழிதிறந்திடுமே என்று அறம் போற்றுவது போலவே நாலடியாரும்

அரும் பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும் பயனும் ஆற்றலே கொள்க - கரும்பூர்ந்த



சாறு போல் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோது போல் போகும் உடம்பு - என்கிறது.

பெறுவதற்கு அரிய உடம்பைப் பெற்ற பயனால் மக்கள் அறத்தை மிககுதியாகவே செய்து வைத்துக்கொள்ள வேண்டும். அதுவே உடம்பின் பெரும் பயனாகும். கரும்பு, தன்னைப் பக்குவமாக ஆலையில் வைத்து ஆட்டினவர்களுக்கு தன்னிடத்தில் உள்ள இனிய சாற்றைக் கொடுப்பது போல, மக்கள் உடம்பும் மறுமைக்கு வேண்டிய அறமாகிய பயனை மிகவும் கொடுத்துப் பின்பு அக்கரும்பினது சக்கை போல அழியும், என்கிறது நாலடியார்.

**அறம் செய்க**

தருமம் செய்ய வேண்டும். அதை எங்கே, எப்போது எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் நாலடியார் விளக்குகிறது. இறப்பு என்பது ஒருவருக்கு எப்போதும் வந்து விடலாம். ஆதலால் உயிரோடு இருக்கும் போதே நாம் அறத்தைச் செய்துவிட வேண்டும். செல்வமும் நிலையில்லாதது. ஆதலால் செல்வம் உள்ள போதே அறம் செய்து விட வேண்டும். தருமம் செய்ய காலமோ இடமோ தேவையில்லை. எல்லா இடத்திலும் செய்து கொண்டே இருக்க வேண்டும். தன்னால் இயன்ற அளவுக்கு அறத்தினைச் செய்ய வேண்டும். இடைவிடாது தொடர்ந்து அறத்தைச் செய்து கொண்டே இருக்க வேண்டும் இதையே.

இன்றுகொல் அன்றுகொல் என்று கொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம்.

அதாவது உயிரைக் கொள்ளும் யமன் வருவது இவ்விளமையிலோ, முதுமையிலோ, அல்லது இடை

நின்றகாலத்திலோ என்று எண்ணாமல், அவள் உயிரைக் கொண்டு போக பின்னே வந்து மறைந்து நிற்கிறான் என்று நினைந்து பாவச் செயல்களைச் செய்யாமல் நீக்குங்கள். அறிவுடையோர் கூறிய அறத்தை உங்களால் கூடியமட்டும் செய்யுங்கள் - என்கிறது நாலடியார்.

திருக்குறள் கூறும் கருத்துகளை ஒட்டியே நாலடியார் அறம் கூறினாலும் துறவறத்தையே மிகுதியும் உயர்த்திக் கூறுகிறது. இல்லறத்தானுக்கும் வேண்டிய அறம் கூறினாலும் அகவாழ்க்கை என்பது துன்பத்துக்குச் காரணமாகிய பாவங்கள் நிறைந்ததாயும் அதைச் செய்வோர் தீய பிறவிக்கு ஆளாகி அல்லலுறுவார்கள் என்று கூறுகிறது. நாலடியார் காட்டும் அறத்தின் வழி நின்று உய்வோம்.

**பயிற்சி வினாக்கள்**

**I. பத்து வரிகளில் விடையளி**

1. நாலடியார் செல்வம் நிலையாமை பற்றி யாது கூறுகிறார்?
2. செல்வம் சேர்க்கும் வழியாக நாலடியார் கூறுவன யாவை?
3. எப்போது உபகாரம் செய்ய வேண்டும் என்பதை நாலடியார்வழி நின்று விளக்குக?
4. யாக்கையின் பயனாக நாலடியார் கூறுவன யாவை?
5. அறத்தை எவ்வாறு, எப்போது செய்ய வேண்டும் என நாலடியார் கூறுகிறது?
6. நாலடியாரை தொகுத்த புலவர் யார்?

**II. நான்கு பக்க அளவில் விடையளி**

நாலடியார் கூறும் அறக்கருத்துக்களை தொகுத்து எழுதுக.



## 4.4 இராமாயணம் மற்றும் மஹாபாரதம் உணர்த்தும் அறம்

**பாரத நாட்டின் பெருமை**

பாரத நாடு பழம் பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந்நினை வகற்றாதீர்
பாரத நாடு பாருக் கெல்லாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினை வகற்றாதீர்
எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே

என்றார் பாரதியார்.

பாரத நாடு பழமை பொருந்தியதாகவும் உலகில் தலை சிறந்த நாடாகவும் விளங்குகிறது பாரத நாடு உலகிற்கே வழி காட்டியாய் திகழ்கிறது. பாரத நாட்டின் புதல்வர்களாய் பிறந்ததற்கே பெருமைப்பட வேண்டும்.

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி மக்களைக் கொண்டது பாரத நாடு. கற்காலம் முதற்கொண்டே மனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை மேற்கொண்டு இயற்கையையே தெய்வமாக வழிபட்டான் என்று பண்டைய இலக்கியங்கள் பகர்கின்றன.

**இயற்கை வளம்**

மூன்று புறம் கடலாலும் ஒரு புறம் நிலத்தாலும் சூழப்பட்ட பாரத நாடு பாங்கு பெறுவதற்கு அதன் இயற்கை அமைப்பாகிய தீபகற்பமே காரணமாய் அமைந்தது என்பது நோக்கற்பாலது. நாட்டில் தோன்றியுள்ள ஆறுகளும்மலைகளும் நாட்டை மேலும் வளப்படுத்தின. ஆற்றின் கரைப் பகுதியில் ஊர் அமைத்து வாழத் தொடங்கியவன், ஆற்றையே, தெய்வமாக வழிபடும் பண்பாட்டையும் அறிந்து கொண்டான்.

வாழ்விற்கு உறுதுணை புரியும் கதிரவனை தெய்வமாகக் கொண்டாடும் வழக்கம் தொன்று தொட்டு இன்று வரை நிலவி வருகிறது. நீரின்றி அமையாது உலகு என்ற மொழிக்கு ஏற்ப நதிகளை, சரஸ்வதி, காவிரி போன்ற தெய்வங்களின் பெயர்களை வைத்து தெய்வமாகவே வழிபடும் வழக்கம் இன்று வரை தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இத்தகைய இயற்கை வளம் மட்டுமே ஒரு நாட்டை உலக அரங்கில் உயர்த்தாது. மாறாக அந்நியர் படையெடுப்பதற்கும், ஆதிக்கம் செய்யவும் வழிவகுத்தது.

ஆனால் நம் பாரத நாட்டின் இயற்கை வளத்துடன் கூடிய மனித வளமே உயர்விற்குப் பெருமை சேர்த்தது என்றால் அது மிகையாகாது.

**மனிதவளம் உயர்வானது**

மனிதவளம் என்ற சொல்லக் கூடியது மனிதனின் மனத்தில் உள்ளே உறைந்து. இருக்கும் ஆற்றலைக் குறிக்கிறது. இவ்வாற்றல் வயதிற்கு ஏற்றார் போல் பரந்தும் விரிந்தும் செயல்படக் கூடிய தன்மை உடையது. அத்தகைய மனிதவளம் மேலானது உயர்வானது, இதை மனதில்கொண்டு வாழும் ஒவ்வொருவரும் செயல்படுத்தினால் அந்த நாடு ஓர் உயர்வான உன்னதமான நாடாகப் போற்றப்படும்.

பாரத நாட்டில் முனிவர்கள் பலர் வாழ்ந்தனர் என்றும் அருந்தவம் புரிந்தோர், பசிப்பணி நீக்கியோர் பாவம் தொலைத்தோர், பலர் வாழ்நதனர் என்று புராணங்களும் இதிகாச நூல்களும் இயம்புகின்றன. சங்க கால இலக்கியங்களினால் அரசர் பலர் பாடல் இயற்றும் திறன் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம், புலவர் பெரு மக்கள் அரசனுக்கு அறிவுரை கூறும் அவைப் புலவராக விளங்கியமை அவர் தம் பாடல்களில் இருந்து அறியப் பெறுகின்றது. தனக்குப் பழியெனின் உயிரையும் கொடுக்கும்



உத்தமச் சான்றோர்கள் பலரையும், பாரத நாடு பெற்றிருந்த பாங்கு உணர முடிகின்றது.

நமது பண்பாட்டின் பழமையையும் பெருமையையும் உலகறியச் செய்வன இதிகாசங்களும், புராணங்களும் ஆகும். “இதிகாசம்” என்பதற்கு “இது இப்படி உண்மையாக நடந்தது” என்பது பொருள். ஆதலால் இதை பண்பாட்டின் மிகச் சிறந்த ஆதாரமாகக் கொள்வதில் தவறில்லை. புராணங்கள் என்பது செவிவழிக்கேட்ட வரலாற்றோடு கற்பனை கலந்து புனைந்த நீதிக் கதைகளாக அமைகிறது.

நம்முடைய இதிகாசங்கள் இராமாயணமும் பாரதமும் ஆகும். வடமொழியில் வான்மீகி முனிவராலும், ஹிந்தியில் துளசிதாசராலும் இராமாயணம் எழுதப்பட்டது.

தமிழில் கம்பரால் எழுதப்பெற்ற இராமாயணமே பலர் போற்றும் பான்மை உடைத்ததாய் விளங்குகிறது. கம்பர் தென்னாட்டிற்கு ஏற்ற பண்பாட்டோடு சிறிதும் மாறாமல் தம் காப்பியத்தை வடிவமைத்துள்ளார். இதனாலேயே பாரதியாரும் கல்வி சிறந்த தமிழ் நாடு புகழ்க் கம்பர் பிறந்த தமிழ்நாடு என்று போற்றுகிறார்.

**இராமாயணம்**

பழம் பெரும் இதிகாசங்களும் ஒன்று இராமாயணம்.

இராமன் ஓர் அவதாரப் புருஷனாகத் தோன்றி பூமியில் மனிதனாக எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தான். முனிவரின் குருகுல வாசத்தில் இராமன் பல யாகங்களைக் காத்த செயல் உலகில் நன்மை நிகழ வேண்டும் தீமை அகல வேண்டும் என்பதை உணர்த்துகிறது. முனிவரின் முகக்குறிப்புணர்ந்து. இராமன் வில் நாணேற்றி வில்லை வளைத்து சீதையை மணம் புரிந்தான் என்பது குருவின் உள்ளக் குறிப்பை உணர்ந்து செயல் புரிந்து திறத்தை நன்கு விளக்குறிது.

சீதையை மணம் புரிந்து இனிய இல்லற வாழ்வினை மேற்கொண்டு ஒழுகும் நாளில் தசராதன் இராமனுக்கு முடி சூட்ட விரும்பிய தன் எண்ணத்தை அனைவரிடம் தெரிவித்து முடி சூட்ட நாளும் குறிக்கப்பட்டது.

கைகேயி பெற்ற இருவரத்தினால் இராமன் காடு ஏக பரதன் நாடாளும் நிலை ஏற்பட்டது. இராமன் அயோத்தியினின்று நீங்கி கங்கையைக் கடந்து வனம் புக காட்டை ஆண்ட குகன் என்பானின் நட்பு ஏற்பட்டது. குகன் வேடர் குலத் தலைவன்.

கானகத்தில் சித்திர கூடத்தில் குடில் அமைத்து மரவுரி தரித்து காயும், கனியும் உணவாகக் கொண்டு வாழ்ந்தனர். இராவணன் தங்கை சூர்ப்பநகை வர வேட்கை மிகுதியால் இராமனையும் இலக்குவனையும் மாறி மாறி விரும்ப, இலக்குவனால் மூக்கறுபட்டு இராவணனிடம் சென்று முறையிட்டாள். இராவணன் வஞ்சனையால் சீதையை கவர்வான் வேண்டி மாரீசனை மாய மான் ஆக்கி தானும் தவ வடிவம் பெற்று மாயம் செய்து சீதையை கவர்ந்து சென்று அசோக வனத்தில் சிறை வைத்தான்.

சீதையைக் காணாது இராமன் இலக்குவன் தேடி வரும் வேளையில் அனுமன் சக்கிரீவன் இவர்களின் நட்பு கிடைத்தது.

இலங்கைக்குச் செல்ல அனுமனே தக்கவன் என்று தேர்ந்து அனுமனை அனுப்பி வைத்தனர். அனுமன் அசோக வனத்தில் சீதையைக் கண்டான். இராமன் கொடுத்த கணையாழியைக் கொடுத்து சீதை கொடுத்த சூடாமணியைப் பெற்றுக் கொண்டான். இராமனின் தூதனாக இராவணனிடம்பி சென்று இராவணனால் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்படுத்தப் பட்டு மீண்டும் இராமன் இருப்பிடத்திற்கு திரும்பினான். தன் செய்கையின் மூலமே தென் திசையில் சீதை இருக்கிறாள் என்ற செய்தியை “தென் திசையை



நோக்கி. வணங்கிய வண்ணம்” இராமனிடம் நெருங்கி அனுமன் சொல்லின் செல்வன் என்று அழைக்கப்பெற்றான். “கண்டனன் கற்பினும் அணியை கண்களால்” என்று சொல்வதன் மூலம் சீதையின் இருப்பிடம் அறிந்த இராமன் தன் படைகளோடு இலங்கை சென்று இராவணன் குமாரர்களையும், தம்பியையும் வென்று இறுதியில் இராவணனைப் போரில் அழித்தான். இராமன் சீதையை மீட்டு வந்தான். அயோத்திக்கு மீண்டும் வந்து முடிசூட்டு விழா ஏற்பாடு செய்து வசிட்டன் முடி சூட்ட இராமன் இனிதே ஆட்சி செலுத்தி வந்தான்.

கம்பர் இராம காதையை இராமாவதாரம் என்றே பெயரிட்டார். இராமனின் வரலாறு இன்பம் துன்பம் இரண்டையும் ஒரு நிலையாகக் கொண்டு வாழ்தல் வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அறங்களைக் காத்து தீயதைக் களைந்து வாழ்தலை உணர்த்துகிறது. தாய் தந்தை இவர்களின் உணர்வுகளுக்கு உட்பட்டு இராமனின் வாழ்வு அமைந்தது. தீய சக்தியாகிய இராவணனை வதம் புரிந்து செயல். அறம் வளர பாவம் மறையும் என்பதைக் காட்டுகிறது.

### 1. இராமனின் பண்பு நலன்

இராமன் அவதாரம் என்றாலும் பூவுலகில் வாழும் மனிதத் தன்மையும், மாண்பும் கொண்டு வாழ்ந்தான் என்று அறிய முடிகின்றது. தாய் தந்தை சொல் பேணி நாடு துறந்து காடு சென்றான். வேடர் தலைவன் குகனோடும் பறவை ஜடாயூவோடும், விலங்காகிய சக்ரீவனோடும், அரக்கனாகிய விபிஷணனோடும் சகோதர உறவை ஏற்றுக் கொண்டமை இராமனின் உயர்ந்து விரிந்த மனப் பாங்கைக் காட்டுகிறது.

கைகேயியின் வரத்தினால் இராமன் காட்டிற்கு போக வேண்டும் என்ற செய்தி அறிந்தவுடன் எனக்கு பின் பிறந்தவன் பெற்ற

செல்வம் அடியேன் பெற்றதைப் போலாகும் என்றும், தங்கள் உத்தரவினைத் தலை மேற்கொண்டு இப்பொழுதே கானகம் செல்கிறேன் என்று இராமன் கூற்றாக கம்பர் தம் காவியத்தில் கூறுகின்றார். மேலும் இராமனின் தோற்றம் அப்பொழுது மலர்ந்த செந்தாமரையை வெற்றி கொண்டது. இஃது எல்லாராலும் இயலுவதன்று இது இராமனின் எதையும் தாங்கும் மன வலிமையை குறிக்கிறது.

இதனைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதா? யாரும்
செப்பரும் குணத்து இராமன் திருமுகச் செல்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு, அவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா.

மேலும் அசோக வனத்துச் சீதை இராமனை நினைத்துக் கூறும்போது.

மெய்திருப்பதம் மேவு என்ற போதினும்
இத்திரு துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உண்ணுவாள்.

என்று கூறுவதால் நாளை முடிசூட்டுவிழா என்ற போதும் நாடு உனக்கில்லை காடு செல் என்ற போதும் சித்திரத்தில் இருக்கும் தாமரை மலர் போன்ற முகத்தை உடையவன் இராமன் என்பது விருப்பும் வெறுப்பும் இன்றி இருந்தான்என அறிய முடிகிறது.

இராமன் ஏகபத்தினி விரதம் உடையவன். நல்லறம் நிகழ இன்பம் துன்பம் இவை இரண்டும் வாழ்வில் தொடர்ந்து வரக்கூடியது, என்பதையும் அதை மேற்கொண்டு இரண்டையும் ஒரு சேர எண்ணி, வாழ்வைச்செலுத்துவது தான் வாழ்வியல் அறம்



என்பதையும் இராமன் அறிந்திருந்ததை நாம் உணர முடிகிறது வையத்துள் வாழ்வாங்கு வாழபவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற குறளின் இலக்கணத்திற்கு ஏற்ப இராமன் வரலாறு விளக்குகிறது மேலும் இராமன்.

“நியாயம் அத்தனைக்கும் ஒரு நிலையம் ஆயினான்” என்ற கம்பன் வாக்காலும் அறியலாம்.

**2. *சீதை***

சீதை, அழகும், கடமை உணர்வும் ஒருங்கே அமையப் பெற்றவள், ஜனகன் தன் அரண்மனையில் வில்லை வளைப்பவர்க்கே என் மகள் என்று சுயம்வரம் அறிவித்தான். தன் வலிமையால் இராமன் வில்லை வளைத்து சீதையை மணந்தான். கற்பு நெறி மேற்கொண்டு ஒழுகிய சீதை கணவனுடன் கானகம் சென்று, கணவன் மேற்கொண்ட துறவு நிலையைத் தானும் மேற்கொண்டு பணிவிடை செய்து வந்தாள். இராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதை இராமனையே எண்ணி வருந்தினாள்.

ஒவ்வொரு நாளும் இராமன் இலங்கைக்கு வந்து இராவணனை வென்று தன்னை மீட்டுச் செல்வான் என்று ஏங்கி இருந்தாள். இராமனின் தூதனாக அனுமன் கனையாழி கொண்டு வந்து கொடுத்த போது இராமனையே பெற்ற நிலையினை எய்தினாள். தானும் அடையாளமாக தன்னுடைய சூடாமணியைக் கொடுத்தனுப்பினாள். பெண்மைக்குரிய கற்பு, அன்பு, பாசம், இறைமை, விருந்தோம்பல், பொறுமை, முதலிய அருங்குணங்களை ஒருங்கே அமையப் பெற்றவள் சீதை என்பது புலனாகிறது.

**3. இலக்குவன்**

இலக்குவன் சகோதர பாவம், நம்பிக்கை, பிறர் உணர்வை போற்றும் மாண்பு இவற்றுக்கு இலக்கணமாய் திகழ்கிறான். “தம்பி உடையான் படைக்கு அஞ்சான்” என்ற முதுமொழிக்கு ஏற்ப

இலக்குவன் இராமன் கானகம் சென்றதிலிருந்து இறுதியில் இராம இராவண யுத்தம் நிகழும் வரை இராமரைப் பிரியாது உடன் உறைந்தவன் என்பது. எண்ணற் பாவது. உலக வழக்கில் “இராம இலக்குவர்கள் ஒற்றுமைக்கு இணைந்து வாழ்வதற்கும் எடுத்துக்காட்டாக கூறுவர்.

இலக்குவன், இராமனின் வில் வலிமையை நன்கு உணர்ந்தவன். மாரிசனால் மாயக்குரல் கொடுத்த போதும் “இராமனுக்கு யாதொரு தீங்கும் நேராது” என்று உறுதி கொண்ட உள்ளத்தோடு இருந்தான். ஆனால் சீதையின் சொல் கேட்டு இராமனைக் காணச் சென்றான். இந்நேரத்தில் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். இச்செய்கை இலக்குவனின் பிறர் உணர்வுக்களுக்கு மதிப்பு தரும் மாண்பினை உணர்த்துகிறது. சீதையைத் தேடுவது முதற்கொண்டு இராம இராவண யுத்தம் நிகழும் வரை இராமனுக்கு உறுதுணையாகவும் பக்க பலமாகவும் இருந்து கடமையாற்றிய இலக்குவன் ஓர் இலட்சிய புருஷன் ஆவான்.

**4. பரதன்**

இலக்குவனைப் போலவே பரதனும் இராமனிடத்து அன்பும் பாசமும் நிறைந்தவன் தாயின் சூழ்ச்சியால் ஆட்சி கிடைத்தபோதும் “முறையில்லாத வழி பெற்ற அரசை” ஏற்க மறுத்ததுடன் இராமனிடம் சென்று தன் மன வருத்தத்தை தெரிவித்து இரு பாதுகைகளை பெற்று வந்து அரசாளும்படி செய்தான்.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

என்பதிற்கிணங்க நாடாளும் உரிமையை இராம பாதுகையிடம் விட்டு நந்திக் கிராமத்தில் துறவு வாழ்க்கை மேற்கொண்டான்.



**5. அநுமன்**

“தொண்டிற் சிறந்தவன் அனுமன்” குரங்கினமாக இருந்தாலும் கூர்ந்த மதியினைப் பெற்றவன் அரச தூதன் எனப்படுவான் அரசனுக்குரிய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அனுமனை இராமதூதன் என்றே நூல்கள் குறிப்பிடுகின்றன.

தென்திசை சென்று தேடுவதற்கு அனுமனே தக்கவன் என்று இராமனால் தேர்ந்தெடுக்கப் பட்டவன். இலங்கை நோக்கிச் செல்கையில் இடையில் தோன்றும் இன்னல்களைக் களைந்து வெற்றி கொண்டு இலங்கையில் அசோக வனத்தில் சீதையைக் காண்கிறான்.

இராமன் தந்த கனையாழியை சீதையிடம் வழங்கி சீதை தந்த சூடாமணியைப் பெற்றான். இலங்கையில் இராவணன் அரண்மனைக்குச் சென்று இராவணனால் வாலில் தீயிடப் பெற்று இலங்கையை எரியூட்டினான்.

இலக்குவனை உயிர்ப்பிக்க சஞ்சீவி மலையை வடக்கிலிருந்து பெயர்ந்து வந்து காத்தலையும், இராமனின் குறிப்பறிந்து செயலாற்றும் நுட்பமும், சதா இராமனையும் சீதையும் தம் மனத்துள் வைத்து பூஜித்தமையும் இவரது ஆற்றலையும் மதிநுட்பத்தையும் இராமன் மீது கொண்ட அளவிடற்கரிய பக்தியும் வெளிப்படுத்துகிறது. இதை மெய்ப்பிக்கும் வகையால் கம்பர் இராமாயண இறுதிக் காட்சியாகிய மணி முடி சூட்டு விழாவில் அனுமனுக்கு இராமனின் அரியணையைத் தாங்கும் உயர்ந்த கடமை அளிக்கப்பட்டமையாலும் அறியமுடிகிறது.

**6. வீடணன்**

இராவணன் தம்பியாகிய வீடணன் இராவணனின் தகாத செயலைத் திருத்தி முயன்று தோல்வி கண்டான். அறவழியில் அண்ணனை செயல்படுத்த முடியாத நிலையில் அறத்திடமே நாம்

சென்ற சேர்வது நல்லது என்று முடிவு செய்தான். இராமனிடம் வீடணன் சரண் அடைந்தான். இச்செயல் உலகிற்கு அறத்தின் மேன்மையையும், தவறு செய்தவன் தமையனே ஆனாலும் இழித்துக் கூறத் தயங்காதவன், இராவணன் திருந்தாமை கண்டு மனம் வருந்தி அறத்தின் பக்கம் சார்தல் வேண்டி இராமனைச் சரண் அடைந்தமையும் இவனது அறப்பற்றையும் குற்றம் கடியும் தன்மையையும் நடுவு நிலைமை தவறாது அரக்கர் குலம் காக்க தான் ஒருவனாவது எஞ்சி இருக்க வேண்டும் என்கின்ற பண்பும் கம்பரால் சித்தரிக்கப்படுகிறது.

**7. கும்பகர்ணன்**

தொடர்ந்து ஆறு மாதம் உறங்கக்கூடிய ஆற்றல் கும்பகர்ணன் ஒருவனுக்கே உரியது. தூக்கத்தில் சிறந்தவர்களை கும்பகர்ணன் என்றே கூறி வருவது மரபு

கும்பகர்ணன் இராவணனைத் திருத்த எவ்வளவோ முயன்றும் இயலாமற் போனது. இருப்பினும் தன்னை ஆளாக்கிய இராவணன் இராமனை எதிர்த்துப் போரிட அனுப்பினால் அவருக்காக உயிர் விடத் தயாராக இருந்தான் "ஒருவரின் முன்னம் சாதல் உண்டவர்க்குரியதம்மா" என்ற வரி இதை உணர்த்துகிறது. இராவணனை இடித்துரைக்கும் பண்பினால் அறத்தின் பால் கொண்ட ஈடுபாடும் அவனுக்காக போருக்குச் சென்ற உயர்விடுவதால் செஞ்சோற்றுக் கடன் தீர்க்கும் நன்றி மறவாமையாகிய அறமும் அறியப்படுகிறது.

**8. இராவணன்**

இராமாயணத்தில் இராவணன் பல நல்ல குணங்களைப் பெற்றவனாகக் கூறப்படுகிறது. இசையில் வல்லவன். சிறந்த சிவ பக்தன். தோள் வலிமை உடையவன், எட்டுத்திக்கு யானை களுடனும் போரிட்டு மார்பில் விழுப்புண் பெற்று வெற்றி கண்டவன். சிறப்பு பல பெற்றிருந்தாலும் மாற்றான் மனைவியை நினைத்த



தீய செயல் இராவணன் அழிவதற்குக் காரணமாய் அமைந்தது. இராவணனது தீய ஒழுக்கம் அவனைத் தலை குனியச் செய்தது. இராமனின் அறம் வென்றது. இராவணனின் அறமற்ற செயல் குலத்திற்கே அழிவைத் தந்தது. வீரம் விவேகம் பெற்றவனாக இராவணன் இருந்தாலும் பிறன்மனை நயத்தலாகிய அறமல்லாச் செயலை செய்ததால் கெட்டழிந்தான்.

**இராமாயணம் உணர்த்தும் அறக் கருத்துக்கள்:**

1. "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
2. "ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த இல்வாழ்வு நெறி"
3. "உலக உயிர்களிடத்து அன்பு பாராட்டும் உயரிய பண்பு"
4. "சகோதர பாசம்"
5. "பெரியோர் மாட்டு செலுத்தும் மதிப்பும் மரியாதையும்"
6. "செய்நன்றி மறவாமை"
7. "தூதுவனின் உயரிய பண்பும் பக்தியும்"
8. "தவறு செய்பவர்கள் எவராயினும் தண்டனைக்குறியவர்".
9. "தீயவரிடம் வாழ்வதை விட நல்லவர்களிடம் சாவதே மேல்"
10. "சரணடைந்தோரைக் காக்கும் பண்பு"
11. "பிறன் மனை நோக்காமை"
12. "தீயவை தீமையே பயக்கும்"
13. "வாய்மையே வெல்லும்"

மேற்கூறிய அறக் கருத்துக்களை இதிகாசமான இராமாயணத்தின் வாயிலாக நாம் அறியலாம்.

**மஹாபாரதம்**

வடமொழியில் வியாச முனிவர் எழுதிய மகாபாரதத்தை அடியொற்றி தமிழில் வில்லிப் புத்தூர் ஆழ்வார் மஹாபாரதத்தை எழுதினார். மஹாபாரதம் என்ற சொல்லைக் கேட்டவுடன்

அனைவருக்கும் போட்டி, பொறாமை, போர், சூது, பிறரைக் கெடுத்தல் என்ற செயல்கள் நினைவுக்கு வருவதால் இதனை வீட்டில் படிப்பது, கதை கேட்பது போன்ற கருத்துகளை தவிர்த்து வந்துள்ளனர்.

இதிகாசங்கள் இரண்டனுள் பாரதம் ஒன்றாக இருபபதால் இதைப் போற்றி பாதுகாத்து வருகிறோம். பஞ்சபாண்டவர்கள் தர்மம் என்றால் கௌரவர்கள் 100 பேரும் சூது எனலாம். அறம் 5 என்றால் அறமல்லாதது 100 உள்ளது என்ற தத்துவத்தையும் மஹாபாரதம் உணர்த்துகிறது. ஐந்தால் நூறை வெல்ல முடியுமா என்றால முடியும் முடிந்திருக்கிறது. இக்கருத்தையே பாரதியாரும்.

“தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தர்மம் மறுபடி வெல்லும்” என்றார். பாண்டவர்கள் இயற்றிய வேள்வியின் சிறப்பு கண்டு பாம்புக் கொடியுடையோனாகிய துரியோதனன் பொறாமை கொண்டான்.

மாமன் சகுனியின் துணை கொண்டான். அரக்கு மாளிகை அமைத்து அதனைக் காண அழைத்து. எரித்துக் கொல்ல சூழ்ச்சி செய்தான்.

சூதாட்டத்தை வெறுத்துக் கூறிய பாண்டவர்களுக்கு மாமன் சகுனி “சூதாடுதல் வேந்தர்க்கு இழிவன்று” , “திறன் உடையோர் வெற்றி கொள்வர்” என்று கூறி சூதாட இசைவித்தான். சூதாட்டத்தில் பாண்டவர் தோற்றனர் திரௌபதி இழிவு செய்யப்பட்டாள். பாண்டவர் நாடிழந்து வனவாசம் மேற்கொண்டனர். மஹாபாரதப் போர் 18 நாட்கள் நடந்தன. இறுதியில் திரௌபதியின் சபதம் நிறைவேறியது போரில் துரியோதனன், துச்சாதனன் கர்ணன் முதலியோர் கொல்லப்பட்டனர். தர்மம் தழைத்தது.

**பாண்டவர்கள்**

தருமன், அர்ச்சுனன், பீமன், சகாதேவன், நகுலன் ஆகிய ஐவரும் பஞ்சபாண்டவர்கள் என்று அழைக்கப் பெறுகின்றனர்.



பஞ்சபாண்டவர்களின் மூத்தவனாகிய தருமன் முதலிய ஐவரும் அறத்தின் பால் நிற்கும் பாங்கு உடையோர். துரியோதனாதியார் சூழ்ச்சியால் நாடிழந்து வனவாசம் செல்லும் நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். இறுதியில் குருச்சேத்ர யுத்தம் நடந்து தர்மம் நிலைத்தது அதர்மம் அழிந்தது.

**கௌரவர்கள்**

துரியோதனன், துச்சாதனன் உள்ளிட்ட 100 பேர்கள் கௌரவர்கள் என அழைக்கப் பெற்றனர். இவர்கள் பாண்டவர்களின் சகோதரர்களே. பொறாமை கொண்டு பாண்டவரை சூதில் வென்று அவர்களை அடிமைப்படுத்தி, நாட்டை விட்டே விலக்க காட்டிற்கு வனவாசம் செல்லும் படிச் செய்தனர்.

**துரியோதனன்**

பாண்டவரிடம் சிறுவயது முதலே பகைமை கொண்டவன். பேராசை உடையவன். ஆதலால் நாட்டை பகிர்ந்தளிக்க விரும்பவில்லை. சூழ்ச்சியும் வஞ்சனையும் உடையவன். பெண்மையை இழிவு படுத்தியவன். பெரியோர்களிடம் மதிப்பும் மரியாதையும் கொள்ளதவன். இத்தீய குணங்கள் இவன் அழிவிற்குக் காரணமாயின, சிறந்த வீரன், பலம் பொருந்தியவன் பீஷமர், துரோணர், கிருபர், கர்ணன், விதுரர், முதலிய சான்றோர்கள் இவன் பக்க இருந்தாலும் அறமல்லா செய்கையால் தோல்வியையும் மரணத்தையும் தழுவினான்.

**சகுனி**

“வஞ்சனையின் முழு வடிவம் என்றால்” சகுனி என்றே குறிப்பிடலாம் சூதில் வல்ல சகுனி கௌரவர்களின் மாளிகையைக் காண அழைக்கும் போதே சூதாட்டம் பற்றிய குறிப்பினை பாண்டவரிடம் குறிப்பால் உணர்த்தவில்லை. சூது, தீது என்ற பாண்டவர் விலக்கிய போதும் சூதாட வேண்டும் என்ற

கருத்தை வஞ்சனை மனத்தோடு "விறல் உடையோா வெற்றி பெறுபவர்" என்று கூறி சூதாட வைத்தான். சூதாட்டத்தில் பாண்டவர் தோற்றதும் துச்சாதனையால் பாராட்டப் பெற்றவன் சகுனி. சகுனி என்ற பாத்திரம் உடனிருந்தே கொல்லும் நோய் போல அடுத்துக் கெடுத்தலை உணர்த்துகிறது.

**கர்ணன்**

அறமே வடிவானவன். கொடைக்கு ஒரு கர்ணன் என்று புகழப்பட்டவன். கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களை உடையவன் போர்க் களத்தில் திருமால் வேதியர் வேடம் பூண்டு யாசிக்கும் வேலையில் "தான தருமம் செய்யும் போது நீ வந்திலை. இப்போது களத்தில் என உயிர் போகும் தருவாயில் வந்துள்ளாய். இங்கு என்னிடத்தில் இருப்பதைக் கேட்டு. இந்நிலையிலும " இல்லை" எனாது வழங்கும் பேரெனக்கு அருளும்படிக் கேட்டுக் கொண்டான்.

அப்பொழுது "இது வரையில் நீ செய்த தானதருமங்களின் பயனை தாரைவார்த்து வழங்கிடும்" என்றதும் தன் குருதியால் தாரை வார்த்து கொடுத்தவன். தேரோட்டியின் மகனாக வளர்ந்தவன். துரியோதனன் பாண்டவரிடத்து கொண்ட பகையால் குறிப்பாக அர்ச்சனனுக்கு நிகரானவன் கர்ணன் என்பதை உணர்ந்து அவனை வெல்ல கர்ணனை நட்பாக்கிக் கொண்டான். மேலும் தனக்கு நிகராக அங்கதேசத்து மன்னனாக்கினான்.

கர்ணனும் தன் இனிய உயிரை துரியோதனனுக்காகக் கொடுக்க தயாரானான். தன் பிறப்பின் உண்மையை அறிந்து "செஞ்சோற்றுக் கடனுக்காக" போரிட்டு மாண்டான். மாண்டவின் தான் யார் என்பதை குந்தியால் உலகறியும்படிச் செய்தான்.



**கண்ணன்**

மஹாபாரதத்தில் முக்கிய இடம் பெறும் கண்ணனின் கீதா உபதேசம் சிறப்பு உடையதாகக் கருதப் படுகிறது.

பகவத் கீதையில் கண்ணன் உலகில் அதர்மம் பெருகி தர்மத்திற்கு கேடு வரும்போது தர்மத்தை நிலைநாட்ட தான் ஒவ்வொரு யுகத்திலேயும் தோன்றுகிறேன் என்றான். அவ்வாக்கிற்கிணங்க தர்மத்தை நிலைநாட்ட அவதரித்த கண்ணன் ஒரு அவதார புருஷன் என்பதை அறிகிறோம். இந்த அவதாரத்தில் இராமாவதாரம் போல் இல்லாமல் தன் தெய்வத்தன்மையை ஆங்காங்கு வெளிப்படுத்தி தர்மத்தை நிலைநாட்டுகிறார்.

**மஹாபாரதம் உணர்த்தும் அறம்**

1. "சூதும் வாதும் வேதனை செய்யும்"
2. "கெடுவான் கேடு நினைப்பான்"
3. "நன்றி மறவாமை"
4. "தர்மமே செல்வம்"
5. "அதர்மம் அழியும்"
6. "மனிதனுக்கு சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மற்றும் தியாக உணர்வு வேண்டும்.
   "மண்ணாசை கூடாது"

**பயிற்சி வினாக்கள்**

***I. ஓரிரு வரிகளில் விடையளி***

1. இந்தியா தீபகற்பமாவது எங்ஙனம்?
2. தெய்வமாக வணங்கப்படும் இயற்கை வளங்கள் யாவை?
3. இயற்கை வளங்களால் ஒரு நாட்டிற்கு உண்டாகும் கேடாக எதனைக் கூறுகிறார்?
4. பாரத நாட்டின் உயர்விற்கு பெருமை சேர்த்தது எது?

5. இதிகாசங்கள் யாவை?
6. தமிழில் இராமாயணத்தை எழுதியவர் யார்?
7. கைகேயியின் இரண்டு வரங்கள் யாவை?
8. சூர்ப்பனகை யார்? அவள் அடைந்த துன்பம் யாவை?
9. இராவணன் இயற்றிய வஞ்சகம் யாது?
10. இராமகாதைக்கு கம்பர் இட்ட பெயர் யாது?
11. பரதன் எங்கே துறவு வாழ்க்கை மேற்கொண்டான்?
12. தமிழில் பாரதம் எழுதியவர் யார்?
13. பாண்டவர்களின் பெயரினைக் கூறுக?
14 கண்ணன் வேதியனாக வந்து கர்ணனிடம் வேண்டியது எது?
15. கர்ணன் துரியோதனனுக்காக போரிட்டு மடியக் காரணம் யாது?

**II. பத்து வரிகளில் விடையளி**

1. கம்ப இராமயணத்தின் சிறபபு யாது?
2. இராமனின் உயர்ந்து விரிந்த மனப்பாங்கை எச்செயல் காட்டுகிறது?
3. இன்பதுன்பத்தை இராமன் ஒன்றாகக் கருதியமை கம்பரால் எங்ஙனம் விவரிக்கப்படுகிறது.
4. அனுமன் சொல்லின் செல்வன் என்று அழைக்கப் படக் காரணம் யாது?
5. அறம் வளர பாவம் தேயும் என்பதை எது உணர்த்துவதாக ஆசிரியர் கூறுகிறார்.
6. சீதையிடம் அமைந்திருந்த அருங்குணங்கள் யாவை?
7. பரதன் எவ்வாறு அரசாண்டான்?
8. பாண்டவர் வனவாசம் செல்லக் காரணம் யாவை?
9. செஞ்சோற்றுக் கடன் ஆற்ற கும்பகர்ணன் செய்தது யாது?
10. கண்ணன் பாரதத்தில் ஆற்றிய பணியை விளக்கு.



**III. ஒரு பக்க அளவில் விடையளி**

1. பாரதநாட்டின் பெருமைகள் யாவை?
2. மனித வளம் பற்றி விளக்கி வரைக?
3. சீதையின் பண்பு நலன்களை விளக்கி எழுது?
4. இலக்குவன் ஒரு இலட்சிய புருஷனாது எங்கனம்?
5. வீடணனின் குண நலன்களை தொகுத்து எழுதுக?
6. அரக்கர் குலம் அழிய இராவணன் எவ்வாறு காரணமானான்?
7. கர்ணனின் கொடைச் சிறப்பை விவரி.
8. சகுனி பற்றி குறிப்பெழுதுக?

**IV. நான்கு பக்க அளவில் விடையளி**

1. இராமனின் பண்பு நலன்களைத் தொகுத்து எழுதுக?
2. இராமாயணம் உணர்த்தும் அறக் கருத்துக்களை கூறி விளக்குக?
3. மஹாபாரதம் உணர்த்தும் அறக்கருத்துக்களைச் தொகுத்து எழுது?

## 4.5. பகவத் கீதை கூறும் அறக் கருத்துக்கள் நிஷ்காம்யகர்மா

அற இயல் வரலாற்றில் பகவத் கீதை ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியத் தத்துவ நடைமுறைக் கோட்பாடு, அறஇயல், புலன் கடந்த பொருளியல், சமயம், அனுபூதிக் கொள்கை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மனிதன் என்பவன் இயற்கையாகவும், அறிவுப் பூர்வமாகவும், மனரீதியாகவும், ஆன்மீக அடிப்படையிலும் ஒருங்கிணைந்து தனது சிந்தனை, செயல், உள்ளுணர்வு இவற்றை அமைத்துக் கொள்கிறான். இந்த அடிப்படையிலே தான் பகவத் கீதை, ஞானயோகம், கர்ம யோகம், பக்தியோகம் என்ற மூன்றினைக் கூறி,

பயன் நோக்காச் செயல் எனப்படும் நிஷ்காம்ய கர்மாவின் குணத்தை விளக்குகிறது.

ஞானமார்க்கம் மனித உள்ளத்தில் எழும் ஆசை உணர்வுகளை நீக்கவும், பக்தி மார்க்கம் தெய்வீகத் தூய்மைக்கு, காரணமாக விளங்குவது போல் கர்ம மார்க்கம் இவ்வுலகில் மனிதன் தன் கடமையை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை விளக்குகிறது. கர்மயோகம் செயல்படுவது தான் உயிரின் தன்மை என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது மனிதன் தன்னை உயிருள்ளவன் என்பதை நிலைநாட்டக் கடமையைச் செய்ய வேண்டும்.

நிஷ்காம்ய கர்மத்தை தெளிவாக புரிந்து கொள்ள பகவத் கீதையில் வர்ணாசிரம தர்ம கோட்பாடு விளக்கப்பட்டள்ளது. இது சமுதாயத்தில் மனிதன் தான் சார்ந்துள்ள சமுதாய நிலையிலும் வயதின் அடிப்படையிலும் கடமை ஆற்றுதல் வர்ணாசிரம தர்மமாக விளக்கப்பட்டுள்ளதாக கூறுவர்.

### மூன்று வகைப் பண்புகள்

உலகில் வாழும் எல்லா மனிதர்களிடமும் சமத்துவம், ராஜசம், தாமசம் என்ற மூன்று உடலியல் பண்புகள் அமைந்துள்ளன. அவரவர் தத்தம் பண்புகளுக்கு ஏற்ப செயல்களைச் செய்வதே சுவதர்மம் எனப்படுகிறது.

### சத்துவம்

உற்சாகம், ஒருமைப்பாடு புலனடக்கம் ஆகிய இந்த மூன்றிலும் முழுமையாக வெற்றி பெறுவது தான் சத்துவம். உயிருடன் உடம்பும் மனமும் போதுமான அளவு தொடர்பு கொண்டிருப்பதுவும், ஒளிமயமாக இருப்பதுவும் தான் சத்துவ குணம்.



### ராஜசம்

சத்துவ குணத்தில் குறைவு ஏற்படுவது, செயல்படுத்துவதற்காக இதை ராஜசம் என்றும் செயல்படும் குணம் என்றும் கூறுவர்.

### தாமசம்

உயிருடன் உற்சாகம் முதலியவை போதுமான அளவு தொடர்பு கொள்ளாத போது அறியாமை என்னும் இருள் சூழ்கிறது. இதைத்தான் தாமச குணம் என்பர்.

மூன்று வகைப் பண்புகளின் அடிப்படையிலான் கோட்பாடு மேலை நாட்டுத் தத்துவத்திலும் காணப்படுகிறது. பிளேட்டோ என்ற கிரேக்க அறிஞர் “மன்னித்தல், வீரம், தைரியம் என்ற மூன்றும் ஒரு மனிதன் தன் கடமையைச் செய்யத் தேவை” என்று கூறியுள்ளார். ‘பிராட்லி’ என்ற தத்துவ அறிஞர், “ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கேற்பத் தன் கடமையை உணர்ந்து செயலாற்றினால் சமுதாயத்திற்கு நன்மை செய்ய முடியும்” என்று கூறியுள்ளார்.

### கடமை

மனிதன் கடமையைச் செய்யும் போது எந்தவிதப் பயனையும் தான் விரும்பியோ வெறுத்தோ செய்யாமல் கடமையையே கண்ணாகக் கொண்டு செய்ய வேண்டும் என்பதே பகவத்கீதையில் கர்ம யோகத்தில் கூறப்படும் நிஷ்காம்யகர்மா என்பதன் பொருளாகும்.

கடமையைச் செய்யும் உரிமை நமது என்றாலும் அதன் பயன் என்பது கடவுளுக்கே உரியது. நமது செயல்களை இறைவன் பணி என்றும், இறைவனுக்கு அர்ப்பணிப்பது என்றும் எடுத்துக் கொள்ளலாம். நாம் ஒரு செயலைச் செய்யும் போது அது வெற்றி பெறுமா அல்லது தோல்வியுறுமா என்று நம் உள்ள உணர்விற்கு சிறிதும் இடம் கொடுக்காமல் மனமானது ஒரு

நிலைப்பட்டு கடமையைச் செய்ய வேண்டும். மேலும் பிறப்பு, இறப்பு என்ற சுழற்சியில் சிக்காமலிருந்து, பயனைத் துறந்து கடமையை நிறைவேற்றுபவனே கர்மயோகி. அவன் செய்த கடமையே நிஷ்காம்யகர்மா என்று பகவத் கீதை கூறுகிறது.

**துறவும் கடமையும்**

துறவி என்பவன் காவி உடை தரித்து காட்டிற்குச் செல்லாமல் பயனை மட்டும் துறப்பதே கீதை வலியுறுத்தும் துறவாகும் அது போல மனிதன் உணர்வே இல்லாமல் கடமை ஆற்ற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் ஆசையும் உணர்வும், உயர்ந்த குறிக்கோளான கடவுள் பக்தியாக மாறுவதே கடமை என்னும் அறமாகும் என்கிறது கீதை. எனவே கீதையின் அறக் கடமை என்பது தியாக உணர்வோடு செய்யக் கூடிய சமுதாயப் பணியாகும். இப்படித் தன் கடமையை எல்லா நிலையிலும் முழுமையும் நிறைவும் பெற்று நிலையான மனத்துடன் செய்பவனே ஸ்திதப்ரக்ஞன் (Steady Wisdom) எனக் கருதப்படுகிறான். அவனே பிற்காலத்தில் மகாத்மா ஆவான்.

**நிஷ்காம்யகர்மாக் கொள்கையின் பொதுமையும் நடுவுநிலைமையும்**

பகவத் கீதையின் நிஷ்காம்யகர்மா என்பதன் அடிப்படையில் செயலாற்றும் போது, ஒவ்வொருவரும் அவரவர் கடமையை அந்தந்த நிலையில் சிறப்பாக செயல்படுத்த முடியும். எப்பொழுதுமே இவ்வுலக அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டிருத்தல், அல்லது அதற்கு மாறாக அவ் அலுவல்களினின்றும் முற்றும் விலகித் துறவு பூணுதல், ஆகிய இரண்டையும் நீக்கிப் பயன் கருதாது செயல்களைச் செய்ய வேண்டும். என்றும் அப்படிச் செய்தால் இறைவனை அடைந்து மகிழலாம் என்ற ஒரு நடுவு நிலைமைக் கொள்கையை கீதை



உருவாக்குகிறது. மேலும் தன்னலம், சமுதாய நலம் இரண்டையும் இணைப்பதும் நிஷ்காம்யகர்மாவின் சிறப்பு அம்சமாகும்.

**நிஷ்காம்யகர்மா கோட்பாட்டின் தத்துவப் பின்னணி**

நமது இந்து தத்துவக் கோட்பாட்டின்படி நாம் மறுபிறவி எடுப்பதற்குக் காரணம் நமது செயல்களின் வினைப் பயன்களே. வினைப்பயன்கள் நம்மைப் பந்தத்தில் ஆழ்த்துகின்றன. கீதையின் கூற்றுப்படிப் பயன் கருதாது செயலாற்றும் போது வினைப்பயன்கள் நம்மை பாதிப்பதில்லை. ஆகவே பிறவிப் பிணியினின்றும் விடுபட்டு வீடுபேற்றையும் அடையலாம்.

பிரதிபலனை எதிர்பார்க்காது ஆசைகளை உலகளவில் உயர்த்திய நிலைக்கு கொண்டு வந்து தன்னுடைய கடமையை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்ற போது இறைவன் நமக்கு எல்லா இன்பத்தையும் தருவான் என்பது கீதையின் அறமாகும். எனவே கடமையின் பயனைப் பொறுத்தவரையில் துறவும், இறை இன்பத்தை அனுபவிக்கும் நிலையில் இன்பக் கொள்கையும் இணைகின்றன.

## பயிற்சி வினாக்கள்

**I. *பத்து வரிகளில் விடையளி***

1. பகவத் கீதை கூறும் நான்கு நெறிகள் யாவை?
2. மூவகை உடலியல் பண்புகள் யாவை?
3. சத்துவம் என்பது யாது?
4. இராஜஸம் என்பதை விளக்கு.
5. தாமஸம் என்பதை விளக்கு.
6. பிளேட்டோவும், பிராட்லியும் கடமையை உணர்ந்து செயலாற்றுதல் பற்றி கூறுவன யாவை?
7. நிஷ்காம்ய கர்மா என்பதன் பொருளை விளக்கு.

**II. ஒரு பக்க அளவில் விடையளி**

1. ஞான, கர்ம, பக்தி யோகங்களை விளக்கி வரைக.
2. துறவும் கடமையும் பற்றி பகவத்கீதை கூறுவன யாது?
3. நிஷ்காம்யகர்மா உணர்த்தும் பொதுமைக் கொள்கை.
4. நடுவுநிலைமைக் கொள்கையையும் விவரி.
5. நிஷ்காம்ய கர்மா கோட்பாட்டின் தத்துவம் பின்னனி யாது?

**III. நான்கு பக்க அளவில் விடையளி**

பகவத் கீதை கூறும் அறக் கருத்துக்களைத் தொகுத்து எழுது.

# V. யோகம் உணர்த்தும் வாழ்வியல் அறம்

# (ETHICS IN YOGA)

## மனம் மற்றும் உடல் வளர்ச்சியில் யோகாவின் பங்கு

மனம் உடலின் நுண்ணிய பகுதி என்றும், மனம் உடலின் மீது செயல்புரிகின்றது என்றும் கொண்டால், உடலும் மனதில் செயல்படுகின்றது என்று சொல்வது நியாயம். உடல் நோய்வாய்ப்பட்டால் மனமும் சஞ்சலம் அடைகிறது. உடல் நலமாய் இருந்தால் மனமும் நலமாய் இருக்கிறது. பசி வரும்போது மனமும் சஞ்சலம் அடைகிறது. மனம் கலங்கினால் உடலும் நலிவடைகிறது. மக்களில் பலர் உடலின் ஆணைக்கு உட்பட்டவர்களே. பலரால் மனத்தை அடக்க முடிவதில்லை. உடலையும், மனத்தையும் கட்டுப்படுத்துவதற்கு உடலைச் சார்ந்த சில உதவிகள் வேண்டும். உடலைப் போதிய அளவிற்கு அடக்கிய பின் மனதை அடக்க முயலலாம். மனதை விரும்பும்படி செய்து அதன் ஆற்றல்களை ஒன்று சேர்த்து ஒரு முகமாக்கி வைக்க முடியும்.

இவ்வாறு மன அலைகளை ஒருமுகப்படுத்தும் போது ஏற்படும் அசாதாரண அனுபவமே யோகம் எனப்படும். பொதுவான அனுபவங்களுக்கு உடம்பும், மனமுமே அடிப்படையாக இருக்கிறது. உயிர் அனுபவம் என்பது உடலையும், மனத்தையும் கடந்து, உயிர் தானே அனுபவிக்கும் அனுபவத்தைக் குறிப்பிடுகிறது. உடம்பும், மனமும் அந்த அனுபவத்தில் பங்கு கொள்ளும் போது பெருவாழ்வு கிடைக்கிறது. இதைத்தான் “தன் கரண ஆதிகள் தான் கடந்து அறியும் ஓர் அனுபவம்” என்று சொல்கிறார் திரு. அருட்பிரகாசர். மேலும் தியானம்

உண்டாகினால் எல்லாம் உண்டாகும் என்றும் சொல்கிறார். இதனையே ஞானிகள் “ஓங்கார அணை” என்கின்றனர்.

யோகம் என்பது வெறும் தியானத்தைப் பற்றி மட்டும் போதிப்பதில்லை. அஃது ஒரு மனிதனுடைய வாழ்க்கை பிரச்சனைகள் எல்லாவற்றையும் தீர்க்கும் முறையாக அமைந்திருக்கிறது. மனிதனுடைய வாழ்க்கையின் தூய்மைதான் யோகத்தின் குறிக்கோள். உடல்நலம், மனநலம் பேணுதல் யோகமாகும். அதற்கு ஒரு மனிதனின் உடம்பும், மனமும் ஓங்கி ஒளி பெற வேண்டும். அதாவது உடம்பும் மனமும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும். இதனையே திருமூலர்

“உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே”.

உடம்பு அழிந்திடுமாயின் உயிர் அடைய வேண்டிய பயனை அடைய முடியாது. உயிர் அடைய வேண்டிய பயன் மெய்ஞானம் ஆகும். ஆதலின் உடம்பை வளர்க்கும் உபாயத்தை அறிந்து உடம்பை வளர்க்க வேண்டும். அப்போது தான் உயிர் பெற வேண்டிய பயனை அடைய முடியும் என்பது இம்மந்திரத்தின் கருத்தாகும்.

எனவே, யோகா நெறிக்கு முதலில் உடல் கட்டுப்பாடு தேவையாகிறது. பின்புதான் மனக்கட்டுப்பாடு தேவைப்படுகின்றது. இவை இரண்டும் சேரும்போதுதான் யோகா நெறிமுறைப் படுத்தப்படுகிறது.

**யோகம்**

யோகம் என்பது என்ன? பல ஞானிகள் வகையான விளக்கங்களை தருகிறார்கள். இந்துக்களின் புனித நூலான



பகவத்கீதையானது பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், ராஜயோகம் என நான்கு யோக நெறிகள் பற்றி விளக்கிக் கூறியுள்ளது. யோகம் என்ற கேள்விக்கு அனுபவபூர்வமான சாதனத்தை அதாவது பயிற்சியைப் பற்றி விளக்குவது தான் யோக சாத்திரம்.

**யோகம் சொல் விளக்கம்**

யோகம் என்பது ‘யுஜ்’ என்ற வடமொழி சொல்லில் இருந்து ‘யோக்’ என மாறி, பின்பு ‘யோகம்’ எனப் பெயர் பெற்றது. இதற்கு, ‘இணைத்தல்’ ஒன்றுதல் என்று பொருள்.

“சிதறும் மனச்சக்தியைக் கூட்டுதல், இறைவனிடம்
சரணாகதிடைந்து, அவனுடன் தன்னைச் சேர்த்தல், –
(இணைத்தல்)

– இதுவே யோகம்.

யோக நிலையில் தான் மற்ற உயிர்களையும் தன்னுயிர் போலவே நேசிக்க முடியும். இதனையே கிறித்துவ புனித நூலான பைபிள். “உன்னைப் போல பிறரையும் நேசி” என்று குறிப்பிடுகிறது. மேலும் இஸ்லாமிய புனித நூலான குரான் “நீ பிறரிடம் இரக்கம் காட்டினால் நான் உன்னிடம் இருமடங்கு இரக்கம் உடையவனாய் இருப்பேன்” என்கிறது. இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையை யோக முறையை மேற்கொள்வதன் மூலமாக அல்லாது வேறு எந்த வகையிலும் அடைய முடியாது.

யோகம் என்பது ஒரு சமயம் அன்று, அஃது ஒரு பெரும் தத்துவம், ஒரு கலை, ஓர் அறிவியல், மற்றும் வாழ்க்கை முறை (Yoga in short, is not a religion, but a great philosophy, an art, a science and a way of life)

எனவே யோகம் என்பது மன அலைகளை அடக்கி, அதை ஒரு முகப்படுத்துவது. மனதை அடக்கி ஆளக் கற்றுத் தருகிறது.

யாராலும் நம்மை அடிமைப்படுத்த முடியாத நிலைக்குக் கொண்டு செல்கிறது. இதைத்தான் வள்ளுவர்.

"ஞாலம் கருதிலும் கை கூடும் காலம்
கருதி இடற்தாற் செயின் - என்கிறார்.

**பதஞ்சலியோக சூத்திரம் பதஞ்சலி - முனிவர் வரலாறு**

யோக வழியை மனித இனத்துக்குத் தந்தவர் 'ஹிரண்ய கர்பர்'. அதைச் சூத்திரங்களாக்கி வைத்தவர் மஹரிஷி பதஞ்சலி ஆவார். வேத உண்மைகளை பிரும்ம சூத்திரமாக வியாசரும், பக்தி சூத்திரத்தை நாரதரும் செய்தது போல யோக சூத்திரம் பதஞ்சலி முனிவரால் செய்யப்பட்டது.

இந்தப் பதஞ்சலி முனிவரை ஆதிசெஷனரின் அவதாரமாகச் சொல்லுவர் இவருடைய தந்தை 'அத்தரி முனிவர். தாய் கோணிகா ஆவார். அத்திரியின் பிள்ளை என்பதால், ஆத்திரேயர்' என்றும், கோணிக்காவின் பிள்ளை என்பதால் 'கோணிகா புத்ரர்' என்றும் இவருக்குப் பெயர்கள் உண்டு.

இவர் எழுதியது மூன்று நூல்கள். ஒன்று 'யோக சாஸ்திரம் இன்னொன்று, மொழி இலக்கணமான மஹாபாஷ்யம்' மூன்றாவது ஆயுர்வேதமாகிய 'சரகம்' என்ற ஆத்திரேய சம்ஹிதை' ஆகியனவாகும். ஆக, வாக்கு, மனம், உடலுக்கான மூன்றுக்காகவும் நூல்களை ஆக்கியுள்ளார். இவரைப் பற்றிய செய்திகள், இருநூறு ஆண்டுகளுக்கு முன் இராமபத்ர தீக்ஷீதரால் இயற்றப்பட பதஞ்சலி விஜயம் என்ற நூலில் உள்ளன.

**குருவின் மேன்மை**

வேத காலத்தில் கல்வி 'குருகுலம்' (Gurukulam) மூலமாக கற்பிக்கப்பட்டது. அக்கால கல்வியின் நோக்கம் ஆன்ம விடுதலையேயாகும். மேலும் செவி வழியாக, சூத்திரங்களாக கற்பிக்கப்பட்டது. குருகுல கல்வியில் குரு - சிஷ்ய உறவு போற்றத் தக்கதாக இருந்தது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில்



தெய்வத்திற்கு முன்பாக வைத்து, மூன்றாவது இடத்தில் குரு வணங்கப்படுகிறார். குருவின் ஆசியோடும், மேற்பார்வையின் கீழும் கல்வி கற்பதே சாலச் சிறந்ததாகும். வடமொழி மந்திரமான 'குரு மந்திரம்' கீழ்க் கண்டவாறு குருவின் மேன்மையினை

'குரு பிரம்மா,
குரு விஷ்ணு,
குரு தேவோ மஹேஸ்வரஹ;
குரு ஸாக்ஷாத்,
பர பிரம்ம,
தஸ்மைஸ்ரீ
குருவே நமஹ',

என்று விளக்குகின்றது.

குரு நிலையில் இருந்து யோகியர்களால் உலகத்தின் முக்கால் பகுதியை மாற்றி அமைக்க முடிகிறது. பிரம்மத்தை ஆசிரியராக - குருவாகக் கொள்வது. இறைவனையே குருவாகக் கொண்டு வாழ்க்கையை நடத்துவதற்கு ஒப்பாகும்.

**அஷ்டாங்க யோகம் (எண் வகை யோக நிலை)**

"யம, நியம ஆஸன, பிராணயாமா பிரத்யாஹார, தாரண, தியான, ஸமாதய அஷ்டாவர்கானி - அஸ்டாங்க யோகம்"

அஷ்டாங்க யோகம் என்பது எட்டு யோகங்களை உள்ளடக்கியது.

1. இயமம். 2. நியமம். 3. ஆசனம். 4. பிராணாயாமம்.
5. பிரத்யாஹாரம். 6. தாரனம். 7. தியானம். 8. சமாதி.

**இயமம் :** இது யோகப் பயிற்சிக்கு வேண்டாதவற்றை விலக்கிவிடுவது.

**நியமம் :** இது யோகப் பயிற்சிக்குத் தேவையானவற்றை வரையறுத்துச் சொல்வது.

**ஆசனம் :** ஆசனம் யோகப் பயிற்சிக்கு உரிய முறையில் அமர்ந்து இருப்பது.

**பிராணாயாமம் :** இது மூச்சை நெறிப்படுத்துவது.

**பிரத்யாஹாரம் :** இது ஐந்து புலன்களையும் நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது.

**தாரணை :** தாரணை என்பது சிந்தனையை ஒருமுகப்படுத்துவது.

**தியானம் :** இது உணர்வைத் தூய்மைப்படுத்துவது.

**சமாதி :** இது தொடர்ந்து இருக்கும் பேரின்ப நிலையைப் பெறுவது.

**இயமம்**

இயமமாவது தீயவற்றை செய்யாது ஒழுகுதல் ஆகும் இயமம் ஐந்து பண்புகளை உள்ளடக்கியது. திருடாமை, கொல்லாமை, பொய்யாமை, பிரம்மச்சரியம், இரவாமை ஆகியனவாகும். உண்மையில் இந்த ஐந்து பண்புகளும் இமயம் போல் உயர்ந்த குணங்களாகும். அற்புதங்கள் நிகழ்த்துவதற்கான அடிப்படை குணங்களாகும்.

**இயமத்தின் பலன்**

அகிம்சையில் நிலை பெற்றவன் முன் எல்லாப்பகையும் நீங்கிவிடுகின்றன. இரமணர் வாழ்ந்த இடத்தில் பாம்பும், கீரியும் நட்போடு வாழ்ந்தனவாம். தியானத்தில் ஆழ்ந்திருந்த ஸ்ரீ இராமானுஜர் மேல் பாய வந்த நாய் விடுதலையடைந்து மோட்சம் பெற்றது. மஹாத்மா காந்தி தங்களுள் விரோதம் கொண்டிருந்த தலைவர்களை ஒன்று கூட்டி வைத்தார். எனவே, “எல்லா உயிரையும் நேசிக்கும் அவரை” எல்லா உயிரும் நேசிக்கின்றன.

**நியமம்**

தூய்மை, மகிழ்ச்சி, தவம், தெய்வ நூல்களைப் படித்து புரிந்து கொள்ளுதல், இறைவழிபாடு என்ற ஐந்தும் நியமங்கள் ஆகும்.



உடம்பு, மனம் உயிர் என்ற மூன்றையும் தூய்மைப்படுத்துவது எப்படி என்பதை விளக்குவது நியமம். ஐந்து செயல்களில் முதல் செயலைப் பற்றி திருவள்ளுவர்.

‘புறம்தூய்மை நீரான் அமையும் அகம் தூய்மை
வாய்மையால் காணப்’ படும்.

என்று சொல்கிறார். மனம், மொழி, மெய் இம்மூன்றும் தூய்மை அடைவது திரிகரண சக்தி ஆகும்.

**நியமத்தின் பயன்**

1. மலர்ந்த முகமும், மனத் தெளிவும், உறுதியான உடலும் எதிலும் வெற்றியைத் தருகிறது.
2. எளிய வாழ்க்கையும், சுகவாழ்வினையும் நல்குகிறது.
3. “போதும்” என்று மனத்தைத் தயார் படுத்திவிடுகிறது.
4. பிறவிப்பெருங்கடலை நீந்தி, இறைவனிடம் சரணாகதி அடைய நியமம் வழிகாட்டுகிறது.

- நியமம் இயமம் இவை இரண்டுக்கும் அடிப்படை அகிம்சையாகும்.

**ஆசனம்**

‘உறுதியாகவும், சுகமாகவுமிருப்பதற்கு ஆசனம்’. பிராணாயாமம், தாரணை, தியானம், ஸமாதி ஆகிய எல்லாமே, ஆசனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆசனம் உறுதியாக இருக்க வேண்டும். அதே சமயமம் தொல்லை தருவதாக இருக்கக் கூடாது.

250 ஆசனங்கள் பேசப்படுகின்றன. அவற்றில் முக்கியமான வற்றைப் பயிற்சி செய்து கொண்டால் போதும், சூரிய நமஸ்காரம் 128 முறை செய்தால் போதுமானது.

### ஆசனத்தின் பயன்

1. உடலில் எல்லாத் தசைகளையும், நரம்புகளையும் சரியான நிலையில் உறுதியாக இருக்க வைக்க உதவுகிறது.
2. 'நாளமில்லாச் சுரப்பிகளை' (Endocrine glands) இளக்கி ஹார்மோன்களை ஒழுங்காகச் சுரக்க வைக்க ஆசனங்கள் உதவுகின்றன.
3. மற்றைய தேகப்பயிற்சி போல உடல் சக்தியைச் செயலாக விடாமல் ஆசனம் சேமிக்கின்றது. நரம்பு மண்டலத்தையும், தைராய்டு, அட்ரினல், பினியல், பிட்யூட்டரி சுரப்பிகளையும் சுத்தம் செய்து நன்றாக வேலை செய்ய வைக்கிறது.
4. இதயம், வயிறு, நுரையீரல்களுக்கு இரத்தம் அதிகம் கிடைக்க வழி செய்கிறது.
5. உடலுக்கு நல்ல வளையும் தன்மையைத் தருகிறது. முதுகெலும்பு வலுப்பெறுகிறது.
6. இவற்றால் எல்லாவிதமான நோய்களும் தீர்க்கப்படுகிறது. குறைந்தபட்சம் கட்டுப்படுத்தப்படுகின்றன.

### பிரணாயாமம்

ஆசனத்தில் உறுதியாகவும், சுகமாகவும் அமர்ந்து, பயிற்சி செய்யும் போது, மூச்சுக் காற்றை வெளியில் விட்டும் உள்ளே இழுத்தும் - உள்ளும் புறமும் நிறுத்தியும் பிராணாயாமம் செய்யும் நிலைக்கு உயர்கிறோம். பிராணண்- யாமம் என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து பிராணயாமம் என்ற சொல் உருவாயிற்று. பிராணன் என்பது மூச்சுக் காற்றை மட்டும் குறிப்பிடவில்லை. பிராணன் என்பது உயிர்ச் சக்தியைக் குறிப்பிடுகிறது.

அது உயிர் மூளையாகிய முகுளத்தில் இருந்து கொண்டு, இதயத்தையும், ரத்த ஓட்டத்தையும் நெறிப்படுத்துகிறது. மூச்சை வலது பக்கமும், இடது பக்கமும் மாறி, மாறி செல்லும்படி செய்வதால்



நாடி சுத்தி ஏற்படுகிறது. இங்கு நாடி என்பது இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று வகையான மூச்சின் இயக்கத்தையே குறிப்பிடுகிறது.

1. மூக்கின் வலது பக்கத்தில் மூச்சு ஓடுவதற்கு பிங்கலை என்று பெயர்.
2. மூக்கின் இடது பக்கத்தில் மூச்சு ஓடுவதற்கு இடகலை என்று பெயர்.
3. பிங்கலையும், இடக்கலையும் சமமாக ஓடுவதற்கு சுழிமுனை என்று பெயர்.
4. இடது பக்க மூச்சும், வலது பக்க மூச்சும் ஒன்று சேர்ந்து இரண்டு பக்கத்திலும் சமமாக மூச்சு வெளியில் வந்து, சமமாக மூச்சு உள்ளே செல்வதற்கு சுழிமுனை சுவாசம் என்று பெயர்.

பிராணாயாமம் மூன்றாகச் சொல்லப்படுகிறது. ஒன்று பூரகம் என்பது மூச்சுக் காற்றை உள்ளிழுத்தல், இரண்டு ரேசகம் என்பது மூச்சுக்காற்றை வெளிவிடுதல்.

கும்பகம் என்பது நிறுத்தி வைத்தல் ஆகியனவாகும். இதை அடிப்படையாகக் கொண்டு மரணத்தையே வெல்லலாம் என்கிறார் திருமூலர்.

'ஏற்றி இறக்கி, இருகாலும் பூரித்து,
காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவார் இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கு - அறி ஆனார்க்கு
கூற்றை உதைக்கும் குறி அதுவாமே'

என்று திருமந்திரத்தில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருக்கிறார். இதற்கு வாசியோகம் என்று பொருள்.

### பிராணாயாமத்தின் பலன்

மூச்சு என்ற வலிமையைப் பல ஆக்க வேலைக்காகச் சேமித்தலே பிராணாயாமத்தின் நோக்கமாகும்.

1. இப்படிப் பிராணாயாமத்தில் சேமிக்கப்பட்ட சக்தியால் பிறரிடமுள்ள வியாதியைக் குணப்படுத்தல்.
2. பிறரை நல்வழிப் படுத்துதல்.
3. நீர் மேல் நடத்தல், ஆகாயத்தில் எழும்புதல்.
4. பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் ஆற்றல் பெற்றல்.
5. அறியாமை நீங்கி அறிவும், துக்கம் நீக்கி சகமும் பெறுவது.
6. பிராணாயாமப் பயிற்சியால் முகத்தில் அழகு பெறுதல்.

**பிரத்யாகாரம்**

புறத்தே செல்லும் மனத்தை உள்ளே நிறுத்தி பழகுவது பிரத்யாகாரமாகும்.

இந்திரியங்கள், தத்தம் பொருள்களை விட்டு விலகிச் சித்தத்தின் இயற்கையைச் சாரும்போது பிரத்யாஹாரம் ஆகிறது. இந்திரியங்கள் மூலமாக மனம் வெளியே சென்று இந்திரியங்களுக்குரிய பொருள்களின் வடிவை அடைகிறது. இந்திரியங்களை அவற்றின் பொருள்களிலிருந்து மீட்டுவிட்டால், அவை மனத்துடன் தங்கி, அதன் இயற்கையில் ஒன்றிவிடுகின்றன.

1. நம் மனமானது பொருட்களின் மீது பற்றை நீக்க உதவுகிறது.
2. உடலானது மனத்தின் கட்டுப்பாட்டில் இயங்க வகை செய்கிறது.
3. சிதறா மனத்துடன் கடமையாற்றவும், இளமையுடன் இருக்க உதவுகிறது.
4. வாழ்க்கை இன்பம் நிறைந்ததாக இருக்கச் செய்கிறது.

**தாரனை**

'மன ஒருமைப்பாடு' - இதனையே தாரணை என்கிறோம். நம் மனச் சக்தியானது தனித்தனியாக செயலிடப்படுகிறது. ஒரே நேரத்தில் பல விஷயங்களில் மனமானது ஈடுபடுகிறது, இதனால்



சாதாரண மனிதர்களாக, சக்தி குறைந்தவர்களாக, வெற்றியும், தோல்வியும் விதிப்படி அடைபவர்களாக வாழ்வு என்ற பெயரில் வாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்நிலைக்கு மாறாக, பிரிந்து செல்லும் மனச் சக்தியை ஒன்று சேர்த்து, ஒருமுகப்பட்ட மனமாக்கி, ஒரே விஷயத்தில் செலுத்தினால் மனிதன் பெரும் சாதனைகளை ஆற்ற முடியும்.

'த்ராடக்' என்ற பயிற்சி இதற்கு மிக அவசியம். ஏதாவதொரு புள்ளியையோ, இஷ்ட தெய்வப் படத்தையோ, அல்லது தீபத்தையோ, உற்றுப் பார்த்து மனத்தைப் பதித்துப் பழகுதல், ஆடாமல், அசையாமல், விழிகளை உருட்டாமல் இமை கொட்டாமல் பார்த்து பழகுதலுக்கு 'த்ராடாக்' என்று பெயர்.

**தாரனையின் பயன்கள்**

1. ஒரு முகப்பட்ட மனம் உருவாகக் காரணமமாக அமைகிறது.
2. புலனடக்கம் ஏற்பட ஏதுவாக அமைகிறது.
3. சிறந்த ஆற்றல் படைத்த, கலைஞன், விஞ்ஞானி, போன்ற அறிஞர்கள், ஞானிகள் தோன்ற வழிவகுக்கிறது.
4. மனமானது தியானத்திற்கு தயாராகிறது.

**தியானம்**

இடைவிடாது நினைத்திருத்தல் தியானம் ஆகும் அதாவது, குறிப்பிட்ட காலம் இடைவிடாமல், நினைத்திருப்பது தியானம். 12 வினாடிகள் மனம் வேறெதையும் நினைக்காமல் ஒரு குறிப்பிட்ட பொருள் மீது நின்றால் அது ஒரு தாரனை. அப்படிப் பன்னிரெண்டு தாரனை ஒரு தியானம். அதுவே பன்னிரெண்டு தியானம் வரை, அதாவது 29 நிமிடங்கள் தாரனையில் இடைவிடாமல் நின்றால் அது ஒரு சமாதி மனம் சாத்வீகம் அடைவது தியானம்.

தியானம் காலி வயிற்றில் செய்யப்பட வேண்டும். கவலையற்று கடவுளை நினைத்து கண்களை மூடி உட்கார்ந்துவிட வேண்டு.

காலை நான்கு மணியிலிருந்து 6 மணிவரை, அல்லது மாலை ஐந்திலிருந்து ஏழு மணிவரை செய்யப்பட வேண்டும். உட்காருமுன், கொஞ்சம் நீரைப் பருகி விட்டு அமர்ந்தால் வாயு தொல்லை இராது.

**தியானத்தின் பயன்**

1. மனமும், உடலும், சுகமாக இருத்தல்.
2. அமைதியான குணம் உண்டாதல்.
3. பெரிய வேலைகளைச் சரிவர செய்தல்.
4. பகைவர்களை மறந்து, அவர்களை நேசித்தல்.

(பகைமை மறந்து, பகைவர்களை நேசிப்பது)

இதனையே பாரதி "பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே" என்கிறார்.

**சமாதி**

சமாதியாவது உயிரும், இறைவனும் ஒன்றி நிற்றல். சமாதி என்பது அனுபவத்தால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியது. சொற்களால் விளக்க இயலாது. அனுபவத்தால் உணர்வது. வாழ்க்கையில் என்ற அறிவைப் பெறவும் இந்த சமாதியே செய்யப்படுகிறது. ஆன்மீகத்திலும், அரசியலிலும் சிறந்த ஞானத்தையடைந்து, புகழ்பெற்ற மகாத்மாக்களும், சாதனையாளர்களும் உருவாகின்றனர்.


இறைவனைத் தியானப் பொருளாக எடுத்துக் கொண்டவர் சமாதியில் இறை ஞானத்தை அடைகின்றனர்.

தியானப் பொருளின் ஞானத்தைத் தருவது சமாதி.

**யோக ஆசனங்கள்**


ஆசனங்கள் எவை என்றும், அதன் பயன்கள் எவை எவை என்றும் பார்ப்போம்.






**1. திரிகோணாசனம்**

இடுப்புச்சதை குறைய கண் பார்வை சிறப்படைய உதவுகிறது.




**2. சவாசனம்**

ஓய்வெடுக்கவும், உயிரினைச் சமப்படுத்தவும் உதவுகிறது.




**3. ஸர்வாங்காசனம்**

மேல் உதடுக்கு ரத்தம் கிடைக்க, தைராய்டு, பாரா தைராய்டு சீர்படும்.




**4. ஹலாசனம்**

தைராய்டு, பாரா தைராய்டு சரியாக இயக்கப்படுகின்றன.



**5. மத்ஸ்யாசனம்**

கழுத்துப் பகுதியும் வயிறும் சரியாக.




**6. பஸ்சி மோத்ஸாசனம்**

மலச்சிக்கலின்றி அழுக்குவெளியேறவும், வயிறு குறையவும் உதவுகிறது.




**7. மகராசனம்**

ஓய்வெடுத்தலுக்குப் பழகுவது.




**8. புஜங்காசனம்**

கைகள் பலம் பெற, சுவாசப்பை விரிவடைய




**9. சலபாசனம்**

கால்களும் இடுப்பு வரையும் நலம் பெற



**10. தனுராசனம்**

வயிறு, பக்க உடல் தசைக்கு நல்லது.




**11. சக்ராசனம்**

கை, தோள் பலம் பெற


**12. மயூராசனம்**

உயிரியனைச் சமமாக உடலெங்கும் பரவச் செய்யும்



**13. சிரசாசனம்**

(எல்லாருக்குமல்ல) (பினியல் கிளாண்ட்) சுரப்பிகள் வலிவு பெற. சுரப்பிகள் வலிவு பெற. இவைகள் அமர்ந்த நிலையிலேயே பழகப்படும் ஆசனங்கள்.



**14. வஜ்ராசனம்**


வாயுத் தொல்லை நீங்க, ஜீரண சக்திக்கு





**15. பத்மாசனம்**

ஜபத்திற்கு தியானத்திற்கு உட்காரும். ஆசனம்




**16. யோக முத்ரா**

மலச்சிக்கல் நீங்க


**17. சித்தாசனம்**

(பெண்களுக்குத் தேவையில்லை) ஜப, தப, பிராணா யாமத்திற்கு உதவும்.



**18. அர்த்தமத்ஸ் யேந்திராசனம்**

இடுப்பு, வயிறு பருக்காமலிருக்கச் செய்யும்.



ஆகிய இவைகளையும் பயிற்சி செய்தால் போதும்.

அன்றாட வேலைகளில் பல நிலைகளில் உட்காரும் நாம், நரம்புகளையும், மூச்சுப்பைகளையும், வயிற்றையும் நசுக்கி, ஒடுக்கி விடுகிறோம். ஒழுங்கற்ற முறையில் உடல் இருக்கப் பழகிவிடுகிறது.

உடலில் எல்லாத் தசைகளையும், நரம்புகளையும், சரியான நிலையில் உறுதியாக இருக்க வைக்க ஆசனங்கள் அத்துணையும் ஒவ்வொரு உடல் பகுதிக்கும் உதவுகின்றன.

**யோகப் பயிற்சியும், உணவு முறைகளும்**

உணவு உட்கொள்வது பற்றிச் சில விதிகள் உள்ளன. உட்கொள்ளும் உணவு மனதைத் தூய்மையாக்க வேண்டும். மிருகக் காட்சி சாலைக்கு நீங்கள் சென்றால், இதன் உண்மையை அறியலாம். யானை பெரியதாய் இருந்தும். அமைதியும் மெல்லிய நடையும் பெற்றிருப்பதைக் காணலாம். சிங்கம், புலி இருக்கும் கூண்டுகளின் அருகில் சென்றால், அவை அமைதியற்று அலைவதைக் காணலாம். இது உணவினால் ஏற்பட்ட வேறுபாடே, உடலில் உண்டாகும் சக்திகள் உணவிலிருந்து வந்தன. நீங்கள் பட்டினி போட்டால் உடல் பலவீனம் அடைகிறது. பின் மன ஆற்றலும் குறைகிறது. முதலில் ஞாபகசக்தி குறையும். பிறகு சிந்தனை சக்தியும் தளர்வுறும். பகுத்தறிதல் சரியாக நடைபெறாது. ஆகவே, யோகப் பயிற்சிக்கு ஆரம்ப தினங்களில் உணவு உண்பதில் எச்சரிக்கை வேண்டும். பயிற்சி முதிர்ச்சி அடைந்தபின் அவ்வளவு எச்சரிக்கை தேவையில்லை.

உணவு என்பது உன்னத உணர்வைத் தருவதாய் அமைய வேண்டும். உணவு உண்பது மனிதனை உயர்த்துவதற்காகவே.

**உணவின் வகைகள்**

சூரியனால் அமைக்கப்பட்ட பஞ்சபூதக் கலவையில் உற்பத்தியான கீரை, காய்கறி, பழங்கள், தானியங்கள், தேங்காய், வாழைப்பழம். இவைகளை உணவாக எடுத்துக் கொள்வதால்



ஆரோக்கியம் விருத்தியாவதுடன் நோய் எதிர்ப்பு ஆற்றலும் பெருகும்.

பச்சைக் காய்கறிகளை உண்பதால் நார்ப் பொருள், உடலில் சேர்வதால், தாது உப்புக்களும், விட்டமின்களும், உடலுக்கு நேரடியாய்க் கிடைகின்றன.

வேர்க்கடலை, எள், தேங்காய் போன்ற எண்ணை வித்துக்களை முளைக்கட்டி சாப்பிடும் போது கருப்பட்டி அல்லது வெல்லம் சேர்த்துக் சாப்பிட வேண்டும்.

முளைக்கட்டிய தானியங்களை காலை உணவோடுதான் உண்ண வேண்டும்.

கனிகளிலும், உயர்ந்த நிலையில் உற்பத்தியாகும் தெங்கு, மா, பலா, நெல்லி, பேரீச்சை, இலந்தை, நாவல், சப்போட்டா, வாழை, பப்பாளி, மாதுளை, கொய்யா, எலுமிச்சை, சாத்துக்குடி, திராட்சை, தக்காளி என்ற வகையில் வரிசைப்படுத்தி, முதல் தரமானவைகளை அதிகம் பயன்படுத்துவது சாலச் சிறந்தது.

பழங்கள் உயர்வாகச் சொல்லப்பட்டாலும், சில கிழங்கு வகைகளையும் உட்கொள்ளலாம் என பதார்த்த சிந்தாமணி கூறுகிறது. அவை, மஞ்சள், இஞ்சி கருணைக் கிழங்கு போன்றவைகளாகும்.

புலால் உணவைத் தவிர்ப்பது நல்லது. எனவே, “கனிகளை உண்போம், பிணிகளை வெல்வோம்”

**மாணவர்களும் யோகமும்**

யோகாவின் உண்மையான அர்த்தம் ‘துயரத்திலிருந்து நம்மைப் பிரித்துக் கொள்வதே இது தான் உண்மையான இணைப்பு ஆகும். இன்றைய மாணவச் சமுதாயத்திற்கு யோகா கல்வி மிக அவசியமான ஒன்றாகும். பாரதத்தின் மிகப் பழமையானதொரு

கல்வி என்ற முறையில் இன்று யோகா பற்றி உலகெங்கிலும் பேசப்படுகிறது. மேற்கத்திய நாடுகளில் கூட யோகாவில் ஆர்வம் தோன்றியுள்ளது. ஆங்காங்கே நம் நாட்டிலிருந்து அங்கு சென்றுள்ள யோகிகள் யோகா மையங்களைத் திறந்துள்ளனர். அங்கு நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் யோகாப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

யோகாப் பயிற்சியீன் மூலம் தான் மாணவரின் உடல் உறுப்புகளை ஆற்றல் வாய்ந்ததாகவும், புலன்களைக் கட்டுப்பாடு உடையனவாகவும், மனதை ஒரு நிலைப்படுத்தவும், உணர்வுகளைச் சமநிலையிலும், சுவாசத்தினை ஒழுங்கு முறையிலும், அறிவினைப் பலமானதாகவும் செய்ய முடியும். மேலும் அவனை அஹங்காரம், வெறுப்பு போன்ற தீய குணங்களிலிருந்து விடுவித்து, ஆத்மாவிற்குத் தூய்மையை அளிக்க முடியும்.

யோகா கல்வியின் மூலமாக, கடவுள்பக்தி, பெரிவர்களிடம் மரியாதை, தொண்டு மனப்பான்மை, நன்னடத்தை, சமுதாய அறம் தனி நபர் அறம், விருந்தோம்பல் பண்பு, நட்புணர்பு போன்ற நற்குணங்களை வளர்க்க முடியும்.

யோகா கல்வியின் மூலமாக மாணவர்களிடையே, சிரிக்க புன்னகை செய்யக் கற்பிக்க முடியும். கர்மயோகம் எனப்படும் நற்செயல்களையும் அவர்கள் மனத்தில் ஏற்படுத்த முடியும் உதாரணமாக, செடிகள், மரங்கள் நடுதல், செடிகளுக்கு நீர் வார்த்தல், பறவைகளுக்கும், எறும்புகளுக்கும் தானியங்களும், நீரும் அளித்தல், தன்னை விடச் சிறியவர்களிடத்தில் அன்பு காட்டுதல், உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை அவர்களிடையே வளர்க்க யோகா கல்வி துணை புரிகின்றது. அற இயல் மாணவர்கள் மனதை ஒருமுகப்படுத்தி நல்லறிவு பெற உதவுகிறது. அவ்வாறே யோகமும் உடல் மனம் மன வளர்ச்சிக்கு உதவுகிறது.



**யோகம் குறித்து சுவாமி விவேகானந்தர்**

மனிதனுக்கு உண்மை வேண்டும். உண்மையை அவன் அனுபவத்தில் காண வேண்டும். அதை உணர்ந்து அனுபவித்த பின் எல்லா ஐயப்பாடுகளும் சூரியனைக் கண்ட இருளைப்போல் அகன்று விடும். எல்லாக் குறைகளும் அகற்றப்பட்டு விடும். “அழியாத அமரத்துவம் வாய்ந்த குழந்தைகளே! மேலான உலகங்களில் வாழ்பவர்களே! இந்த இருளினின்று வெளியேறும் வழி தெரிந்து விட்டது. இந்த இருளுக்கு அப்பால் உள்ள பரஞ்சோதியை அறிவதன் மூலம் நாமும் இருளைக் கடக்கலாம். வேறு வழியே இல்லை!

## பயிற்சி வினாக்கள்

**I. ஓரிரு வரிகளில் விடையளி : (2 மதிபெண்கள்)**

1. யோகம் என்றால் என்ன?
2. “யேகாம்” – இச்சொல்லை விளக்கு.
3. யோக வழியினை மனித இனத்துக்குத் தந்தவர் யார்?
4. யோக வழியினை சூத்திரங்களாக ஆக்கி தந்தவர் யார்?
5. பதஞ்சலி முனிவரின் பெற்றோர்களின் பெயர்களை குறிப்பிடு.
6. பதஞ்சலியின் நூல்கள் யாவை?
7. பதஞ்சலி முனிவர் பற்றிய செய்தியை உலகுக்குத் தந்தவர் யார்?
8. ‘பதஞ்சலி விஜயம்’ என்ற நூலை எழுதியவர் யார்?
9. குருமந்திரம் யாது?
10. அஷ்டாங்க யோகம் என்றால் என்ன?
11. அஷ்டாங்க யோகங்களைக் குறிப்பிடுக.
12. இமயம் என்றால் என்ன?

13. நியமம் என்றால் என்ன?
14. ஆசனம் என்றால் என்ன?
15. பிராணாயாமம் என்பது யாது?
16. பிரத்யாஹாரம் என்பது என்ன?
17. ‘தாரனை’ குறிப்பு தருக.
18. ‘தியானம்’ - வரையறு.
19. ‘சமாதி’ - விளக்கு.
20. பிங்கலை என்றால் என்ன?
21. இடகலை என்பது யாது?
22. ‘சுழிமுனை’ குறிப்பிடுக.
23. சுழிமுறை சுவாசம் யாது?
24. ரேசகம் - என்றால் என்ன?
25. பூழரகம் - என்றால் என்ன?
26. கும்பகம் என்பது என்ன?
27. த்ராடக் விளக்கு.
28. திரிகோனாசனம் - இதன் பயன் யாது?
29. சர்வாங்காசனம் இதன் பயன் யாது?
30. பத்மாசனத்தின் பயனை குறிப்பிடுக.
31. வஜ்ராசனத்தின் முக்கியத்துவம் யாது?
32. மயூராசனத்தின் முக்கியத்துவம் என்ன?

**II. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி (5 விடையளி)**

1. யோகம் என்பது பற்றி எழுது.
2. பதஞ்சலி முனிவரின் வாழ்க்கை வரலாற்றினை எழுது.
3. குருவின் மேன்மை பற்றி விவரி.
4. இயமத்தின் பயன்கள் யாவை?



5. நியமத்தின் பயன்களாக யோக சாஸ்திரம் குறிப்பிடுவது யாது?
6. ஆசனத்தின் பயன்களை விவரி.
7. பிராணயாமம் மனித வாழ்விற்கு தரும் பயன்களை குறிப்பிடுக.
8. “தாரணை” - இப்பயிற்சி முறையை விளக்கு.
9. தியானம் செய்யும் முறையை யோக சாத்திரம் எப்படி விளக்குகிறது.
10. சமாதி நிலை பற்றி விளக்கு.

**III. ஒரு பக்க அளவில் அல்லது இருபது வரிகளுக்கு மிகாமல் விடையளி (10 மதிப்பெண்கள்)**

1. இயமம் பற்றி விரிவாக வரையறு.
2. நியமத்தின் குண இயல்புகளையும், பயிற்சி முறையினையும் விவரி.
3. ஆசன முறை பற்றி பதஞ்சலியின் விளக்கத்தைத் தருக.
4. பல்வேறு வகையான ஆசனங்களை விவரி.
5. மனம் மற்றும் உடல் வளர்ச்சியில் யோகவின் பங்கு யாது?
6. அமர்ந்த நிலையிலேயே செய்யப்படும் ஆசனங்களை விவரி.
7. யோகா சாஸ்திரம் கூறும் உணவு முறைகளை விளக்கு.
8. யோகாமுறை மாணவர்களுக்கு எவ்வகையில் பயனுடையதாக விளங்கும் என்பதனை விளக்கு?
9. பிராணாயாமத்தின் இன்றியமையாமையை விவரி.
10. பிரத்யாஹாரம் பற்றி எழுது.

**IV. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அல்லது நாற்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி (20 மதிப்பெண்கள்)**

1. ஆசனங்களைப் பற்றி விவரித்து அதன் பயன்களை விவரி.
2. அஷ்டாங்க யோகம் பற்றி சுருக்கமாக விவரித்து எழுது.

## துணை நூல் பட்டியல்


1. அறவியல் ஓர் அறிமுகம் - வில்லியம் லில்லி - தமிழாக்கம் காந்தி - பதிப்பு - 1984-
2. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் பாடல் தொகுப்பு - ஆசிரியர் பி. இ. பால கிருஷ்ணன்.
3. தத்துவ இயல் மேல் நிலை இரண்டாம் ஆண்டு - தமிழ் நாடு பாடநூல் கழகம் பதிப்பு - 2001.
4. அற இயல் - மேல் நிலை முதலாம் ஆண்டு - தமிழ் நாடு பாடநூல் கழகம் பதிப்பு - 1981.
5. சமூகவில் - மேல்நிலை இரண்டாம் ஆண்டு - தமிழ் நாடு பாடநூல் கழகம் பதிப்பு - 2002.
6. திருக்குறள் பரிமேலழகர் உரை - பதிப்பு - 1980.
7. பதஞ்சலி யோகம் - பகீரதன் - பதிப்பு - 2000.
8. தியானம் - சுவாமி சுகபோகானந்தா - பதிப்பு - 2003.
9. திருமந்திரம் - உரையாசிரியர் - G. வரதராஜன் பதிப்பு - 2003.
10. ஸ்ரீ பதஞ்சலி யோக சூத்திரம் - ஸ்வாமி - பதிப்பு - 2002.
11. நல்வாழ்வு - டாக்டர் மு. வரதராசன் - பதிப்பு - 1990.
12. யோகக் கல்வி - ஆ. மு. சுப்பிரமணியன் - வித்யா பாரதி ஆகிய பாரதீய சிஷாஸம்ஸதான்.
13. ஆரோக்கிய வாழ்வுக்கு அருமையான யோகாசனங்கள் - டாக்டர் தி. ஆ. கிருஷ்ணன் - பதிப்பு - 2003.
14. சமூக அறிவியல் / ஒன்பதாம் வகுப்பு தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் பதிப்பு / 2003.
15. திருக்குறள் - பரிமேலழகர் உரை - கங்கை புத்தக நிலையம் தி. நகர் சென்னை - 17. நான்காம் பதிப்பு 2002.





16. நாலடியார்-கு.மதுரை முதலியார்-சென்னை லயோலாக் கல்லூரித் தமிழ்ப் புலவர் (1930-34). முல்லை நிலையம். தி.நகர், சென்னை - 17. மூன்றாம் பதிப்பு ஜூன் - 1998.
17. அவ்வையாரின் நீதி நூல்கள் - தே.ப.சின்னசாமி. நாச்சியார் பதிப்பகம் - 916, கங்கை அம்மன் கோவில் தெரு. சென்னை - 24. முதற் பதிப்பு ஏப்ரல் - 1999.
18. மாணவர்களுக்கு நீதி போதனை - ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் - ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம் - காஞ்சிபுரம் ந ஸ்ரீ சுரபி ஜகத்குரு ஸதாப்தி ப்பளிகேஷன்ஸ் - 158/12 லேக்வியூ ரோடு - மேற்கு மாம்பலம் சென்னை - 33. வெளியீடு - ஜனவரி 2003.
19. நல்லொழுக்கக் கல்வி - நல்லாசிரியர் புலவர். இளங்கோவன் - தூய காணிக்கை யன்னை மகளிர் மே.நி.ப. கோயமுத்தூர். சாம்பா பப்ளிஷர்ஸ் கம்பெனி - சென்னை - 1 - நான்காம் பதிப்பு - 1981.
20. நல்லொழுக்கக் கதைகள் - தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் சென்னை - 6. முதற்பதிப்பு - 1984.
21. தமிழர் திருவிழாக்களும் பண்பாடும் - முனைவர் பெ.சுப்ரமணியன் எம்.ஏ.பி.எச்.டி., ராம்குமார் பதிப்பகம். 126. கல்லூரி சாலை பழனி - 624 601. முதற்பதிப்பு மே 1999.
22. ஒழுக்க நெறிகள் - பத்தாம் வகுப்பு - வே. மு. மந்திரம் எம்.ஏ.பி.டி காளி பப்ளிகேஷர்ஸ் - சென்னை - 17. முதற்பதிப்பு ஜூலை 1979
23. மரியாதை ராமன் - தீப்புக் கதைகள் - சூர்யா - சாய் சூர்யா எண்டர் பிரைசஸ் பழைய எண் 24, கிருஷ்ணா தெரு. சென்னை - 17 முதற்பதிப்பு டிசம்பர் - 2002.

24. பஞ்ச தந்திரக் கதைகள் - கீர்த்னன் - சாய் சூர்யா எண்டர்பிரைசஸ் ப.எண்.24, கிருஷ்ணா தெரு, சென்னை17. இரண்டாம் பதிப்பு - ஏப்ரல் 2003.

25. பழனி முருகன் கோவிலும் தீர்த்தமும் டாக்டர் எப். சுப்ரமணியன் ராம்குமார் பதுப்பகம், பழனி-624 602. முதற் பதிப்பு மார்ச் 1994.

26. மகிழ்வோடு வாழ நாலடியார் காட்டும் வழிகள் - சி.எஸ். தேவ்நாத் நர்மதா பதிப்பகம். தியாக ராய நகர் சென்னை - 17. முதற் பதிப்பு - ஜூலை 1997.

27. தோன்றின் புகழோடு தோன்றுக - டாக்டர் எஸ். குலசேகரன் அமிழ்தம் பதிப்பகம் 15, முத்துப் பிள்ளை தெரு வேலூர் 632 001. முதற்பதிப்பு - டிசம்பர் 1997.

28. திருவள்ளுவரும் காரல் மார்க்கம் - சிலம்புச் செல்வர். டாக்டர் ம.பொ. சிவஞானம் - பூங்கொடி பதிப்பகம் - மைலாப்பூர் சென்னை - 4 இரண்டாம் பதிப்பு - மே 2000.

29. ஔவை அமுதம் - எதிரோலி விசுவநாதன். மாதா பதிப்பகம் - 77, ஜோன்ஸ் ரோடு, சைதை, சென்னை - 15. முதற் பதிப்பு - 1987.

30. கீதையும் குறளும் - ஸ்வாமி - அனுராகம் - 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர். சென்னை - 17. முதற் பதிப்பு 2001.

31. காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம் - ரா. கணபதி - திவ்ய வித்யா டிரஸ்ட், 106/1, ஹபிபுல்லா சாலை தி.நகர், சென்னை - 17. முதற்பதிப்பு ஜூன் 1995.

32. ஸ்ரீ ராம கிருஷ்ணரின் நீதிக் கதைகள் - ஸ்ரீ ராம கிருஷ்ண மடம் மைலாப்பூர், சென்னை - 4.



33. வாழ்க்கையும் தொழிலும் - ஏ.பூவராக மூர்த்தி, எஸ்.ஐ.டி.யு.பப்ளிகேஷன்ஸ் லிம்டெட், சென்னை - 28. முதற்பதுப்பு அக்டோபர் 1962.

34. சரித்திரம் போற்றும் சேரர் கதை - புலவர் அரச மணி - இலக்குமி நிலையம் 10, காசிம் தெரு. சென்னை - 14. இரண்டாம் பதிவு - டிசம்பர் 1985.

**ENGLISH**

1. Ethics (in Questions & Answers) - Kedar Nath - Ram Nata - Ninth Revised Edition - 1999 -

2. English Reader - Higher Secondary - Second year - Revised Edition - 2000.

3. 'Manual of Ethics' ] Introduction - S. Mackerzie

4. 'Study of Ethical Principles' - Seth

5. A Study of Maral theory - J. Latrde.

6. In defence of free will - C.A. Cambella

7. Moral Education - std vi CBSE - Fourth Edition - 1977.

8. Wings of fire - 'Auto Biography - A.P.J. Abdul kalam - 1999.

9. Ethics for today - Harnold H. Titus.

10. Principles Of Political Science.

## அருஞ்சொற்பொருள்
### கலைச்சொற்கள்

**A**

Absolute ethics - (தனிச் சிறப்புள்ள) சார்பில்லா அறவியல்
Adolescence - இளமைப்பருவம்
Aesthetics - அழகியம், எழிலியல்
Analytical model - பகுப்பாராய்ச்சி மாதிரி
Appetite - நாட்டம்
Assertorial Imperative - உறுதிக் கட்டுப்பாடு
Authority - அதிகாரம்
Altruism - பிறர் நலம்
Association - சங்கம்
Alms - பிச்சை
Avaricc - பேராசை
Alcoholic - மதுஅருந்துபவர்

**B**

Behaviourism - நடத்தைக்கொள்கை
Begging - இரத்தல்

**C**

Character - செயல்முறை அறவியல்
Character - ஒழுக்கம் அல்லது நடத்தை
Coherence - இயைபு



Conduct - நடத்தை
Conscience - மனச்சான்று
Constructive - ஆக்கச் சார்பான
Courage - துணிவு
Custom - மரபொழுக்கம்
Concept - கருத்துப் பொருள்
Cardo - சுழலும் அச்சு
Courage - துணிவு, தீரம்
Cardinal - அடிப்படை
Crime - குற்றம்
Civics - குடிமையியல்
Citizenship - குடியுரிமை
Community centre - சமுதாய நலக்கூடம்
Conference Hall - மாநாட்டுக் கூடம்

**D**

Definition - வரையறை அல்லது விளக்கம்
Descriptive Science - விளக்க அறிவியல்
Desire - விருப்பம்
Determinism - தீர்மானிக்கப்பெற்றது
Duties - கடமைகள்
Divorce - விவாகரத்து
Dowry - வரதட்சணை

**E**

Elements - தனி அம்சங்கள்
Emotional attitudes - மெய்ப்பாட்டுப் போக்குகள்
Emotions - மனவெழுச்சிகள்

| | | |
|---|---|---|
| Ethics | - | அறவியல் |
| Evaluative language | - | மதிப்பீட்டு மொழி |
| Evolution | - | பரிணாமம் |
| Egoism | - | அகந்தை |
| Education | - | கல்வி |

**F**

| | | |
|---|---|---|
| Final cause | - | முடிவுநிலையான காரணம் |
| Freedom | - | கட்டற்ற நிலை அல்லது சுதந்திர நிலை |
| Freedom of the will | - | இயற்றிநிலையின் கட்டற்ற அல்லது சுதந்தரமான நிலை |

**G**

| | | |
|---|---|---|
| General will | - | பொதுஇயற்றிநிலை |
| Good | - | நலன், நன்மை |
| Generous | - | தாராளமனப்பான்மை |
| Greedy | - | பேராசை |
| Gambling | - | சூதாட்டம் |

**H**

| | | |
|---|---|---|
| Happiness | - | மகிழ்வு |
| Harmony | - | இசைவு அல்லது இயைபு |
| Heredity | - | மரபுநிலை |
| Hypothesis | - | ஊகம் |



| | | |
|---|---|---|
| Hypocrisy | - | கபடம் |
| Hospitality | - | விருந்தோம்பல் |
| Hatred | - | வெறுப்பு |
| Humanity | - | மனிதநேயம் |

**I**

| | | |
|---|---|---|
| Ideal Community | - | உயர்ந்த குறிக்கோள் கொண்ட சமுதாயம் |
| Idealists | - | இலட்சியக் கொள்கையினர் அல்லது கருத்துக் கொள்கையினர் |
| Ideal Self | - | உயர்ந்த இலட்சியப் பொருளாக விளங்கும் ஆன்மா |
| Illusion | - | மாயத் தோற்றம் |
| Impulse | - | தூண்டுதல் |
| Indeterminism | - | தீர்மானிக்கமுடியாதது அல்லது வரையறை செய்யமுடியாதது என்னுங் கொள்கை |
| Individual | - | தனித்த அல்லது தனிப்பட்ட |
| Intention | - | உட்கிடை |
| Interrogative language | - | வினாவுகிற மொழி |
| Intrinsic value | - | உள்ளார்ந்த பயன் அல்லது இயல்பு பயன் |

| | | |
|---|---|---|
| Introspection | - | உள்ளறிவு |
| Intuitive Induction | - | உள்ளுணர்வுத் தொகுப்புமுறை |
| Imperfect | - | தெளிவற்ற |
| Inequality | - | ஏற்றத்தாழ்வு |
| Individual | - | தனிமனிதன் |
| Intoxicating | - | போதை தருகின்ற |
| In carnation | - | அவதாரம் |
| Industrial | - | தொழிலகம் |

**J**

| | | |
|---|---|---|
| Judgement | - | முடிவுகள் அல்லது தீர்மானங்கள் |
| Justice | - | நேர்மை அல்லது நீதி |
| Jurisprudence | - | நீதி சாஸ்திரம் |

**L**

| | | |
|---|---|---|
| Levels | - | நிலைகள் |
| Logic | - | அளவையியல் |
| Logical Atomists | - | லாஜிக்கல் ஆட்டமிஸக் கொள்கையினர் |
| Lust | - | தீய உணர்வுகள் |

**M**

| | | |
|---|---|---|
| Mean | - | இடைவழி அல்லது ஒரு நிலையான வழி |
| Metaphysics | - | அடிப்படையியல், |
| Middle Course | - | நடுத்தரமான வழி |



| | | |
|---|---|---|
| Moderation | - | இடைவகை |
| Monism | - | ‘ஒன்றே மெய்ப்பொருள்’ என்ற கொள்கை அல்லது ஒருமைக் கொள்கை |
| Moral experience | - | அறவுணர்வு அல்லது அனுபவம் |
| Moral gain | - | அறப்பயன் |
| Moralizing | - | அறவழிப்படுத்தல் |
| Moral Science | - | அறவழி அறிவியல் |
| Moral Sense School | - | அறவுணர்வுக் கொள்கையைக் கடைப்பிடிப்போர் |
| Moral relations | - | அறத்தொடர்புகள் |
| Motive | - | ஊக்கி |
| Mysticism | - | அநுபூதி நெறி |
| Moral rights | - | அறநெறி உரிமை |

**N**

| | | |
|---|---|---|
| Natural Selection | - | இயற்கைத் தேர்வு |
| Normative Science | - | மேல்வரம்பிட்ட அறிவியல், உயர்நிலை அறிவியல் |

**O**

| | | |
|---|---|---|
| Objective | - | புறநிலை |
| Objective validity | - | புறநிலை ஏற்புடைமை |
| Obligatoriness, sense of | - | கடப்பாட்டுணர்வு |
| Organic needs | - | உயிருறுப்புகளின் தேவைகள் |

Organic unity - உயிருறுப்புகளின் சேர்க்கை

Oughtness - கடப்பாடு

**P**

Paradox - முரணுரை

Perception - புறக்காட்சி

Perfection - நிறைவு

Personality - ஆளுமை அல்லது மாபெரும் தனிமனிதப் பண்பு

Persuasive Definition - வலியுறுத்தும் வரையறை அல்லது விளக்கம்

Phenomenon - தோற்றப் பொருள்

Philosophers disciplines - தத்துவ அறிவொழுக்கக் கட்டுப்பாடுகள்

Philosophy - தத்துவம்

Positive Science - நேர்நிலை அறிவியல்

Practice - செயல்முறை அல்லது நடைமுறை

Prescriptive Language - கட்டளை மொழி

Prima facie obligations - தொடக்கக் கடப்பாடுகள்

Probability - 'இன்னபடி ஆகும்' என்னும் கூற்று

Proximate ends - அடுத்துள்ள முடிவுகள்



Psychology - உளநூல், உளவியல்

Professional - தொழில் சார்ந்த

**R**

Rationality - பகுத்தாரதயும் அறிவு

Realist - காட்சிப்பொருட்கொள்கையைக் கடைப்பிடிப்பவர்

Reality - மெய்ப்பொருள், பரம்பொருள்

Relative Ethics - சார்பு அறவியல்

Religion - மதம் அல்லது சமயம்

Remote ends - தொலைவுமுடிவுகள்

Right - சரியானது, நேரியது, நல்லது

Rights - உரிமைகள்

Revenge - பழி வாங்குதல்

Retributive - பழிக்குப் பழி

Reformative - சீர்திருத்தம்

**S**

Scale - பட்டியல் அல்லது வரிசை

Self- Conscious - தன்னுணர்வு நிலை, தன் நனவுநிலை

Self-determinism - தன்னாலே தீர்மானிக்கப்பெற்ற கொள்கை அல்லது சுய தீர்மானக் கொள்கை

| | | |
|---|---|---|
| Self-evident | - | தானே விளங்கும் தன்மை |
| Self-realization | - | தன்னை உணர்தல் |
| Sentiment | - | பற்று |
| Spiritual Evolution | - | ஆன்மிகப்பரிணாமம் |
| Standard (ethical) | - | அறநெறி முறை |
| State | - | நாடு |
| Stimulus | - | ஊக்கம், தூண்டல அல்லது தூண்டுதல் |
| Subjective | - | அகநிலை |
| System | - | ஒழுங்கமைப்பு |
| Social Obligation | - | சமூக கடப்பாடு |
| Shyness | - | வெட்கம் |
| Soul | - | ஆன்மா |
| Super natural | - | தெய்வீகம் |
| Salvation | - | வீடு பேறு |
| Saints (Monks) | - | துறவி |
| Sin | - | பாவம் |

**T**

| | | |
|---|---|---|
| Taboos | - | விலக்குகள் |
| Telelogical Theory | - | நோக்கக் கொள்கை |



| | | |
|---|---|---|
| Temperance | - | தன்னடக்கம் |
| Tendency | - | போக்கு |
| Tendency, Innate | - | உடன்பிறந்த உளப்போக்கு |
| Theists | - | தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் |
| Theory | - | கொள்கை |
| Terrorism | - | பயங்கரவாதம் |
| Terrorist | - | பயங்கரவாதி |

**U**

| | | |
|---|---|---|
| Unconditionality | - | வரையறையற்ற நிலை |
| Unconscious | - | நினைவற்ற நிலை |
| Universality | - | பொதுமை நிலை |
| Universe | - | பிரபஞ்சம் |
| Urges | - | எழுச்சிகள் |
| Ultimate Reality | - | பரம் பொருள் |

**V**

| | | |
|---|---|---|
| Validity | - | ஏற்புடைமை |
| Value | - | பயன் அல்லது மதிப்பு |
| Value in use | - | வழங்கும் பயன் அல்லது மதிப்பு |
| Virtue | - | ஒழுக்கம் |

| | | |
|---|---|---|
| Virtues, cardinal | - | அடிப்படையான ஒழுக்கங்கள் |
| Volitions | - | இயற்றிநிலை |
| Voluntary | - | தன்னியல்பான |
| Vice | - | பழிச் சொல் |

**W**

| | | |
|---|---|---|
| Willing | - | இயற்றிநிலை |
| Wisdom | - | அனுபவ அறிவு |